மாண்டிஸோரி காணும்

குழந்தை மாண்பு

ஆர். லட்சுமி

மாண்டிஸோரி காணும்

குழந்தை மாண்பு

அமுத நிலயம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

அமுதம்—155
முதற் பதிப்பு—டிசம்பர், 1957

விலை ரூ. 6-00

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை—18

காணிக்கை

பாரத மாதாவின் பணிக்கே தம்மை உரிமையாக்கி, அந்த அன்னையின் குழந்தைகளுக்கு உரிய கல்வியை உறுதியான அடிப்படையில் அமைக்க விரும்பி, மாண்டிஸோரி என்ற ஞானச் சுடரொளியை நாடெங்கும் வீசச் செய்த

டாக்டர் பெஸன்ட் அம்மையாருக்கும்

டாக்டர் அருண்டேலுக்கும்

இந்த என் சிறு முயற்சி ஒரு காணிக்கையாகும்.



டாக்டர் மாரியா மாண்டிஸோரி

THE ARUNDALE-MONTESSORI

TRAINING CENTRE FOR TEACHERS

Directors:

Dr. Maria Montessori, M.D. D.LITT.

Mr. Mario Montessori

Secretary:

Miss. H. Veale, B.A. (LOND.)

ADYAR, MADRAS

15th July, 1946

Srimathi R. Lakshmi, the author of this Book "Dr. Montessori discovers the child" is one of my pupils. She has given herself whole-heartedly to the cause of the child. From the beginning of my stay in India, she has been most enthusiastically experimenting along the lines of my method and has done some remarkable experiments on the application of my method to the teaching of the Tamil Language. The author's faith in the powers of the child should make her competent to observe the real nature of the children and to create for them an environment suitable to permit the unfoldment of their qualities.

Srimathi R. Lakshmi's book is proof of her interest in educational problems and of her devotion to the child, the "divine agent who ever returns to bless man and offer him hope".

Maria Montessori

டாக்டர் மாண்டிஸோரி அம்மை கருணைகூர்ந்து உதவிய

அணிந்துரை

அருண்டேல்-மாண்டிஸோரி ஆசிரியப் பயிற்சி நிலயம்

நிர்வாகத் தலைவர்கள் :
டாக்டர் மாரியா மாண்டிஸோரி
எம்.டி.டி.லிட்.
ஸ்ரீ மாரியோ மாண்டிஸோரி
செயலாளர் :
மிஸ். எச். ஹெலென்வில்
பி.ஏ (லண்டன்)

ஜூலை 15, 1946
அடையாறு, சென்னை

'டாக்டர் மாண்டிஸோரி காணும் குழந்தைமாண்பு' என்ற இந்த நூலின் ஆசிரியரான **ஸ்ரீமதி ஆர். லட்சுமி** என் மாணுக்கருள் ஒருவர். குழந்தைப் பணிக்கு இவர் தம்மை முழுமனத்துடன் உரிமையாக்கியுள்ளார். இந்தியாவில் நான் தங்க ஆரம்பித்த காலம் முதல் இவர் மிகவும் உத்ஸாகத்துடன் என் முறையை ஒட்டிச் சோதனைகள் நடத்திப் பார்த்திருக்கிறார். தமிழ்மொழி கற்பிக்கும் துறையில் என் முறையைப் பயன் படுத்திக் கொண்டு குறிப்பிடத் தக்க தனிச்சிறப்பு வாய்ந்த சில சோதனைகளைச் செய்து முடித்திருக்கிறார். குழந்தையின் சக்திகளில் இந்த ஆசிரியருக்கு உள்ள நம்பிக்கை, உண்மையான சுபாவத்தை உற்றுநோக்குவதற்கும், குழந்தைகளின் பண்புகள் மலர்ச்சிபெறுவதற்கு வசதியான சூழ்நிலையை அவர்களுக்காக அமைத்துக் கொடுப்பதற்கும், இவருக்குத் தகுதியை அளித்திருக்கிறது.

'மனிதனுக்கு ஆசி கூறி நம்பிக்கை அளிப்பதற்கு மீண்டும் மீண்டும் வந்த வண்ணமாயிருக்கும் அவதார மூர்த்தி' என்று சொல்லத்தக்க குழந்தையிடம் பக்திபூண்டு கல்விப் பிரசினைகளில் ஈடுபட்டிருக்கிறார் **ஸ்ரீமதி ஆர்.** லட்சுமி என்பதற்கு இந்த நூலே தக்க சான்றாகும்.

(ஒப்பம்) **மாரியா மாண்டிஸோரி**

நன்றி உரை

இன்று கார்த்திகைத் தீபத் திருநாள். இவ்விழாவைத் தமிழ் நாடெங்கும் திருவிளக்கேற்றி வைத்துக் குடிசை களிலும் மாளிகைகளிலும் குழந்தைகளும் பெரியோரும் ஒருங்கே கொண்டாடுவார்கள். கார்த்திகைத் தீபத்தின் ஒளிபோல் மாண்டிஸோரி என்ற அகண்ட தீபத்தின் ஒளியும் நம் தமிழகமெங்கும் குடிசையிலும் மாளிகையிலும் பள்ளி களிலும் வீச வேண்டும் என்பது என் ஆசை.

இந்த ஆண்டில், டாக்டர் மாண்டிஸோரி அம்மையார் ரோமாபுரியில் ஜனவரி 6-ம் தேதி 1906-ல் தொடங்கி வைத்த முதலாவது குழந்தை இல்லத்தின் 50-வது ஆண்டு விழாவை, ஐரோப்பா அமெரிக்கா முதலான மேலை நாடுகளில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இதன் பகுதியாகத் திரு. மாரியோ மாண்டிஸோரி (டாக்டர் மாண்டிஸோரியின் தத்துப் புத்திரர்) ஓர் ஆசிரியப் பயிற்சியையும் நடத்தி வைத்தார். மேலும், XI-ம் மாண்டிஸோரி ஸர்வ தேசிய மகாநாடும் (ஸெப்டெம்பர் 26, 27, 28-ல்) வெகு விமரிசையாக நடை பெற்றது.

இந்நிலையில் அமுத நிலையத்தார் அழகாக வெளியிட்டு உதவிய இந்நூலையும் அந்த விழாக் கொண்டாட்டத்தின் ஒரு செல்வச் சிறு பகுதியாகக் கொள்ளலாம்.

தமது அன்பு-உரிமையினால் குழந்தை யுலகின் தாயாகி விட்ட மாண்டிஸோரி அன்னை காணும் குழந்தை மாண்பை முக்கியமாகத் தமிழ் நாட்டுத் தாய்மார்களும் பிறரும் கண்டு, அவர்களில் சிலராவது போட்டி பூசல் இல்லாத புதிய உலகை நிர்மாணம் செய்யப்போகும் குழந்தைகளுக்குத் தக்க சூழ்

நிலையை அமைத்து உதவ முன்வருவார்களானல் , அதுவே இந் நூலுக்குச் சிறந்த பரிசாகும்.

சென்னை அடையாற்றிலே பத்தாண்டுகளாகத் தங்கி எனக்கு ஒளிகாட்டி வழி காட்டிய மாண்டிஸோரி அம்மையாருக்கும், உபகரணங்களைக் கையாளுவதற்கும் தக்க சூழ்நிலை அமைப்பதற்கும் பேருதவி புரிந்த திரு. மாரியோ மாண்டிஸோரி (டாக்டர் மாண்டிஸோரியின் தத்துப் புத்திரர்)க்கும், இந்நூலை எழுதும்போது பல ஆலோசனைகள் கூறிய அருண்டேல் (மாண்டிஸோரி) ஆசிரியப் பயிற்சி நிலயத் தலைவர் திரு. பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கும், இந்நூலுக்கு வேண்டிய போட்டோக்களை மனமுவந்து உதவிய பிரான்ஸ், ரோமாபுரி மாண்டிஸோரி-சங்கங்களுக்கும் என் உளம் கலந்த நன்றி.

கார்த்திகைத் தீபத் திருநாள்
'வஸந்தாலயம்' அடையாறு.
5—12—57

ஆசிரியர்

பொருளடக்கம்

1	குழந்தையழகு	1
2	நான் கண்ட 'குழந்தையம்மா'	16
3	குழந்தையுலகின் 'கொலம்பஸ்'	42
4	குழந்தைக் கலைஞர்	69
5	குழந்தையின் இன்ப உலகம்	80
6	சில அடிப்படைக் குறிப்புக்கள்	99
7	வாழ்க்கைக் கதையின் ஆரம்பம்	113
8	வளரும் கதை	127
9	மலர்ச்சியும் கனிவும்	142
10	ஆடுக, ஆடுகவே!	160
11	பேசும் பொற்சித்திரம்	179
12	உணர்ச்சிப் பருவங்கள்	201
13	ஆறு வயதில் அதிசய வளர்ச்சி	226
14	குழந்தையும் புதிய உலகமும்	247
	சிறப்புப்பெயர் முதலியன	266



மரத்தினாலான நீலவர்ணமுள்ள வட்டம், சதுரம், முக்கோணம், நீண்ட சதுரம் முதலான உபகரணங்களின் வடிவங்களைக் கையாண்டு தெரிந்து கொள்வதற்காகக் குழந்தை ஒரு கையால் அதைப் பிடித்துக்கொண்டு தன் விரல்களால் சுற்றிலும் தொட்டுப் பார்ப்பது எப்படி என்று கற்பிக்கிறார் மாண்டிஸோரி

மாண்டிஸோரி காணும் குழந்தை மாண்பு

1. குழந்தை யழகு

ஒவ்வொரு தாய்க்கும் தன் குழந்தை அழகுதான்.

பூவில் ரோஜாப் பூ அழகு
நாவில் பழகும் தமிழ் அழகு

பாட்டுக் கிசைந்த பண் அழகு
நாட்டுக் கிசைந்த நதி அழகு

ஆல மரத்து நிழல் அழகு
அழகர் கோவில் மலையழகு

மதுரைக் கோவில் பணி அழகு
மன்னர் கோவில் மதில் அழகு

திருவாரூரில் தேர் அழகு
திருவல்லிக்கேணிக் கடல் அழகு

மயிலாப்பூரில் குளம் அழகு
மயில்கள் ஆடும் சீர் அழகு

குயில்கள் பாடும் குரல் அழகு
குமரி தீர்த்தத் துறை அழகு

எங்கும் இல்லை இவ்வழகு
என் தன் குமரன் கண் அழகு

என்ற குழந்தைப் பாட்டு நம் தமிழ்நாட்டுத் தாய்மாரின் மன நிலையை வெளியிடக்கூடும்.

இதயமாற்றம் வேண்டும்

ஆனுல் குழந்தையை நோக்கி, 'கண்ணே! மணியே! முத்தம் தா' என்று கொஞ்சினுல் போதாது.

மாமணியோ முத்தோ?
மரகதமோ? மன்னவர்தம்
தாம முடிமீது
தயங்கும் வயிரமதோ?

என்று சீராட்டும் தாயோ தந்தையோ உண்மையாகவே மனமாற்றம் அடைய வேண்டும். இதயமாற்றம் அடைய வேண்டும் என்று கூறுவது பெரிதும் பொருந்துவ தாகும். இந்த இதய மாற்றத்தின் பொருள் என்ன?- பயன் என்ன?

சிறு குழந்தைபோல் மனிதனுடைய இதயத்தை மாற்றிவிடக்கூடிய மகத்தான சக்தியுடைய பொருள் வேறென்றுமில்லை. குழந்தை பிறந்ததும் தாயும் தந்தையும் தங்களுடைய செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம் 'புதிதாகப் பிறந்த இந்த ஜீவன்தான்' என்று உணர்ந்துகொள்கிருர்கள்.

இந்த உணர்ச்சியால் தன்னல இதயங்கள் அன்பு மயமாகி மாறுதல் அடைகின்றன. இந்த மாற்றத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பொதுவாகக் குழந்தைகளை யெல்லாம் நேசித்துப் பார்க்க வேண்டும். இத்தகைய இதய மாற்றம் குழந்தைக் கல்விக்கு நன்கு பயன்படும்.

இயற்கையோடு இசைந்த இன்பத்தைக் குழந்தை யிடத்தில் கண்டு களிக்கிருேம்.

முல்லை நறுமலரோ?
முருகவிழ்க்கும் தாமரையோ?
மல்லிகைப் பூவோ?
மருக்கொழுந்தோ? சண்பகமோ?

என்று கொஞ்சுவதெல்லாம் குழந்தை வாயிலாகக் கிடைக்கும் இன்பம்தானே?

குழந்தை தூய அன்பை இதயத்தில் தூண்டி வளர்க்கிறது.. இத்தகைய மாசற்ற, சக்தி மயமான, அன்பை இயற்கையும் தருவதில்லை.

உள்ளம் குளிர
உரையாடும் பைங்கிளியோ?

என்றும்,

மெல்ல மடியிருந்து
விளையாடும் பைங்கிளியோ?

என்றும் தாய் கொஞ்சும் குழந்தைக்கு எந்தச் சோலைப் பசுங்கிளிதான் நிகராகும்?

சோலை மலரொளியோ—உன்தன்
சுந்தரப் புன்னகைதான்?

என்று கவிஞர் இறைவனுடைய புன்னகையைப் பூஞ் சோலைகளில் மலர்ந்த பூக்களிடையே கண்டு மகிழ்கிறார். குழந்தையின் மோகனப் புன்னகைக்கு எந்தச் சோலை மலரொளிதான் ஈடாகும்?

•

கண்ணும் புன்னகையும்: ஓர் உரையாடல்

குழந்தை பிறந்து கொஞ்ச காலமானதும் தாயைப் பார்க்கிறது. எந்த இயற்கைக் காட்சியும் ஈடாகாத ஒரு தோற்றம் இது. 'கண் பேசுகிறது; வாய் பேசா

ததையும் பேச முடியாததையும் கண் பேசி விடுகிறது!' என்றெல்லாம் காதலர் பேசக் கவிஞர் பேசப் பக்தரும் பேசக் கேட்டிருக்கிறோம். குழந்தையின் பார்வையும் தாயின் இதயத்திற்குள்ளே புகுந்து பேசுகிறது; பேசித் தாயின் தன்மையை உயர்த்தி விடுகிறது. அகத்தை ஆனந்தமாக்கித் தாயின் முகத்திலே ஒரு புன்னகை யைத் தவழச் செய்கிறது குழந்தையின் பார்வை. தாயின் இந்தப் புன்னகைக்கு எந்தப் பொன்னகை யைத்தான் ஒப்பிட முடியும்?

தாயின் புன்னகை குழந்தைக் கண்களுடன் சம்பாஷணை செய்கிறது,—ஏதோ தெரியாத ஒரு பாஷையிலே என்று சொல்லலாம். இந்த உரையாட லின் பொருள் பகுத்தறிவுக்கு எட்டாத கவிஞர் மனோபாவத்திற்கும் உள்ளொளிக்குமே புலனாகக் கூடியது.

பிற நாட்டுக் கவிஞர் ஒருவர் இந்தக் கற்பனைச் சம்பாஷணையைக் கவிதையிலே உருவாக்கி யிருக்கிறார். நமது நாட்டுக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அதைத் தமிழ்ப் பாட்டாக்கி யிருக்கிறார். தாயின் புன்னகைக்கும் குழந்தைக் கண்களுக்கு மிடையே நிகழும் பேசாத பேச்சை நாமும் இங்கே வசன ரூபத் தில் சம்பாஷணையாக்கிப் பார்க்கலாம்.

தாயின் புன்னகை: எங்கே யிருந்து வந்தாய், குழந்தாய்?

குழந்தைக் கண்கள்: எங்கும் நிறைந்த வெட்ட வெளியிலிருந்தேன், இங்கும் சற்றே தங்கி யிருக்க வந்தேன்!

தாயின் புன்னகை: கண்ணைப் பார் கண்ணை!—நீல மலர் போலே! எங்கே—எந்தப் பூங்காவனத்திலே இந்தப் பூக்களைத் தேடிப் பெற்றாய்?

குழந்தைக் கண்கள்: பூமிக்கு வந்துகொண்டே யிருந்தேனம்மா; வழியில் நீலவானம் தந்தது இந்தக் கண்களை! ஆம், இனமாக, நன்கொடையாக! வான மலர்ச் சோலையிலே கிடைத்த நீல மலர்கள் அம்மா!

தாயின் புன்னகை: இந்தக் கண்களில் மிளிர்கிறதே இந்த ஒளிக்குக் காரணம் என்ன? குழந்தாய்!

குழந்தைக் கண்கள்: அம்மா! வானவீதி வழியாக வந்தேன்; நட்சத்திர ஒளி கொஞ்சம் தங்கிவிட்டது, அவ்வளவுதான்—இப்படி மின்னுகிறதம்மா!

தாயின் புன்னகை: ஏன், குழந்தாய்! அந்தக் கண்ணீர்த்துளி முத்துப் போலே? அது வந்த கதை யென்ன?

குழந்தைக் கண்கள்: இந்த வஞ்சப் பிரபஞ்சத்திற்கு வந்துகொண்டிருந்தேன். அது என்னைத் தேடிவந்து ஓடிவந்து வழியெதிரே, விழியெதிரே நின்றதம்மா!

தாயின் புன்னகை: பாப்பா, உன் நெற்றி பட்டுப் போல் மிருதுவாக இருக்கிறது'

குழந்தைக் கண்கள்: தளிரைத் தளிர்க்க வைக்கும் கை ஒன்று மெல்லத் தடவி விட்டது!

தாயின் புன்னகை: புதுப்புது அழகு முகத்தில் பொலிவதேன்?

குழந்தைக் கண்கள்: கண்டறியாக் காட்சியைக் கண்ட பலன் அம்மா! தெய்வப் பெண்கள் முத்தமிட்டு அளித்த புதுமையும் இது!

தாயின் புன்னகை: ஆசைக் குழந்தாய்! இந்தச் செவிகள் எப்படி........?

குழந்தைக் கண்கள்: ஈசன் பேச வாய் திறந்தான்; கேட்க எழுந்தன இச் செவிகள்!

தாயின் புன்னகை: இந்த இன்பச் சிறு கைகள் எவ்வாறு இசைந்தனவோ?

குழந்தைக் கண்கள்: அன்பு வளர்ந்து என்னை அணைத்திருக்கிறதம்மா!

தாயின் புன்னகை: இந்த அழகிய கால்களை எங்கே கண்டாய்?

குழந்தைக் கண்கள்: தெய்வப் பிறவிகளின் ஒரு சிங்காரப் பெட்டியிலே கண்டேன், கொண்டேன்!

தாயின் புன்னகை: சரி சரி, அப்பா! ஆவி குளிர என் மடியில் வந்த அதிசயம் எதுவோ?

குழந்தைக் கண்கள்: அம்மா! நீ செய்த அருந் தவத்தால் திருவருள் கூட்டிவைத்த அற்புதம்!

குழந்தை தன் ஆத்மாவின் ஆழத்திலுள்ள தெய்விக அழகை வெளியிடக் கண்டு களித்து இதயமாற்றம் அடைபவளே உண்மையான தாய். எல்லாக் குழந்தைகளுக்கும் உருவ அழகு அமைவதில்லை; ஆனால் குழந்தையை உத்தம மனிதனாக விளங்கச் செய்யும் ஆத்ம சௌந்தரியம் ஒவ்வொரு குழந்தையிடத்திலும் அடங்கிக் கிடக்கிறது.

இந்த ஆத்ம சௌந்தரியமே உண்மையான குழந்தை யழகு. இதைக் கண்டுபிடித்துக் குழந்தையை வளரவிடும் தாய் குழந்தைக்கு முக்கியமான ஆசிரியை-முதல் ஆசிரியை.

குழந்தைவித்து - உலக விளைவு

குழந்தையின் ஆத்ம சௌந்தரியத்தைத் தக்க சுற்றுணர்ச்சிகளால் மேலோங்கி வளரச் செய்ய வேண்டும். இந்த ஆத்ம சௌந்தரியத்தைக் குழந்தை யுள்ளத்திலே காணும் தெய்வக் கனல் என்றும், இக் கனலுக்கு விறகு போடுவதும் நெய் பொழிவதும் ஆகிய வேள்வித் தொழிலைக் குழந்தைக் கல்வி என்றும் சொல்லலாம்.

மூன்று வயதிலிருந்து ஐந்து அல்லது ஆறு வயது வரையுள்ள குழந்தைகளெல்லாம் திருஞான சம்பந்தர் போல் ஒரு வகையில் ஞானப்பால் உண்ணத் தக்கவை. இவ்வூட்டம் பத்துப் பதினைந்து வயது வரையில் குழந்தையை அறிவிலே வளரவிட்டுப் போஷித்து வருகிறது. இந்த ஊட்டம் குழந்தையின் ஆன்ம அழகு என்ற வேள்விக் கனலை மேலோங்கி ஜொலிக்கச் செய்யும் நெய்யாகும் என்பது டாக்டர் மாண்டிஸோரி போன்ற குழந்தைக் கலைஞர்களின் கொள்கை.

குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டும் தாயை உள்ளிட்ட ஆசிரியர்களெல்லாம், பெரியாழ்வார் தாயுள்ளம் கொண்டு குழந்தைக் கண்ணனைப் போற்றி வளர்த்துவிட்டது போல், தாமும் தம் செருக்கை விட்டுப் பணிவுடன் பணிபுரிய வேண்டியதுதான்

என்பதையும் டாக்டர் மாண்டிஸோரியின் சாராம்சமான கொள்கை எனலாம்.

நமது நாட்டிலே ஒரு புதிய சுதந்திர யுகம் தோன்றியிருக்கிறது. இந்தப் புது யுகக் கல்வி முறையில், குழந்தைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்கும் குழந்தைகளுக்கு உரிய போதனை முறைகளுக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு.

நம்முடைய இஷ்டப்படி யெல்லாம் குழந்தைகளுக்கு அறிவைப் புகட்டிவிடலாம் என்பதும், குழந்தைகளைத் திருத்தி நம்முடைய கொள்கைகளுக்கு இணங்க உருவாக்கிவிட வேண்டும் என்பதும் பழைய கல்வி முறையைச் சார்ந்த அபிப்பிராயம். இது தவறானது; புதிய சுதந்திர யுகக் கல்விக்கு முற்றும் பொருந்தாதது. குழந்தை யுள்ளத்தை ஒரு கூடைபோல் கருதி நாம் அவசியமென்று கருதும் விஷயங்களால் நிரப்பி விடுவது குழந்தைக் கல்வியாகாது.

சுதந்திர யுகத்திலே குழந்தைக்கும் சுதந்திரம் வேண்டும்; குழந்தைக் கல்வியில் சுதந்திர உணர்ச்சி இடம்பெற வேண்டும்.

'உண்மையான இந்தியா கிராமங்களில்தான் இருக்கிறது' என்று சொல்வதுண்டு. உண்மையான இந்தியா இந்தியக் குழந்தைகளிடம் இருக்கிறது என்பதும் உண்மைதான். சுதந்திர இந்தியா உண்மையான சுபிட்ச இந்தியாவாக ஓங்கி வளர்வதற்கு நேருஜி போன்ற சிறந்த தலைவர்கள் பரந்த மனப் பான்மையுடன் பகீரதப் பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் நோக்கம் நிறைவேறுவதற்குத் தெய்வம்

துணை செய்யவேண்டும் என்று பக்தர்கள் பிரார்த்திப்பார்கள். குழந்தையும் தெய்வமும் துணை செய்ய வேண்டும் என்பது குழந்தைக் கலைஞர்களின் மன நிலை.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்று எத்தனையோ தடவை சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் குழந்தை என்ற ஆத்மாவை உள்ளபடியே கொண்டாடுகிறோமா? கல்விச் சாலையைக் குழந்தைத் தெய்வத்தின் கோயிலாகச் செய்திருக்கிறோமா? ஓர் அழகான பூஞ்செடி ஒரு வித்துக்குள் அடங்கியிருப்பது போல், எதிர்கால உலகத்தைப் படைக்கும் மனிதன் இன்றைய குழந்தைக்குள் அடங்கியிருக்கிறான் என்ற அதிசய உண்மையை ஆற அமர நினைத்துப் பார்க்கிறோமா?

எத்தனையோ கிளைகளுடனும் விழுதுகளுடனும் எத்தனையோ மக்களுக்கு நிழல் அளிக்கக்கூடிய 'இயற்கை மண்டபம்' போன்ற ஆலமரம் எத்தகைய சிறு விதைக்குள் அமைந்திருக்கிறது! அடையாற்றிலுள்ள திவ்யஞான சங்கத் தலத்திலுள்ள பிரமாண்டமான ஆலமரத்தைப் பார்த்திருப்பீர்கள். அந்த ஆல மரம் கூட ஒரு சின்னஞ்சிறு குழந்தை-வித்திலிருந்து தான் கிளைத்தோங்கி உருவாகியிருக்கிறது. இத்தகைய சிருஷ்டி-விந்தைதான் குழந்தையையும் மனிதனுக்குத் தந்தையாக்குகிறது!

ஆம்; நமது குழந்தைக்குள் அடங்கியிருக்கிறது ஒரு புதிய உலகத்தை, ஒரு புதிய இந்தியாவை, ஒரு புதிய தமிழகத்தை உருவாக்கூடிய மனித சொரூபம். இவ்வுண்மையை நன்கு அறிந்து கொண்டால்தான்

உண்மையான குழந்தைக் கல்விக்கு ஓர் உறுதியான அடிப்படை அமைக்க முடியும்.

நம்முடைய முயற்சிகளால் குழந்தையை மனிதனுகப் படைத்துவிட முடியாது. குழந்தை தன்னைத் தானே மனிதனுகப் படைத்துக்கொள்ள வேண்டும். இந்த உண்மை குழந்தைக் கல்வியின் அதிமுக்கிய அம்சமாகக் கருதத் தக்கது.

கருவிலிருந்து குழந்தையைப் பூர்ண எழிலுடன் உருவாக்கிய இயற்கைச் சக்தி, குழந்தையைச் சிறந்த மனிதனுக்கவும் வல்லது. வயது முதிர்ந்த நாம் செயற்கைக் கல்வி முறைகளாலும் அடக்குமுறைகளாலும் இயற்கையின் சக்திகளை ஆக்கிரமித்துக்கொள்ளப் பார்ப்பது சரியன்று.

மாண்டிஸோரியின் கல்வித் தத்துவம்

வாய் பேசாப் பிராணிகள் போல் இருந்து விடாமல் ஒரு பாஷையில் பேசும் ஆற்றலைப் பெறுகின்ற மனிதக்குழந்தை பகுத்தறிவுள்ள மனிதனுகி, விஞ்ஞானியாகி மெய்ஞ்ஞானியும் ஆகக்கூடும். டாக்டர் மாண்டிஸோரியின் அநுபவ விஞ்ஞானக் கொள்கைகளில் மனேதத்துவ அம்சங்களுடன் சுதந்திர உணர்ச்சிக்கும் சமய உணர்ச்சிக்கும் இடம் உண்டு. குழந்தையின் ஆன்ம ஆழத்தில் மறைந்து கிடக்கும் பொக்கிஷத்தை எதிர்பாராத விதமாகக் கண்டு பிடித்தவர் டாக்டர் மாண்டிஸோரி.

இவரது மெய்ஞ்ஞான உணர்ச்சி இந்துக்கள், கிறிஸ்தவர், பௌத்தர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி அனைவர்க்கும் பொதுவானது. ஆஸ்திகர்



மாண்டிஸோரி-பாடசாலைச் சிறுமி தன் அருமை நாய்க்குட்டிகளுடன்

களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் இது வசீகர மானதுதான்.

குழந்தைகளின் அகத் தேவைகளுக்கு இசைந்த சூழ்நிலையில் அவர்களை வளர விடும்போது, அந்தக்

குழந்தை யுள்ளங்களிலிருந்தே நமக்கு உண்மைகள் தெரிய வரும் என்பது மாண்டிஸோரியின் ஒரு மகத்தான செய்தி. எத்தகைய கல்வி முறை, எத்தகைய உழைப்பு முறை குழந்தைகளுக்கு இசைந்தவை, உகந்தவை என்பதைக் குழந்தைகளிட மிருந்தே மாண்டிஸோரி முறையில் பயின்ற ஆசிரியர்கள் கற்றுக் கொள்ளுகிருர்கள். இதை ஒரு கல்வி முறை என்று சொல்வதைக் காட்டிலும் கல்வித் தத்துவம் என்று குறிப்பிடலாம்.

இந்தத் தத்துவ ரீதியில் வகுக்கப் பெறும் கல்வித் துறையிலே, எதிர்பாராத நிலேயில் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைத் தூண்டுவது மட்டுமல்ல; விடா முயற்சி, கீழ்ப்படியும் தன்மை, அமைதி நிலே முதலான அம்சங்களேயும் தூண்டி விடக்கூடும்—என்பதை நான் அநுபவ வாயிலாக அறிந்திருக்கிறேன். ஆசிரியர் களின் சித்த சக்திக்கோ, அல்லது வாழ்க்கை உபதேசங் களுக்கோ இணங்கக் குழந்தைகள் வளருவதற்கு ஏற்ற சூழ்நிலே உள்ள குருகுலக் கல்வியும் அன்று இது என்பதையும் நன்கறிவேன்.

எத்தகைய சூழ்நிலேயில் குழந்தைகள் சுதந்திர மாகத் தமது அறிவாற்றல்கள் சிருஷ்டி சக்திகள் முதலியவற்றை வெளியிட்டுக்கொள்ளுமோ, அத்தகைய சூழ்நிலேயை அமைத்துக் கொடுப்பது மாண்டிஸோரி கல்வித் தத்துவத்தின் ஸாராம்சம். குழந்தை யுள்ளமும் குழந்தை ஒழுக்கமும் கூனிக் குறுகிக் குறைபாடுகளே அடைவதற்குரிய காரணங்களேக் களேந்து, குழந்தை யின் பூர்ண சுதந்திர வளர்ச்சிக்கு இடையூறுகளே விலக்குவதும் மாண்டிஸோரியின் முக்கிய நோக்கமாகும்.

அச்சம், அடக்குமுறை முதலான காரணங்களால் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு நரம்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படுவது உண்டு. தக்க வழிக் கல்வியில் இந்த நோய்களும் நீங்கிவிடும். உடம்புக்கும் உள்ளத்திற்கும் ஒருங்கே ஆரோக்கியம் தரும் கல்வி இது. அறிவு வளர்ச்சி மட்டுமல்ல, குழந்தைகளின் அழகுணர்ச்சியையும் வளர்ப்பது உண்மைக் கல்வி.

குழந்தை யுள்ளத்திலும் எத்தனையோ ஆழங்கள் உண்டு. அந்த ஆழங்களைக் கண்டுகொள்வது மனித உள்ளத்தை உள்ளபடி அறிந்துகொள்வதுமாகும். டாக்டர் மாண்டிஸோரியின் கல்வித் தத்துவம் குழந்தை யுள்ளத்தின் ஆழங்களைக் கண்டு பிடித்துக் குழந்தை வாயிலாக மானிடத்திற்கு உரிய மதிப்புக்களை நன்கு வெளியிடுவது மாகும். இன்றைய உலகத்திற்கு வேண்டிய ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலை நாட்டுவதற்கும் இந்தக் குழந்தைக் கல்வி பயன்படும் என்பதும் மாண்டிஸோரியின் அபிப்பிராயம்.

மாண்டிஸோரியின் கருத்துக்கள் இத்தாலியில் உதித்தவையாயினும் இங்கிலீஷ் மூலமாக உலகமெங்கும் ஒளி வீசுகின்றன. ரஷ்ய மொழியிலும் இவர் கொள்கைகள் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. பிரெஞ்சு, ஜெர்மன், டச்சு, ஸ்வீடிஷ், போலிஷ், ருமேனியன், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் ஆகிய ஐரோப்பிய மொழிகளிலும் மாண்டிஸோரியின் ஆராய்ச்சிகள் வெளியிடப் பெற்றுள்ளன; இவர் நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சீன மொழி, ஜப்பான் மொழி, அரபி மொழி ஆகிய ஆசிய மொழிகளிலும், குஜராத்தி முதலான இந்திய மொழிகளிலும்

மாண்டிஸோரியின் நூல்களும் கொள்கைகளும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன.

இவர் கண்ட உண்மைகளுக்கு இசைந்த முறையில் கல்விச் சாலைகளும் ஆசிரியப் பயிற்சிக் கூடங்களும் பல்வேறு நாடுகளிலும் தோன்றி யுள்ளன. இந்தக் கொள்கைகளைப் பரிசீலிக்கும் கழகங்களும், பரப்பும் பத்திரிகைகளும் உலகத்தின் பல பகுதிகளிலும் தோன்றித் திகழ்கின்றன.

இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவிலும், புதிய உலகமாகிய இரண்டு அமெரிக்காக்களிலும் இந்த ஒளி பரவி வருகிறது. பெரிய சமுத்திரங்களினிடையே சிதறிக் கிடக்கும் சிறிய தீவுகளும் இக்கொள்கைகளைத் தெரிந்துகொண்டிருக்கின்றன,

ஆசிரியர்கள் பேராசிரியர்களுடன் நாவலாசிரியர் போன்ற கலைஞர்களின் மனோபாவத்தையும் தூண்டி யிருக்கின்றன மாண்டிஸோரி கண்ட உண்மைகள் டால்ஸ்டாயின் அருமைப் புதல்வியான டாடியானா (Tatiana Sukotine Tolstoy) என்பவர் மாண்டிஸோரியின் குழந்தை இல்லங்களில் தம் தந்தையாரின் ஒரு கனவு நனவாகி யிருப்பதாகக் கூறியுள்ளார்.

* * *

'ஒளவை பெற்றுள் ஆயிரம் பிள்ளைகள்' என்று கூறுவதுண்டு. ஒளவைக் கிழவியின் ஆனந்தமான தனிப் பாடல்களை அப்படிக் குறிப்பிடுகிறார்கள்: குழந்தை யுலகத்தின் ஒளவையாக அண்மையில் திகழ்ந்து மறைந்த மாண்டிஸோரிக்கோ உலகத்துக் குழந்தைகளெல்லாம் பிள்ளைகள்.

ஒவ்வொரு தாயும் தன் குழந்தையிடமே தெய்விக அழகு காண்பாள்; 'என்தன் கண்மணி கண்அழகு' என்று பூரித்துப் போவாள். மாண்டிஸோரிக்கோ எல்லாக் குழந்தைகளும் குழந்தையின் தெய்விக அழகை, ஆத்ம சௌந்தரியத்தை வெளியிட்டன. குழந்தை யுலகின் தாயாகிய இவரையும், இவர் கண்ட குழந்தை யுலகத்தையும் தமிழ் மக்களுக்கு ஒருவாறு அறிமுகப்படுத்துவது இங்கே எனது நோக்கமாகும்.


———

2. நான் கண்ட 'குழந்தையம்மா'

சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் நான் முதல் முதல் டாக்டர் மாண்டிஸோரியை நேரில் சந்திக்கும் பேறு பெற்றேன். அதற்கும் முன்பே மாண்டிஸோரி-போதனை முறையில் பழகிப் பயிற்சி பெற்றவள் தான்: சிறு வயதிலிருந்தே குழந்தைக் கல்வியில் எனக்கு விருப்பம் ஏற்பட்டுவிட்டது. என் தங்கையர் படிப்பில் நான் சிரத்தை கொண்டிருந்தது தான் இதற்குக் காரணம்.

குழந்தைகளை எதிர்காலத்தின் சிறந்த நன்மக்களாக உருவாக்குவதற்கு ஒரு புதிய கல்விமுறை தேவை என்பதைச் சில நல்லறிஞர்கள் நன்குணர்ந்து தங்கள் அநுபவத்திலிருந்து ஆலோசனைகளையும் வெளியிட்டு வந்தார்கள். அரசியல்-கிளர்ச்சியுடன் நாட்டுக் கல்வி முறை பல வழிகளிலும் திருந்தவேண்டும் என்ற கிளர்ச்சியும் என்னை வசீகரித்தது. அது காங்கிரஸ் தேசத்தை ஆளும் பதவியை ஏற்றுக்கொண்டதற்கு முற்பட்ட காலமானதால், காந்தி யடிகளின் ஆதாரக் கல்வி முறையோ, திட்டங்களோ அப்போது உருப் பெற்றிருக்கவில்லை.

அந்த நிலையில் டாக்டர் மாண்டிஸோரியைக் குறித்தும் இந்த அம்மையாரின் புதுமைக் கல்வி குறித்தும் ஒருவாறு தெரிந்துகொண்டு இளமையிலேயே மாண்டி ஸோரி-பாடசாலை ஒன்றில் பழகிவந்தேன். அடையாற்றில் டாக்டர் பெஸன்ட் அம்மையார் அந்நாளில் ஏற்



டாக்டர் அருண்டேல்




ருக்மணி தேவி

படுத்தியிருந்த 'தேசீய திவ்யஞான சங்கக் கல்விச்சாலை' என்ற பெயருள்ள அந்தப் பாடசாலையுடன் தான் இந்தியாவிலேயே முதல் முதல் தோன்றிய மாண்டி ஸோரிப் பாடசாலையும் இணைக்கப்பட்டிருந்தது. பிறகு சில ஆண்டுகள் இந்த முறையில் பரிசீலனைகள் செய்த பின், 1935-இல் 'பெஸன்ட் திவ்யஞான சங்கப் பாட சாலை'யில் மாண்டிஸோரி-ஆசிரியையாகி என் ஆராய்ச்சிகளை மேலும் தொடர்ந்து வந்தேன்.

கண்டேன் மாண்டிஸோரியை

1939-ம் ஆண்டில், திவ்யஞான சங்கத் தலைவரும் கல்வித்துறைக் கலைஞருள் ஒருவருமான டாக்டர். அருண்டேலும், இப்போது கலாக்ஷேத்திரத்தின் தலைவியாராகப் பிரசித்தி பெற்றிருக்கும் கலைச் செல்வி ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல் என்ற ஸ்ரீ ருக்மிணி தேவியாரும் அழைத்ததற்கு இணங்கி டாக்டர் மாண்டி ஸோரி முதல் முதலாக இந்தியாவுக்கு விஜயம்செய்து அடையாற்றில் திவ்யஞான சங்கத்தின் விருந்தாளி யாகத் தங்கியிருந்தார். இவர் வந்து சேர்ந்த அதே வாரத்தில், எனக்கு மாண்டிஸோரி-பாடசாலை ஆசிரிய ராக இருந்த ஒருவருடன், நான் கடற்கரை யோரத்தில் இவர் தங்கியிருந்த பங்களாவுக்குப் போனேன். மாண்டி ஸோரி அம்மையார் மேல் மாடத்தில் திறந்த வெளியில் உட்கார்ந்து கடலைப் பார்த்துக்கொண்டிருந்தார். என்னுடன் வந்த ஆசிரியர், 'இந்தப் பெண் தங்கள் கல்வியிலும் கருத்துக்களிலும் இளம் பிராயத்திலேயே விசேஷ விருப்பம் கொண்டவள். இப்போது தங்கள் போதனை முறையில் ஆசிரியையாகத் தொண்டாற்றி வருகிருள்' என்று என்னை அறிமுகப்படுத்திவைத்தார்.



மாண்டிஸோரி பள்ளியின் சில குழந்தைகள்

மாண்டிஸோரி முகமலர்ச்சியுடன் என் கையைப் பிடித்துக்கொண்டு, 'குழந்தைகளுக்காகச் செய்யும் பணி உனக்கு உள்ளபடியே விருப்பம்தானா?' என்று கேட்டார். 'ஆம், ஆம்' என்று நான் குதூகலமாகப் பதில் சொன்னேன்.

'குழந்தைகளே நமக்குப் பலவிதங்களில் வழி காட்டுகிறார்களல்லவா?' என்று கேட்டார்.

'இதை நான் அநுபவவாயிலாக அறிந்து கொண்டு வருகிறேன்' என்று பதில் சொன்னேன்.

இக் கல்வி முறையில் குழந்தையிடம் மாறுதல்கள் ஏற்படுவதுடன் ஆசிரியரிடத்திலும் மாறுதல்கள் ஏற் படுவதை நான் கவனித்து வந்திருக்கிறேன். இந்த மாறுதலுக்குக் குழந்தைகளே காரணம் என்பதையும் அறிவேன். இவர் சித்தாந்தப்படி குழந்தை தனக்குத் தானே ஆசிரியன், ஆசிரியனுக்கும் ஆசிரியன்.

இக் கொள்கையை நான் அநுபவவாயிலாகச் சோதித்துப் பார்த்துக்கொண்டது டாக்டர் மாண்டி ஸோரிக்கு மகிழ்ச்சி விளைவித்தது. குழந்தைகளின் ஆசிரியையாக இருப்பதில் எனக்குள்ள விருப்பம் குறித்து நான் படிக்கும்போது நேர்ந்த ஒரு நிகழ்ச்சி யைக் குறிப்பிட்டேன். அம்மையார் பிரியமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

'நான் பள்ளிக்கூடச் சிறுமியாக இருக்கும்போதே எங்கள் உபாத்தியாயர் ஒருவர் சில சமயங்களில் மாணாக்கர்களை 'நீங்கள் வயது முதிர்ந்தபின் என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்பார். அதற்கு மாணாக்கர் ஒவ்வொருவரும், 'நான் அதைச் செய்

வேன், நான் இதைச் செய்வேன்' என்று தத்தம் விருப்பத்தை எடுத்துச் சொல்வதுண்டு. நானே, 'குழந்தைகளின் ஆசிரியையாகத்தான் இருக்கப் போகிறேன்; அதிலும் எனக்கு மிகவும் விருப்பமான தமிழ் மொழியை நன்ருய்க் கற்றுக்கொடுப்பேன்' என்று விடை கூறினேன். 'அந்த லட்சியம் என் மனத்தில் இன்றும் பசுமையாக இருக்கிறது' என்று நான் சொன்னதும், மாண்டிஸோரியின் முகத்திலும் கண்களிலும் வசீகரமான ஒரு புதிய ஒளி வீசக் கண்டேன்.

'குழந்தைக்காகவே முழுவாழ்க்கையையும் அர்ப்பணம் செய்திருக்கும் உங்களைப் பெரும் பணிவுடன் இயன்றவரை நான் பின்பற்ற முயல்வேன்' என்று கூறி முடித்ததும், மாண்டிஸோரி அம்மையின் குதூகலம் ஒரு குழந்தையின் குதூகலத்தையே எனக்கு நினைவூட்டியது.

நாங்கள் தொடர்ந்து உரையாடினோம். குழந்தைகளின் மனப்பான்மையை அறிந்து அவர்களுக்குச் சரியான உதவி செய்யும் ஆற்றல் உள்ளவர்கள் சிலரே இருக்கின்றனர் என்றும், அவர்களே குழந்தைக் கல்விச் சாலைகளில் ஆசிரியர்களாக அமையத்தக்க பண்புள்ளவர்கள் என்றும் அம்மையார் தெரிவித்தார். வேறு பல விஷயங்களையும் எடுத்துச் சொன்னார். அந்தச் சம்பாஷணை எனக்கு ஏதோ ஒரு புதிய உலகத்தைச் சுட்டிக் காட்டுவதுபோலத் தோன்றியது.

கல்வி முறைகளைக் குறித்து எத்தனையோ ஆராய்ச்சிகள் உலகில் நடைபெற்று வந்திருக்கின்றன. மேலைநாட்டிலே ஸாக்ரடீஸின் நண்பரும் சீடருமான

ப்ளேட்டோவின் காலந்தொட்டு கல்வி வளர்ந்த கதையை ஆராய்ந்து பார்க்கலாம். நமது நாட்டிலே உபநிஷத காலந்தொட்டுக் குருகுலக் கல்வி அநுஷ்டானத்தில் இருந்து வந்ததையும், குருகுல ஆசிரமங்களுடன், பல்வேறு காலங்களில் அரசர்களின் உதவிபெற்றுக் கல்விச்சாலைகள் தழைத்து வளர்ந்ததையும் ஆராய்ச்சி வாயிலாக ஒருவாறு உணர்ந்துகொள்ளக்கூடும். இன்றைய கல்வியுலகில் பிரசித்தரான இம் மூதாட்டியையும் பழைய மேதாவிகளான ப்ளேட்டோ முதலானவர்களுடனும் ஆசிரியப் பண்புவாய்ந்த அருந்தவ முனிவர்களுடனும் ஒப்பிட்டுப் பேசலாமென்று எனக்குத் தோன்றியது.

குழந்தையை ஏதோ ஒரு குட்டித் தேவதூதன் அல்லது தெய்வ அவதாரம் போல மதித்து, ‘இந்த அதிசயம் என்றும் இடையருது நிகழ்கிறது, ஒவ்வொரு வீட்டிலும் நிகழ்கிறது’ என்று இவர் சொன்னது தவப் பெருஞ் செல்வரான ஒரு முனிவரின் மணிவாக்கைப் போலவே என் செவியில் விழுந்து உள்ளத்தில் பதிந்தது.

ஒரு ரோஜாமெட்டு ரோஜாவாக மலர்வதுபோல் குழந்தை மலர்ச்சி பெறுவதைக் கவனிக்கும் மனநிலையே ஆசிரியருள்ளத்தில் ஒரு மாறுதலைத் தோற்றுவிக்கிறது என்ருர். இப்படி ஆசிரியர் தாம் அடைந்து வரும் மாறுதலால் வாழ்க்கையையே அறிந்துகொள்ள ஆரம்பிக்கிருர் என்றும் அம்மையார் கூறியபோது, அது ஒரு கல்விக் கொள்கையாக மட்டும் அப்போது எனக்குத் தோன்றவில்லை; ஏதோ ஒரு மதக் கொள்கை போலவும் தோன்றியது.

'கல்வித் துறையில் இது ஒரு புரட்சி வழி' என்று எண்ணமிட்ட நான் இந்தக் குழந்தைக் கலைஞரின் குழந்தை-பக்தியைக் கண்டு திகைத்து நின்றேன். தமது பேரன்பினாலும் உள்ளொளியாலும் மாண்டிஸோரி குழந்தை யுள்ளத்திலே அதிசூட்சும சக்திகளும் அறிவுத் திறமையும் வாய்ந்த ஓர் ஆத்மா மறைந்திருக்கிறது என்ற உண்மையைக் கண்டுகொண்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

குழந்தை தானாகவே வளர்வதுபோல் தன்னுடைய அந்தரங்க சக்திகளையும் வெளியிடுகிறது என்பதையும், குழந்தையுலகில் அடக்குமுறைக்கு இடமே கிடையாது என்பதையும் இவர் தெளிவுபடுத்தினார். குழந்தையின் சூழ்நிலையில் சுதந்திரம் அவசியமானது என்பதையும், குழந்தை தன் மனோபாவத்திற்கு இணங்கக் குதூகலமாய்ச் சுதந்திரமாய்க் கற்கும் கல்விதான் உண்மைக் கல்வியாகும் என்பதையும் வற்புறுத்தினார்.

நமது நாட்டுக்கு விடுதலை எவ்வளவு அவசியமாக இருந்ததோ, அவ்வளவு அவசியமானது குழந்தையுலகத்திற்கும் சுதந்திரம் என்பதைத் தெரிந்து கொண்டபின், குழந்தைகள் பின்னாளில் உண்மையான ஜனநாயகவாதிகளாக விளங்கி ஒரு நாகரிக சமுதாயத்தில் கடமைகளோடு உரிமைகளையும் மேற்கொண்டு ஒழுகுவதற்கு இன்றியமையாத அடிப்படை சரியான குழந்தைக் கல்விதான் என்று முடிவு கட்டினேன்.

தக்க குழந்தைக் கல்வி உலகத்திலே சமாதானத்தையும் நிலைபெறச் செய்யக்கூடும் என்பதும் இவ்வம்மையாரின் நம்பிக்கை. குழந்தைகள் நமது

பேராசை, தன்னலம் முதலான குறைகளைப் போக்கி இதய மாற்றத்தை ஏற்படுத்தி வாழ்க்கையை அன்பு மயமாக்குகிறார்களல்லவா? இந்த இதய மாற்றம் நிலை பெற வேண்டுமென்றும், அதற்காகக் குழந்தைக்கு ஆசிரியனது வாழ்க்கை அர்ப்பணமாக வேண்டு மென்றும், இந்தக் குழந்தைப் பணியில் பணிவு முக்கிய மென்றும், செருக்கிற்கு இடமே கிடையாதென்றும் மாண்டிஸோரி தெளிவுபடுத்தினர்.

மாண்டிஸோரியின் தாய்மைப் பண்பு

அன்பைக்கற்பிக்கும் குழந்தை தனக்கு உரிய குழந் தைக் கலையைப் பற்றியும் கற்பிக்கிறது என்றும், இதை யறிந்து நாம்குழந்தையுடன் ஒத்துழைக்கவேண்டுமென் றும் மாண்டிஸோரி சொன்னர். தூயஅன்பின் ஆரம்ப ஒளியைக் குழந்தையின் வாயிலாகக்கண்டு, அந்த அன் பின் ஜோதியைத் தூண்டி வளர்க்க வேண்டுமென்று இவர் சொன்னபோது, தாய்மைப் பண்பின் ஒளி இவர் முகத்திலே தெளிவாகப் பிரகாசித்ததைக் கண்டேன்.

மாண்டிஸோரி கன்னியாகவே யிருந்தும் குழந்தை யுலகின் தாயாகித் தான் இக்கல்வித் துறையில் ஈடுபட் டிருக்கிறார். தன் நெருங்கிய உறவினர் ஒருவரை (சிற் றன்னையின் புதல்வரை)த் தத்து எடுத்துக்கொண்டு அவருடன் வசித்து வந்தார். அவர் மாண்டிஸோரியை 'அம்மா' என்றே அழைப்பார். நாளடைவில் மாண்டி ஸோரியுடன் நெருங்கிப் பழகத் தொடங்கிய நானும், என்னைப் போன்றவர்களும்கூட இவரை 'அம்மா' என்றே அழைக்கத் தொடங்கி விட்டோம்.

பள்ளிக்கூடங்களில் போட்டிகளையும் பரீட்சைகளை யும் பரிசு முறைகளையும் மாண்டிஸோரி ஆதரிக்கவில்லை.

இந்தப் போட்டி பூசல்களும் உத்தியோக வேட்டைகளும் முதியவர்களின் பேராசைகளுக்கும் சண்டைசச்சரவுகளுக்கும் காரணமாகின்றன என்பது மாண்டிஸோரியின் கருத்து. இத்தகைய கல்விமுறை குழந்தையின் இயற்கையான அறிவு வளர்ச்சிக்கு மாருக இடையூறு விளைவிக்கவும் கூடும் என்று கருதியது இவர் தாயுள்ளம்.

நாம் வாழும் பிரபஞ்சக் காட்சிகளையும் விஞ்ஞான மர்மங்களையும் குழந்தை - மனோபாவம் குதூகலமாய்த் தெரிந்துகொள்ளும் என்ருர். 'சிறு குழந்தைக்கும் மானஸ வாழ்வு உண்டு; குழந்தைச் சட்டை போர்த்து வந்திருக்கும் ஆன்மா என்றே குழந்தையை மதிக்க வேண்டும்' என்ருர்.

குழந்தை யுருவில் நமக்கு உதவி செய்ய வந்த கிறிஸ்து அல்லது கிருஷ்ணனுக ஒவ்வொரு குழந்தையையும் மதிக்கும் ஆசிரியனே உண்மையான குழந்தைக் கலைஞன் என்று இந்தக் 'குழந்தையம்மா' கூறிய போது, ஒரு புதிய கல்வியுலகை இவர் சுட்டிக் காட்டுவது போலவே எனக்குத் தோன்றியது.

மாண்டிஸோரி தமது கல்வி முறையை ஒரு கல்வி முறை'யென்றே ஒப்புக்கொள்வதில்லை. குழந்தை-ஆன்மாவின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டு எழுந்து தமக்கு இலக்காகிய, புலனுகிய, ஓர் உபதேசத்தை உலகத்திற்குத் தாம் வெளியிடுவதாகவே கூறினர். இதை நான் சிந்திக்கச் சிந்திக்க, 'குழந்தைகளின் பிரம்மா நாம் அல்ல; அந்தப் பிரம்மா குழந்தையுள்ளத்திலேயே உள்ள சிருஷ்டி-சக்திதான்!' என்ற உண்மை எனக்கு இனிது புலனுயிற்று.

ஆறுதல்பெருத உள்ளங்களெல்லாம் குழந்தையை நோக்கி நோக்கி ஆறுதல் பெறக்கூடும் என்பது நான் அநுபவ வாயிலாக அறிந்துகொண்டிருக்கும் ஒரு வாழ்க்கையுண்மை. வாழ்க்கையின் பல உண்மைகளை யும், மாண்டிஸோரி வகுத்துக் காட்டும் கல்வி-வழியிலே குழந்தையை நோக்கி நோக்கி, நாம் தெரிந்துகொள்ளக் கூடும் என்றும், தீராத சில வாழ்க்கைப் பிரச்சினைகளை யும் குழந்தையை நோக்கி நோக்கித் தீர்த்துக்கொள்ள முடியுமென்றும் நான் கனவு கண்டேன்.

இந்தப் பழைய உலகத்தை இளமையும் அழகும் புதுமையும் நிறைந்ததாய்க் காட்டும் இந்த அம்மை யாரின் குழந்தைக் கல்வி நமது நாகரிகப் போக்கிற்கும் பண்பாடுகளுக்கும் புதிதன்று என்றும் எண்ணினேன். எத்தனையோ இடையூறுகளுக்கிடையே, தாம் கண்ட புதிய கல்வி யுலகத்தைப் பிறரும் கண்டு இன்புற வேண்டுமென்று ஐரோப்பாவில் அரும் பாடுபட்டு வந்தவர் நமது நாட்டுக்கும் வந்து சேர்ந்தது பெரும் பாக்கியம் என்று கருதினேன்.

டாக்டர் மாண்டிஸோரி இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்குவதற்கு முன்பே லண்டன்மா நகரை விட்டுப் புறப்பட்டார். அப்போதே போர் மூண்டு விடும் என்பதற்குரிய சில முற்குறிகள் ஐரோப்பிய அரசியல் வானில் தென்பட்டன. இவர் 1939 ஆகஸ்டு மாதம் இந்தியாவுக்கு வந்து, அன்று அமைதி சிறப் பாக நிரம்பியிருந்த அடையாற்றில் அழகு நிலையமும் அறிவு நிலையமுமாகிய திவ்ய ஞான சங்கத்தில் தங்கி யிருந்தார்.

1917-ஆம் ஆண்டிலேயே டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மையார் ரோம் நகருக்குப் போயிருந்த சமயம் இவரைச் சந்தித்து, இந்தியாவுக்கு விஜயம் செய்து தமது போதனை முறைக்கு இணங்க ஒரு பயிற்சிச் சாலையையும் நடத்திக் காட்ட வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருந்தார். பிறகு இரண்டு உலக மேதைகளும் நண்பராயினர். டாக்டர் பெஸன்ட் தமது தேசீயக் கல்வி முயற்சிகளுக்கு மாண்டிஸோரியின்



மாண்டிஸோரியின் பிறந்தநாளான 1940 ஆகஸ்ட் 31-ம் தேதி யன்று ருக்மணிதேவியுடன்



Dr. அன்னிபெஸன்ட் அம்மையார்

கல்வி முறையில் ஓர் உறுதியான அடிப்படை கிடைக்கக் கூடுமென்று நம்பினர். ஆனால் அச்சமயம் மாண்டி ஸோரி அம்மையாருக்கு இந்தியா வந்து சேர வசதி கிடைக்கவில்லை. டாக்டர் பெஸன்ட் காலஞ் சென்ற பின்பே,—டாக்டர் அருண்டேல், ருக்மிணி தேவி ஆகியவர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு வந்து திவ்ய ஞான சங்கத்தின் ஆதரவில் பயிற்சி வகுப்புகள் நடத்தவும் இசைந்தார்.

அறுபத்தேழு வயதுச் சிறுமி

எனது முதற் சந்திப்பு நேர்ந்தபோது மாண்டி ஸோரி அம்மையாருக்கு வயது 67. ஆனால் தோற்றத்தி லிருந்து அவ்வளவு வயதாகி விட்டதென்று மதிக்க முடியாது. இளநகை யரும்பி எங்களை வரவேற்ற போது, உடல் முதிர்ச்சியை நாங்கள் முகத்திலே காணவில்லை. குழந்தைக் கல்வித் துறையில் இருபத் தைந்து வருஷ உழைப்பும் அகத்திலே இளமையை நிலை நாட்டி அந்த அகத்தின் அழகையே முகத்திலும் கண்ணொளியிலும் காட்டுவது போலத் தோன்றியது. 'அறுபத்தேழு வயதுச் சிறுமி'யாக அம்மையார் என் மனோபாவத்தில் தரிசனம் தந்தார்.

தம்மைப் பேட்டி காண வருவோரை மாண்டி ஸோரி வரவேற்று உரையாடுவதே ஒரு தனிக்கலை. தம்மை அணி செய்துகொண்டு, மாசற்ற வதனத்திலே ஒரு வசீகரமான புன்னகையையும் அணியாகக் கொண்டதுபோல், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வந்து சித்தமாக இருப்பார். இரண்டொரு முத்து மாலைகள் அணிந்துகொண்டிருப்பார். கலாக்ஷேத்திரத்



மாண்டிஸோரி தம் தத்துப்புத்திரர் திரு. மாரியோ மாண்டிஸோரியுடன்



மாண்டிஸோரி வசித்து வந்த பங்களாவின் மாடியிலிருந்து கடலை நோக்கியவண்ணம் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கிறார்

தின் தலைவியாரான ஸ்ரீமதி ருக்மிணி தேவி பரிசாக அளித்திருந்த ஒரு ஜதை ஜிமிக்கியையும் அழகிய வேலைப்பாடமைந்த பதக்கத்துடன் கூடிய அட்டிகை யையும் அணிந்துகொண்டு சில வேளைகளில் பேட்டி அளித்ததையும் நான் பார்த்திருக்கிறேன். இந்த அணிகள் மாண்டிஸோரிக்குப் பொருத்தமாகவும் அழ காகவும் இருந்தன. சரிகை வேலைப்பாடு அமைத்த அங்கவஸ்திரத்துடனும் அம்மையார் காட்சி வழங்கிய துண்டு.

ஒரு சமயம் காஞ்சீபுரத்திற்குக் காரில் போகும் போது தம்முடன் வந்த உதவி ஆசிரியர் ஒருவருடைய சரிகை அங்கவஸ்திரத்தை வாங்கி அணிந்துகொண் டார் மாண்டிஸோரி. 'இதுவும் என் ஆடையுடன் இசைந்து அழகாயிருக்கிறதே!' என்று குழந்தை போல் குதூகலமாய்ச் சொல்லிக்கொண்டார். காஞ்சி நகரிலிருந்து திரும்பி வந்த பின் மாண்டிஸோரி அந்த ஆசிரியரை நோக்கி, 'இந்த அங்கவஸ்திரத்தை நானே வைத்துக் கொள்ளட்டுமா? இது உனக்கு வேணு மானல் திருப்பித் தந்து விடுகிறேன்' என்ருர் இள நகை யரும்பிய வண்ணம். ஆசிரியர் அந்த வஸ்திரத்தை மனமுவந்து வழங்கிவிட்டார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இந்த நிகழ்ச்சிக்குப் பின்பே அம்மையார் சரிகை அங்கவஸ்திரங்களை அணியத் தொடங்கினர்.

இத்தகைய அழகுணர்வும் அன்புணர்வும் குழந்தை யுள்ளமும் கொண்ட இவர் மாணவர்களை விசேஷ அன்புடன் அருகில் அமரச் செய்துகொண்டு உரை யாடுவார். குழந்தைகள் பார்க்க வந்தாலும் தம்மை

நேர்த்தியாக அணி செய்துகொண்டு பார்ப்பதே இவர் வழக்கம். குழந்தைகளுக்குப் பழங்கள் முதலிய உணவுப் பொருள்களை வழங்குவார்.

இந்தக் குழந்தை யுலகின் ஆசிரியர் குழந்தை யைக் 'குழந்தைக் குருநாதன்' என்றும் தம்மை இந்தக் குருநாதனுக்குப் பக்தை யென்றும் சொல்லிக்கொண்ட டவர்தாமே! 'அறுபத்தேழு வயதுச் சிறுமி' 'ஆயிரம் வயதுப் பெருங்கிழவன்' என்றே குழந்தையை மதித்தார்!

சம்பாஷணை செய்யும்போது தாய்மொழியாகிய இத்தாலி பாஷையிலும் பேசுவார்; ஆங்கில மொழி யிலும் மெள்ள நிதானமாகப் பேசுவார். இத்தாலி பாஷை தெரியாதவர்களுக்கு அம்மையார் பேச்சை இவரது சுவீகார புத்திரர் திரு மாரியோ மாண்டிஸோரிதான் மொழி பெயர்ப்பார். அம்மையார் சொற்பொழிவு ஆற்றும்போது இத்தாலி பாஷையிலேதான் பேசுவார். அப்போதும் திரு. மாரியோ மாண்டிஸோரிதான் மொழிபெயர்த்துச் சொல்வார். பொருளைச் சிறிதும் பெயர்த்துவிடாமல் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் வெளியிடும் ஆற்றல் அவரிடம் சிறப்பாகக் காணப் பட்டது. தப்பித் தவறி ஒரு வார்த்தைக்குச் சரியான பொருள் மொழிபெயர்ப்பில் அமையவில்லையென்ருலும் மாண்டிஸோரி உடனே குறுக்கிட்டுத் திருத்திக் கொடுப்பார். திருத்திய பின்பு குழந்தை போலப் புன்னகை புரிவார்.

சம்பாஷணையில் நாங்கள் ஆங்கில மொழியை மெள்ள நிதானமாகத் திருந்திய உச்சரிப்புடன் நிறுத்தி நிறுத்திப் பேசுவோம். இப்படிப் பேசாமல் அவசர

மாக ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் அடுக்கிக்கொண்டே போனால் அம்மையாருக்குப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்கும். தாம் ஆங்கிலத்தில் பதில் சொல்லும்போதும் நிதானமாக நிறுத்தித் திருத்தமாகவே பேசுவார்.

சம்பாஷணைக்கிடையே கலகலவென்று சிரிப்பார். அது கள்ளங் கவடற்ற சிறுமியின் சிரிப்பு. சில சமயங்களில் இவர் சிரிப்பும் இவர் பேசும் இத்தாலி பாஷை போல் இனிமையாக ஒலிக்கும்.

அம்மையாருடன் எதைக் குறித்துப் பேசினாலும், அந்தச் சம்பாஷணையில் குழந்தைக் கல்வியைப் பற்றிய பிரஸ்தாபம் வராதிருக்க முடியாது. எவ்வளவு சுருக்கமான பேட்டியிலும் இவருள்ளம் கவர்ந்த குழந்தை-பக்தியைக் காணுமலிருக்க முடியாது. ஒரு தாய் என்ன வேலையைச் செய்துகொண்டிருந்தாலும், என்ன பேசிக் கொண்டிருந்தாலும், தன் குழந்தையைப் பற்றிய நினைவை அறவே விட்டு விலகி யிருக்க முடியாதல்லவா? அதுதான் இந்தக் 'குழந்தை யம்மா'வின் நிலையும்.

நான் அடிக்கடி மாண்டிஸோரி அம்மையாருடன் குழந்தைகளை வீடுகளிலும் பள்ளிகளிலும் வளர விட வேண்டிய முறைகளைப் பற்றிப் பேசியிருக்கிறேன். அப்போது இவர் மிக்க உணர்ச்சியுடன் பேசுவதையும், விஷயங்களை உள்ளுருகி எடுத்துரைப்பதையும் கவனித்திருக்கிறேன். அச்சமயங்களில், சக்தி வாய்ந்த சம்பாஷணையில் ஈடுபட்டுப் பயன்பெற்ற உணர்ச்சியை அடைந்திருக்கிறேன்.

ஒரு சமயம் அந்தக் கம்பீரமான உணர்ச்சி ததும்பிய முகத்தையும், அந்தச் சக்தி வாய்ந்த கண்களை யும் நேரே பார்க்காமல் நான் சற்றுக் குனிந்து கொண்டே இவர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந் தேன். தம் பேச்சை முடித்ததும் மிக்க அன்புடன் மாண்டிஸோரி, 'நீ ஏன் அப்படிக் குனிந்து கொண் டாய்? என்னைப் பார்த்தால் உனக்குப் பயமாயிருக் கிறதா?' என்று கேட்டார். அதற்கு நான் 'உங்க ளிடம் பயமே இல்லை. நீங்கள் எங்களுடைய அம்மா தானே!' என்று பதில் சொன்னேன்.

ஒரு நாள் நாங்கள் 'அம்மா, இந்த யுத்தத்தில் (அப்போது இரண்டாவது உலகப் போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது) நாள்தோறும் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்கிறீர்களே, ஒரு நாளைப் பணத்தைக் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டோம். அதற்கு மாண்டி ஸோரி சற்றுப் பயந்தது போல் அபிநயித்து, 'ஐயையோ! எனக்கு அவ்வளவு பணம் வேண்டாமே; வேண்டவே வேண்டாம். எனக்கு என்னத்திற்கு? நான் அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? உண்மையாகக் குழந்தையின் கல்விப் பணிக்குத் தம் வாழ்க்கையை உரிமையாக்கக்கூடிய ஆற்றலுள்ள சிலரே எனக்கு வேண்டிய செல்வம்!' என்று பதில் சொன்னார்.

ஐசுவரியத்திற்கோ அதிகாரத்திற்கோ இவர் அஞ்சியதில்லை; அடிமைப்பட்டதில்லை. அதனால்தான் அமெரிக்கக் கோடீசுவரர்களின் செல்வச் செருக்காலும் இவரை வசீகரிக்க முடியவில்லை; முஸோலினியின்


அதிகார வெறியாலும் இவரை வசப்படுத்திக்கொள்ள இயலவில்லை.

தம்முடைய கைப் பொருளையும் தாராளமாக வழங்கிவிடுவார். 'திறந்த கை, திறந்த உள்ளம்' என்ற நிலையில் மாணவர்களுக்கோ ஏழைகளுக்கோ பொருளுதவி செய்வதுண்டு.

* * *

அடையாற்றில் மாண்டிஸோரி தங்கியிருந்த பங்களாவுக்கு வெகு சமீபத்தில் செம்படவர் வசிக்கும் குப்பம் ஒன்று இருந்தது. வழக்கம்போல் மேல் மாடத்தில் திறந்த வெளியில் ஓர் இரவில் சிலருடன் இவர் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். திடீரென்று குப்பத்தில் புகை எழும்பித் தீ எரிவதைப் பார்த்துவிட்டார். உடனே கீழே இறங்கி அங்கே போய் விசாரித்தார். அந்தக் குப்பத்தில் பாதிக்குமேல் குடிசைகள் எரிந்து போய்விட்டன. மீண்டும் அவற்றை அமைப்பதற்குச் சுமார் ஆயிரம் ரூபாய் செலவாகுமென்று தெரிய வந்தது.

மறுநாள் காலை தம்முடைய மாணவர் சிலருடன் மறுபடியும் அங்கே சென்றார். 'அந்தக் குடிசைகளை அமைப்பதற்கு நான் 300 ரூபாய் கொடுக்கிறேன். நீங்களும் இயன்ற உதவி செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவேதான் நான் முழுத் தொகையையும் கொடுக்க முன்வரவில்லை' என்றார். மாணவர்களும் இவரது விருப்பத்தைப் பூர்த்தி செய்யவே, ஒரு புதிய குப்பம் இரண்டு வாரங்களில் உருவாகிவிட்டது.



டாக்டர் மாண்டிஸோரி வசித்த பங்களா

ஆறிய அழகும் சீறிய அழகும்

இவர் நடத்திய வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்ற போது இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை நான் இயன்றவரையில் பயன்படுத்திக் கொண்டேன். ஒவ்வொரு நாளும் அடையாற்றில் மாலை வேளையில் அம்மையார் கடற்கரையில் உலாவப் போவார். சில தினங்களில் நானும் உடன் செல்வதுண்டு. அப்போது மாண்டிஸோரி சிறு குழந்தைகளைப் போலவே குதூகலத்துடன் இயற்கையை அநுபவிப்பார். தாயன்பும் குழந்தையுள்ளமும் கொண்ட இந்த ஆசிரியர் இயற்கைப் பொருளழகுகளை அநுபவிப்பதிலும் எனக்கு ஓரளவு வழிகாட்டியுள்ளார் என்றே சொல்லவேண்டும்.

ஒருநாள் மாலை வேளையில் காற்றும் மழையும் கலந்து வீசின. புயலும் சீறி அடிக்க ஆரம்பித்து விட்டது. கடற்கரை யோரத்தில் மாண்டிஸோரி வசித்துவந்த அழகிய பங்களாவிலிருந்து கடல் ஒரே கொந்தளிப்பாய் இருந்ததைப் பார்த்தோம். மாண்டிஸோரி வகுப்பின் சில பாடங்கள் அந்தப் பங்களாவிலேயே நடைபெற்று வந்தன. வகுப்பு வேலை முடிந்த பின் அம்மையாருடன் பங்களாவுக்கு வெளியே நாங்கள் பேசிக்கொண்டிருந்த சமயம் அது.

புயற்காற்றின் ஆவேசத்தையும் கடலின் சீற்றத்தையும் கண்ட மாணவிகளில் சிலர் பயந்து பங்களாவுக்குள்ளே போய்விட்டார்கள். அப்போது மாண்டிஸோரி தம்மைச் சூழ்ந்துகொண்டிருந்த மாணவர்களைப் பார்த்து, 'அதோ இயற்கை அன்னை அற்புதக் கூத்து ஆடுகிருள்! நான் அவளை இன்னும் பக்கத்தில்

போய்த் தரிசிக்கப் போகிறேன். யார் வேண்டுமானு லும் என்னுடன் வரலாம்' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுவிட்டார். அப்போது இவருக்குச் சுமார் எழுபது வயது இருக்கும்.

நாங்கள் முப்பத்தைந்து பேரும் 'அம்மா, உங்க ளுடன் வேடிக்கை பார்க்க வருகிறோம்' என்று புறப் பட்டோம். மாண்டிஸோரி பேசிக்கொண்டே கடற்கரை யில் நடக்கத் தொடங்கினர். காற்றும் மழையும் வேக மாய் அடித்துக்கொண்டிருந்ததால் பேசியது தெளி வாகக் காதில் விழவில்லை. எனினும் இவரது குதூகல மான நடையைப் பார்த்ததுமே எங்களுக்குப் பயமோ சிரமமோ தெரியவில்லை. காற்று மணலை வாரியிறைக்க, அது ஊசி குத்துவதுபோல் உடம்பில் குத்தியபோதி லும், மாண்டிஸோரி லட்சியம் செய்யாமலே நடந்து போனர்.

மின்னல் மின்னியது; இடி இடித்தது. அலைகளா கிய கைகளைக் கொட்டிக் கடல் உக்கிரமாகவே எங்களை வரவேற்றது. இயற்கை அன்னையின் அந்த வடிவத் தைப் பயபக்தியுடன் தரிசிப்பதுபோல, அந்த உக்கிர சௌந்தரியத்தில் உள்ளம் பறிகொடுத்து, சமாதி கூடப் பெற்ற யோகி போல, சுமார் அரைமணி நேரம் அப்படியே நின்றுகொண்டிருந்தார் மாண்டிஸோரி. பிறகு பங்களாவுக்குத் திரும்பினர். எல்லோரும் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே திரும்ப வேண்டியதாயிற்று.

ஒரு புதிய, பெறுதற்கு அரிய, அநுபவத்தை அடைந்துவிட்டது போல் என் உள்ளம் குதூகலித் தது. மாண்டிஸோரி சுட்டிக்காட்டிய புதிய கல்வியும்

ஏதோ ஒரு கொந்தளிப்பான கடலைப் போலவேதான் அப்போது என் மனக் கண்ணுக்குத் தோன்றியது. இக் கல்வித்துறை குறித்த கருத்து வேற்றுமைகள் கடுங்காற்றையும் மழையையும் இடி மின்னல்களையும் நினைவூட்டின.

எனினும், அத்தகைய இயற்கைக்கும் நமக்கும் இடையே உறவு வேண்டும் என்று அபிப்பிராயப்பட்ட மாண்டிஸோரியின் மனப்பான்மையைக் குறித்துச் சிந்தனை செய்து பார்த்தேன். 'அவ்வண்ணமே, வளர்ந்த மனிதனுக்கும் வளரும் குழந்தைக்குமிடையே உறவும் பழக்கமும் அவசியம் என்கிருர் மாண்டிஸோரி' என்று எண்ணமிடலானேன்.

அற்புதக் கூத்து ஆடிய இயற்கை தன் அழகுகளை அற்புதமான நிலையில் எங்களுக்குப் புலப்படுத்தியது போல், வளர்ச்சியின் தத்துவங்களையும் துள்ளித் திரிகின்ற குழந்தை புலப்படுத்துகிறதோ என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். பிறகு மாண்டிஸோரியின் குழந்தை-பக்திக்கும், இவர் இயற்கை மீது கொண்டிருந்த பக்திக்கும் உள்ள தொடர்பை ஒருவாறு ஊகித்துக் கொண்டேன்.

அம்மா காணும் குழந்தை-அதிசயம்

ஒரு சமயம், மூன்று வயதிற்குள் குழந்தை அடையும் அதிசய மாறுதல்களைக் குறித்து மாண்டிஸோரி பிரஸ்தாபித்தார். சுருண்டு தொங்கும் கேசத்தையுடைய முகமும் முத்துப் போன்ற பற்களும் குறுகுறுப்பான கண்களும் தளர்நடையும் உள்ள குழந்தை-அதிசயத்தை மாண்டிஸோரி வருணித்தபோது, பெரி

யாழ்வார் மானஸீகமாய் வளர்த்துப் பாடியிருக்கும் அதிசயக் குழந்தையான கண்ணனைப் பார்ப்பது போல் எங்களுக்குத் தோன்றியது.

'கடவுள் ஒரு தெய்வக் குழந்தை; மேகக் கூட்டங்களினிடையில் மின்னி மறையும் ஒளி-நிழல் கூட்டங்களிலும் ஒரு புதுமைக் குழந்தையாகச் சிரித்துக்கொண்டிருக்கிறார்' என்பது கவி ரவீந்திரர் வாக்கு. டாக்டர் மாண்டிஸோரியோ, 'ஒவ்வொரு குழந்தையும் தெய்வக் குழந்தைதான்; ஒரு புதுமைத் தெய்வம்' என்கிறார். ஒவ்வொரு குழந்தையையும் உலகம் உய்யவந்த ஒரு குழந்தைக் கிறிஸ்து அல்லது ஒரு பாலகிருஷ்ணனாகவும் எங்களுக்குக் காட்டியிருக்கிறார்.

கவி ரவீந்திரரும் டாக்டர் மாண்டிஸோரி அம்மையாரும் கண்டு காட்டும் உண்மைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த அம்மையாரின் குழந்தைக் கல்வித் தத்துவத்திற்கும், சமய உலகின் ஸாரமான தத்துவத்திற்கும், எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்பது புலனாகும். நமது நாகரிகத்திற்கும் பண்பாட்டுக்கும் மாண்டிஸோரியின் கல்விமுறை சிறப்பாகப் பொருத்தமுடையது என்பதும் ஒருவாறு புலனாகும்.

'சிறு குழந்தைதானே' என்கிறோம். அதனால் குழந்தையின் அருமை பெருமைகளை நாம் உள்ளவாறு அறிந்து கொள்வதில்லை. மாண்டிஸோரியோ குழந்தையின் பெருமையையும் உண்மை நிலையையும் உள்ளவாறு தெரிந்துகொண்டிருக்கிறார்; மனித தத்துவத்திலுள்ள சிறப்பின் மூலவேரைக் குழந்தையிடம் கண்டு காட்டுகிறார்.

இவரை நான் மாணவியாக இருக்கும்போதே, 'அம்மா' என்று அழைக்கக் கற்றுக்கொண்டேன். தன் வாழ்க்கை முழுவதும் கன்னியாகவேயிருந்து குழந்தை யுலகத்திற்கே தாயாகிவிட்ட இவரைக் 'குழந்தை யம்மா' என்று குறிப்பிடுவது பொருத்தமாகும் என்பதை மெள்ள மெள்ளத் தெரிந்துகொண்டேன். குழந்தையுலகின் இந்த அம்மைக்கு ஒரு ஞானக் குழந்தையுள்ளமும் வாய்த்திருந்ததால் 'குழந்தையம்மா' என்ற பட்டம் 'டாக்டர்' பட்டத்தைக் காட்டிலும் இவரைச் சிறப்பிக்கிறது என்பது என் கருத்து.

குழந்தையுலகின் 'கொலம்பஸ்'

புதுமுறைப் பள்ளிக்கூடம் ஒன்றில் குழந்தைகள் வட்டம், சதுரம், முக்கோணம் முதலான பல வடிவங்களில் மரச் சாமான்கள் வைத்து விளையாடுவதுபோல் கல்வி கற்றுக்கொண் டிருந்தார்கள். அந்தக் கல்விப் பயிற்சியில், குழந்தைகள் எப்படிக் கவனம் செலுத்துகிறார்கள், எப்படி அவர்கள் கவனத்தை வசீகரிக்கலாம் என்ற கவலைக்கே இடமில்லை.

'இந்தப் பிள்ளைகளுடைய கவனத்தை வேறுவிதமாகத் திருப்பமுடியுமா?' என்றுதான் கவலைப்பட்டார் ஒரு பாதிரியார், இவர் சில 'பிஸ்கோத்து'களைக் கொண்டுவந்து குழந்தைகளுக்கு வழங்கினார். பிஸ்கோத்து-ஆசை இந்தக் கல்வி-ஆசையையும் வென்றுவிடும் என்று நம்பினார். பிள்ளைகளோ பிஸ்கோத்துகளை அவசரமாய் வாய்க்குள் திணித்துக்கொள்ளாமல், 'இதோ முக்கோணம், அதோ வட்டம், இதோ நீண்ட சதுரம்!' என்று வியந்து கூவினார்கள். ஆம், அந்தப் பிஸ்கோத்துகளும் மேலே சொன்ன (க்ஷேத்திர கணித) வடிவங்களில் அமைந்திருந்தன.

சதுரமாகவோ வட்டமாகவோ முக்கோணமாகவோ நீண்ட சதுரமாகவோ உள்ள சாமான்களைக் குழந்தைகள் உபயோகிக்க விரும்புகிறார்கள் என்பது தாய்மார்கள் கூடக் கவனித்துத் தெரிந்துகொள்ளாத விஷயம். குழந்தைப் பள்ளிக்கூடங்களின் சாதாரண வாத்தியார்களுக்கோ இது தெரியவே தெரியாது.

நீண்ட சதுரமாய் இருக்கும் ஒரு பாலசிட்சைப் புத்தகத்திலிருந்து 'அ, ஆ, இ, ஈ......' என்றெல்லாம் தாயாரோ, உபாத்தியாயரோ கற்பிக்க முயல்வதாக வைத்துக்கொள்வோம். இந்த நெடுங் கணக்கைக் காட்டிலும் குழந்தைகளை வசீகரிப்பது புத்தகத்தின் நீண்ட சதுர வடிவம்தான். அட்டை மாத்திரம் அழகான ஒரு வர்ணத்தில் அமைந்திருந்தால், புத்தகத்தின் வசீகரத் தோற்றத்தைச் சொல்லவேண்டியதில்லை.'புஸ்தகம் ஹஸ்த பூஷணம்'-புத்தகம் கைக்கு அணி - என்பது சிறுவர்கள் விஷயத்தில் விசேஷமாய்ப் பொருந்தும்.

'ட்ரெபீஸியம்' போன்ற வடிவத்தைக் காட்டி, இந்தக் கஷ்டமான பெயரை ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்தாலும், விஷம சதுர்ப்புஜம் என்ற வடமொழிப் பெயரைச் சொல்லிவைத்தாலும், அதையும் குழந்தைகள் குதூகலமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள். இத்தகைய புதிய வார்த்தைகளின் சரியான உச்சரிப்பைக் கேட்டு மனனம் செய்து கொள்வதிலும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சிதான்.

இத்தகைய குழந்தைப் பருவத்தில் பாஷை கற்றுக்கொள்ளும் ஆற்றல் தெளிவாய்க் காணப்படுகிறது. கற்பிக்கும் முறைதான் பெற்றோருள்ளத்திலும் தெளிவாக இல்லை: ஆசிரியருள்ளத்திலும் தெளிவுபடவில்லை.

இந்த உண்மையை முதல் முதல் கண்டுபிடித்தவர் டாக்டர் மாண்டிஸோரி அம்மையாரே யாவர். சதுரம், வட்டம், முக்கோணம், நீண்ட சதுரம் முதலான பல வடிவங்களுள்ளகருவிகளுடன் பழகும்போது, குழந்தைகளே அந்த வடிவங்களையும் நிறங்களையும் தெரிந்து

கொண்டு, தங்கள் சூழ்நிலையில் புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கிறார்கள்.

'மாண்டிஸோரி அம்மையார் என்ன கண்டு பிடித்துவிட்டார் பிரமாதமாக?' என்று கேட்பவர்களுக்கு, 'குழந்தைகள் கண்டுபிடிக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்!' என்று தைரியமாக விடை கூறலாம்.

இந்த அம்மையாரைக் 'குழந்தையுலகின் தாய்' என்று குறிப்பிடுவதுடன் 'குழந்தையுலகின் கொலம்பஸ்' என்றும் சொல்வதுண்டு. ஆனால், 'உண்மையில் குழந்தையுலகின் கொலம்பஸ் குழந்தைதான்!' என்ற மகத்தான உண்மையைத்தான் இந்தக் 'கொலம்பஸ்' அம்மையார் கண்டுபிடித்துக் காட்டினார்.

சதுரமான, வட்டமான, முக்கோணமான, வேறு பல வடிவங்களான பொருள்களைக் கையாளும் குழந்தைகளுக்கு இந்தக் கல்விமுறை ஒரே இன்பமாகி விடுகிறது. உதாரணமாக, இந்தப் பொருள்களின் மூலமாய் மேற்பூச்சான நீல நிறத்தைத் தெரிந்து கொண்ட ஒரு சிறுவன் புதுச்சேரித் துறைமுகத்தில் நீலக் கடலைக் கண்டதும் 'கடல் நீலம், கடல் நீலம்' என்று திரும்பத் திரும்ப மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டான்.

வானத்தின் நீலத்தையும், இயற்கையிலுள்ள வேறு நிறங்களையும் இப்படியே பிள்ளைகள் அநுபவிக்க முடியும். நீ-ல-ம்=நீலம் என்று எழுத்துக் கூட்டி ஏட்டு-நீலம் தெரிந்துகொள்வதைக் காட்டிலும் நீல நிறத்தை வியந்து மகிழ்ந்து தெரிந்துகொண்டு பிறகு அந்த மகிழ்ச்சியிலே எழுத்துக் கூட்டிப் படிக்கவும்

தெரிந்துகொள்வது எவ்வளவு மேலானது!—எவ்வளவு எளிதானது !

இப்படியெல்லாம் குழந்தையுள்ளத்தின் அநுபவங்களை அதிகமாக அறிந்து குழந்தையை இப்படியே வளரவிடும் தொண்டில் ஈடுபட்டிருக்கும் மாண்டிஸோரி அம்மை இரண்டரை வயதிலிருந்தே குழந்தைக் கல்வி ஆரம்பமாக வேண்டும் என்கிறார். இவர் 1906-இல் ரோம் நகரத்தில் குழந்தைகளின் முதலாவது இல்லத்தை ஆரம்பித்துவைத்தார்.

முதலாவது குழந்தை இல்லம்

எவ்வளவோ கஷ்டமான உழைப்பின் பயனாக வைத்தியப் பட்டம் பெற்று அம்மையார் அந்தத் துறையில் உத்தியோகத்தையும் எதிர்பாராமல், பல்கலைக் கழகப் பேராசிரியர் பதவியையும் மதித்துப் பாராமல், ஆடம்பரமான புகழையும் வருமானத்தையும் புறக்கணித்துவிட்டு, வாத்தியார் வேலையில்—அதிலும் சிறு பிள்ளைகளுக்கு வாத்தியாராக அமர்வதில்—ஆசை கொண்டதன் இரகசியம்தான் என்ன?

இக் காலத்தில்கூட வாத்தியார் வேலை தனக்குரிய கௌரவத்தைப் பெற்றுவிடவில்லை. குழந்தை-வாத்தியார் என்றால் இன்றும் ஏளனமாகத்தான் குறிப்பிடுகிறார்கள். அக்காலத்து இத்தாலி தேசத்தில் பாலர் பள்ளிக்கூட வாத்தியார் மிகவும் தாழ்ந்தவராகவும், அவர் பதவி மிக்க இகழ்ச்சிக்கு உரியதாகவும் மதிக்கப் பட்டதை அக்காலத்துக் கல்வி மந்திரியே ஒப்புக் கொண்டு, 'பிரசித்தமான பதவிபெற வேண்டிய நீ

ஏன் இந்தத் தொழிலுக்கு வரவேண்டும்?' என்று கேட்டுவிட்டார்.

இக் கேள்விக்கு டாக்டர் மாண்டிஸோரி, 'என்னை உலகம் விசேஷமாக மதிக்கப்போகிறது; இந்தப் புது முறைக் கல்வியால் நான் உலகப் பிரசித்தி அடையப் போகிறேன்' என்று பதில் சொன்னாராம். ஏதோ தீர்க்கதரிசி போலத்தான் பேசிவிட்டார். இன்று குழந்தைக் கல்வி என்றதுமே மாண்டிஸோரியின் பெயர் உலகத்தின் மூலைமுடுக்குகளிலும் நினைவிற்கு வருகிறதல்லவா?

தாம் கண்டு பிடித்த மகத்தான அடிப்படை யுண்மையை விஞ்ஞான ரீதியில் ஒரு புத்தக வடிவில் இவர் முதல் முதல் வெளியிட்டதும் அந்த முதலாவது ஆண்டிலேயே அது பதினைந்துக்கும் அதிகமான உலக பாஷைகளில் மொழிபெயர்க்கப் பெற்றது. குழந்தைக் கல்வி யுலகில்--ஏன், குழந்தை வளர்ச்சி யிலே—ஒரு புதிய இன்பமான ஒளிமயமான வழி கிடைத்துவிட்டது என்ற உணர்ச்சி உலக நல்லறிஞர் களுக்கிடையே பரவலாயிற்று.

இப்படிக் குழந்தைக் கல்வி யுலகிற்கு அதிசயமாக ஒரு புது வழி காட்டியது, இவர் ரோம் நகரத்தில் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் தொடங்கி வைத்த முதலா வது குழந்தை-இல்லம்தான். இன்றைய ரோமாபுரி புதிய இத்தாலிய நாட்டின் தலைநகரமாக விரைந்து வளர்ந்துகொண்டிருந்த காலம் அது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம், காணி நிலமும் கூடக் காலியாகக் கிடக்க வேண்டாம் என்ற மனப்பான்மையுடன், மக்கள் கட்டிடங்களைக் கட்டியவண்ணமா யிருந்தார்கள். பேர்

பெற்ற ரோமானிய மதிற்சுவர்களை ஒட்டியிருந்த ஒரு நிலப் பகுதிதான் கொஞ்ச காலம் காலி நிலமாகக் கிடந்தது. காரணம் பிசாசுகளின் பயம்தான். இந்த இடத்திற்கு அருகில் ஓர் இடுகாடு இருந்தது. சரித்திரப் பிரசித்தி பெற்ற பண்டைக் காலத்துப் பேய் பிசாசுகளுக்கும் இது ஒரு நிலைக்களம் என்ற மூட நம்பிக்கையும் பரவியிருந்தது. இந்த இடத்திலே ஒரு குழந்தை-இல்லம் தோன்றி டாக்டர் மாண்டிஸோரியைக் குழந்தை யுலகின் கொலம்பஸாக உலகமெங்கும் புகழ் பெறச் செய்துவிடும் என்று யாரே எதிர்பார்த்திருக்க முடியும்?

இந்தத் தனிமையான நிலப் பகுதியிலும் பிரமாண்டமான ஒரு கட்டிடத் தொகுதியை எழுப்புவோம் என்று துணிந்து முன்வந்தவர்களும் உண்டு. ஆனால், முன் பணம் உதவிக் கட்டிடங்களைக் கட்டி முடித்துப் பிறகு பகுதி பகுதியாக விற்றோ, வாடகைக்கு விட்டோ பெரும் பொருள் ஈட்டிக் கொள்ளலாமென்று திட்டமிட்டு வேலை செய்தவர்கள் தங்கள் வேலையைப் பூர்த்திசெய்வதற்கு முன்பே, கைப்பொருள்களை இழந்து கதியற்ற ஏழைகளாகி விட்டார்கள். கதவும் இல்லாமல் சாளரமும் இல்லாமலிருந்த அரைகுறைக் கட்டிடங்களில் பிச்சைக்காரர்களும், சட்டத்திற்குக் கட்டுப்பட விரும்பாத துஷ்டர்களும் அடைக்கலம் புகுந்தனர். அவர்கள் தொகை அதிகரிக்கவே, பேய் பிசாசுகளைக் காட்டிலும் மக்களைப் பயமுறுத்தத் தொடங்கி விட்டார்கள்.

இந்தப் பயங்கர ஸ்தலம் விரைவில் சமுதாயப் பணியாளர்களின் கவனத்திற்கு இலக்காயிற்று. கட்டிட வேலைகளை ஒருவாறு பூர்த்தி செய்வதற்கும், ஒழுங்கான

ஆரோக்கிய வாழ்க்கை வாழ்வதற்கும் வசதிகள் ஏற்பட்டன. இப்பகுதியில் குடியிருந்த மக்கள் ஒரு வாறு திருந்திய வாழ்க்கை நடத்தலானுர்கள். இங்குள்ள குழந்தைகளுக்கு ஏற்பட்ட இல்லம்தான் மாண்டிஸோரியின் புதுமுறைக் கல்விக்கு ஆரம்ப வளர்ப்புப் பண்ணையாக உதவியது.

பெற்ருேர்கள் வேலைக்குப் போயிருக்கும்போது, தங்கள் குழந்தைகளைப் பகற்பொழுதில் துஷ்டச் செயல் களில் ஈடுபடாதபடி ஓரிடத்தில் பாதுகாப்பான நிலை யில் விட்டு வைக்க விரும்பினுர்கள். ஒருவகைச் சிறை யில் அடைத்து வைப்பது போலத்தான் அந்தக் குழந்தைகளை யெல்லாம் அப்படி ஓரிடத்தில் ஒருவர் மேற்பார்வையில் சேர்த்து வைப்பது நல்லதென்று நினைத்தார்கள்.

மேற்பார்வை யிடுவதற்கு ஒரு சமுதாயத் தொண்டர் வேண்டுமல்லவா? அப்போது டாக்டர் மாண்டிஸோரி வைத்தியத் தொழில் புரிந்து வந்தார். மனோதத்துவ விஞ்ஞானம் இவருள்ளத்தைச் சிறப்பா கக் கவர்ந்திருந்தது. 'இவரே அந்த ஏழைக் குழந்தை களையும் கவனித்துக்கொள்ள முடியுமா?' என்று சமுதா யப் பணியில் சிரத்தைகொண்டிருந்த சிலர் கேட்க, இவ ரும் தம்முடைய மற்ற வேலைகளுடன் இந்த வேலையை யும் சேர்த்துக்கொள்ள இசைந்தார். இது குழந்தைகள் வாயிலாக மனோதத்துவ ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்வதற்கு இவருக்கு வசதி அளித்தது.

அக்குழந்தைகளுக்கு ஆரோக்கியச் சூழ்நிலையில் உணவு முதலிய வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென் பதை இவர் முதல் முதல் வற்புறுத்தினுர். ஆனல்

பணத்திற்கு என்ன செய்வது? வீடில்லாத அகதிகளுக்கு வீட்டு வசதிகளும் வேலை வசதிகளும் அளித்துதவ முன் வந்தவர்கள் இந்த ஏழைக் குழந்தைகளுக்கும் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடும் என்று நம்பினர் மாண்டிஸோரி. ஆனால் அவர்களுக்கோ இந்தக் குழந்தைப் பிரசினைகளில் சிரத்தையே இல்லை.

சமுதாயப் பணியாளர்கள் அகதிகளின் பிரசினைகளை ஒருவாறு சமாளிக்க விரும்பிய போதிலும், குழந்தைகளின் நிலையை நினைத்துப் பார்க்கவேயில்லை. எனினும், சில பெண்கள் இக்குழந்தைகளுக்காக நிதி சேர்த்து உதவ முன் வந்தார்கள். அதனால் நடுத்தர வயதுள்ள ஒரு பெண்ணுக்கு ஊதியம் அளித்து அந்தக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளச் செய்வது சாத்தியமாயிற்று. இந்த விதமாக 1906-ஆம் வருஷம் ஜனவரி ஆறும் தேதி சுமார் ஐம்பது குழந்தைகளுடன் மாண்டிஸோரியின் முதலாவது குழந்தை இல்லம் ஆரம்பமாயிற்று.

ஜனவரி 6-ஆம் தேதி ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு புனித நன்னாளாகும். தெய்வக் குழந்தையாகிய கிறிஸ்துவுக்கு மூன்று அரசர்கள் காணிக்கையும் அஞ்சலியும் செலுத்திய நாளான 'எபிபெனி' (Epiphany) என்ற இத்திருநாள் இத்தாலி நாடெங்கும் ஒரு குழந்தை விழாவாகக் கொண்டாடப் படுகிறது.

இந்தத் திருநாள்-விழாவை ஒட்டி நடைபெற்ற முதலாவது குழந்தை-இல்லத் தொடக்க வைபவத்திற்குப் பல மக்கள் விஜயம் செய்திருந்தனர். இதனால்

அந்தக் குழந்தைகளுக்குக் கொஞ்சம் அச்சமும் ஏற்பட்டது. தங்கள் சூழ்நிலையில் தெரிந்துகொண்டிருந்த கூட்டத்தினரைப்போல் இந்தப் பிரமுகர்கள் தோற்றமளிக்கவில்லை. மேலும், கரடுமுரடான ஒரு வகைக் கறுப்புத் துணியை இக்குழந்தைகள் அனைவரும் அணிந்திருந்தனர்; இந்த உடையில் கை கால்களை இஷ்டப்படி இயற்கையாக இயக்கிக் கொள்வதற்கும் போதுமான சுதந்திரம் கிடைக்கவில்லை. எனவே, இரண்டு முதல் ஐந்து வயது வரையுள்ள இச்சிறுவர்களை இல்லத்தில் பிரவேசிக்கச் செய்வதே சிரமமாகிவிட்டது.

'உள்ளே வாருங்கள்'-என்றதும், குழந்தைகளில் ஒருவரும் முன்வரவில்லை. கலக்கமுற்று நின்றுகொண்டிருந்த அப்பிள்ளைகளை நோக்கி, 'ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி அப்படியே அவர்கள் செய்ததும், முதலாவது குழந்தையை வகுப்பு-அறைக்குள் இழுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இந்தக் குழந்தையுடன் வரிசையாகக் கை கோத்து நின்ற மற்றப் பிள்ளைகளும் உள்ளே உள்ளே இழுத்து வரப் பட்டார்கள். அப்போது குழந்தைகள் பலரும் அழுதுகொண்டுதான் வந்தார்கள்.

குழந்தை விழா என்றால், வசதியுள்ள பெண்கள் பொம்மைகளையும் உணவு வகைகளையும் கொணர்ந்து குழந்தைகளுக்குப் பரிசாக அளிப்பதுண்டு. இந்த விழாவுக்கு வந்திருந்த சீமாட்டிகளில் எவரும் இக்குழந்தைகளுக்கு அத்தகைய பரிசு ஒன்றும் அளிக்கவில்லை. 'எப்படியாவது சில மாதங்களில் இக்குழந்தை

களின் நிலை அபிவிருத்தி அடையக்கூடும்' என்றே திருப்தியடைந்தார்கள்! இரக்கமுள்ள நெஞ்சை இத்தகைய நம்பிக்கையைக் கொண்டே திருப்தி செய்து கொள்வோர் உண்டு. இவர்கள் பெரும்பாலும் தங்கள் கனவு - உலகிலிருந்து காரிய உலகத்திற்கு வருவதில்லை.

தொடக்க விழாவில் விருந்தும் உண்டு; அதிக அளவில் சொல்விருந்தும் உண்டு. சொல்விருந்தில் பங்கு கொள்ளும்படி டாக்டர் மாண்டிஸோரியை அழைத்தார்கள்.

இத்தாலி நாட்டில் இவரே வைத்தியத் தொழில் நடத்திய முதலாவது பெண்மணி; விஞ்ஞான உள்ளத்துடன் சமய நம்பிக்கையால் பெற்றுக்கொண்ட மெய்ஞ்ஞான உணர்வும் உடையவர். இந்த முத்திறப் பண்புகளாலும் இவர் குழந்தையுலகைப் புரிந்து கொள்ளக் கூடியவர் என்று இத்தகைய இல்லத்தில் சிரத்தையுள்ளவர்கள் நம்பினர்கள்.

இல்லத்தில் முதலாவது பேச்சு

'எபிபெனி' விழாவின் உட்பொருளைக் குறிப்பிட்டு அந்தக் குழந்தை - விழா இந்தக் குழந்தை-விழாவுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை முதல்முதல் எடுத்துக்காட்டினர் மாண்டிஸோரி. கிறிஸ்து பெருமான் என்ற அந்தத் தெய்வக் குழந்தையை நினைத்துப் பார்த்ததும், இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த குழந்தைகள் மீது இரக்கம் பொங்கி ஓடியது. துஷ்டப் பிள்ளைகளின் துடுக்கை அடக்க வேண்டுமென்று ஒருவகை அடக்கு முறை ஆட்சியை வீடுகளிலும் கல்விச் சாலைகளிலும்

கைக்கொள்வது முற்றும் தவருனதே என்பது இவரது கள்ளங் கவடற்ற உள்ளத்திற்குப் பளிச்சென்று புலனுகிவிட்டது.

அந்த அகதிக் குழந்தைகள் மீது பொங்கிய இரக்கமும் அன்பும் உருகிப் பேச்சாக வெளிப்பட்டது போலப் பேசினுர் மாண்டிஸோரி. 'ஒரு பெரிய சமுதாயத் திருப்பணியின் தொடக்கம் இது' என்ருர். நீண்ட காலமாகச் செய்யத் தவறிய அந்தத் தவறுதலுக்கு ஒரு பிராயச்சித்தம் என்ருர். 'குழந்தை தனக்கு உரிய உரிமைகளைப் பெற வேண்டிய காலம் வரத் தான் போகிறது; அப்போது குழந்தைக் கிறிஸ்துவைப் போல் ஒவ்வொரு குழந்தையும் நமக்குச் சொல்ல வேண்டிய நற்செய்தி உண்டு என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்வார்கள்' என்று கூறி முடித்தார்.

'ஒரு வைத்திய விஞ்ஞானி இப்படிக் கற்பனைக் கோபுரத்திலிருந்து பேசுகிருரே!' என்று மக்கள் அதிசயித்தனர். அந்த ஐம்பது குழந்தைகளைப் பார்த்துமா இந்தக் கற்பனைச் சித்திரம்? விகாரத் தோற்றத்துடன், பயந்தும் படபடவென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டும் இருந்த அந்தப் பிள்ளைகளிடம் எந்தச் செய்தியை எவரே எதிர்பார்க்கத் துணிவர்?

அந்தப் பிள்ளைகளும் ஓரளவு வசதி பெறுவதற்கு உரியவர்களே; ஆனுல் அதற்கு மேல் எத்தகைய உரிமைகளை அவர்கள் பெற முடியும்? அந்தக் குழந்தைகளிடம் மேதையையோ, வேறு சிறப்பான அம்சங்களையோ எதிர்பார்க்கும் மனேபாவத்தைத்தான் என்னென்பது?



டாக்டர் மாண்டிஸோரி 1938-ம் வருஷத்தில்

பத்திரிகைகள் மாண்டிஸோரியின் பேச்சைப் பிரசுரித்தன; டாக்டர் மாண்டிஸோரியின் வாக்கு வன்மையை ஒப்புக்கொண்டன. 'இவருடைய வாக்கு வன்மையில் ஒரு சிறப்பான அம்சம் மட்டுப்படாத ஒரு வகை மனோபாவம்' என்பதையும் சுட்டிக் காட்டின. ஆனால் அந்த மனோபாவம் பகுத்தறிவுப் பாதையை விட்டு விலகிச் சென்றதாகத் தோன்றினாலும், வேறு வகையில் அடைய முடியாத சில சிகரங்களுக்கு ஒரு குறுக்கு வழி கண்டு பிடிக்கக்கூடும் என்பதை அந் நாளில் அறிந்துகொண்டவர் இல்லை.

அந்த ஜனவரி மாதத்துக் குழந்தை - விழாவில் உதித்த கற்பனைச் சுடர்தான் விரைவில் 'மாண்டிஸோரி கல்வி முறை' என்ற ஒரு மகத்தான ஜோதியாக வளர்ந்து வந்திருக்கிறது.

இல்லம் வளர்ந்த கதை

இக் காலத்திலுள்ள குழந்தை - இல்லங்களில் காணப்படும் சிறப்பியல்புகளில் ஒன்றையும் அந்த முதலாவது குழந்தை - இல்லத்தில் கண்டுகொள்ள முடியாது. குழந்தைகளுக்குத் தக்க அளவுள்ளதும், அவர்களே லகுவாய்க் கையாளக் கூடியதும், அவர்களைக் கவர்ந்து மகிழ்விக்கும் நிறங்களோடு கூடியதுமான பொருள்கள் அந்த இல்லத்தில் காணப்படவில்லை. குழந்தைகள் பிரியத்துடன் ஜாக்கிரதையாக உபயோகித்துப் பார்க்கக் கூடிய மென்மையான பொருள்களும் அங்கே இல்லை. அவர்களுடைய அதிசய உணர்ச்சியைத் தூண்டக்கூடிய கவர்ச்சியுள்ள அம்சங்களில் ஒன்றும் அந்த இல்லத்தில் இல்லையென்றே சொல்லிவிடலாம்

படமோ, வேறு அழகுச் சின்னமோ அமையப் பெருத சுவர்களிலே சாளரங்கள் குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் இருந்தன. சில மேசைகளைத் தவிர அந்த இல்லம் வெறிச்சென்று தோன்றிய ஒரு சூனியப் பிரதேசமாகவே இருந்தது.

மாண்டிஸோரி வாரம் ஒரு முறை இந்த இல்லத்திற்கு வருவார். வரும்போது, சில சாமான்களைக் கொண்டு வருவார். வைத்திய நிபுணர் என்ற தோரணையில்.உள்ளக் கோளாறுகள் உள்ள குழந்தைகளை மனோதத்துவ முறையில் ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்ததால், அத்தகைய ஆராய்ச்சிக்கு உரிய சில பொருள்களைத்தான் கொண்டு வருவார். அந்தப் பொருள்களை இக் குழந்தைகளிடம் விட்டு வைப்பார்.

இல்லத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த பெண்ணை நோக்கி மாண்டிஸோரி, 'நீ குழந்தைகளின் வேலைகளில் ஒருவகையிலும் தலையிட வேண்டியதில்லை; அவர்கள் நான் கொடுத்திருக்கும் உபகரணங்களைக் கொண்டு என்ன செய்கிருர்கள் என்பதையும், வேறு என்ன செய்து எப்படிப் பொழுது போக்குகிருர்கள் என்பதையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்: அவ்வளவுதான்' என்று சொல்லியிருந்தார்.

உள்ளக் கோளாறுகள் உள்ள குழந்தைகளுக்கும், இந்த அகதிப் பிள்ளைகளுக்கும் மனப்பான்மையில் எத்தகைய வேற்றுமைகள் இருக்கின்றன என்பதைச் சோதித்தறிய விரும்பினர் மாண்டிஸோரி. பகற்பொழுதெல்லாம் தங்கள் பெற்ருேருடன் தொடர்பு இல்லாமலும், பெற்ருேரோ முதியவரோ உபாத்தியாயரோ பாடம் கற்பிக்காமலும், இப்பிள்ளைகள் தங்களுக்கிடையே

தாம் உதவிய உபகரணங்களுடன் பொழுது போக்கி வருவதால், இவர்களிடம் ஏதாவது மாறுதல் காணப் பட்டதா என்பதையும் இந்த அம்மையார் தெரிந்து கொள்ள விரும்பினர்.

ஒரு பெரிய, முக்கியமான, மாறுதல் மாண்டிஸோரி அம்மையாரையும் வியக்கச் செய்தது. குழந்தைகள் முகத்திலே திருப்தி, ஒரு மலர்ச்சி, ஒளிர்வதைக் கவனித் தார் அம்மையார். அகத்தின் அமைதியும் மகிழ்ச்சியுமே அந்த முகமலர்ச்சிக்குக் காரணம் .என்பதையும் ஊகித்துக் கொண்டார். இது எவ்வாறு விளைந்தது?

இப்போதும் எளிய சூழ்நிலைதான்; எனினும் இந்தச் சூழ்நிலை பழைய சூழ்நிலையுடன் முற்றும் மாறு பட்டிருந்தது. பழைய வாழ்க்கைக்கு இந்த இல்லத்தின் வாழ்க்கை விசேஷ அபிவிருத்திதானே!

இல்லத்தின் சுவர்கள் அழகுணர்ச்சியைத் தூண் டும் முறையில் அலங்கரிக்கப் பெருவிட்டாலும் தூய வெள்ளையாக இருந்தன. இல்லத்திற்கு வெளியே பச்சைக் கம்பளம் விரித்திருந்ததுபோல் பசும் புல்–தரை காணப்பட்டது; இது பிள்ளைகளது அழகுணர்ச்சியை யும் தூண்டியிருக்க வேண்டும்; அந்த மைதானத்தில் பூஞ்செடிகளும் இருந்துவிட்டால் இன்னும் விசேஷ மாக இருக்குமே என்று மாண்டிஸோரி கருதினர். ஆனல் இந்த இல்லத்திற்குக் கட்டடம் உதவியவர்கள் பூஞ்செடிகளேயோ பூங்கொடிகளேயோ வளர்ப்பது அவசியமில்லையென்று கருதிவிட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் புதிய வாழ்க் கையில் பிள்ளைகள் தங்களுக்குப் பிரியமானபடி உப

கரணங்களை வைத்துக்கொண்டு வேலை செய்ய உரிமை பெற்றிருந்தார்கள். ஐம்புலன்களுக்கும் பயிற்சியளிக்கும் உபகரணங்கள் உள்ளக் கோளாறு அல்லது குறைபாடு உள்ளவர்களுக்குப் பயன்பட்டதுபோல், இந்தப் பிள்ளைகளுக்கும் பயன்பட்டன. அந்த உபகரணங்கள் இவர்களுக்கும் விருப்பமாகவே இருந்தன.

அவற்றைக் கொண்டு அப்பியாசம் செய்யும்போது, கவனம் சிதறவில்லை; உள்ளம் ஒருமையுற்றது. சலிப்பு இல்லாமல், களைப்பு இல்லாமல், களிப்புடன் வேலை செய்ய உதவின உபகரணங்கள்.

ஒருவரது போதனையோ, தூண்டுதலோ, கட்டாயமோ இல்லாமல் பிள்ளைகளின் உள்ளம் தானுகவே வேலை செய்வதில் ஈடுபடலாயிற்று. ஒரு நிலையில் ஊன்றி நில்லாமல் குழம்பித் திரிந்த உள்ளம் ஆறுதல் கண்டது. இந்த நிலையில் அகத்திலும் முகத்திலும் அழகான மாறுதல் காணப்பட்டதில் அதிசயமில்லை. உபகரணங்களைக் கொண்டு செய்த அப்பியாசம் உள்ளத்திற்கு ஊட்டம் அளிக்க, அந்த உள்ளம் விரிந்தது; அறிவு வளர்ந்தது.

வழக்கம்போல் வாரந்தோறும் வந்து பரிசீலனை செய்து பார்த்த மாண்டிஸோரியால் இந்த விசேஷ மாறுதலை நம்பமுடியவில்லை. பிறகு இப் பிள்ளைகளின் ஒருமையுள்ளத்தையும் ஈடுபாட்டின் ஆற்றல்களையும் கண்டு கண்டு வியந்தவர், ஒருநாள் இவர்களைக் கூர்ந்து கவனித்தவண்ணம் ஏதோ ஒரு புதிய உலகத்தைக் கண்டுபிடித்தது போன்ற ஒரு மகத்தான உணர்ச்சியைப் பெற்ருர்.

ஒரு மூன்று வயதுச் சிறுமி பலவகை அளவுள்ள உருளைப் பெட்டிகளை (Cylinders) அது-அதற்கு உரிய துவாரங்களில் பொருந்தச் செய்யும் அப்பியாசத்தில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தாள். அதைக் கவனித்தார் மாண்டிஸோரி. அந்த உருளைகளைக் குழந்தை சரியாக அமைத்த பின்பு, அதே அப்பியாசத்தை மறுபடியும் தொடங்கிச் செய்து பார்த்தாள்.

அப்படியே திரும்பத் திரும்பக் கருத்தூன்றி அக் குழந்தை செய்துகொண்டிருந்ததைப் பார்த்த மாண்டி ஸோரி இல்லத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருந்த பெண்ணை நோக்கி, 'எவ்வளவு நேரமாக இந்தக் குழந்தை இந்த வேலையைச் செய்துகொண் டிருக்கிறுள்?' என்று கேட்டார். அந்தப் பெண்ணுல் திட்டமாகப் பதில் சொல்ல முடியவில்லை. உடனே மாண்டிஸோரியும் அந்தப் பெண்ணும் இந்தச் சிறுமி யின் இந்த அப்பியாசச் செயல்களை எண்ணத் தொடங்கினுர்கள்.

களைப்பின்றி, ஒரே களிப்புடன், ஒருமையுள்ளத் துடன் அதே அப்பியாசத்தில் ஈடுபட்டிருந்த சிறுமியை டாக்டர் மண்டிஸோரி தூக்கி ஒரு மேசை மீது வைத் தார். அப்போதும் அந்தச் சிறுமி தன்னைக் கவர்ந்த அந்த வேலையை இடைவிடாது செய்துகொண்டே யிருந்தாள். அம்மையார் தூக்கி மேசைமீது வைத்த தையும் அறியாதது போல் சிறுமியின் உள்ளம், தான் உகந்த அப்பியாசத்தில் தன்னை முழுக்க இழந்து விட்டது.

அப்பால் மாண்டிஸோரி மற்றப் பிள்ளைகளை ஒரு கூட்டமாகச் சேர்த்து, 'நீங்கள் பாடுங்கள்' என்று

சொன்னார். அப்படியெல்லாம் பலவகையிலும் தொந்தரவு கொடுத்த போதிலும் சிறுமியின் ஒருமையுள்ளத்தைக் குலைக்க முடியவில்லை. மாண்டிஸோரியும் இல்லத் தலைவியும் எண்ணிப் பார்க்கத் தொடங்கியபின் 42 தடவை சிறுமி ஆதியோடு அந்தமாகத் தான் உகந்த அந்த வேலையைத் திருப்பித் திருப்பிச் செய்துகொண்டிருந்தாள். கடைசியாகச் சிறுமி ஓர் இன்பக் கனவிலிருந்து விழித்துக் கொண்டதுபோல் நிமிர்ந்து பார்த்தாள்.

இந்த நிகழ்ச்சிதான் மாண்டிஸோரிக்கு முதல் தடவையாகக் குழந்தை யுள்ளத்தில், அதற்கு முன் அறியப்படாத அதிசயப் பிரதேசங்கள் உண்டு என்பதை அறிவிக்கலாயிற்று. குறித்த சிறுமியின் ஒருமையுள்ளம் மற்றக் குழந்தைகளிடம் காணப்படவில்லையென்றாலும், அந்தச் சிறுமியின் ஆற்றல் குழந்தைகளுக்கெல்லாம் பொதுவாக உரியதொரு சக்திதான் என்பது கடைசியாகத் தெளிவாகிவிட்டது.

ஒரு வேலையை அல்லது அப்பியாசத்தைத் திரும்பத் திரும்பச் செய்து பார்த்து ஒருவகைத் திருப்தியை அடைவது குழந்தையின் மன நிலை என்பது இனிது புலனாயிற்று. காரியம் முடிந்தாலும் குழந்தை யுள்ளத்திற்குத் திருப்தி ஏற்படும்வரை அதே வேலையைத் திருப்பித் திருப்பிச் செய்வதின் உட்பொருள் மாண்டிஸோரியின் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதாயிற்று.

உதாரணமாக வேட்டி துவைப்பது, உலர்த்துவது, துடைத்துச் சுத்தம் செய்வது முதலான செயல்களை ஒரே தடவையில் முதியவர்கள் செய்து முடித்துவிடுவார்கள். அவர்களுக்குக் காரியம் முடிவதுதான்



அறையைக் பெருக்குவது, கைகளைச் சுத்தமாகக் கழுவுவது போன்ற, தாம் உகந்த, வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்



மேசையைச் சுத்தம் செய்கிருள் நிதானமாக

முக்கியமானது. குழந்தைகளுக்கோ திருப்பித் திருப்பிச் செய்வதிலிருந்து கிடைக்கும் அநுபவமும் அறிவும் திருப்தியுமே முக்கியமான அம்சமாகும்.

ஐம்புலப் பயிற்சி தரும் உபகரணங்களினுலோ, வாழ்க்கையநுபவத்தை ஒட்டிய சின்னஞ்சிறு செய்கைகளினுலோ அப்பியாசம் பெறும் குழந்தைகள் தங்கள் இயக்கங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொள்வதில் வெற்றிபெறுகிருர்கள். இதனுல் அறிவு தூண்டப் பெற்று ஒளிவீசத் தொடங்குகிறது. குழந்தைக்குத் தன்னம்பிக்கை தளிர்க்கிறது, தழைக்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் உரிய தனிப் பண்பு மலர்ச்சி பெறுகிறது.

இந்த உண்மையைக் கண்டுகொண்டபின், டாக்டர் மாண்டிஸோரி தமது முதலாவது குழந்தை-இல்லம் ஒரு தேன்கூடு போல் சுறுசுறுப்பாக வளர்ச்சி பெற்று விட்டதையும் கண்டு கொண்டார். சிதறிக் கிடந்த கூளம் போலிருந்த குழந்தைகள் இப்போது ஒரு குட்டிச் சமுதாயம் போலாகிவிட்டார்கள். குதூகலமாய் ஒத்துழைக்கத் தொடங்கிவிட்டார்கள். இத்தகைய மாறுதல்களை வந்து பார்த்தவர்களெல்லாம் வியந்து பாராட்டினர்.

இந்த இல்லத்திலே குழந்தைகள் பெற்ற மாறுதல் அவர்களுடைய வீடுகளிலும் ஒளிவீசலாயிற்று. வீட்டிலுள்ள சாமான்களையும் ஒழுங்காக வைக்கத் தொடங்கினுர்கள். தாயின் ஆடையிலும் தோற்றத்திலும் உள்ள மாசுகளையும் கண்டுகாட்டினுர்கள். அந்தத் தாய்மார் தங்கள் குழந்தைகளைப் பற்றிப் பெருமை

யுடன் மாண்டிஸோரி அம்மையாரிடம் வந்து நன்றி தெரிவித்ததும் உண்டு.

எழுதப் படிக்கக் கற்றனர்

சுமார் ஆறுமாத காலத்தில் இல்லத்தின் வளர்ச்சி நன்கு புலனுகி விட்டது. சில தாய்மார்கள் மாண்டி ஸோரியிடம் வந்து, 'எங்கள் குழந்தைகள் அறிவிலே வளர்ந்து வருகிருர்கள். அவர்களுக்குத் தாங்கள் படிக்கவும் எழுதவும் கற்பிக்க வேணும்' என்று வேண்டிக் கொண்டார்கள். ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அவ்வளவு சிரமத்தைக் கொடுப்பது தவறு என்பது அக்காலத்துக் கொள்கை.

மாண்டிஸோரியோ மனேதத்துவ ஆராய்ச்சியில் விருப்பமுள்ள வைத்தியரேயன்றி ஒரு பள்ளிக்கூட ஆசிரியரல்லர். எனவே இவர் அந்தத் தாய்மார்களின் வேண்டுகோளுக்கு முதல் முதல் இணங்கவில்லை.

அத்தாய்மார்களோ தங்கள் குழந்தைகளிடம் அதிசயமான அறிவு-வளர்ச்சியைக் கண்டிருந்தார்கள். எழுத்து அறிவிக்கும் அதிசயத்தையும் மாண்டிஸோரி அம்மையார் சாதிக்க முடியும் என்று நம்பினுர்கள். எனவே, திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களையும் ஒருவாறு திருப்தி செய்து பார்க்க லாமே யென்று மாண்டிஸோரி இல்லத் தலைவியிடம், நெடுங் கணக்கின் எழுத்துக்களை அட்டையில் தனித் தனியாகப் பொறித்து வைக்குமாறு சொன்னுர். பிறகு எழுத்துக்கள் ஒலிகளின் வரிவடிவம் என்பதைக் குழந்தைகளுக்கு எப்படித் தெரிவிப்பதென்று சிந்திக்க லானுர். ஒலிக்கும், அதன் அறிகுறியான எழுத்திற்கும்

உள்ள தொடர்பை உணர்ந்து கொள்வது குழந்தைகளுக்கு முதல் முதல் சிரமமாகத்தான் இருந்தது.

ஒரு நாள் ரோஜாச் செடி ஒன்றில் ஒரு ரோஜா மலர்ந்திருந்ததைக் கண்டதும் குழந்தைகள் குதூகலமாய் 'ரோஸ்' 'ரோ...ஸ்' என்று சொல்லிக்கொண்டே, எழுத்துக்களைக் கத்தரித்து ஒட்டியிருந்த அட்டைகளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அப்போது விளையாட்டாக அந்த எழுத்துக்களில் ரோஜாவுக்கு உரிய எழுத்துக்களைத் தேர்ந்து காட்டுவது எளிதாயிற்று.

ஒரு சிறுவன் அந்த எழுத்துக்களைப் பளிச்சென்று சீமைச் சுண்ணும்புக் கட்டியால் தரையில் எழுதிக் காட்டி 'ரோஸ், ரோஸ்' என்று கூவினன். உடனே 'நானும் எழுதுகிறேன் பார்' என்று வேருெருவனும் அந்த எழுத்துக்களைக் கவனித்து எழுதிவிட்டான். அப்பால் 'நானும், நானும்' என்ற கூச்சல்களுடன் பல சிறுவர்களும் எழுதிக் காட்டினுர்கள்.

'ஓஹோ நானும் எழுதுவேன்!' 'ஆஹா நானும் எழுதுவேன்!' என்ற கூச்சல்களுடன் கரும்பலகையிலும் மேசையிலும் கதவிலும் தரையிலும் 'ரோஸ்' என்ற வார்த்தையை எழுதிவிட்டார்கள். இப்படியே வேறு வார்த்தைகளையும் கற்றுக்கொண்டு கண்ட இடங்களிலெல்லாம் எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

இப்படி ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் குதூகலமாய் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்ட அதிசயம் பத்திரிகைகள் வாயிலாக நாகரிக உலகமெங்கும் பரவி விட்டது. இந்தக் குழந்தைகளை 'அதிசயக் குழந்தைகள்' என்றும் குறிப்பிடத் தொடங்கி விட்டார்கள்.

இருளில் ஒளி

குழந்தைகள் வேலை செய்வதையும், அவர்கள் பழகும் விதத்தையும் கருத்தூன்றி அன்புடன் விவரமாகக் கவனித்து வந்தார் மாண்டிஸோரி அம்மையார். இவரது விஞ்ஞான மனப்பான்மை குழந்தை யுலகில் விளங்காத பிரதேசங்களையும், அதற்கு முன் அறிந்திராத பிரதேசங்களையும் கண்டு பிடிக்க உதவியது.

முதல் முதல் களைப்பை அறியாத குதூகல உழைப்பாகிய குழந்தைச் சுறுசுறுப்பைக் கூர்ந்து கவனித்து வந்தார். சோம்பி யிருப்பது ஆரோக்கிய முள்ள குழந்தையின் சுபாவமல்ல என்பதை உணர்ந்து கொண்டிருப்பவர்களும் குழந்தையைக் 'குழப்பம் விளைக்கும் ஒரு குட்டிச்சாத்தான்' என்றே எண்ணி விடுகின்றனர். இது தவறு. குழந்தையின் செயல்களிலும் ஒரு வித ஒழுங்கு முறை காணப்படுகிறது என்பதைக் கண்டு கொண்டார் மாண்டிஸோரி.

இந்த அடிப்படை உண்மையை ஆராய்ந்த வண்ணம், சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலும் குழந்தைகளிடம் காணப்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டார். சுறுசுறுப்பில் ஒருவகை ஒழுங்கு, ஒரு கட்டுப்பாடு காணப்பட்டது போல், இந்தச் சுதந்திர உணர்ச்சியிலும் ஒருவித ஒழுங்கு; ஒருவிதக் கட்டுப்பாடு உள்ளுணர்ச்சியாக அமைந்திருப்பதைக் கண்டு கொண்டார். எனவே, குழந்தைகளுக்கும் சுதந்திரம் வேண்டியதுதான் என்று சித்தாந்தம் செய்தார்.

குழந்தை யுலகிலும் அடக்குமுறை ஆட்சி கூடாது என்று கூறியவர் ஒரு கையில் பிரம்பும் ஒரு கையில்

கற்கண்டுமாய்க் குழந்தைகளைச் சீர்திருத்த முயலும் முயற்சி வீணனது என்றார். குழந்தைக்கும் கௌரவ உணர்ச்சி உண்டு, நுட்பமான தன்மதிப்பு - உணர்ச்சியும் உண்டு என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டவர் அந்த உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடாது என்பதை வற்புறுத்தினர்.

குழந்தைகளுக்கு நன்றியுணர்ச்சி உண்டு என்றும், அது தானகவே தன்னை வெளியிட்டுக் கொள்கிறது என்றும் கண்டு கொண்டார். மகிழ்ச்சி எவ்வளவு இயற்கையானதோ, அவ்வளவு இயற்கையானது நன்றி யுணர்வும் எனக் கண்டார். உழைப்பு, மகிழ்ச்சி, நன்றி ஆகிய இம்மூன்றும் குழந்தையின் நிரந்தர உணர்ச்சிகள் என்றார்.

இப்படி ஒரு குழந்தை யுலகம் இருப்பதாக மக்கள் அதற்கு முன் நம்பியதில்லை. இந்தக் 'கொலம்பஸ்' கண்டு பிடித்துக் காட்டிய பின்பே பலரும் இப்புதிய உலகத்தைத் தெரிந்து கொண்டார்கள். குழந்தைகளே தங்கள் இல்லத்தை, தங்கள் பள்ளிக்கூடத்தை நடத்திக்கொள்ள முடியும் என்பதைக் கண்டு காட்டிய இவரை 'உண்மையாகவே குழந்தை யுலகின் கொலம்பஸ்தான்' என்று அறிஞர்கள் ஒருமுகமாய் ஒப்புக்கொண்டார்கள்.

குழந்தைகளின் முதலாவது இல்லம் பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்படவும் இல்லை; ஒரு மனேதத்துவ ஆராய்ச்சிக்கூடமாகவும் நடைபெறவில்லை. இல்லத்திற்குக் கட்டடம் உதவியவர்களோ, தர்மசிந்தையுள்ளவர்களோ இந்த இல்லம் சரியாக நடைபெறுவதற்குப் பொருளுதவியும் செய்யவில்லை.

அறிவில்லாத பிள்ளைகள்; அவர்களுக்கு வாத்தியாருமில்லை, கல்வி கற்பிக்க ஒரு வசதியும் இல்லை. இத்தகைய தொடக்கத்திலிருந்து, 'பூஜ்யம்' என்று சொல்லத்தக்க ஒரு நிலையிலிருந்து, அறிஞர்களின் பாராட்டுக்குரிய வசதிகளோடு கூடிய இன்றைய 'மாண்டிஸோரி - கல்வி நிலையம்' படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது.

முதலாவது இல்லத்திலே குழந்தைகளின் உடல் வளம் குறித்துத் தனிக் கவனம் செலுத்தப்படவில்லை. எனினும் நல்ல உணவுப் பொருள்களால் இரகசியமாகப் போஷிக்கப் பெற்றுவந்தவர்கள் போல் இந்தக் குழந்தைகளின் உடம்பும் வளமுற்று வளர்ந்தது. அழுக்கும் அச்சமும் மறைந்து உவகையும் ஆரோக்கியமும் காணப்பட்டன. சோகை பிடித்தது போலிருந்த முகங்கள் ரோஜாவைப் போல் மலர்ந்தன. உட்குழிந்த கண்களில் ஒளி பிறந்தது. மானஸ அம்சங்களைக் கொண்டு உடம்பையும் ஒருவாறு சீராக்கிக் கொள்ளலாம் என்ற மனோதத்துவ சித்தாந்தம் உருப்பெற்றது.

ஏதோ ஒருவகை அற்புதம் நிகழ்ந்துவிட்டதாகவே அந்நாளில் பலரும் கருதினர். ஆனால் அந்த அற்புதமோ, இரகசியமோ குழந்தைக்குத்தான் உரியது என்று கண்டுபிடித்தார் மாண்டிஸோரி. அந்த இல்லத்தில் நிகழ்ந்தது எங்கும் எப்போதும் நிகழக்கூடும் என்று தெரிந்துகொண்டார்.

மானிடப் பண்பின் விதையைக் குழந்தையிடம் கண்டு மனிதவர்க்கம் உய்யப் பணி செய்வதற்குத் தாம் நடத்திய முதலாவது குழந்தை-இல்லம் ஓர் ஆரம்ப நன்முயற்சி என்பதை நன்கறிந்தார்.

இருளிலே ஒளி தோன்றிவிட்டது. இந்த ஒளி நெறிகண்டு ஒரு புதிய உலகைக் காட்டிய கொலம்பஸ் என்று இவரை உலகம் கொண்டாடியது. இவரோ 'எனக்கு வழிகாட்டிய ஒளி குழந்தைதான்!' என்றார்.

4. குழந்தைக் கலைஞர்

குழந்தை யுலகத்தைக் கண்டுபிடித்தவர் விரைவில் குழந்தைக் கலைஞராகிவிட்டார். தமது பழைய வைத்தியத் தொழிலையும், அதனுல் கிடைக்கக்கூடிய பட்டம் பதவிகளையும் துறந்து, நாற்பதாவது வயது முதல் வாழ்நாள் முழுவதையும் குழந்தைப் பயிற்சி என்ற தொண்டிற்கே உரிமையாக்கிய இந்த மனப்பான்மையின் இரகசியம்தான் என்ன?

குழந்தைகளின் கல்வித் துறையிலே இவர் கற்ற கல்விதான் மாண்டிஸோரி முறையாக வளர்ந்திருக்கிறது. 'குழந்தை எனக்குக் கற்பித்தது; நான் கற்றுக்கொண்டேன்' என்று எவ்வளவு தைரியமாக ஒப்புக்கொள்கிருர் பாருங்கள்! தம் கற்பனை வளம் குறித்துக் கம்பர் 'நானும் அறியேன்; அவளும் (கலைமகளும்) பொய் சொல்லாள்' என்று சொன்ஞராம்.

'கலைமகள் கற்பித்தாள்; நான் கற்றுக்கொண்டேன்; அந்தப் பொருளை நான் உங்களுக்கு விளங்கச் சொல்லுகிறேன்: அவ்வளவுதான் என் கவிதைத் தொழில்' என்று கூறிய கவிச் சக்ரவர்த்தியைப் போலவே மாண்டிஸோரியும் குழந்தையே தமக்கு உண்மைக் கல்விமுறையை உணர்த்தியதாகவும், அதைத் தாம் தமது விஞ்ஞான மனப்பான்மையால் உணர்ந்து விளங்க உரைப்பதாகவும் சொல்லுகிருர்.

நாற்பது வயதுவரை விஞ்ஞான முறையில் உள்ளத்தைப் பண்படுத்திக்கொண்டிருந்த ஒரு பேரறி

ஞருக்குக் குழந்தை உபதேசிப்பதா? இதை விளக்கிக் கொள்வதற்குக் கவி ரவீந்திரர் சொல்லுகிற ஒரு கதையை இங்கே விவரித்துக் காட்டுவது நலமாகும்.

வயது முதிர்ந்த துறவி நீண்ட வெள்ளிச் சடையும் தாடியுமாய் ஒரு பழைய கோவிலின் நிழலில் வீற்றிருந்து, ஜபமாலையை உருட்டித் தள்ளிய வண்ணம் உலக நினைவை நழுவவிட்டிருக்கிறார். பார்த்தவர்களெல்லாம் 'ஆஹா பரலோகவாசி! நம்முடைய பாக்கியவசமாக இங்கே தங்குகிறார்—ஏதோ ஒரு வழிச் சத்திரத்தில் தங்கிப் போவது போலே!' என்று அடிதொழுதுப் போகிறார்கள். பயபத்தியுடன் ஒதுங்கி நின்றே போற்றுகிறார்கள்.

ஆனால், ஒரு குழந்தை காலில் சதங்கை குலுங்க ஓடிப்போய், தாடியைப் பிடித்திழுத்து, 'தாத்தா! எனக்கு இந்த மாதிரியாகத் தாடி வளர—இவ்வளவு நீண்ட வெள்ளித் தாடியாக வளர—எத்தனை நாள் பிடிக்கும்? சொல்லு, தாத்தா!' என்று கேட்டது. சாமியார் ஜபமாலையைக் கீழே போட்டுவிட்டு, குழந்தையை நோக்கினார். கண்களில் நீர் துளித்தது.

'பாப்பா! நானும் உன்னைப் போல், மீண்டும் ஒரு பாப்பாவாக ஆசைப்படுகிறேன்' என்று அந்தக் கண்ணீர்த் துளிகள் பிரசங்கம் செய்தன. தம்மைக் காட்டிலும் குழந்தைக்குப் பரலோகம் அருகிலே உள்ளது என்பதைத் துறவி உணர்ந்துகொண்டார். துறவு நெறியைக் காட்டிலும் அன்பு நெறியே சிறந்ததென்று உணர்த்த, தமது இருதய கமலவாஸியே வெளிப்பட்டு அந்தக் குழந்தை-வடிவில் காட்சி அளித்ததாக எண்ணினார்.

சிறிது தூரத்திலிருந்த பக்தர்கள், சாமியாரின் தாடியைப் பிடித்திழுத்த குழந்தையின் துஷ்டத் தனத்தை ஒருமுகமாய்க் கண்டித்தார்கள். குழந் தையை அதட்ட முயன்றூர்கள். சாமியாரோ குழந் தையை அணைத்துக்கொண்டு அது கேட்ட கேள்வி களுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். மாயா நித்திரையிலிருந்து தம்மை விழிக்கச் செய்ய வந்த தெய்வத்தைத் துரத்திவிடுவாரா?

இந்தக் கதையிலே, மாண்டிஸோரி அம்மையார் குழந்தை யுலகத்தைக் கண்டுபிடித்துக் குழந்தையிடத்தி லேயே உபதேசம் பெற்றுக் குழந்தைக் கலைஞராக வளர்ந்துவிட்ட வாழ்க்கைக் கதையின் இரகசியத்தை யும் ஒருவாறு கண்டுகொள்ளலாம். வயது முதிர்ந்த வர்கள் தங்களுடைய போதனைகளாலும் உபதேசங் களாலும் துள்ளித் திரிகின்ற பிள்ளையைத் துடுக்கடக் கித் திருத்தி அறிவாளனுக்க முயல்வதுதான் சரி என்று உலகம் நீண்ட காலமாக நம்பிவந்திருக்கிறது. குழந்தை முதியவர்களுக்கு வெளியிடக்கூடிய செய் தியோ, உபதேசமோ இருக்க முடியுமென்று பல அறி வாளர்களும் நம்பியதில்லை. முதியவர்களும் குழந்தை யிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதுதான், உப தேசம் பெறவேண்டியதுதான் என்பதை முதல்முதல் கண்டுபிடித்துப் புரட்சிகரமாக வெளியிட்டவர் மாண்டி ஸோரி அம்மையாரே யாவர்.

மாண்டிஸோரி முறையில் பயிற்சி பெற்றிருக்கும் ஆசிரியர்கள் குழந்தைகளுடைய கூட்டுறவினுல் விசேஷ மானிடப் பண்பு பெற்று மாறுதல் அடைகிறூர் கள். இந்த மாறுதல் சூட்சுமமானது என்றும், முழு

வாழ்க்கையையும் குறித்துக் குழந்தை ஒரு புதிய செய்தியைத் தன் ஆசிரியனுக்கே அறிவிக்கிறது என்றும், இவ்விதமாகக் குழந்தை ஆசிரியனை மாற்றி விடக் கூடுமென்றும் டாக்டர் மாண்டிஸோரி கூறியுள்ளார். இது இவர் தம் கல்வி முறையில் கண்டுகொண்ட ஓர் அற்புத உண்மையாகும்.

இந்த உண்மையை மாண்டிஸோரி விஞ்ஞானியாக மட்டும் உற்று நோக்கி அறிந்துகொண்டாரென்று சொன்னால் போதாது; ஓர் உண்மைக் கலைஞரின் உள்ளொளியால் கண்டு கொண்டிருக்கவேண்டும். குழந்தையைக் கற்பதும், குழந்தையிடம் கற்பதும், குழந்தை தன்னை எப்படியெல்லாம் வெளியிட்டுக் கொள்கிறது என்பதை அறிந்துகொள்வதும், கலை யுணர்ச்சியைத் தூண்டக்கூடும் என்பது மாண்டிஸோரி முறையில் ஆசிரியர்கள் அறிந்துகொள்ளக் கூடிய ஓர் அநுபவ உண்மைதான். 'அதைச் செய்; இதைச் செய்' என்று குழந்தையை அதட்டியும் கண்டித்தும் கட்டளையிட்டும் பாடம் சொல்லிவைக்கும் ஆசிரியர்களோ, பேராசிரியர்களோ இத்தகைய அநுபவம் பெறமுடியாது.

ஒரு சூரியோதயக் காட்சியையோ, சூரியாஸ்தமனக் காட்சியையோ பார்க்கிறோம். அப்போது அதைப்பற்றி நாம் ஆராய்ச்சியா நடத்துகிறோம்? ஒரு பூவைப் பார்க்கிறோம், அதை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து பார்க்காமலே. 'என் மனம் மலர, மலரும் மலரே!' என்று அதிசயமாய்ப் பூவின் பொலிவை நோக்கி நோக்கி உள்ளம் மலரப் பெறுகின்றோம். ஒரு குழந்தை தனக்குக் கொடுக்கப்பெற்ற உபகரணங்களைக்கொண்டு

தன் இஷ்டப்படியெல்லாம் செய்யும்படி இடங் கொடுத்து அந்த நிலையில் அக் குழந்தையை வியந்து நோக்கும் நோக்கிலேயே ஆசிரியனின் உள்ளம் கலையுள்ளமாகி மலர்ச்சி பெறுகின்றது. இது மாண்டி ஸோரி கண்டுபிடித்திருக்கும் பேருண்மைகளில் ஒன்று.

இம் முறையில் பகுத்தறிவு பண்படுத்தப் பெறுவ துடன், கலாசிருஷ்டிக்கு வேண்டிய உள்ளொளியும் ஓரளவு உதயமாகிறது என்பதும் ஓர் அநுபவ உண் மையாகும். ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் வாழ்க் கைப் போராட்டத்திலே பறிகொடுத்துவிடாமல் அவற் றைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கும் குழந்தை, 'தன்னல வாழ்க்கை தவிர வேருெரு வாழ்வு இருக் கிறது; அதுதான் அன்பு-வாழ்வு, உத்தம வாழ்வு' என்று சொல்லாமல் சொல்லி வைக்கிறது. இதை உள்ளொளியால் உணர்ந்துகொள்கிருன் உண்மை யான ஆசிரியன்.

ஆசிரியனே, தாயோ குழந்தைக்கு என்ன செய் யக்கூடும் என்பதுதான் குழந்தைக் கல்வியின் முக்கிய மான பிரசினையாக இருந்தது, மாண்டிஸோரி குழந்தை யுலகத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன். அக் காலத்தில் கல்வியாளர்கள் 'நமது கல்வி குழந்தைக்கு என்ன போதிக்க முடியும்?' என்றுதான் ஆலோசித் துக் கொண்டிருந்தனர். மாண்டிஸோரியோ குழந்தை தனக்குத் தானே என்ன செய்யக் கூடும் என்பதையும், கல்வி முறையானது குழந்தையைப் பார்த்து என்ன கற்றுக்கொள்ளக்கூடும் என்பதையும் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிருர்.

'குழந்தையின் இரகசியங்கள் பல; அவை வசீகர மானவை; அநுபவத்திற்கும் இசைந்து வரக்கூடியவை'

என்கிருர் மாண்டிஸோரி. மனித வாழ்க்கையின் அடிப் படை நிர்மாணத்திற்கு உரிய காலம் குழந்தையின் முதல் மூன்று வயதுவரை யுள்ள காலம் என்பதை முதல்முதல் வற்புறுத்தியவரும் இவரே. குழந்தை யன்பு நாம் மறந்த அந்தக் கள்ளங்கவடற்ற வாழ்வை மீண்டும் நினைவூட்டி மனித வர்க்கத்தையே மாற்றி விடக் கூடும் என்பதையும் இவர் தெளிவாக வற்புறுத்தியுள்ளார்.

குழந்தையின் அன்பு என்ருல் நம்முடைய உள்ளக் கிளர்ச்சியான அன்புபோல் இருப்பதில்லை. குழந்தை அன்பினுல் கண்டு, அன்பினுல் அறிவுற்று, அன்பிலே வளர்கின்றது என்று சொல்லலாம். வயது முதிர்ந்த நாம் சுற்றுப் பொருள்களில் பார்த்து அநுப விக்கத் தவறிவிடும்; பொருள்களைக் குழந்தையின் அன்புக்கண் கண்டுபிடிக்கிறது.

குழந்தைக்குப் பிராண சக்தியும் இன்ப உணர்ச்சி யும் அதிகமென்பதை நாம் அறிவோம்; ஆனுல் சிருஷ் டிக்கு ஆத்ம சம்பத்தாக இருக்கும் அன்புதான் குழந்தை-வாழ்வில் அவ்வளவு உயிர்ச் சக்தியாகவும் உத்ஸாக சக்தியாகவும் வெளிப்படுகிறது என்பதை டாக்டர் மாண்டிஸோரி சுட்டிக் காட்டுகிருர்.

குழந்தை வயது முதிர்ந்தவர்களிடம் அன்பு செலுத்துகிறது. நாம் குழந்தையிடம் காட்டும் அன்பைக் காட்டிலும் குழந்தை நம்மீது காட்டும் அன்பு தான் பெரிது; தூய்மையானது; தெய்விகமானது. அன்புக்கு வாத்தியார் குழந்தைதான்! நாமோ நம்முடைய லௌகிக விவகாரங்களில் ஈடுபட்டு அன்பு-வறுமைக்கு ஆட்பட்டவர்களாய், ‘இந்தக் குழந்தை

எங்களையெல்லாம் தனக்கு அடிமையாக்கப் பார்க்கிறது! எனக்கு நேரமில்லை; எவ்வளவோ வேலைத் தொந்தரவு இருக்கிறது' என்று எண்ணுகிறோம், பேசுகிறோம். நம்முடைய வசதிகளையும் சௌகரியங்களையும் சொந்த நலங்களையும் நாம் குழந்தைக்காகக் குறைத்துக் கொள்ளச் சித்தமாயில்லை.

உதாரணமாக, நாம் உறங்கும்போது குழந்தை எழுப்பிவிட்டால் என்ன பாடு படுகிறோம்! அந்த நிலையில் சில முதியவர்கள் என்ன பாடு படுத்துகிறார்கள்! விழித்திருக்கும் குழந்தை உறங்கிக் கொண்டிருக்கும் பெற்றோரை எழுப்புவதற்கு அதன் அன்புதான் காரணம் என்பதை நாம் சாதாரணமாக உணர்ந்து கொள்வதில்லை.

ஊற்றிலிருந்து தண்ணீர் பெறுவதுபோல் வயது முதிர்ந்தவர்களிடமிருந்து குழந்தை தனக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்கிறது. நம்மிடமிருந்து பேசக் கற்றுக்கொள்கிறது. நம்மைப் பார்த்துப் பார்த்துச் செய்து செய்து வாழ்க்கையில் பிரவேசிக்கும் குழந்தைக்கு நாம் அன்பு-வழியில் நல்ல துணையாக இருக்க வேண்டும் என்பது மாண்டிஸோரியின் கருத்து.

நம்முடைய வார்த்தைகள் மந்திரம்போல் குழந்தைகளை வசீகரிக்கக்கூடும்; சிலாசாஸனம் போல் உள்ளத்தில் பதிவாகும். அன்புப் பசியோடு குழந்தை நாம் சொல்வதையும் செய்வதையும் உண்டு உரம் பெற்று வளர்கிறது என்பதை நினைவூட்டி, வீடே ஆரம்பப் பாடசாலை என்பதையும் வற்புறுத்துகிறார் மாண்டிஸோரி.

குழந்தை நமக்குக் கீழ்ப்படியச் சித்தமாக இருக்கிறது. ஆனல், நாம் குழந்தைக்கு உள்ளிருக்கும் அன்புணர்ச்சியின் தூண்டுதல்களுக்கும், கட்டளைகளுக்கும், சிருஷ்டி-உத்ஸாகத்திற்கும் விரோதமாக ஒன்றும் கட்டளையிடலாகாது. அப்படிச் செய்தால், குழந்தை கீழ்ப்படிந்து நடப்பது அசாத்தியமாகும்.

குழந்தைக்குப் பல் முளைக்கும்போது, 'வெள்ளி முளைகள் போன்ற இந்த இரண்டு பற்களே போதும்; அதிகமாய்ப் பற்கள் முளைக்க வேண்டாம்!' என்று கட்டளையிடுவோமா? அப்படியேதான் குழந்தையின் சிருஷ்டி-சக்திக்கும் அன்பு வளர்ச்சிக்கும் 'போதும்' என்று வரையறுத்து உத்தரவு போடலாகாது.

நம்மீது குழந்தை கொள்ளும் அன்பிற்கும், அதன் இயற்கைச் சிருஷ்டி-உத்ஸாகத்திற்கும் முரண்பாடோ, போராட்டமோ ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய போராட்டத்தின் விளைவுகளே துஷ்டத்தனங்களும், முரண்டுகளும், முரண்பாடுகளும்.

துஷ்டக் குழந்தையை அடக்கு முறையால் திருத்த முயல்வதும் அன்புதான் என்று முதியவர்கள் கருதுவதுண்டு. பெற்ருேர் மட்டுமல்ல, உற்ருர் மட்டுமல்ல, ஊர்ப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயரும் அடக்கு முறையால் அன்பு பாராட்டுகிருராம். பிரம்பின் மூலமாக அன்பு செலுத்தும் முரண்பாட்டுக்கு மாண்டிஸோரி முறையில் ஒரு சிறிதும் இடம் கிடையாது.

அறிவைப் போதிக்க மட்டுமா அடக்குமுறை? அன்பைப் போதிக்கவும் பிரம்பைத் தாங்கிய உபாத்தியாயர்களும் உண்டு. 'குழந்தாய்! நீ உன் பெற்ருேரை நேசிக்க வேண்டும்; எல்லாரையும் நேசிக்க வேண்டும்;

அரசனையும் நேசிக்க வேண்டும்; ஆண்டவனையும் நேசிக்க வேண்டும்; உபாத்தியாயரையும் நேசிக்க வேண்டும்' என்றெல்லாம் பிரம்பின் துணை கொண்டு போதிக்க முடியுமா? அடக்குமுறை எப்போதும் தவறானது; குழந்தை யுலகில் முற்றும் தவறானது.

கட்டுப்பாடு குழந்தைக்கு ஓர் உள்ளுணர்ச்சியாகவே வெளிப்பட வேண்டும். குழந்தை சுதந்திரமாக இயங்கி இயங்கி அன்பு நெறியிலே செல்வதற்கு முதியவர்கள் தடையுத்தரவு போடலாகாது. அந்த அன்பு நெறியிலே வளர விடுவதுதான் முதியவர் கடமையாகும். குழந்தை தனக்கு உரிய வளர்ச்சி நெறியில் வளரும்போதுதான், பின்னாளில் ஒரு நல்ல தேசப் பிரஜையாகவும் உலகப் பிரஜையாகவும் வாழ முடியும்.

ஜன சமூகம் உண்டானது முதல், குழந்தை மனிதனாகும் சக்தியைப் பெற்று அந்த முக்கியமான வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கிறது. குழந்தையிடமே உலக வளர்ச்சியின் முன்னேற்றம் ஒப்படைக்கப் பெற்றிருக்கிறது என்று சொன்னாலும் குற்றமில்லை. குழந்தை தன் சக்தியினால் வளர்ந்து சில முக்கிய அநுபவங்களைப் பெற்றுக் குறித்த காலத்தில் தன் உடம்பின் பல உறுப்புக்களையும் குறித்த ஒரு நிலைக்குக் கொண்டு வருகிறது. இந்தப் பிரமாண்டமான வேலையில் முதியவர் பிரமாதமாக உபகாரம் ஒன்றும் செய்துவிட முடியாது.

குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட சில அநுபவங்களால் பிற்கால வாழ்க்கை முழுவதும் நிர்ணயிக்கப் படுகிறது. குழந்தைப் பருவத்தில் சில அநுபவங்

களைப் பெருததால் உண்டாகும் குறையை முதியவ ஞனபின் மாற்றிக் கொள்ளவும் முடியாது.

சின்னஞ் சிறு குழந்தை ஒன்றிரண்டு ஆண்டுகளுக் குள்ளேயே ஒரு புதிய பாஷையை அறிந்து பேசும் சக்தியுடையவனுய் மாறிவிடும் அதிசய நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டும் மாண்டிஸோரி, 'இயற்கை யன்னையின் விருப்பத்திற்கிணங்கக் குழந்தை நடக்கிறது; அதில் நாம் உதவி செய்வதற்கும் இயற்கையன்னையைப் பின் பற்றுவதைத் தவிர வேறு வழி ஒன்றுமே இல்லை' என்கிருர்.

குழந்தையே முதியவருக்குப் பல விதங்களிலும் உதவி செய்கிறது என்ற உண்மையை உணர்ந்து கொண்டதும், குழந்தையின் உண்மை நிலையை மேலும் மேலும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற தீவிர உணர்ச்சியினுல் தூண்டப் பெற்ற மாண்டிஸோரி தமது விஞ்ஞான ஆராய்ச்சி மனப்பான்மையோடு, உண்மைக் கலைஞருக்கு உரிய உள்ளொளியினுலும் பல அபூர்வ உண்மைகளைக் கண்டு காட்டியுள்ளார்.

அன்பு என்ற சக்தியைக் குழந்தை கடவுளிட மிருந்து பெற்று, நம் இருண்ட வாழ்க்கைப் பாதையில் தெய்வ ஒளிவீசச் செய்கிறது என்பதை மாண்டிஸோரி யின் ஓர் அடிப்படைப் பெருங் கொள்கையாகக் கருத லாம். இத்தகைய குழந்தையின் கல்வியும் அன்பு வழி யில், சுதந்திர வழியில், அமையும்போதுதான் குழந்தை தனக்கு உரிய அதிமுக்கியமான அன்புக் கடமையைச் சரியானபடி நிறைவேற்ற முடியுமென்றும் இந்தக் குழந்தைக் கலைஞர் உறுதியாகக் கூறுகிருர்.

உலகப் பிரசித்தி பெற்ற மைக்கேல் ஏன்ஜலோ, லியோனர்டோ-டா-வின்ஸி, டாண்டே முதலான கலைப் பெருஞ் செல்வர்கள் தோன்றிய இத்தாலி நாட்டிலே தோன்றி அவர்களைப் போலவே குழந்தைக் கலைஞராகிய இவரும் உலகப் புகழ் பெற்றிருக்கிறார்.

ஒரு நாள் நண்பர் ஒருவர் மைக்கேல் ஏன்ஜலோ விடம் அவர் மணம் புரிந்து தம் பெயரை நிலை நிறுத்த மக்கட்பேறு பெற்றிராதது குறித்து வருத்தம் தெரிவித்தார். அதற்கு ஏன்ஜலோ, 'இந்த என் கலையே எனக்கு நாயகி. இந்தக் காதலி எனக்கு எப்போதும் உத்ஸாகமூட்டி வருகிறாள். என் கலாசிருஷ்டிகள் எல்லாம் என் குழந்தைகள்! இவை என் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கும்' என்று பதில் சொன்னார்.

மாண்டிஸோரிக்கோ குழந்தைப் பணியே காதல். உலகக் குழந்தைகள் எல்லாம் இவர் குழந்தைகள். ஏன்ஜலோவின் கலைச் செல்வங்கள் அவரை அமர ராக்கியதுபோல், குழந்தைக் கல்வி இவரை அமரராக்கி விட்டது.

இவர் கண்ட குழந்தை யுலகம் குறித்தும், குழந்தைக் கல்வி முறை குறித்தும் நாம் முக்கியமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்குமுன், இவரது வாழ்க்கைக் குறிப்புக்களை முறையாகத் தெரிந்து கொள்வோம்.

இவரது வாழ்க்கைக் கதைக்குள் பிரவேசிப்பதற்கு முன் வாசகர்களை இக்கதைக்கு உரியதொரு முன்வாசற் பூஞ்சோலை வழியாக அழைத்துச் செல்ல விரும்புகிறேன். இச்சோலைக்குக் 'குழந்தையின் இன்ப உலகம்' என்று பெயர்.

5. குழந்தையின் இன்ப உலகம்

குழந்தைக்குச் சுதந்திரம்

குழந்தையின் இன்ப உலகம் எப்படி யிருக்க வேண்டும்? இந்தக் கேள்விக்குப் பலரும் சொல்லக் கூடிய விடையில் பொதுவான அம்சங்கள் பலவற்றையும் கண்டு கொள்ளலாம்.

அழகான விளையாட்டுச் சாமான்களை ஒரு பெரிய அறையில் வைத்துக் குழந்தைகளை விளையாட விட்டு விட்டால் அந்த விளையாட்டு அவர்களுக்குச் சொர்க்க போகமாக இருக்கும் என்று கருதுவோர் பலர். ஒரு பொத்தானை அமுக்க வேண்டியதுதான்: குதிரை ஓடும்; ரயில் ஓடும்; சிங்கம் கர்ச்சிக்கும்; தொந்திப் பிரபு தலையாட்டுவார்!

பாட்டியோ, தாத்தாவோ கதை சொல்ல வேண்டும். 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா' என்று தொடங்கும் கதையைக் கேட்டுக்கொண்டே குழந்தை தூங்குவான். விழித்துக் கொண்டதும் 'இன்னும் ஒரு கதை சொல்லு' என்று தொந்தரவு செய்த வண்ணமா யிருப்பான்.

கதைகளில் அரசர்கள் மட்டுமா? - அசுரர்களும் வந்து போவார்கள்! தேவர்கள் வருவார்கள்! திருடர்கள் வருவார்கள்! காட்டு வழியில் ராணி பல்லக்கில் போவாள்; வீரர்கள் குதிரைமேல் சவாரி செய்வார்கள்!

இப்படி யெல்லாம் கதைகள் கேட்பதில் குழந்தைகளுக்குப் பெருமகிழ்ச்சிதான் என்பதில் ஐயமில்லை.

இக்கதைகள் குழந்தையின் கற்பனைத் திறனைத் தூண்டிவிடும் என்பதிலும் சநதேகமில்லை.

குழந்தைகளைப் பந்து விளையாட்டு முதலான விளையாட்டுகளிலும் ஈடுபடச் செய்யலாம். பந்து, கோல் எல்லாம் குழந்தைக்கு உயிர்த் தோழர்களாகிவிடும்!

இத்தகைய வழியிலேதான் குழந்தையின் இன்ப உலகை உருவாக்க முடியுமென்று நம்மில் பலரும் கருதி வந்திருக்கிறார்கள். செப்படி வித்தைகள் முதலியன காட்டிக் குழந்தை யுள்ளத்தை மகிழ்விப்பதும் உண்டு. சுருங்கச் சொன்னால், கற்பனை யுலகில் தான் குழந்தை இன்பமடையும் என்பது நமது நீண்ட கால அபிப்பிராயமாகும்.

இத்தகைய இன்ப வாழ்க்கையில் ஒரு துன்பத்தைப் புகுத்துவது போலத்தான் உழைப்பை நுழைத்துப் பார்த்தோம். பிழைப்பிற்கு உழைப்பு வேண்டுமே!

பாடுபட்(டு) உழைத்தால் அன்றோ,
வீடுகட்டி வாழலாம்?

என்ற முன்யோசனைதான் அருமைக் குழந்தையின் வருங்கால நலன் கருதி, உழைப்பையும் படிப்பையும் குழந்தை யுலகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. படிப்பும் உழைப்பாகவேதான் குழந்தைக்கு வந்து சேர்ந்தது.

ஆரம்பத்தில் இந்த உழைப்பையோ, படிப்பையோ மிகவும் கொஞ்சமாகவே குழந்தைக்குக் கொடுத்தோம். படிப்படியாகப் படிப்பையும் உழைப்பையும் அதிகமாக்கிக் குழந்தை யின்பத்தைக் குறைத்து வந்தோம். துள்ளித் திரியும் பிள்ளைகளைத் துடுக்கு அடக்கிப்

பள்ளிக்கு அனுப்புவது குழந்தைக்கும் சிரமம்தான்; அருமைப் பெற்றோருக்கும் சிரமமான காரியம்தான்!

பள்ளிக்கூடத்தில் படித்தது போதாதென்று வீட்டிலும் படிக்க வேண்டும். பகற்பாடம் போதா தென்று இராப் பாடமும் படித்தே தீர வேண்டும். இடையிடையே இத்தகைய உழைப்பிலிருந்து குழந் தைக்கு விடுதலை கிடைப்பதும் உண்டு.

வகுப்பறையிலிருந்து விளையாட்டுக் களத்திற்குப் போவதில் குழந்தைக்கு ஓரளவு விடுதலை யுணர்ச்சி கிடைக்கத்தான் செய்கிறது. எனினும், விளையாட்டுக் களத்திலும் வகுப்பறை விதிகளைக் கொண்டு வந்து குழந்தையின் மகிழ்ச்சியைக் குறைத்து விடுவதையும் காண்கிறோம்.

பாடப் புத்தகங்களைக் காட்டிலும் கதைப் புத்தகங் கள் குழந்தை யுள்ளத்தைப் பெரிதும் கவர்கின்றன. திடுக்கிடும் நிகழ்ச்சிகள் நிறைந்த கதைகளும், நாவல் களும், சினிமாக் காட்சிகளும் குழந்தைக்கு இன்பம் தரு கின்றன. ஓய்வு நேரங்களில் குழந்தை இஷ்டப்படி ஓடி விளையாடியும், தனக்கு இஷ்டமான சிறுகதை, தொடர் கதைகளைப் படித்தும், தோழருடன் உரை யாடியும் இன்பமடைகிறான். மறுபடியும் இஷ்டம் இல்லாமலே பள்ளிக்குப் போகிறான்.

படிப்பு ஒரு புறம்; விளையாட்டு மறுபுறம்; இடையே ஒரு குறுக்குச் சுவர். இந்தச் சுவரைச் சிறைச்சாலையின் சுவர் என்று மதிக்கிறது குழந்தை யுள்ளம். படிப்பு அல்லது உழைப்பு என்ற சிறையி லிருந்து விடுதலையாகி விளையாட்டு என்ற வெளி

யுலகத்திற்கு வரும்போது, தாண்டி வரும் குறுக்குச் சுவர் ஒருவகைச் சிறை மதில்தானே? ஆனால் இந்தச் சுவர் அவசியமானது என்றே கல்வி யுலகம் கருதி வந்திருக்கிறது.

இந்தக் குறுக்குச் சுவர் இன்றியமையாததா? உழைப்பை இயற்கையாகச் செய்து பள்ளிக்கூடத்தையே குழந்தையின் இன்ப உலகமாக்க முடியாதா? இது சாத்தியமே என்பது டாக்டர் மாண்டிஸோரி தமது வாழ்க்கையில் கண்டு காட்டும் ஒரு மகத்தான உண்மையாகும்.

படிப்பைக் கடமையாகக் கொள்ளாமல் ஓர் இன்ப உடைமையாகக் கொண்டு வாழும் முதியவர்களை நாம் பார்க்கிறோமல்லவா? தங்கள் வேலையைக் காதலித்து அந்தக் காதலைச் செலுத்த வழியில்லாதபோது நோய் பிடித்தவர்களாகும் முதியவர்களையும் கண்டிருக்கிறோம். உழைப்பை இன்பமாகக் கண்டவர்கள் கட்டாய ஓய்வு பெற்ற காலத்தில் சும்மா இருந்து சுகம் அடைவதற்கு மாறாகச் சோர்ந்து மாண்டு போவதையும் காணலாம். இத்தகைய் நிலையைக் குழந்தைகள் விஷயத்திலும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று கண்டு பிடித்தார் மாண்டிஸோரி அம்மையார்.


கட்டாயமாகக் கடமையாக மேற்கொள்ளும் உழைப்பே துன்பமானது. ஒருவரும் கட்டாயப்படுத்தாத நிலையில் இஷ்டமான வேலையை இன்பமாகவே செய்து கொண்டிருக்கும் குழந்தைகளைக் குறித்து மாண்டிஸோரிக்கு முன்பே சில சிறந்த கல்வி நிபுணர்கள் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். டால்ஸ்டாய் என்ற ரஷ்யப் பேரறிஞரும் இந்த உண்மையைத் தமது

வாழ்க்கையில் உணர்ந்திருந்தார். எனினும் இதை விஞ்ஞான ரீதியில் தெளிவாக உணர்ந்துகொண்டு குழந்தைக் கல்வி முறையைப் புரட்சிகரமாக மாற்றி அமைத்தவர் டாக்டர் மாண்டிஸோரிதாம்.

வேலைக்கும் விளையாட்டுக்கும் இடையே காணப் பட்ட சிறை மதிலைத் தகர்த்தெறிந்து, அருங் கலைகளை யும் விநோதமாக, விளையாட்டாகக் கற்பிக்க முடியும் என்பதைச் செய்து காட்டியவர் மாண்டிஸோரி. விளை யாட்டைக் காட்டிலும் வேலை இனிது, 'படிப்பு ரஸ மானது என்ற உணர்ச்சியையும் குழந்தை பெற்றுக் கொண்டது இவரது கல்வி முறையிலேதான் என்று துணிந்து கூறலாம்.

'இது மெய்யா, பொய்யா?' என்று, மாண்டிஸோரி கல்வி-நிலையங்களைப் பார்த்த ஒருவரும் கேட்கமாட்டார். 'இது நல்லதா, கெட்டதா?' என்றும் கேட்கமாட்டார். குழந்தைகளின் முகத்திலே அமைதியையும் இன்பத் தையும் கண்டு, அவர்கள் கொஞ்சமும் களைப்பின்றி உழைப்பதையும் பார்த்துவிட்டால் ஐயத்திற்கோ, அவநம்பிக்கைக்கோ இடம் ஏது? எல்லாவற்றுக்கும் மேலாக அதிசய வளர்ச்சியையும் காணலாமே இந்தக் கல்வி முறையில்!

பழைய முறைப் பள்ளிக்கூடங்களில் அறிவைச் சுமையாகச் சுமக்கும் குழந்தை முகங்களில் ஒருவகைத் தளர்ச்சி நிலையையே காண்கிறோம். இப்புது முறைக் கல்வியில் நாம் காண்பதோ வளரும் கல்வி; கல்வியிலே வளரும் குழந்தையை, மலரும் குழந்தை யுள்ளத்தை இங்கே காண்கிறோமென்று சொல்வது பெரிதும் பொருந்தும்.



ஆப்பிரிக்காவிலுள்ள மாண்டிஸோரி பள்ளிச் சிறுவர்கள்



குழந்தைகளும் உபாத்தியாயரும் கடற்கரை மணலில் ஆனந்தமாய் விளையாடுகிறார்கள்

குழந்தைக்கும் உபாத்தியாயருக்கும் உள்ள தோழமையைத்தான் என்னென்பது? பிரம்பையே செங்கோலாகக் கொண்டு அரசு புரியும் உபாத்தியாயரை இங்கே பார்க்க முடியாது. ஒரு கையில் பிரம்பும் ஒரு கையில் கற்கண்டுமாகக் கல்வி கற்பிக்கும் முறையையும் இங்கே காண முடியாது.

உபாத்தியாயரும் பெற்றோரும் குழந்தையும் ஒரே அன்புப் பாசத்தால் கட்டுண்டு தோழமை பூண்டிருக்

கும் காட்சியை நாம் காணச் செய்தவர் மாண்டிஸோரி அம்மையார். குழந்தைக்கும் குழந்தைக்கும் இடையே யுள்ள உறவையும் ஒரு புதுமையாகக் காட்டும் கல்வி முறையைக் கண்டு காட்டியவரும் இவரே.

இந்த அற்புதத்தை இந்த அம்மையார் எப்படி விளைவித்தார்? சரியான காலத்தில் சரியான வேலையை ஒவ்வொரு குழந்தைக்கும் அளிப்பதே இதன் இரகசியம். குழந்தையின் வயதிற்கு—அதாவது, அந்த வயதின் தேவைகளுக்கு—இசைந்த வேலையாகவும் அது அமையவேண்டும். இசைந்த வேலை, உகந்த வேலை—இது உழைப்பை இன்பமாக்கி, வேலையை விளையாட்டாக்கிக் கொள்ளும் இரகசியம்.

இது எப்படிப்பட்ட வேலையாக இருக்கவேண்டும்? பொழுதுபோக்கும் விளையாட்டல்ல இது. குழந்தை வளரத் துணைபுரியும் காரியமாகவே இந்த வேலை அமையவேண்டும். வாழ்க்கையில் குழந்தையின் முக்கிய காரியம் மேலோங்கி வளர்வதுதானே?

இனி, எத்தகைய வேலை குழந்தையின் வளர்ச் சிக்கு உதவி செய்யும் என்பதைப் பார்க்கலாம். முதிய வர்கள் எத்தகைய வேலையைப் பொதுவாக விரும்புவ தில்லையோ, அத்தகைய வேலையைக் குழந்தை விரும்பு கிறது என்ருல் அது அதிசயமல்லவா? இந்த அதி சயம் குழந்தை யுலகில் உண்மையாக நடைபெறு வதைக் காண்கிறோம்.

பணம் சேர்ந்துவிட்டால் பணியாளரை வீட்டு வேலை போன்ற உழைப்பு வகைகளுக்கு அமர்த்திக் கொள்கிறோமல்லவா? பாத்திரங்களை அடுக்குவது, வீட்டைப் பெருக்குவது, கழுவிச் சுத்தமாக வைத்துக்

கொள்வது, தூசு படியாமல் துடைப்பது, படுக்கை போடுவது முதலான உழைப்பு வகைகளைக் குழந்தை உகந்து செய்வதை நாம் பார்க்கிறோம். இத்தகைய குணாதிசயத்தை மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரையுள்ள குழந்தையிடம் காணலாம்.

இத்தகைய வேலையைக் குழந்தை செய்யக்கூடாது என்று நாம் தடுக்கும்போது அவனுக்கு ஏற்படும் வேதனையைக் கொண்டு இவ்வேலையில் குழந்தைக் குள்ள உகப்பைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். இது குழந்தையின் ஒரு தேவை என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

எனவே குழந்தைக்கு ஏற்ற ஒரு சிறு துடைப்பம், முறம், பிரஷ், சிறு நாற்காலி, மேசை, சிறு அலமாரி முதலியன தயாரிக்கப்பட வேண்டும். பொம்மைப் பொருள்களல்ல, இந்த நிஜமான பொருள்களே குழந் தைக்கு அமைதியும் இன்பமும் உள்ளபடி அளிக்க முடியும். இப்படிக் குழந்தைக்குக் கிடைக்கும் அமைதி யும் இன்பமும் முதியவரையும் மகிழ்வித்து அமைதி யுறச் செய்யும் என்பது திண்ணம்.

முதியவர்கள் செய்யும் காரியங்கள் குழந்தைகளை வசீகரிக்கின்றன. உதாரணமாகத் தாய் செய்யும் காரி யத்தைச் சேயும் செய்ய விரும்புகிறது என்பதை நாம் நன்கு அறிவோம்.

குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொப்பரையில் அம்மா கொட்டுவதைக் குழந்தை பார்த்ததும், 'நானும் அப்படிச் செய்வேன்' என்று எண்ணமிடுகிறது குழந்தை. ஆனால் குடமும் கொப்பரையும் மிகவும் பெரிதாக இருக்கின்றன. என்றாலும் குழந்தை

முயன்று பார்க்கும். தாயோ பயந்துபோவாள்; கோபிப்பாள். 'தண்ணீரைத் தொடாதே, துஷ்டப் பயலே! சும்மா இருக்கமாட்டாயா?' என்று கூச்சலிடுவாள்.

இதனுல் குழந்தையின் ஆற்றலை முடமாக்கிவிடுகிருள் தாய்,—'என்ன செய்கிரேம்!' என்பதைப் புரிந்துகொள்ளாமலே. பந்து விளையாட்டு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது தினசரி வாழ்க்கையின் வேலைகளில் கிடைக்கும் அப்பியாசமும். இந்த அப்பியாசம் இன்றி வளரும் குழந்தை சரியான வளர்ச்சி பெறுவதில்லை.

தினசரி வேலைகளை உகந்து செய்யும்படி இயற்கையே குழந்தைகளைத் தூண்டுகிறது. இத்தகைய இயற்கைவேகத்தைத் தடுப்பது குழந்தையின் இன்ப வாழ்விலும் வளர்ச்சியிலும் குறுக்கிடுவதாகும்.

குழந்தைக்கு வீடுதான் முதலாவது பள்ளிக்கூடம். குழந்தைக்குப் பல்கலைக் கழகமும் வீடுதான் என்று கூறுவதும் பொருந்தும். குழந்தையின் இயற்கைக் கல்விக்கு அதிசயமான வாய்ப்புகள் ஒவ்வொரு வீட்டிலும் உண்டு.

தயிர் கடைதல், கறிக்குக் காய் கிழங்குகளைத் தயாரித்துக் கொள்ளுதல், பாத்திரத்தைக் கழுவுதல், பரிமாறுதல் முதலான சந்தர்ப்பங்களைக் குழந்தைகள் பயன்படுத்திக் கொள்வதால், அவர்களுக்கு இன்பம் பெருகும்; அறிவு வளரும்; நரம்பு சதைப்பற்று முதலியவற்றை அடக்கி ஆளும் ஆற்றலும் ஏற்படும்.

சிருஷ்டி-சக்தியில்தான் குழந்தை ஈடுபடவேண்டும் என்று கருதுவோருண்டு. ஆனல், சதைப்பற்று முதலியவற்றை அடக்கி ஆளக் கற்றுக்கொண்ட பின்பு

தானே சிருஷ்டி-சக்தியில் ஈடுபடுவது எளிதாகும்? சாதாரண வீட்டு வேலைகளுக்கும் முற்பட்டது சிருஷ்டி-சக்தியை வெளியிடும் தொழில் என்று கருதுவது பொருந்தாது.

குழந்தை செய்ய விரும்புவதை யெல்லாம் தாயோ, செவிலித் தாயோ செய்து விடுவது குழந்தைக் கல்விக்கு இடையூறு விளைவிப்பதே. முயற்சி செய்து பார்க்குமாறு குழந்தையை விட்டுவிடுவதே நலம். முதல் முயற்சிகள் தோல்வியாக முடிகின்றனவே என்று முதியவர் உதவி செய்வதும் உண்டு. குழந்தைக்கோ 'நானே மறுபடியும் செய்து பார்க்கவேண்டும்' என்ற ஆசைதான். ஏனென்றால் இத்தகைய முயற்சிகளெல்லாம் பிள்ளைப் பிராயத்தின் அதிமுக்கியமான தேவையை ஒட்டி நிகழும் நிகழ்ச்சிகளே.

தடுக்கிற தாய்க்கோ, பிறருக்கோ குழந்தை மீது அன்பு இல்லையென்று ஒருவரும் சொல்லவில்லை. அன்பின் மிகுதியே குழந்தைக்குச் சிரமம் ஏற்படக் கூடாதென்று தாயை உதவச் செய்கிறது என்பது வெளிப்படை. ஆனால் இத்தகைய அன்பு குழந்தைக்குச் சத்துருவாக அமைந்துவிடுகிறது.

குழந்தை அன்பிற்கு வசமாகிறான். எனவே, தாயின் தடையுத்தரவுகளை மீறாமல் இருப்பான். ஆனால் தான் உகந்த வேலைக்கு இடையூறு ஏற்படுகிறதே என்ற உணர்ச்சி ஒருவகைவிரோத மனப்பான்மையாகவும் பரிணமித்து விடுகிறது. ஒருபுறம் அன்பு, ஒருபுறம் பகைமை—இத்தகைய முரண்பாடுகளுக்கிடையே குழந்தை யுள்ளத்தை ஊசலாட விடுவது சரியன்று.

இந்த முரண்பாடான நிலையைத் தெரிந்து கொண்டதும், 'இந்தக் குழந்தைக்குத்தான் என்ன முரண்டு!' என்று தாயோ, செவிலித் தாயோ வேதனைப்படுவதும் உண்டு. இந்த நிலையில், தன்முயற்சியால் செயல்புரிவதிலுள்ள இன்பத்தைக் குழந்தை இழந்துவிடலாகாதே என்ற கவலை முதியவருக்கு ஏற்படுவதில்லை.

தானாகச் செயல் புரியும் இன்பத்தை மட்டுமா?—வளரும் ஆற்றலையும் ஒருவாறு இழந்து தவிக்கிறது குழந்தை. மூச்சுக் காற்றைப்போல் அவ்வளவு அவசியமானது குழந்தைக்குத் தான் உகந்த வீட்டுவேலைகளைச் செய்து பார்ப்பதும்.

இத்தகைய செயல்களைச் செய்யக் குழந்தையை உத்ஸாகப்படுத்த வேண்டும். வெற்றி பெற்றால் வியந்து பாராட்ட வேண்டும்; தோல்வியுற்றால் ஊக்கம் அளிக்க வேண்டும். எல்லாருக்கும் சுதந்திரம் வேண்டும் என்று சொல்லும் இந்தச் சுதந்திர யுகத்திலே குழந்தைக்கும் வயதுக் கிசைந்த, வளர்ச்சிக்கு ஏற்ற, செயல்கள் புரியச் சுதந்திரம் வேண்டும்.

குழந்தையைப் பேச விடுகிறோம்; நடக்க விடுகிறோம். அப்படியே, தான் உகந்த வீட்டு வேலைகளையும் செய்ய இடங் கொடுப்பது அவசியமாகும். தீராத அம்சங்களில் சற்று உதவி செய்யலாம்; ஆனால் குழந்தையே மேலும் மேலும் முயன்று வெற்றி பெற வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது. நாம் வழி காட்டலாம்; ஆனால் நடக்க வேண்டியவன் குழந்தை தான்.

மாண்டிஸோரி இந்த உண்மையை நன்குணர்ந்து தமது கல்வி முறையில் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டுமென்று குழந்தையைக் கட்டாயப்படுத்துவதில்லை. உபாத்தியாயர் செய்து காட்டுகிறார்; குழந்தை இஷ்டப்பட்டால் செய்து பார்க்கலாம், அல்லது செய்யாமலும் இருந்துவிடலாம்.

குழந்தை ஒரு செயல் புரிவது தன் வளர்ச்சிக்காகவே தான். முதியவர் துடைப்பத்தை உபயோகிப்பதற்கும், குழந்தை உபயோகிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. குப்பையைப் பெருக்கித் தள்ளுவது அவசியமென்று கருதி நாம் துடைப்பத்தை உபயோகிக்கிறோம். மீண்டும் மீண்டும் துடைப்பத்தை உபயோகிப்பதற்காகவே குழந்தை குப்பையைக் கொட்டிக் கொட்டிச் சுத்தம் செய்து கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

இப்படித் திரும்பத் திரும்பச் செய்து பார்க்கும் பழக்கம் குழந்தைக்கு இன்றியமையாதது என்பதைப் பெற்றோர் நன்குணர்ந்து கொள்ள வேண்டும். இதைக் குழந்தையின் பிடிவாதமென்று கருதக் கூடாது 'காலத்தை வீணாக்குகிறானே!' என்று கருதுவதும் சரியன்று. வளர்ச்சிக்கு ஒரு சாதனம் இது.

வயது ஏற ஏறக் கொஞ்சங் கொஞ்சமாகச் சிறுவன் சாதாரண வாழ்க்கைச் சுமைகளைத் தன் இளந்தோள் மீது ஏற்றிக் கொள்வதைக் காணலாம். இதற்குக் குழந்தைப் பருவத்துப் பழக்கம் ஓர் அரும்பெருந் துணையாகும்

இந்தப் பழக்கத்தால் பின்னாளில் எந்தக் கடமையையும் அற்பமாகக் கருதாமல் அநாயாசமாகச் செய்து

முடிக்கும் ஆற்றல் பெருகுவதைக் காணலாம். அத் தகைய செயல்-திறனுக்கு வித்தான பழக்கத்தை அலட் சியம் செய்யலாமா?

'அதைச் செய்; இதைச் செய்' என்று குழந்தை மீது கட்டளைகளைச் சுமத்திவிடாமல், தன் உள்ளுணர்ச் சிக்கும் இயற்கை-வேகத்திற்கும் இணங்கச் செயல் புரிந்து கொள்ளும்படி குழந்தைக்குச் சுதந்திரம் அளிப் பதுதான் சிறந்த நல்வழியாகும்.

படிப்பு விஷயத்திலும் இந்தச் சுதந்திர வழியே நல்லது என்பது மாண்டிஸோரியின் வாழ்க்கை யநுபவம். இது அம்மையார் யுக்தியாகவோ, மேற் கோளை வைத்துக்கொண்டோ வெளியிடும் கொள்கை யன்று.

குழந்தைக்குள்ளே ஒரு சக்தி இருக்கிறது: மின் சாரம் போல் அவ்வளவு உண்மையான ஒரு ஜீவ சக்தி. பரிபூர்ண நம்பிக்கைக்கு உரிய சக்தி இது. இந்தச் சக்தியை வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் உணர்ந்து பயன்படுத்திக் கொள்வதே குழந்தைக்கு வளரும் கல்வி அளிக்கும் ராஜவழி என்பது மாண்டி ஸோரியின் அநுபவ சித்தாந்தம்.

இந்தக் கல்வி-வழியில் வீட்டைக்காட்டிலும் அதிக மாக உதவுவது பள்ளிக்கூடம் தான். இதற்கென்று தயாரித்த உபகரணங்களைத் தக்க பயிற்சி பெற்ற உபாத்தியாயரே உபயோகிக்க முடியும். குழந்தை களுக்கு எட்டும் உயரத்திலுள்ள அலமாரிகளில் இந்த உபகரணங்கள் அணி அணியாகக் கொலு வைப்பது போல் கவர்ச்சிகரமாக வைக்கப் பெற்றிருக்கும். வீட்டு

வேலையில் குழந்தைக்குள்ள பிரியம் இந்த உபகரணங்களைக் கையாளுவதிலும் ஏற்படுகிறது.

குழந்தையின் ஐம்புலன்களுக்கும் இங்கே அப்பியாசம் கிடைக்கிறது.

எண்ணும் எழுத்தும்
கண்எனத் தகும்

என்று சொல்லுகிறோமே, அந்தக் கணிதம் என்ற கண்ணையும், எழுத்து என்ற கண்ணையும் குழந்தை எளிதாகப் பெற்றுக் கொள்ள வசதியும் கிடைக்கிறது.

இந்த உபகரணங்கள் பொம்மைகளல்ல. இவை பொம்மைகளைக் காட்டிலும் குழந்தையைக் கவர்கின்றன என்பதை அநுபவத்தால் முதல் முதல் கண்டறிந்தவர் மாண்டிஸோரி.

ஏதோ ஒரு குழப்ப உலகிலிருந்து மேலே மேலே ஏணிமேல் ஏறுவதுபோல் ஏறச் செய்கின்றன இந்த உபகரணங்கள். ஏணி வழியாக ஏறி ஏறி மேல் மாடத்தை அடைவது போல் உள்ளத் தெளிவு என்ற புதிய உலகைக் குழந்தை அடையுமாறு உபகரிக்கின்றன இந்த உபகரணங்கள்.

பொம்மைகள் இந்த 'ஏணி ஏற்ற'த்திற்குப் பயன்படுவன அல்ல. கீழே தரையில் மண்ணை அளைந்து துழாவி விளையாடும் நிலையிலேயே குழந்தையை விட்டு விடுகிறது பொம்மையுலகம்.

தீராத விளையாட்டுப் பிள்ளையாக மட்டும் கண்ணன் இருந்து விட்டால் போதுமா? வளர வேண்டாமா? பால கோபாலன் ராஜ கோபாலனாக வேண்டுமே! வீரனாகி, அதி வீரனாகி, கீதாசாரியனாகி உலகத்திற்கே குருவாகவும் பரிணமிக்கக் கூடுமே!

கீதாசாரியனுக்கும் 'தந்தை' ஆறு வயதுக்கு உட்பட்ட பாலகோபாலன் தான்! இந்தப் பருவம் 'குழந்தையின் பூலோக சொர்க்க'மாக அமைய வேண்டும். எல்லாம் சூழ்நிலையைப் பொறுத்த விஷயம்தான்.

ஆறு வயதுக்கு மேல் வேருெரு சொர்க்கத்தில் குழந்தை பிரவேசிக்க வேண்டும். அதிக அளவில் அறிவு மயமானது இந்தச் சொர்க்கம். இதை 'மாண்டிஸோரி மேல் வகுப்பு' என்று சொல்லுகிருர்கள்.

கணிதத்தில் மேலான நிலைகளை அடைவதற்கு மணிகளாலான உபகரணங்கள் உபயோகிக்கப்படுகின்றன. க்ஷேத்திர கணிதப் பிரவேசத்திற்கு உரிய, மரத்தாலான, உபகரணங்களும் உபயோகத்திற்கு வருகின்றன. விஞ்ஞான சோதனைக்குரிய ஆரம்பப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

'இத்தகைய பயிற்சிகளில் இத்தகைய இளம் பருவத்தில் ருசி ஏற்படுமா?' என்று கேட்கலாம். சொல்லிக் கொடுத்து இவற்றைக் கற்பிக்கும் பருவமல்ல இது என்பதும் உண்மை தான். உபகரணங்களுடன் செய்து பார்த்துக் கற்றுக் கொள்ளக்கூடிய விஷயங்கள் இவை என்பது அநுபவத்தால் அறிந்ததே.

இப்படிக் கழியும் சில ஆண்டுகளை 'அறிவோடு வளரும் பருவம்' என்று குறிப்பிடலாம். இந்தப் பருவத்திலே க்ஷேத்திர கணிதக் கருவிகளைச் சரியாக உபயோகித்துக் கொள்ளும் ஆற்றலைக் குழந்தை பெறுகின்றது. பெருக்கல் வாய்ப்பாடு கற்றுக்கொள்ளும் பருவம் இது. மேலும் கணிதத்தில் பயிற்சியைச் சிரமமில்லாமல் பிரியத்துடன் பெற்றுக் கொள்வதும் சாத்தியமாகிறது இந்தப் பருவத்திலேயே. இத்தகைய



ஒன்று முதல் பத்துவரை அறை அறைகளாக வகுக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் அது அதற்குரிய குச்சிகளைப் போடும்போது 'நான் இப்போது போட்டது சரியா?' என்று ஆலோசிக்கிருள்.

அப்பியாசங்கள் சிறுவனுக்கு இன்பமாகவே இருக்கின் றன. இது அநுபவத்தால் அறிந்துகொண்ட உண்மையாகும்.

ஆறு வயதுக்குமேல் பன்னிரண்டு வயதுக்குள் நிகழ்வது இந்தப் பருவம். இதற்குமேல் ஒரு புதிய பருவம்—ஆண்மையும் பெண்மையும் வேறுபட்டு வளரும் பருவம். இப்போது அறிவு - மனப்பான்மை யைக் காட்டிலும் சமுதாய மனப்பான்மைக்குச் சான்று காணலாம்.

இந்தப் பருவத்திலே ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டு சொற்பப் பணம் சம்பாதிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவது இளைஞனுக்குப் பிரியமாக இருக்கும்.

இப்பருவத்திலே லட்சிய உயர்வையும் உணர்ச்சி-ஆழத்தையும் காணலாம். ஆழ்ந்த சமய உணர்ச்சிக் கும் உரிய பருவம் இது. குணாதிசயம் உருப் பெறுவ தற்கும் உரிய காலம் இது. பன்னிரண்டு முதல் பதி னெட்டு வயது வரை இப்பருவம் நீடித்திருக்கும்.

மாண்டிஸோரி கண்டு காட்டும் குழந்தையுலகம் குறித்த சில உயிர்நிலைக் குறிப்புக்கள் இவை. குழந் தைக் கல்வி விஷயமான சித்தாந்தம் முழுமையும் இவர் கண்டு பிடித்து விட்டாரென்று ஒருவரும் சொல்லத் துணியார். இந்தச் சித்தாந்தம் கருவாகி ஒருவாறு உரு வாகியுள்ளது மாண்டிஸோரியின் உள்ளத்திலும் வாழ்க் கையிலும். இது இன்னும் வளர்ச்சிபெற வேண்டிய நிலையில் தானிருக்கிறது.

மாண்டிஸோரி காணும் குழந்தையுலகம் குழந்தை யின் சுதந்திர உலகம்; எனவே, குழந்தையின் இன்ப

உலகம். இந்த உலகத்தின் ஒரு வரிச்சித்திரம்தான் இந்தக் குழந்தைக் கலைஞர் வரைந்து காட்டியிருப்பது. இது நிறம் பெற வேண்டும்; ஒளி பெற வேண்டும்; மேலும் அழகுபெற வேண்டும்.

குழந்தையிடமிருந்துதான் மேலும் மேலும் நாம் கற்றுக்கொண்டு இந்தச் சித்திரத்தைப் பூர்த்தி செய்யக் கூடும்.

* * *

குழந்தையின் சுதந்திர உலகத்தை முதல் முதல் கண்டுபிடித்துக் காட்டி 'இது குழந்தைக் கல்வி யுலகம்; இது குழந்தையின் இன்ப உலகமும்கூட!' என்ற உண்மையைப் பரவச் செய்த அம்மையாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை இந்த நிலையில் நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும். அப்பால் மாண்டிஸோரியின் குழந்தையுலகத்தை மறுபடியும் கூர்ந்து பார்த்து மேலும் சில முக்கிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள முயல்வோம்.

6. சில அடிப்படைக் குறிப்புக்கள்

மனித வர்க்கம் முன்னேறவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு எத்தனையோ இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. லட்சியவாதிகளும் சீர்திருத் தக்காரர்களும் 'வறுமையைப் போக்க வேண்டும்; அறியாமையைப் போக்க வேண்டும்; நோயைப் போக்க வேண்டும்....' என்றெல்லாம் நோக்கங்களை வகுத்துக் கொண்டு கிளர்ச்சி செய்யக் காண்கிறோம். பொது வாக, இந்தப் பழைய உலகம் புதுப்பிக்கப்பெற வேண் டும் என்ற உணர்ச்சி பலவேறு இயக்கங்களையும் ஊடுருவிக் கிடக்கக் காண்கிறோம்.

இந்த இயக்கங்களில் பல ஆரவாரக் கிளர்ச்சிக ளாகவும், ஆவேசக் கிளர்ச்சிகளாகவும் நடைபெறக் காண்கிறோம். விளம்பர முரசுகொட்டி இடிக்குரலில் சொல்மாரி பொழிந்து கிளர்ச்சிப் பயிரை வளர்த்துக் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலே, ஆடம்பரமின்றி ஆரவாரமின்றி உலக முன்னேற்றத்திற்குரியதொரு பெரும் பணியை மேற்கொண்டார் டாக்டர் மாண்டி ஸோரி அம்மையார்.

கன்னியாகவே யிருந்து ஏறக்குறையத் தமது முழு வாழ்க்கையையும் குழந்தைப் பணிக்காக அர்ப்ப ணித்த இவர் குழந்தையுலகின் அன்னையாக உலக சரித்திரத்தில் தமது பெயரைப் பொறித்துக் கொண் டார் என்றே சொல்லலாம். கன்னி மாண்டிஸோரி

அன்னை மாண்டிஸோரியாக வளர்ந்த அதிசயக் கதை தான் இவர் வாழ்க்கை வரலாறு.

குழந்தை நலத்தை நாடி உழைக்க முன்வந்துள்ள வேறு இயக்கங்களும் உண்டு. குழந்தையைக் கருவி யாகக் கொண்டு உலக நாகரிகத்தையே புரட்சிகரமாக மாற்றிவிடலாமென்ற பொற்கனவுகளைக் கண்டவர்க ளும் உண்டு. எனினும், குழந்தையுலகத்தையும் இதன் எதிர்காலத்தையும், இதுவே பழைய உலகத்தை முற்றும் புதுப்பிக்க முடியும் என்பதையும் இந்த அம்மையாரைப் போல் தெளிவாகக் கண்டு காட்டியவர் வேறு எவருமில்லையென்று துணிந்து கூறலாம்.

பெஸ்டலோஸி (Pestalozzi) என்ற ஸ்விட்ஸர் லாந்து அறிஞரைச் சரியான, பகுத்தறிவுக்குப் பொருத்தமான, குழந்தைக் கல்வித் திட்டங்களுக்கெல் லாம் தந்தையென்று சொல்வதுண்டு இவரும் குழந்தையுலகம் குறித்து ஆனந்தக் கனவுகள் கண்டார். குழந்தையுலகில் ஒரு புது யுகத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக இவரும் தமது உடல் பொருள் ஆவியையும் அர்ப்பணித்தார். இவரது குதூகலம் ஒரு தொத்து நோய் போல் பரவிப் பல ஐரோப்பிய நாடுகளிலும் குழந்தைக் கல்வித் திட்டங்க ளில் ஆர்வத்தை எழுப்பியது.

கி. பி. 1802-ல் பெஸ்டலோஸி பாரிஸ்மாநகருக் குப் போயிருந்தார். அது நெப்போலியன் காலம். அந்தச் சர்வாதிகாரி ஒரு ராணுவத் தலைவனாகவும் வெற்றிவீரனாகவும் விளங்கியதுடன், நாகரிக வளர்ச்சி குறித்தும் பெருங் கனவுகள் கண்டவன். அத்தகைய வீர நெப்போலியனிடம் பெஸ்டலோஸி பிரான்ஸுக்

குத் தேவையான தேசீயக் கல்வித் திட்டம் குறித்துத் தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்; சரியான குழந்தைக் கல்வியின் தேவையைப் பெரிதும் வற்புறுத்தினர். அதற்கு நெப்போலியன் 'அரிச்சுவடி விஷயமாகப் பொழுது போக்க எனக்கு அவகாசமில்லை!' என்று பதில் சொல்லிவிட்டான்.

பெஸ்டலோஸிதாம் குழந்தையின் மனோதத்துவத்தை முதல் முதல் வற்புறுத்தியவர். ப்ரோபெல் (Froebel) என்ற அறிஞர் குழந்தை யுணர்ச்சிகளை வற்புறுத்திக் கல்வித் திட்டம் வகுக்க முயன்றார். உள்ளத்திற்கும் உணர்ச்சிக்கும் அதீதமாகவும் ஆதாரமாகவும் உள்ள சூட்சும அடிப்படையைக் குழந்தையின் சுபாவத்தில் கண்டு காட்டியவர் டாக்டர் மாண்டிஸோரியே ஆவர்.

குழந்தையின் ஸ்தூல நிலை—அதாவது, உடல் வளம் முதலான அம்சங்களோடு கூடிய நிலை—முக்கியமானதுதான். குழந்தையின் மனநிலையும் உணர்ச்சி நிலையும் முக்கியமானவை என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் இவற்றையும் கடந்த ஒரு சூட்சும நிலைதான் அடிப்படை நிலையாக இருக்க முடியும் என்பது மாண்டிஸோரி - சித்தாந்தம்.

ஒரு கட்டடத்திற்குச் செங்கல் சுண்ணம்பைக் காட்டிலும் சிற்பியின் நினைவே அடிப்படையாவது போல், குழந்தையை உள்ளத்திற்கும் உணர்ச்சிக்கும் அப்பாலுள்ள ஒரு சூட்சும ஜீவனாகக் கருதுவதே சிசுபாலனத்தின் அடிப்படைத் தத்துவமாக அமையவேண்டும். சூட்சும நிலைக்கும் ஸ்தூல நிலைக்கும் நெருங்கிய உறவு

உண்டு என்பதும் மறக்க முடியாததோர் உண்மை யாகும்.

பெஸ்டலோஸியின் கல்விக் கொள்கைகளில் ஒன்று அறிவு வளர்ச்சி இன்பமயமாக இருக்க வேண்டும் என்பது. குழந்தைகளின் தைரியத்தைப் பாதிக்கக் கூடிய நிலையில் புகட்டப்பெறும் எந்த விஷய ஞானமும் பயனற்றது என்றும் பெஸ்டலோஸி தீர்மானித்தார். படிப்பின் முக்கிய அம்சம் போதனையன்று, அன்புதான் என்றார். பெஸ்டலோஸியின் துணையாளராகத் தோன்றித் திகழ்ந்தவர் ப்ரோபெல் என்ற அறிஞர். இவர் பெஸ்டலோஸியின் கருத்துக்களுடன் தமது சொந்தக் கருத்துக்களையும் இணைக்க முயன்றார்.

குழந்தையின் ஆற்றல் அப்பியாசத்தால் வளர்கிறது என்ற கருத்துடனும், குழந்தை மீது தாம் கொண்ட அன்புடனும் குழந்தைக் கல்வி முறையை உருவாக்க முயன்றார் பெஸ்டலோஸி. குழந்தையின் விருப்பத்தைத் தொடர்ந்து அப்பியாசம் செய்துகொள்ளும் ரீதியில் அவர் தமது திட்டத்தை உருவாக்கலானார். இந்தக் கருத்துக்களுடன், குழந்தையின் தன் முயற்சியைத் தூண்டிவிடுவது அவசியமாகும் என்ற கருத்தையும் முதல் முதல் பிணைத்தவர் ப்ரோபெல் என்ற அறிஞரே ஆவர்.

'பாலர் தோட்டம்' 'பால பிருந்தாவனம்' என்று இந்நாளில் பிரசித்தமாகச் சொல்லுகிறோமே இந்தப் பெருங் கருத்தை முதல் முதல் வெளியிட்டவர் ப்ரோபெல் என்பவரே. இந்தக் கொள்கையில், ஆசிரியர்கள் தோட்டக் கலைஞராகி, குழந்தையைத் தன்னிச்சை

கொண்டு சுதந்திரமாக, ஆனந்தமாக வளரவிட இடம் உண்டு.

வரிசை வரிசையாகப் பெஞ்சுகளில் உட்கார்ந்து குழந்தைகள் உபாத்தியாயரின் நாக்கிற்கும் நோக்கிற்கும் கைப்பிரம்புக்கும் அஞ்சியிருக்கும் நிலையைப் பரிதாப நிலையென்று கண்டுகொண்டவர் ப்ரோபெல். இந்த நிலையை 'வண்ணாத்திப் பூச்சிகளை வரிசை வரிசையாகக் குண்டூசியால் குத்தி வைத்திருக்கும் நிலை' என்று வருணித்தார் மாண்டிஸோரி ஒரு சமயம்.

குழந்தைக் கல்வியுலகில் புரட்சியை விளைவித்த பெஸ்டலோஸி, ப்ரோபெல், மாண்டிஸோரி என்ற மூவருள்ளும் முதன்மையானவர் டாக்டர் மாரியா மாண்டிஸோரி அம்மையாரேஆவர். பெஸ்டலோஸி, ப்ரோபெல் என்ற இருவர் காலத்திலும் மனிதனைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் அறியப்பெற்றிருந்த விஷயங்களைக் காட்டிலும் அதிகமான, முக்கியமான, விஷயங்களை விஞ்ஞானம் மாண்டிஸோரி காலத்தில் வெளியிட்டிருந்ததால், இந்த உண்மைகளையும் பயன்படுத்திக் கொண்டு மாண்டிஸோரி அவர்களைக் காட்டிலும் விசேஷமாக முன்னேறிச் சென்றிருக்கிறார். தமக்குக் கிடைத்திருந்த பரந்த விஞ்ஞான அறிவுடன் இவர் தமது உள்ளொளியால் குழந்தைக் கல்வித் துறையில் புத்தம் புதிய உண்மைகளையும் கண்டுபிடித்திருக்கிறார்.

குழந்தை என்பது களிமண் அல்ல, நமது கையால் பிசைந்து நம் இஷ்டப்படி உருவம் கொடுப்பதற்கு. களிமண்ணைப் பிள்ளையாராக்கலாம்; குரங்காகவும் செய்துவிடலாம். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய்

முடியும் கதை குழந்தைக் கல்வியுலகிலும் காணக் கூடியதுதான். மாண்டிஸோரியோ குழந்தைக்கு ஒரு தனி உருவம் உண்டு, தனிப் பண்பு உண்டு, உள்ளுக்குள் அடங்கியிருக்கும் ஆற்றல்வகைகளும் உண்டு என்ருர்.

எனவே, குழந்தைக்காக நாம் செய்வதுதான் கல்வி என்பதில்லை. இத்துறையில் நாம் செய்யாமல் தவிர்க்க வேண்டியதே பெரும் பகுதியாகும். குழந்தை-வளர்ச்சியுடன் முரண்படுவதெல்லாம் தவிர்க்கத் தக்கதே.

மாண்டிஸோரிக்குக் குழந்தை 'குழந்தை தானே' என்பதில்லை. இவருக்குக் குழந்தையென்பது ஒரு இரகசியம்; நாம் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு இரகசியம். பக்தர்கள் சிதம்பர ரகஸ்யம் என்று நடராஜ தத்துவத்தைக் குறிப்பிடுவதுண்டு. பக்திக் கண்ணுல் கண்டுபிடிக்க வேண்டிய இரகசியம் அது. குழந்தை-ரகஸ்யத்தைக் கண்டு கொள்ளவும் பக்திக் கண், அன்புக் கண் வேண்டியதுதான். 'முதல் முதல் குழந்தையைக் கண்டுபிடித்து அவனுக்குச் சுதந்திரம் கொடுத்துவிடுங்கள்: இது கல்வியின் குறிக்கோள்' என்கிருர் மாண்டிஸோரி.

குழந்தைக்குத் தெரியாததைச் சொல்லிக் கொடுப்பதைக் காட்டிலும், தெரிந்துகொள்ளவோ தெரிந்து கொள்ளாமலிருக்கவோ சுதந்திரம் அளிப்பதே முக்கியமானது. குழந்தை தெரிந்துகொள்ள விரும்பாததைக் கற்பிப்பது கல்வியாகாது. அதைக் கசடறக் கற்பிக்கவும் முடியாது. 'சிறு குழந்தை மேலும் மேலும் தெரிந்துகொள்ள விரும்புகிறது, முயல்கிறது; கற்றபடி ஒழுகவும் பிரியப்படுகிறது' என்பது மாண்டிஸோரி

தமது வாழ்க்கையில் அறிந்து வெளியிட்டிருக்கும் முக்கியமான உண்மைகளில் ஒன்ருகும்.

குழந்தையின் இத்தகைய விருப்பங்களும் முயற்சிகளும் நிறைவேறுவதற்காகக் குழந்தைக்குச் சுதந்திரம் வேண்டும், பெற்ருேரும் உபாத்தியாயரும் குறுக்கிடலாகாது என்கிருர் மாண்டிஸோரி.

விட்டு விடுதலை யாகிநிற்பாய் இந்தச்
சிட்டுக் குருவியைப் போலே

என்று பாரதியார் பாடியிருக்கிருரல்லவா?—அத்தகைய சுதந்திர வெளியிலேதான் குழந்தையின் சூட்சும வாழ்வு மலர்ச்சி பெறவேண்டும் என்பது மாண்டிஸோரி கொள்கை—தமது நீண்ட வாழ்க்கையில் இவர் கண்டுகொண்ட மகத்தான உண்மை.

இத்தகைய உண்மையைக் கண்டுபிடித்த மாண்டிஸோரி குழந்தையின் அன்னையானதுடன் பக்தையாகவும் பரிணமித்தார் என்பதையும் இந்த வாழ்க்கைக் கதையில் தெரிந்து கொள்கிருேம். ஒவ்வொரு குழந்தையையும் குழந்தைக் கிறிஸ்துவாகவும் குழந்தைக் கண்ணனுகவும் இவர் கண்டுகொண்டார்.

பரம்பொருள் மனித உருவில் கிறிஸ்துவாகவும் கண்ணனுகவும் தோன்றிப் பாலஸ்தீன நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தையாகத் தொட்டிலில் வளர்ந்தது என்ற கதைகளில் புதைந்து கிடக்கிறது மாண்டிஸோரி அம்மையார் கண்டுகொண்ட குழந்தைத் தத்துவம்.

'வளர்ச்சியின் தத்துவங்களை அற்புதமாக நாம் ஆச்சரியமடையும் விதத்தில் குழந்தை புலப்படுத்துகிறது. கண்ணுடையவர்கள் யாரும் மனித தத்துவச்

சிறப்பின் மூலவேரைக் குழந்தையிடம் காணலாம்.... எமர்ஸன் சொல்வதுபோல் ''விழுந்த மக்களை வீட்டு நெறியில் கொண்டு சேர்க்க இடைவிடாமல் வந்து கொண்டிருக்கும் அவதாரமூர்த்தி'' என்று குழந்தையை நாம் சொல்லலாம். நாம் குழந்தைக்குச் செய்வதைக் காட்டிலும் அதிகமாக அது நமக்குச் செய்ய வந்திருக் கிறது என்பதில் ஐயமில்லை....குழந்தை எப்போதும் இயங்கிக்கொண்டே யிருக்கிறது; நம்மை எழுப்புவதற் காக அங்குமிங்கும் ஓடியாடுகிறது. இந்தக் கருத்தை ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்தபோது, குழந்தைக் குரு நாதனுக்குப் பக்தையாவதென்று விரதம் பூண்டேன். பிறகு எனக்குக் குழந்தையின் உண்மையுருவமும் பெருமையும் தெரியவந்தன' என்பது மாண்டிஸோரி வாக்கு—வாழ்க்கையின் ஆழத்திலிருந்து பிறந்த வாக்கு.

'குழந்தை அவதாரம்' 'குழந்தைக் குருநாதன்'— எத்தகைய பொருள் புதைந்த சொற்றொடர்கள்! 'ஆண்டவன் இன்னும் மனிதவர்க்கத்தைக் கைவிட வில்லை என்பது, நாள்தோறும் மலர்களும் குழந்தை களும் பிறப்பதிலிருந்து உறுதியாகிறது' என்ற கவி ரவீந்திரரின் வாக்கும் மாண்டிஸோரியின் வாக்கை அரண் செய்வதுதான். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற தமிழ்ப் பழமொழி யின் வாயிலாக, தமிழகத்தின் இதயமும் பழகிய விருந் தாளியை வரவேற்பதுபோல் மாண்டிஸோரியின் குழந் தைக் கலைக் கொள்கையை வரவேற்கும் என்று தெரிந்துகொள்ளலாம்.

சரியான குழந்தைக்கல்வி குழந்தையிடம் மாறு தல்களை, வளர்ச்சிக்குறிகளை உண்டாக்குவதுபோல்,

குரு அல்லது உபாத்தியாயரிடத்திலும் உண்டாக்க வல்லது என்பது அன்னை மாண்டிஸோரியின் புரட்சிகரமான கொள்கை. இந்தத் தனிப்பெருங் கொள்கையை ஒரு சொல்லில் வெளியிட வேண்டுமென்றால், அதற்கு உதவக்கூடிய மந்திரச்சொல் 'குழந்தைக் குருநாதன்' என்பதுதான்.

'குழந்தைக் குருநாதன்' (The Little Messiah) என்று மாண்டிஸோரிகூறும்போது சாதாரண குருவின் நினைவா வருகிறது? ஒரு மகானாகிய ஞானகுருவின் நினைவுதானா வருகிறது?

வள்ளல் குருராயன்
மன்னுயிர்க்காத் தன்னுயிரை
எள்ளி அவதரித்த
எம்மான் சருவேசன்

என்று போற்றப்பெறும் ஜகத்குருவான கிறிஸ்து பெருமானின் நினைவு மாண்டிஸோரியின் உள்ளத்தில் இடம்பெற்றுத்தான் 'குழந்தைக் குருநாதன்' என்ற சொற்றொடரைத் தந்திருக்கிறது.,

ஒவ்வொரு குழந்தையிடமும் ஒரு குழந்தைக் கிறிஸ்துவையோ, ஒரு குழந்தைக் கீதாசாரியனையோ மாண்டிஸோரி கண்டுகொண்டதற்கே ஒரு முக்கிய காரணம், தம் கல்விப்போக்கிலே குழந்தையால் ஆசிரியரின் அறிவும் வளர்ச்சி பெறத் தொடங்கியது தான்!

சீடன் குருவிடம் பக்தி விஷயமாக உபதேசம் பெறுகிறான். உண்மையான உபதேச முறையில் சீடன் ஏற்ற கலமாக இருப்பது மட்டுமல்ல, தனக்குள்ளேயிருந்து ஞானம் மேலும் மேலும் பொங்கிக்

குருவுக்கே உதவுவதையும் காண்கிருன். இது பக்தி மதச் சிறப்பு என்று பொருள்படப் பிரசித்தரான உரையாசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

ஏற்ற கலங்கள்
　　எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்ருதே பால்சொரியும்
　　வள்ளற் பெரும்பசுக்கள்

என்ற ஆண்டாள் வாக்கிற்கு உள்ளுறை பொருளாக மேலே சொன்ன கருத்தை வெளியிட்டிருக்கிருர்.

ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு மடுவைப் பற்றிப் பால் கறக்கும்போது அந்தப் பாத்திரம் நிறைந்து பொங்குகிறதாம்,—'நானும் மடுவுக்குப் பால் தருவேன்!' என்பதுபோல. சீடன் என்ற கலமும் எதிர்பொங்கி ஞானப்பாலைக் குருவுக்கே அளிப்பதும் உண்டு என்பது பக்தர் கண்ட உண்மை. இதே உண்மையைக் குழந்தையின் பக்தையான மாண்டிஸோரியும் கண்டிருக்கிருர் என்ருல், இந்த அம்மையாரின் ஞானம் நமது உரிமைச் செல்வமான ஞானபக்திக் கொள்கைக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது, பாருங்கள்!

குழந்தை தன் குருவுக்கு மட்டுமா உபதேசம் செய்து அறிவு வளர்ச்சிக்குக் காரணமாகிருன்? சிறப்பாகக் குருவுக்கும், பொதுவாகத் தாய் தந்தையர் உள்ளிட்ட எல்லாருக்கும் குழந்தைக் குருநாதன் உபதேசம் செய்வதாக மாண்டிஸோரி கண்டுபிடித்துக் கூறும் உண்மை ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. குழந்தை-முருகன் தந்தையான சிவபெருமானுக்கே உபதேசம் செய்து 'குருசாமி' என்றும், 'தகப்பன்சாமி' என்றும்

பேர்பெற்றுன் என்ற கதையின் உட்பொருளும் மாண்டிஸோரி-தத்துவத்தை முன்னேடியாக அறிவிப்பதுதானே!

'உபாத்தியாயன்' என்ற பதத்திற்கே 'உடனிருந்து கற்பவன்' என்று பொருளல்லவா? குரு உபதேசிக்கிருன் என்ருல், சீடனுடன் சேர்ந்து கற்கிருன் என்றே கருதவேண்டும். குழந்தை-உபாத்தியாயனும் குழந்தையுடன் சேர்ந்து கற்கிருன், குழந்தை-உபாத்தியாயன் அல்லது குழந்தைக்குரு குழந்தைக்குள்ளேயே இருக்கிருன் என்பதும், அந்தச் சூட்சும குருவைக் கற்பிக்க விடுவதே கல்வியென்பதும், அந்தக் குருநாதன் உபாத்தியாயர்களுக்கும் உபாத்தியாயன் என்பதும் மாண்டிஸோரி-சித்தாந்தம்.

தாமரை மொட்டு மலர்வதுபோல் குழந்தையுள்ளம் மலர்ச்சிபெறுவதைக் காணும் ஆசிரியனின் உள்ளத்திலே ஏற்படும் வளர்ச்சி அல்லது மலர்ச்சியை 'அறிவு வளர்ச்சி' என்று சொல்வதைக் காட்டிலும் 'உள்ளொளியின் உதயம்' என்று கூறுவதே பொருத்தமாகும். இந்த உள்ளொளி, வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கும் உபாத்தியாயருக்குத் துணை செய்வதாகும்.

மாண்டிஸோரி-உபகரணங்களைக் கொண்டு கற்பிக்கும் கல்விமுறைகள் வசீகரமானவை என்பதைப் பலரும் அறிவர். ஆனுல் மாண்டிஸோரி காணும் 'குழந்தைக் குருநாதன்' என்ற தத்துவம் இவரது முறைகளுக்கெல்லாம் மேலான வசீகர அழகு வாய்ந்தது.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற பழமொழியை ஏற்கெனவே குறிப்பிட்டி

ருக்கிறேன். தெய்வத்தைக் கொண்டாடாத மனப் பான்மையுள்ளவர்களும் குழந்தையைக் கொண்டாட லாம். தெய்வபக்தி இல்லாதவர்களுக்கும் மாண்டி ஸோரியின் குழந்தை-பக்தி என்ற புதிய மதம் சம்மத மாகும் என்று நம்பலாம். பழைய உலகை இளமை யும் அழகும் நிறைந்த ஒரு புதிய உலகமாகக் காட்ட வல்லது மாண்டிஸோரியின் கொள்கை.

'நாடு படிக்கிறது; அதிக அளவில் புத்தகங்களைப் படித்து முன்னேற வேண்டும்' என்று சொல்லுகி ரோம். ஆனல் குழந்தையைக் கற்கும் கல்வி—குழந்தை யிடம் கற்கும் கல்வி—தீராத பிரசினைகளையும் தீர்த்து நாட்டை முன்னேறச் செய்யும் ஏன்று நம்புகிருர் மாண்டிஸோரி. குழந்தை-ரகஸ்யம் வாழ்க்கை இரகசி யங்களுக்கெல்லாம் ஒரு தங்கத் திறவுகோல் என்று சொல்லி, அந்தத் திறவுகோலையே நமது கையில் கொடுத்துவிடுகிருர் மாண்டிஸோரி, தமது வாழ்க்கை யாலும் உபதேசங்களாலும்.

1789-ஆம் ஆண்டில்—மாண்டிஸோரி பிறப்ப தற்குச் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்—வில்லியம் ப்ளேக் என்ற கவிஞன் குழந்தைப் பண்பு குறித்துப் பாடிப் பிரசுரித்தான். அவன் பாடினன் என்று சொல்வ தைக் காட்டிலும், குழந்தைப் பண்பு அக்கவிஞன் வாயி லாகத் தன்னைப் பாடிக்கொண்டது என்று சொல்வதே பொருத்தம் என்கிருர் ஒரு விமர்சகர். குழந்தைப் பண்பு, ப்ளேக்-கவிஞன் மூலமாகத் தன்னைப் பாடிக் காட்டியதென்ருல், மாண்டிஸோரி வாயிலாகத் தன்னு டைய தத்துவத்தை உள்ளபடியே வெளியிட்டுக் கொண்டது என்று சொல்லவேண்டும்.

அதனுல்தான் 'குழந்தைக் குருநாதன்' தன் குரு அல்லது ஆசிரியனையும், ஆசிரியனுக உயர்த்துவதுடன் மனிதனுகவும் உயர்த்திவிடுகிருன் என்ற அரிய பெரிய இரகசியத்தை மாண்டிஸோரி கண்டுபிடித்து வெளியிட நேர்ந்தது. சுருங்கச் சொன்னுல், குழந்தைப் பண்பு மனிதப் பண்பையே உயர்த்தி விடுகிறது என்ற அற்பு தத்தை இந்த அம்மையார் கண்டு காட்டியுள்ளார்.

'நீங்கள் சிறு குழந்தைகளாக மாறிப் பிறக்க வேண்டும்; இல்லாவிட்டால் பரமபத ராஜ்யத்தில் பிர வேசிக்க முடியாது' என்ருர் கிறிஸ்துநாதர். இந்த உபதேசத்திற்கு ஓர் அநுபவ வியாக்கியானமாக அமை கிறது, வாழ்க்கையின் உட்பொருளையும் இரகசியங்க ளையும் கண்டுகொள்ளக் குழந்தை வழி காட்டுகிருன் என்ற மாண்டிஸோரி-சித்தாந்தம்.

அந்தி தரு சித்திரமாகிய சூரியாஸ்தமனத்தின் அதிசய அழகுகளைக் கண்கொள்ளாக் காட்சியாக, உளம்கொள்ளா உவகையுடன் வியந்து நோக்கு கிருேம். அல்லது இசையின்பத்தில் சொக்கிப்போயிருக் கிருேம். அப்போது நாம் ஏதாவது சிந்தனை செய்கி ருேமா? சிந்தனை கடந்த அதிசய உணர்ச்சிதானே மேலிடுகிறது? இத்தகைய நிலையில் நாம் பகுத்தறி வைக் கடந்து உள்ளொளியை அணுகி நிற்கிருேம். இப்படியேதான் குழந்தையை இஷ்டப்படி அறிவில் வளரவிட்டு அதைக் கவனித்துக் கொண்டிருக்கும் உபாத்தியாயர் நிலையும் என்பது மாண்டிஸோரி குறிப்பு.

'ஆனந்தமான காலைப் பொழுதிலிருந்து நழுவி வந்த ஓர் இளங்கதிர்' என்றும், 'வசந்த காலத்தின் வசீ

கரமான ஒரு துணுக்கு' என்றும் குழந்தையை ஒரு கவிஞர் வருணித்திருக்கிறார். குழந்தை அறிவில் வளர்வதை அமைதியாகக் கவனித்து உள்ளொளி பெறும் உபாத்தியாயனும் இயற்கையழகிலும் கலையழகிலும் பரவசமாகி உள்ளொளி காணும் ரஸிகனுக்கு ஒப்பாவான் என ஊகிக்கலாம். கலா ரஸிகன் காணும் உள்ளொளி வாழ்க்கைக்குத் துணையாவது போலவே, குழந்தையின் உபாத்தியாயன் காணும் உள்ளொளியும் வாழ்க்கையின் உட்பொருளை உணர்ந்து கொள்ள உதவுகிறது.

இப்படியெல்லாம் குழந்தையுலகத்திலே அதிசய உண்மைகளைக் கண்டுபிடித்துக் காட்டிய அன்னையாரின் வாழ்க்கைத் தொடக்கமே ஒரு வசீகரமான வரலாற்றுச் சித்திரம்தான்.

7. வாழ்க்கைக் கதையின் ஆரம்பம்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கைக் கதையைத் தன் முகத்திலேயே எழுதிக் காட்டுகிருன் என்று சொல்வதுண்டு. மாண்டிஸோரி அம்மையைப் பேட்டி கண்டாலும் சரி, பிரசங்க மேடையில் பார்த்தாலும் சரி, அந்த முகப் பொலிவிலேயே இவரது குழந்தையன்பு ததும்பும் வாழ்க்கையையும் கண்டுகொள்வது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று சாதாரணமாய்ச் சொல்லுகிருேம். மாண்டிஸோரி பேசும்போது அந்த அகவாழ்க்கையின் அழகே பேசுவது போலத் தோன்றும்.

ஊடுருவிப் பார்வைசெயும்
உண்மையுளோர் கண்டபொருள்

என்பது கவிஞர் வாக்கு. மாண்டிஸோரி அம்மை பேசும்போது கேட்போர் உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பது போலத் தோற்றம் அளிப்பார். அப்படிப் பார்க்கப்படுகிறவர்களுக்கு அதனுல் ஒருவகைக் கலக்கமும் ஏற்படுவதில்லை. அந்தப் பார்வையால் நாம் அவருடன் சூட்சும உறவுகொண்டு அந்த வாழ்க்கைச் சித்திரத்தையும் அறிந்துகொள்ள ஆசைப்படுகிருேம்.

முகம், பார்வை, புன்னகை யெல்லாம் 'இவரை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்' என்ற ஆவலை உண்டாக்குகின்றன. ஒரு கவியை அவனுடைய காவியத்திலேயே நன்ருகத் தெரிந்து கொள்ள முடியும்

என்பர். மாண்டிஸோரி அம்மையாரையும் இவரது நூல்களில், சொற்பொழிவுகளில் நன்ருகத் தெரிந்து கொள்ள முடியும் என்பது உண்மைதான். எனினும் வாழ்க்கைக் கதையையும் உள்ளபடியே ஒருவாறு தெரிந்துகொண்டால், இவரது வாழ்க்கைச் சித்திரத் தின் முகப் பொலிவைக் கண்டுகொள்வதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படக்கூடுமல்லவா?

* * *

மாரியா மாண்டிஸோரி இத்தாலி நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் கி. பி. 1870-ம் வருஷம் ஆகஸ்டு 31-ம் தேதி பிறந்தார். 1952-ல் காலஞ்சென்ருர். பத்தொன் பதாம் நூற்ருண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூற்ருண்டின் முற்பாதியிலும் வாழ்ந்த இப் பேரறி ஞரைக் கருவிலே திருவுடையவர் என்றே சொல்ல வேண்டும்.

இத்தாலி நாட்டுக் கிராமத்தில் பிறந்தவர் இரண் டாவது அல்லது மூன்ருவது வயதிலேயே பெற்ரே ரால் இத்தாலி நாட்டின் முக்கிய நகரமும் உலகப் பிரசித்திபெற்றதுமான ரோமாபுரிக்குக் கொண்டுவரப் பெற்ருர். இங்கேயே இக்குடும்பத்தினர் குடியேறி விட்டனர்.

இவரது தாயும் தந்தையும் லட்சணமாக இருந் தார்கள். தாய் அழகி என்றே மதிக்கப்பெற்ருள். அவர்கள் தெருவில் போகும்போது மக்கள் கழுத்தைத் திருப்பிக்கொண்டு அவர்களைப் பார்த்துப் போவார்க ளாம். அதற்குக் காரணம் தம் மனைவியின் அழகுதான் என்று இவர் தந்தை பெருமையுடன் புன்னகை புரிந்து கூறுவாராம்.

தாயின் தோற்றப் பொலிவு சேயான மாரியாவிடம் அமைந்து வளர்ச்சி பெறலாயிற்று. குண அழகிலும் 'தாயைப் போலே பிள்ளை' என்பதற்கு இவர் சான்ருகத் திகழ்ந்தார்.

இவர்கள் குடும்ப வாழ்வு பொதுவாக நல்லின்ப வாழ்வாய்க் கழிந்தது. எனினும், சதிபதிகளுக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படாமலே இருக்க முடியுமா? இருவருக்கும் இடையே விவகாரம் ஏற்பட்டதும், குழந்தை மாண்டிஸோரி ஒரு சிறு நாற்காலியைத் தூக்கிக் கொண்டு வந்து அவர்களுக்கிடையே வைத்து அதன் மீது தான் தொத்தி நின்றுகொண்டு அவர்கள் கைகளைச் சிக்கெனப் பிடித்து இணைத்து வைப்பாளாம். தன் இளந் தளிர்க் கைகளால் எப்படி இறுகச் செய்ய முடியுமோ அப்படி இறுகச் செய்து அந்தக் கைகளைச் சேர்த்து வைப்பாளாம்.

இந்தக் குழந்தைப் பண்பு பின்னுளில் பூசல்களையும் போட்டிகளையும் கூட அறவே வெறுக்குமாறு இவரைத் தூண்டிவிட்டது.

உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
உலகில் மனிதர் எல்லாரும்;
இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

என்று பாரதியாரின் அன்பு-முரசு கொட்டுகிறதல்லவா? இந்த முரசொலி குழந்தை-மாண்டிஸோரியின் வாழ்க்கையிலே ஜீவ நாதமாக இசைத்தது.

இவர் குடும்பத்தில் கண்டிப்பான பழக்க வழக்கங்களும் கட்டுப்பாடுகளும் உண்டு. ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம் என்பதற்காக அவர்க

ளுக்குக் குளிர்காலத்தில் உபயோகப்படுமாறு கம்பளிச் சட்டை தைத்துக் கொடுப்பதில் மாண்டிஸோரியும் கட்டாயமாகப் பங்குகொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய நிர்ப்பந்தத்திலும் சிறுமி மாரியா தன் குட்டி நண்பர்களுடன் அடிக்கடி விளையாடப் போய்விடுவாள். விளையாட்டில் இச்சிறுமி தலைமை வகிப்பதும் உண்டு.

மாரியாவின் விளையாட்டுப் புத்தியும் தன்னைக் காட்டிலும் தாழ்ந்த நிலையிலுள்ள குழந்தைகள்மீது இரக்கம் கொள்வதற்கு இடையூருகவில்லை. இவள் வீட்டுக்கு அருகில் முதுகுக் கூனுள்ள சிறுமி ஒருத்தி இருந்தாள். மாரியாவின் அன்பு அவளையும் அழைத்துக்கொண்டு உலாவிவரத் தூண்டியது. அடிக்கடி அவளுடன் இவள் உலாவச் செல்வதுண்டு.

ஆனல் இந்த அன்பு - நிகழ்ச்சியால் நற்பயன் கிடைக்கவில்லை. ஓர் அழகான சிறுமியும் விகாரமான கூனலோடுகூடிய ஒரு சிறுமியும் சேர்ந்து உலாவும் போது, தோற்றத்திலுள்ள முரண்பாடு போகிறவர் வருகிறவர்களை யெல்லாம் கூர்ந்து கவனிக்கச் செய்தது. கூனலுள்ள சிறுமியிடம் பரிதாப உணர்ச்சியுடன் பரிகாச உணர்ச்சியும் ஏற்படக்கூடும். எனவே, மாரியாவின் தாய் அவர்கள் சேர்ந்து உலாவுவதை நிறுத்திவிடவேண்டுமென்று ஆலோசனை கூறினுள். வேறு வகையில் அந்தப் பெண்ணுக்கு உதவி புரிவது நலமாகும் என்பதையும் தன் புதல்விக்கு உணர்த்தினுள்.

மாரியா பெண்கள்-பள்ளிக்கூடத்தில் படிக்காமல் பையன்களுக்குரிய பாடசாலையில் கல்வி கற்கலானுள். அந்த நாளில் பெண்கல்விக்கு இத்தாலி நாட்டிலும் அவ்வளவாக மதிப்பு இல்லை. 'பெண் என்ன உத்தி

யோகம் பார்க்கப் போகிருள்? வாத்தியாராகத்தானே இருக்க முடியும்?' என்பது நாட்டு மக்களின் மனநிலே.

சிறுமி மாண்டிஸோரிக்கு உபாத்தியாயர் வேலேயில் துளியும் விருப்பமில்லே. 'என்ஜினீர்' (பொறி இயல் வல்லுநர்) வேலேதான் வசீகரமாகத் தோன்றியது.

தான் சேர்ந்து கல்வி பயின்ற சிறுவர் பள்ளியில் சிறுமி மாண்டிஸோரி ஒவ்வொரு பாடத்திலும் மிக்க தேர்ச்சி பெற்ருள். கணிதத்தில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ருள். எனவே, பல்கலேக் கழகத்தில் கணித மாணவியாகச் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று தீர் மானித்தாள்.

இந்தத் தீர்மானம் நிறைவேருதது இந்த வாழ்க் கைக் கதையின் அதிசயங்களில் ஒன்று. மனம் மாறிய தற்கு என்ன காரணம்? சிறுமி மாண்டிஸோரி மனமாற் றம் செய்து கொண்டாளென்று சொல்வதைக் காட்டி லும் இந்தச் சிறுமிக்காக மனம் மாற்றப்பட்டது என்று சொல்வதே பொருத்தமாகும்,

ஏன், எப்படி, எதற்காக மனமாற்றம் ஏற்பட்டது என்பது அந்த நாளில் சிறுமி மாண்டிஸோரிக்கு விளங்கவில்லே. எப்படி அது நேர்ந்தது என்பது குறித்துப் பின்னுளிலும் அன்னே மாண்டிஸோரி விளக்கம் ஒன்றும் தரவில்லே.

ஒரு தெரு வழியாக நடந்து போய்க்கொண்டிருந் தாள் சிறுமி மாண்டிஸோரி. அப்போது எதிரே ஒரு பெண், குழந்தையுடன் வந்துகொண்டிருந்தாள். அந்தக் குழந்தை கையில் ஒரு நீளமான, அகலமில் லாத, சிவப்புத் துண்டுத்தாள் ஒன்று இருந்தது.

குழந்தை அந்தத் தாளை நீள விட்டுப் பிடித்துக்கொண்டிருந்தது. சாதாரண நிகழ்ச்சிதான். ஆனால் இந்த அற்பத் தெருக் காட்சி சிறுமி மாண்டிஸோரியின் உள்ளத்திலே ஒரு புரட்சிகரமான மாறுதலை எப்படியோ விளைவித்துவிட்டது.

ஒரு நீண்ட, ஆழ்ந்த, பார்வையுடன் சிறுமியின் கண்கள் அந்தக் காட்சியை நோக்கின. சொல்லுக்கு எட்டாத பொருள்களைத் தன் உள்ளம் தேடிக்கொண்டிருப்பது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டதாம்.

மாண்டிஸோரியின் அகக் கண் நோக்கிய நெடு நோக்கிற்குக் குழந்தை தன் பிஞ்சுக் கைகளால் பற்றிக் கொண்டிருந்த நீண்ட சிவப்புத் தாள் ஓர் அறிகுறியாகக் கொள்ளத் தக்கதுதானே?

இத்தகைய சந்தர்ப்பங்கள் பலர் வாழ்க்கையிலும் நேரிடுவதுண்டு. இச் சந்தர்ப்பங்களை மாண்டிஸோரி ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் பெற்றிருந்ததாகச் சொல்ல வேண்டும்.

இச்சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்த்து மீண்டும் குறிப்பிடும்போது, அன்னை மாண்டிஸோரி ‘நமது அகவுலகில் அதிசய நிகழ்ச்சிகள் நிகழக்கூடும்; அவை நமக்குத் தெரியாத ஒரு லட்சியத்திற்கு வழி காட்டவும் கூடும்’ என்று கூறுவார். இந்தக் கூற்றைப் பொருள் பொதிந்த ஒரு சிறு கையசைப்பினால் உறுதிப்படுத்துவதும் உண்டு,

இத்தகைய சிறு நிகழ்ச்சிகளைப் பலரும் கவனிப்பதில்லை; பிரமாதப்படுத்துவதும் இல்லை. ஆனால் மாண்டிஸோரி போல் கருவிலே திருவுடைய மேதாவிகளின் மனப்பான்மை அசாதாரணமானதுதானே?

வாழ்க்கை என்ற நாணயத்திற்கு, தெரிந்த பக்கம் தெரியாத பக்கம் என்ற இரண்டு பக்கங்கள் உண்டு. நாணயத்தின் ஒரு பக்கத்தைப் பார்ப்பதே போதும் என்பது பெரும்பாலும் மக்களின் மனநிலை. மாண்டி ஸோரி போன்றவர்கள் பிறர் காணுத பக்கத்தையும் பார்க்கிருர்கள். இதை 'ஊடுருவிப் பார்வை செய்யும் உண்மையுளோர்' நிலை எனலாம்.

வாழ்க்கையின் ஸ்தூலமான பகுதியைத் தானே மக்கள் சாதாரணமாகப் பார்க்கிருர்கள்? இந்தப் பார்வையில் நாம் பல பொருள்களையும் தேர்ந்தெடுக்கி ரோம். வாழ்க்கையின் ஆழ்ந்த பகுதியிலோ, சில பலன்கள் நம்மைத் தேடி வருகின்றன; 'நாம் எப்படி வாழ்கிரோம், என்ன செய்கிரோம்?' என்பதை ஒட்டியே அந்தப் பலன்கள் சித்திக்கின்றன. இது மாண்டி ஸோரி தம் வாழ்க்கையில் உணர்ந்து கொண்ட உண்மைகளில் ஒன்று.

இந்தக் கொள்கைக்கும், 'விதி பெரிதா? மதி பெரிதா?' என்ற விவகாரத்திற்கும் தொடர்பு இல்லை. 'விதைக்குத் தகுந்த விளைவு'—அதாவது தினை விதைத் தால் தினையை அறுப்பது போல் வினையை விதைத்து வினையை அறுக்கிரோம்—என்ற கர்ம விதிக் கொள் கையை ஸாராம்சத்தில் அன்னை மாண்டிஸோரி ஒப்புக்கொண்டவர் என்றே கருதலாம்.

ஆகவே, இவர் தம் குழந்தைக் கல்விக் கொள்கை யால் உலகப் பிரசித்தி பெற்ற காலத்தில் அந்த ஸ்தா னத்தை ஒரு ரசாயன விஞ்ஞானி தன் சோதனையின் விளைவை ஒப்புக்கொள்வது போலவே ஒப்புக்கொள்ள லாஞர்.

தன் வாழ்க்கைத் திட்டத்தில் மாறுதல் திடீரென்று ஏற்பட்டதன் விளைவாக மாணவி மாண்டிஸோரி கணிதம் கற்க வேண்டும் என்ற விருப்பத்தை மாற்றிக் கொண்டு வைத்தியம் கற்க விரும்பினுள். ஆனுல் அந்த நாளில் பெண்கள் வைத்தியம் கற்கவும் அநுமதிக்கப் பெறவில்லை.

மாணவி மாண்டிஸோரி கல்வி இலாகாத் தலைவரான பாஸெலி (Baccelli) என்பவரைச் சந்தித்தாள். அவர் உலகப் புகழ்பெற்ற மருத்துவர்ாகவும் ரண வைத்தியராகவும் விளங்கியவர். கல்வி இலாகா விதி இடம் கொடாததால் இந்த மாணவிக்கு வைத்திய மாணவியாகப் பல்கலைக் கழகத்தில் இடம் கிடையாது என்று அவர் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்.

எனினும் இவர்கள் உரையாடலில் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. கைகுலுக்கி விடைபெற்றுக் கொள்ளும் போது மாணவி மாண்டிஸோரியும் ‘வைத்தியம்தான் நான் கற்கப்போகிறேன்’ என்று உறுதியாகச் சொல்லி விட்டாள். அப்படியே செய்தாள் என்பது இந்த வாழ்க்கைக் கதையில் ஒரு பிரசித்தமான செய்தி.

பதினுன்காம் வயதில் பத்தாவது வகுப்புப் படிப்பு முடித்துக்கொண்ட மாணவி வைத்தியக் கல்லூரியில் சேர ‘எம். மாண்டிஸோரி’ என்று கையொப்பமிட்டு விண்ணப்பம் செய்துகொண்டார். பெயரைக் கொண்டு ‘ஆணு, பெண்ணு?’ என்று தெரிந்துகொள்ளாமலே தகுதியைப் பார்த்த நிலையில் சேர்ந்துகொள்ளும்படி அநுமதி கிடைத்துவிட்டது.

வைத்தியக் கல்லூரியில் மாண்டிஸோரி சேர்ந்து படிப்பதைத் தந்தையாரும் விரும்பாது தடுத்துப்

பார்த்தார். அதற்காக மாணவி மாண்டிஸோரி மூன்று நாள் உண்ணுவிரதம் இருந்தாள். பிறகு தாய் தையல் வேலேசெய்து சம்பாதித்துத் தன் மகளின் கலாசாலேப் படிப்பிற்கு உதவ முன்வந்தாள். இதற்குமேல் தந்தை தடையொன்றும் செய்யாவிட்டாலும் மகளுடன் பேசா விரதம் மேற்கொண்டார்.

தந்தைக்கு அருமை மகள்மீது அபிமானத்திற்கு ஒரு சிறிதும் குறைவு இல்லே, பல்கலேக்கழகத்தில் துணேயாகப்போய் மகளேக் கொண்டுவிடுவார். மாணவி போகவேண்டியிருந்த வேறு இடங்களுக்கும் உடன் சென்று வருவார். எனினும் பேசுவதில்லே; கருத்து வேற்றுமையையும் போக்கிக் கொள்ளவில்லே. இது குறித்து மாணவி மாண்டிஸோரிக்குக் கோபம்தான்.

தாயின் அன்பும் அநுதாபமும் பூர்ணமாய்க் கிடைத்திருந்தன. அன்றுடப் பாடங்களேக் குறித்து மாலேவேளேகளில் தாயும் மகளும் சிந்தனே செய்து தெளிவு பெறுவதுண்டு.

கலாசாலேப் புத்தகங்கள் உருவிலும் கனத்திலும் பெரியன! அந்தச் சுமையை மாணவி மாண்டிஸோரி யால் தூக்கிக்கொண்டு போகமுடியவில்லே. மகளோடு கற்றுச் சிந்தித்துக் கல்விச்சுமையைக் குறைக்கமுயன்ற தாயன்பு புத்தகச் சுமையைக் குறைப்பதற்கும் ஒரு யுக்தி செய்தது. அதாவது, புத்தகக் கட்டமைப்பின் நூல்களே அறுத்துப் பகுதி பகுதியாகப் பிரித்து அன்ரு டத் தேவைக்கு இசையக் கொடுத்தனுப்பினுள். ஆண் டுக் கடைசியில் எல்லாப் பகுதிகளேயும் சேர்த்து முழுப் புத்தகம் ஆக்கிக் கொண்டதால் குறித்த புத்தகங்கள் சேதம் அடையவில்லே.

அந்தக் கலாசாலையில் மாணவி இவள் ஒருத்தி தான். தவருகப் பிறப்பித்த உத்தரவே தனக்கு உரிமை அளித்ததாக வாதாடிச் சேர்ந்துகொண்ட மாணவிதானே இவள்? பிற மாணுக்கர்கள் இவளை மதித்து வரவேற்கவும் இல்லை.

'எங்கள் கோட்டை இந்த வைத்தியத் தொழில்; இந்த அரணை உடைத்துக்கொண்டு ஒரு பெண் உட்புகுவது என்ன நியாயம்?' என்பது இறுமாப்புடன் மாணுக்கர்களின் உள்ளங்களில் எழுந்த வினுவாகும். இந்த மாணவியோ தனக்குள்ளே 'நீங்கள் பரிகசித்துக் கொண்டே யிருக்கலாம்; நானே முன்னேறிக்கொண்டே யிருப்பேன்!' என்று மெதுவாகச் சொல்லிக்கொள்வாள்.

வகுப்பறையில் இந்த மாணவிக்குப் பின்னே உட்கார்ந்திருந்த மாணுக்கன் ஒருவன் ஒருசமயம் இடையே உள்ள மேசைப் பக்கம் அசையும்படி தன் காலை இயக்கிக் கொண்டிருந்தான். இந்த அசைவுகளை மாண்டிஸோரி உணரவேண்டுமென்றே அவன் அப்படிச் செய்துகொண்டிருந்தான். இந்தத் தொந்தரவால் ஆசிரியர்களின் சொற்பொழிவைக் கூர்ந்து கவனிக்க இயலாது மாணவி மாண்டிஸோரி வருந்தினுள். இந்த நிலையைப் பொறுக்க முடியாமல் அந்த மாணவனை வெறுப்பும் சினமும் கலந்த ஒரு நோக்குடன் பார்த்தாள். அவன் உடனே தன் துஷ்டத்தனத்தை நிறுத்தி விட்டு, 'இன்னும் அப்படி ஒரு பார்வை பார்த்து விட்டால் நான் செத்தேபோவேன்!' என்று சொன்னுனும்.

வைத்தியக் கல்லூரி மாணவர்களில் ஒவ்வொரு மாணுக்கனும் பிற மாணுக்கர்களை நோக்கிக் குறித்த

பாடத்தைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவது வழக்கமாயிருந்தது. மாண்டிஸோரியின் முறை வந்ததும், சிங்கக்கூட்டில் சிங்கத்தைப் பழக்குகிறவன் முதல் முதல் பிரவேசிப்பதுபோன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது!

சிங்கத்தைப் பழக்கப் போகிறவன் கொஞ்சமும் அச்சம் இல்லாமல் கூட்டுக்குள் போகவேண்டும். பயந்தால் முயற்சி முற்றும் தோல்விதான்; அபாயம் நேர்ந்துவிடும். தைரியத்துடன்போய் வெற்றியடைய வேண்டியதுதான்; வேறு வழியே இல்லை. இதுவே மாண்டிஸோரியின் முதலாவது சொற்பொழிவின் வெற்றிமர்மம்.

வெற்றி உடனே கிடைத்துவிட்டது; நிகரற்ற வெற்றியாகவும் கிடைத்துவிட்டது. அப்படி அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட மாணவியின் வெற்றியை உற்சாகத்துடனும் கரகோஷங்களுடனும் பாராட்டினார்கள் இளைஞர்கள். இப்படி வஞ்சமில்லாமல் குதூகலம் அடைவது இளமையின் உரிமைதானே!

அந்தச் சொற்பொழிவுக்குத் தன் தந்தையாரை வருமாறு மாணவி மாண்டிஸோரி வேண்டிக் கொண்டிருந்தாள். அவரோ பதிலொன்றும் சொல்லவில்லை. சொற்பொழிவை முடித்துக்கொண்டு மாணுக்கர்களின் பாராட்டுக்கு இலக்காகித் தான் நின்றபோது அவர்களைப்போல் தந்தையும் மனமகிழ்ந்து பாராட்டுவதைக் கண்டதும் மாணவி ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். ஆம்; அவர் மறைவிலிருந்து கேட்டு மகிழ்ந்த வண்ணமாயிருந்தார்.

தம்மை மன்னிக்கவேண்டும் என்று கோரியது போல் தோன்றியது அவர் முகம். மகளுக்கோ ஒரு பெரிய நெஞ்சுச்சுமை இறங்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. பிறகு மாண்டிஸோரியின் வைத்தியத் தொழில் குறித்துத் தந்தையாரின் மனநிலை முற்றும் மாறிவிட்டது. அப்பால் தம் மகளைப்பற்றிய பெருமை யுணர்ச்சி உள்ளத்தில் விசேஷ இடம் பெற்றது. பதினெட்டாம் வயதில் மாண்டிஸோரி வைத்திய பரீட்சையில் தேறினாள்.

மாண்டிஸோரியின் மேதா விலாசத்தில் கடின உழைப்பிற்கு ஒரு விசேஷ ஸ்தானம் உண்டு. எல்லை யற்ற உழைப்பை ஏற்றுக்கொள்ள வல்ல எல்லை யற்ற ஆற்றலே மேதாவிலாசம் என்றுகூடச் சொல்லுகிறார் களே, இந்த மேதைக்கு இத்தகைய 'உழைப்பு-மேதா விலாச'மும் வாய்த்திருந்ததால், இந்த வாழ்க்கை ஒரு பொன்மலர் மணம் பெற்றது போலாகிவிட்டது.

மாணவி-வாழ்க்கை முடிந்து பல ஆண்டுகள் கழிந்தபின் மாண்டிஸோரியைப் பழைய தோழி ஒருத்தி சந்திக்க நேர்ந்தது. 'நீ இவ்வளவு பிரசித்தி பெற்றது எப்படியோ?' என்று கேட்டாள் அவள். டாக்டர் மாண்டிஸோரி பதில் சொல்லாமலே அவளை அமைதி யாக நோக்கினார்.

அவளே தொடர்ந்து பேசினாள். 'என் வீட்டுச் சாளரத்தின் வழியாக அங்கே விளக்கு எவ்வளவு நேரம் எரிந்துகொண்டிருந்தது என்பதை நான் எத் தனை தடவை பார்த்திருக்கிறேன்! அந்த நினைவு இப் போது வருகிறது' என்றாள். அதற்கும் டாக்டர் மாண்டிஸோரி விடைகூறாது மௌனமாகவே இருந்து

விட்டார். அந்தத் தோழி அந்தப் பழைய நினைவு களிலேயே தொடர்ந்து ஈடுபட்டுப் பேசிக்கொண்டே யிருந்தாள்.

மாண்டிஸோரின் குணதிசயத்திற்கு இந்த நிகழ்ச் சியும் ஒரு திறவுகோலாகும். பேச்சிலோ, பெருமை யடித்துக் கொள்வதிலோ ஆற்றலை விரயம் செய்து விடாமல்,

மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணு யினர்

என்ற இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாய் அமைந் திருப்பதல்லவா இவர் குணதிசயம்?

வைத்திய பரீட்சை முடிந்து பட்டமளிப்பு விழா வும் நடந்தபின் மாண்டிஸோரியின் தாயாருடைய நண்பர்கள் இவரிடம் வந்து, 'இனி நீ ஒரு டாக்டர் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அதற்கு இசை யப் பெருமிதத்துடன் நடந்துகொள்ள வேண்டும்' என்று சொன்னார்கள். ஆனால் மாண்டிஸோரி அத்த கைய பெருமையையோ பெருமிதத்தையோ மேற் கொள்ளவில்லை. 'நான் அப்படியெல்லாம் மாறப்போ வதில்லை' என்று தான் பதில் சொன்னார், குழந்தைக் கல்விமுறையை மாற்றி அமைக்கப் பிறந்த மாண்டிஸோரி.

மாண்டிஸோரியின் குழந்தையுள்ளம் ஸாராம் சத்தில் எத்தகைய வெற்றிப் பெருமிதத்தாலும் பிரதாபத்தாலும் மாறிப்போய்விடவில்லை. எனினும்

மாண்டிஸோரி புரட்சிகரமாக மாறிப் பிறந்து தான் குழந்தையுலகின் அன்னையானர்.

இந்த வாழ்க்கைக் கதையின் ஆரம்பத்தை ஒருவாறு தெரிந்துகொண்டோம். இனி இதன் வளர்ச்சி, மலர்ச்சி, கனிவு ஆகிய அம்சங்களையும் தெரிந்து கொண்டு இவரது ஞானக் குழந்தையுள்ளத்தை வளர்ந்த நிலையிலும் முதிர்ந்த நிலையிலும் கண்டு கொள்ள முயல்வோம்.

---

8. வளரும் கதை

வைத்தியத் தொழிலிலும் ரண வைத்தியத் தொழிலிலும் மாண்டிஸோரி பேரும் புகழும் பெற்ருர். இளந் தொழிலாளி ஒருவன் கொடியதொரு நரம்புநோயால் வருந்தினுன். அந்த நோயை இன்னதென்று திட்டமாய்க் கண்டுபிடித்து அதைக் குணப்படுத்திவிட்டார் மாண்டிஸோரி. அதற்காக அவன் இவரிடம் பெரு நன்றியுள்ளவனுக இருந்தான். நெடுங்காலம் இவர் செய்த உதவியை அவன் மறக்கவில்லை.

வைத்திய அறிவுடனும் திறனுடனும் இவரிடம் மானுடப் பண்பின் பயனுகிய இரக்கமும் அதிகமாய்க் காணப்பட்டது. பார்ஸிலோனு என்னும் இடத்தில் தெருவிலே ஒரு கிழவனைக் கண்ணுற்றதும், 'அவன் அவஸ்தைப்படுகிருன்; அதுகுறித்து விசாரித்துப் பாருங்கள்' என்று இவர் அருகிலிருந்த ஒருவரிடம் கூறினுர். விசாரித்ததில் அந்தக் கிழவன் பரம ஏழையென்றும், பெருந் துயரத்தில் இருக்கிருனென்றும் தெரியவந்தது. அவனுக்கு ஒழுங்காக உதவி செய்ய வேண்டுமென்று அந்த இடத்திலேயே சங்கற்பம் செய்துகொண்டார்.

பிரசித்தமான டால்ஸ்டாய் - கதைகளில் மூன்று முக்கிய வினுக்களைக் குறித்துச் சர்ச்சை செய்கிறது ஒரு கதை. (1) எதைச் செய்வது? (2) எப்போது செய்வது? (3) யாருக்குச் செய்வது?—என்ற இந்த மூன்று வினுக்கள் எவர் உள்ளத்திலும் எழக்கூடியவை. இந்

தக் கேள்விகளுக்கு டால்ஸ்டாய் கதையில் காணும் விடையைத்தான் மாண்டிஸோரியின் வாழ்க்கைக் கதையில் காண்கிரும்.

இவர் தெருவிலே கண்ட கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று துணிந்தார், கண்ட அக் கணமே இத்தீர்மானத்தைமேற்கொண்டார். எவனிடத் தில் கஷ்டத்தைக் கண்டாரோ அவனுக்கு உதவிபுரிவ தென்று முடிவுகட்டினர். டால்ஸ்டாயின் லட்சியக் கதையிலும் இதேபாடம்தான். டால்ஸ்டாய்க்கு அந்தக் கதையைச் சொன்ன மானுடப்பண்பு தானே மாண்டி ஸோரிக்கு இந்தச் செயலைத் தூண்டிவிட்டது?

மருத்துவன் பணிவேறு, மருத்துவப்பணியாளின் பணிவேறு என்ற பிரிவினைக் கருத்து இவருக்கு உடன் பாடு அன்று. இரண்டு கடமைகளையும் பிரித்து வரை யறுப்பது கஷ்டமென்பது இவரது அநுபவ ஞானம். அபாயகரமான நோய்களில் சின்னஞ்சிறு செயல்களும் முக்கியமாகக் கருதப்படும்போது, வைத்தியரே பணி யாளாகப் பணிபுரிய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படத் தானே செய்யும்?

ஒரு சிறுமி கபவாதச் சுரத்தால் வருந்தினள். ஏழைச் சிறுமி அவள்; நோயின் நிலையோ அபாய நிலை. டாக்டர் மாண்டிஸோரி ஏறக்குறையப் பகற் பொழுதை அங்கேயே கழித்தார். படுக்கை விரித்தல், உணவு தயாரித்து ஊட்டுதல் முதலான பணிகளையும் தாமே மேற்கொண்டார். 'இருப்பதா? இறப்பதா?' என்ற அந்த இறுதிப் போராட்டத்திலே ஒவ்வொரு சிறு செயலும் மிகவும் முக்கியமானது தானே? சிறுமி பிழைத்துக்கொண்டாள்.

சுமார் ஐந்து வயதுதானிருக்கும் அந்த இரண்டு குழந்தைகளுக்கும். அக்குழந்தைகள் தாயுடன் வந்து கொண்டிருந்தனர். டாக்டர் மாண்டிஸோரியைத் தெருவில் கண்டதும் அந்தத் தாய் குழந்தைகளை நோக்கி, 'ஓடிப்போய் அவருக்கு வணக்கம் செலுத்துங்கள். உங்களுக்கு உயிர்ப்பிச்சை யிட்டவர் அவர்!' என்றாள்.

எப்படி? ஏன்?

அந்த இரட்டைச் சிறுமிகள் பிறந்தபோது 'இக்குழந்தைகள் செத்துப் பிறந்தனவோ?' என்றே தோன்றினவாம். 'டாக்டர் மாண்டிஸோரியை வரவழைத்துப் பார்ப்போம்; என்ன செய்ய முடியும் என்பதை அவர் அறிவார்' என்றாள் தாய். தந்தையோ 'பயன் என்ன? செத்துப்போய்விட்ட அல்லது செத்துக்கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு யார் என்ன செய்யமுடியும்?' என்று சொன்னான். எனினும் மனைவியின் பிடிவாதத்திற்குக் கட்டுப்பட்டவனாய் டாக்டர் மாண்டிஸோரிக்குச் செய்தி தெரிவித்தான். இவரும் உடனே போய் மருத்துவப் பணியும் பணியாளின் பணியும் ஒருங்கே புரிந்து குழந்தைகளைக் காப்பாற்றிவிட்டார்.

நரம்பு வியாதிகளும் மனநோய்களும் இவரது பரிசீலனைகளுக்கு விசேஷ இலக்காகிவிட்டன. இந்த நிலையில்தான் மனவளர்ச்சி குன்றிப்போயிருந்த குழந்தைகளைச் சோதித்துப் பார்க்க வேண்டிய வாய்ப்பும் கிடைத்தது. குழந்தை யுலகின் தொடர்பு இவ்விதமாகத் தொடங்கியதுதான்.

அறை ஒன்றில் பெஞ்சுகளில் சில குழந்தைகள் உட்கார்ந்திருந்தனர். விளையாட்டுச் சாமான்களோ, வேறு கருவிகளோ அங்கே இல்லை: இந்தக் குழந்தைகளைக் கவனித்து வந்தாள் ஒரு பெண். அவள் டாக்டர் மாண்டிஸோரியிடம், 'இந்தப் பிள்ளைகளுக்குத்தான் என்ன பேராசை! அழுக்குப் பிடித்தவர்கள் இந்தப் பேதைப் பிள்ளைகள்' என்று சொன்னாள்.

இப்படி அறிமுகப்படுத்தப் பெற்ற பிள்ளைகளை உற்றுநோக்கிவிட்டு அந்தப் பெண்ணைப் பார்த்து மாண்டிஸோரி, 'ஏன் அப்படிச் சொல்லுகிறாயம்மா?' என்று கேட்டார். அதற்கு அவள், 'உணவு கொண்ட பின் இந்தக் குழந்தைகள் தரையிலே கிடந்து புரள்வதும், கீழே கிடக்கும் ரொட்டித் துண்டுகளைப் பொறுக்கி வாய்க்குள் போட்டுக் கொள்வதுமாயிருக்கின்றன' என்று பதில் சொன்னாள்.

மாண்டிஸோரி சுற்றுமுற்றும் பார்த்தார். குழந்தைகள் பொழுது போக்குவதற்குரிய கருவியோ சாதனமோ ஒன்றும் அங்கே காணப்படவில்லை; அந்த நிலையில் கீழே கிடந்த ரொட்டித் துண்டுகளை வாய்க்குள் திணித்துக் கொள்வது குழந்தைகளின் இயல்புதானே என்று நினைத்தார். மேலும் இக் குழந்தைகள் சாதாரணக் குழந்தைகளுமில்லை; மனவளர்ச்சி குன்றிப்போன குழந்தைகள். இவர்கள் வேறு எவ்விதமாக நடந்து கொண்டிருக்க முடியும்?

இந்த அநாதக் குழந்தைகளுக்கு உதவி செய்ய விரும்பினார் மாண்டிஸோரி. பாரிஸ் மா நகரத்திற்குப் போனார். இடார்டு, ஸெகய்ன் என்ற விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இம்மாதிரித் துறைகளில் செய்

திருந்த ஆராய்ச்சி விவரங்களை நன்கு கற்ருர். இத் தாலிக்குத் திரும்பிவந்து மனவளர்ச்சி குன்றிப் போயிருந்த அக் குழந்தைகளுடன் ஒவ்வொரு நாளும் நீண்ட நேரம் செலவிடத் தொடங்கினர். இந்தப் பகீரத உழைப்பு நற்பயன் அளித்தது.

மாண்டிஸோரி இக் குழந்தைகளுக்குக் கல்வி கற் பித்தார். மற்றப் பையன்களுடன்—அதாவது, சாதார ணப் பிள்ளைகளுடன்—பரீட்சை மன்றத்திலும் இப் பிள்ளைகள் அமர்ந்து வெற்றி பெற்ருர்கள். மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் இவர்கள் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும், பொது ஜனங்களுக்கு ஒரே அதி சயமாகி விட்டது. ஏதோ ஒரு அற்புதம் நிகழ்ந்து விட்ட தென்றே பலரும் எண்ணினர்கள். மாண்டி ஸோரியோ இந்த வெற்றி மாலையை அணிந்து கொண்டு சும்மா இருந்துவிடவில்லை.

மேலும் மேலும் இத் துறையில் ஆராய்ச்சி செய்து கொண்டே போக விரும்பினர். குழந்தைகளுக்குக் கற் பித்தார் என்று சொல்வதைக் காட்டிலும் குழந்தை களோடு கற்ருர் இவர் என்று சொல்வதே பொருத்த மாகும். அதுவரை அறியப்பட்டிராத ஒரு சக்தியைப் புதுமையாகக் கண்டு பிடிப்பது போலவே தோன்றியது இவருக்கு.

தம்முடைய சில சொந்தக் கொள்கைகளுக்கு இணங்க இவர் குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்து அவர்களைத் திருத்திவிட முடியுமென்று கருதவில்லை. விஞ்ஞானிகள் ஓர் இயற்கைச் சக்தியை அறிந்து கொண்டதும் அதை மக்கட் பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வழியைக் கண்டுபிடிக்க முயல்வதுபோலவே

இந்த அம்மையாரும் இந்தத் துறையில் சோதனைகள் செய்து பார்த்திருக்கிறார்.

ஒரு புதிய சக்தியை மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளிடம் கண்டு கொண்டபின் சாதாரணக் குழந்தைகள் விஷயத்திலும் இந்தச் சக்தியைப் பயன்படுத்திக்கொள்ளும் வழியைக் கண்டு பிடிப்பதற்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்து விட்டார் டாக்டர் மாண்டிஸோரி.

பாரிஸ் நகரில் பலவகை உபகரணங்களைக கொண்டு பிள்ளைகளின் கவனத்தைக் கவர்ந்து மூளைக் கோளாறுகளை நிவர்த்தி செய்தது கண்டு, அதே கருவிகளைத் தம்முடைய சொந்தச் செலவில் தயாரித்துக் கொண்டார். இந்த உபகரணங்களை மனவளர்ச்சி குன்றிப் போயிருந்த குழந்தைகள் எப்படி உபயோகிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக மாண்டிஸோரி தம்முடைய அருமையான நேரத்தையும் தாராளமாகச் செலவு செய்யலானார். தமது மனோ சக்தியையும் இத்துறையில் பெரிதும் ஈடுபடச் செய்தார்.

சாதாரணப் பள்ளிக்கூடங்களில் சாதாரணப் பிள்ளைகள் உபாத்தியாயர்கள் சொன்னதைத்தான் செய்கிறார்கள்; கற்பித்ததைத்தான் கற்றுக் கொள்கிறார்கள். உருளைப்பெட்டி (Cylindrical Insets) போன்ற உபகரணங்களைத் தாங்களே பொருத்திவைக்க முயன்று, அது அதற்கு உரிய துவாரத்தில் அந்த அந்த உருளையைச் சரியாக வைக்கும் முயற்சியில் மன வளர்ச்சி குன்றிப் போயிருந்த குழந்தைகளும் வெற்றி பெற்றதும், முதல் முதல் மாண்டிஸோரிக்கு ஆச்சரியமாகவே

யிருந்தது. உபாத்தியாயரின் தூண்டுதலின்றி, கட்டாய போதனையின்றி, ஒரு குழந்தை செயல்-திறனால் வசீகரிக்கப் பெற்றுச் சொந்த முயற்சியால் வெற்றி பெறக்கூடும் என்பதை நேரில் கண்டு கண்டுதான் மாண்டிஸோரியின் அதிசய உணர்ச்சி விஞ்ஞான ரீதியில் இத்துறையிலே மேலும் மேலும் ஈடுபடும் அதிசய ஆற்றலாகப் பரிணமித்தது.

'சிறு குழந்தைகள் இந்த உபகரணங்களைக் கொண்டு என்ன கற்றுக்கொண்டு விட முடியும்?' என்ற அவ நம்பிக்கையோடு கேட்டார் ஒரு தகப்பனார் ஒரு சமயம். இது குறித்து அவர் விவகரித்துக்கொண்டிருக்கும் போதே, அவருடன் வந்திருந்த அவரது மூன்று வயதுக் குழந்தை பலவகை உருளைப் பெட்டிகளையும் எடுத்துக்கொண்டு போய் ஒரு சிறு மேசையில் உட்கார்ந்து கொண்டு அவற்றைப் பொருத்தி வைப்பதில் குதூகலமாய் ஈடுபட்டிருந்தாள். தகப்பனார் வீட்டுக்குப் போகும் சமயத்தில், மேற்கொண்டிருந்த முயற்சியைக் குழந்தை கைவிடுமாறு செய்வது சிரமமாகத் தானிருந்தது. இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் குழந்தைகளின் முகப் பொலிவும், அந்தப் பிஞ்சு முகங்களில் பிரதிபலிக்கும் மகிழ்ச்சியும் ஆர்வமும் மாண்டிஸோரியின் நம்பிக்கையைத் தூண்டி ஒரு புதிய உலகத்தைச் சுட்டிக் காட்டின.

மேலே சொன்ன முயற்சிகளில் ஈடுபாடு குழந்தையிடம் ஞாபக சக்தியையும் ஒருமை யுள்ளத்தையும் ஏற்படுத்தின என்பதை மாண்டிஸோரி கண்டு கொண்டார். இத்தகைய முயற்சிகளைக் குழந்தை தானே மேற் கொள்வதையும், தானே நிறுத்தி விடுவதையும்

நன்கு கவனித்தார். இத்தகைய முயற்சிகளால் களைப்பை அறியாத களிப்பே குழந்தை யுள்ளத்தில் இடம் பெறுவதையும் கண்டு கொண்டார். இத்தகைய முயற்சிகள் குழந்தைகளுக்கு உணவு போல் ஊட்டம் தருகின்றன.

வெளியேயிருந்து குழந்தை பெறுகின்ற சக்தி யல்ல இது. உள்ளுக்குள்ளே யிருந்து பொங்கிவரும் ஆற்றல்தான். இந்த ஆற்றல், தானே பொங்கித் தானே அடங்குகிறது. 'ஏன் அடங்குகிறது?' என்று தான் சொல்ல முடியுமா? இந்த முயற்சியால் குழந்தை பெறும் பேறு என்ன? 'நமக்குத் தெரியாது; தெரிய வேண்டிய அவசியமும் இல்லை' என்றூர் மாண்டிஸோரி ஒரு சமயம். வாழ்க்கை முழுவதும் விளங்கி விடுகிறதா? உள நூல்-உண்மைகள் தாம் அப்படியே விளங்கி விடுகின்றனவா? குழந்தை-மனேதத்துவமும் இப் படித் தானே என்பது மாண்டிஸோரியின் மன நிலை.

இவ்விதமாக இவர் வாழ்க்கை வளர்ந்து வரும் போது 1908-ம் வருஷம் அக்டோபர் மாதம் குழந்தை இல்லம் ஒன்று ஆறு வயதுக்கு உட்பட்ட நாற்பத்தாறு குழந்தைகளுடன் மிலான் நகரில் ஆரம்பமாயிற்று. இதற்கு முன்பே 1906-ம் வருஷம் முதலாவது குழந்தை இல்லம் ரோமாபுரியில் தொடங்கப் பெற்றது. 1909-ல் முதலாவது மாண்டிஸோரி சொற்பொழிவு-வரிசை நடைபெற்றது.

இத்தாலி நாட்டுப் பிரபு ஒருவரது அழைப்பிற்கு இணங்கி அவரது விருந்தாளியாகி அந்த மாளிகை யிலேயே சுமார் நூறு மாணுக்கர்களுக்கு இந்தச் சொற் பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. இவர்களில் பெரும்

பாலார் உபாத்தியாயர்கள். பலர் கலாசாலைப் பட்டம் பெற்ற பெண்கள்.

இந்தச் சொற்பொழிவுகளை அந்தப் பிரபுவும் அவர் மனைவியும் ஒழுங்காகக் கேட்டு வந்தார்கள். அந்தப் பிரதேசத்துக் கல்வி அதிகாரிகளுக்கும் இம் முயற்சிகளில் ஓரளவு விருப்பம் உண்டாயிற்று. ஒரு மதச் சடங்குபோல் நடைபெற்றது முதலாவது சொற் பொழிவு. பிறகு அதை அச்சிட்டுப் பரப்பினார்கள். சிறுவர் சிறுமியரில் சிலரும் அங்கே இடம் பெற்றனர். தம்முடைய சில உபகரணங்களின் உபயோகத்தை இக்குழந்தைகள் வாயிலாகக் காட்ட விரும்பினார் மாண்டிஸோரி.

மாண்டிஸோரியின் கருத்துக்களை உபாத்தியாயர் கள் மனமுவந்து வரவேற்றதாகவே தோன்றியது. இந்தப் புதுக்கருத்துக்களில் அவர்களுக்குள்ள நம்பிக் கையும் புலனாயிற்று. அந்த நாளிலே பரவியிருந்த கல்விக் கொள்கைகளுக்கும், புத்தகங்களில் காணப்பட்ட கருத்துக்களுக்கும் மாறுபட்ட கருத்துக்களை மாண்டி ஸோரி வெளியிட்ட போதிலும், மகிழ்ச்சியும் ஆரோக்கி யமும் தருகிற சுத்தமான, உயிரூட்டும், காற்றைச் சுவாசிப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது கேட்ட வர்களுக்கெல்லாம்.

கேட்டவர்களும் சோர்வில்லாமல், களைப்பில்லா மல் கேட்டார்கள். சொற்பொழிவாற்றிய மாண்டிஸோரி யும் சோர்வின்றி, ஓய்வு கொள்ள வேண்டும் என்ற நினைவும் இன்றி, இத்துறையில் உழைத்து வந்தார். தமது அதிதி போதுமான ஓய்வு கொள்ளவேண்டும் என்ற கவலை அந்தச் சீமாட்டிக்குத்தான் இருந்தது.

அந்த அம்மாள் சில சமயங்களில் மாண்டிஸோரியின் அறையிலிருந்து புத்தகங்களையெல்லாம் அப்புறப் படுத்தி விடுவாள். அறையையும் இருண்ட நிலையில் வைத்து மாண்டிஸோரியை நோக்கி, 'இப்போது நீங்கள் நன்ருக ஓய்வு கொள்ள முடியும்' என்று கூறுவாள். ஆனால் மாண்டிஸோரியின் நிலை என்ன?

இருண்ட அறையில் ஒன்றும் செய்யாமலிருக்கும் நிலையில் மாண்டிஸோரியால் ஓய்வு கொள்ள முடியாது என்பதை அந்த அம்மாள் தெரிந்துகொள்ளவில்லை. வைத்திய நிபுணர்களும் இதுகுறித்த மாண்டிஸோரியின் மனநிலையை உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டன ரென்றே சொல்லலாம்.

பார்ஸிலோனு நகரில் ஒருசமயம் ஒரு வைத்திய நிபுணர் மாண்டிஸோரி பூர்ணமாக ஓய்வு கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தினுர். 'உங்கள் தோட்டத்தில் தனிமையாக ஒரு சாய்வு நாற்காலியில் சுகமாகச் சாய்ந்துகொண்டு, 'முழு ஓய்வுகொள்ளுங்கள்' என்ருர் வைத்தியர். இக் கட்டளையின் முற்பகுதி மாண்டிஸோரிக்குப் பிடித்தமாகவே யிருந்தது. ஆனால் பிற்பகுதியை இவரால் அநுஷ்டிக்க முடியவில்லை.

தோட்டத்தில் தான் இருந்தார்; சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார்; தனிமையாகத்தான் இருந்தார். ஆனால் சும்மா இருந்து சுகம் பெறவில்லை. தம் கல்வி முறையின் ஒரு முக்கிய அம்சம் குறித்து அழகான கையெழுத்தில் சுவைமிக்க வசனத்தில் ஒரு புத்தகமே எழுதி முடித்துவிட்டார். சும்மா இருந்து சுகம்பெருதவர் தம் இதயத்தைக் கவர்ந்த விஷயம் குறித்து எழுதி ஆரோக்கியம் பெற்றுவிட்டார்!

'அப்படியானால் நீங்கள் ஓய்வே கொள்ளவில்லை! என்றாள் தோழி ஒருத்தி. மாண்டிஸோரி புன்னகை புரிந்தவண்ணம் 'மூச்சுவிடாமலிருப்பதுதான் மூச்சுப் பைக்கு ஓய்வா?' என்று ஒரு வினவையே விடையாக அளித்தார். பிறகு 'ஓய்வுகொள்வது எப்படி?' என்பது குறித்து விளக்கிக் கூறினார்.

'நிர்ப்பந்தமாகவோ கட்டாயக் கடமையாகவோ ஒன்றைச் செய்யாமல் தன்னிச்சைக்கு இசைய முயற்சியில் ஒருவன் தன்னை இழந்துவிடும்போது, ஓய்வு தானாகவே சித்திக்கிறது; அந்த முயற்சிக்கு உரிய சரியான நிலைமைகளும் வாய்த்திருக்கவேண்டும்' என்று சொல்லி ஓய்வின் அரிய இரகசியம் ஒன்றை அருமையாக வெளியிட்டார்.

பிரபுவின் மாளிகையில் ஒருவகைப் பட்டமளிப்பு விழாவுடன் முதலாவது மாண்டிஸோரி - சொற்பொழிவு வரிசை முடிவுபெற்றது. மாண்டிஸோரியின் வாழ்க்கைத் தொடர் கதையில், அழகிய குன்றுகள் சூழ்ந்த இம்மாளிகையில் நடைபெற்ற இம்முதலாவது சொற்பொழிவு-வரிசைகளுக்கு ஒரு சிறப்பான ஸ்தானம் உரியதாகும்.

கிறிஸ்தவப் பெருந்தொண்டரும், 'வறுமையின் காதலர்' என்ற நிலையில் தமது ஆத்ம சக்தியை உலகெலாம் பரவச் செய்தவருமான பிரான்ஸிஸ் முனிவர் வாழ்ந்த அஸிஸி (Assisi) என்ற திவ்ய ஸ்தலத்திற்குச் சமீபத்தில், இயற்கையழகுகளுக்குப் பஞ்சமில்லாத பிரதேசத்தில் நடைபெற்று முடிவுற்றது முதலாவது மாண்டிஸோரி - சொற்பொழிவு வரிசை.

அஸிஸி முனிவரைப் போன்ற பேரருளாளர்களின் வாழ்க்கையொளிதான் அந்தகாரத்திலே அழகியதொரு கைவிளக்கைப்போல் நமக்கெல்லாம் நம்பிக்கையொளி காட்டுகிறது. அந்த அருள் அற்பப் பிராணிகளேயும் கைவிடவில்லையாம்.

ஒரு குழந்தை-முயல் வேடர்களால் வெருட்டப் பட்டுக் காட்டிலே தனிமையும் தாமுமாக இருந்த பிரான்ஸிஸ் முனிவர்பெருமானிடம் ஓடிப்போய்ச் சரணமடைந்ததாம். அவர் மடிமீது தாவி ஏறி அவர் வாய்க்கருகே தன் சிறுவாய் திறந்து, 'ஐயா, பாதுகாத்தருளவேணும்' என்றுசொல்லாமல் சொல்லி விட்டதாம்.

இம்முனிவர் பெருமானது ஜீவகாருண்ய பாஷை பறவைகளுக்கும் மீன்களுக்கும் புரிந்ததால் அந்தப் பிராணிகளெல்லாம் இவருக்குக் கீழ்ப்படிந்து ஒழுகின வாம். அத்தகைய அருளாளர் மனிதக் குழந்தைகளேப் புறக்கணித்திருப்பாரா?

அந்த அருள்மழையின் ஒரு பருவகாலத் தொடர்ச்சிபோலத் தோன்றியது, அஸிஸிக்கு அருகே மாண்டிஸோரி நிகழ்த்திய குழந்தைப்பணியும், இவரது அன்பர்களின் கண்களிலே.

வளரும் வாழ்க்கையெல்லாம், மாண்டிஸோரி குழந் தைக் கல்வித்துறையில் நல்ல நல்ல விதைகளே விதைத்த வண்ணமாயிருந்தார். 'குழந்தை இல்லம் என்பது கற்பிக்கும் இடம் அல்ல; கற்கும் இடம்தான்' என்பதை வற்புறுத்திய வண்ணமாயிருந்தார். குழந் தை தன்னிச்சை கொண்டு ஒழுங்காக முயற்சி செய்து தானே கற்றுக்கொள்ளும் இடம்தான் குழந்தை இல்

லம், அதற்குரிய சிறந்த சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதுதான் முதியவர் கடமை யென்பதை உபதேசத்தாலும், தமது ஒழுக்கத்தாலும் மெய்ப்பித்துக் காட்டினர்.

'சுதந்திரமாக உள்ளே வரலாம், சுதந்திரமாக முயன்று கற்றுக்கொள்ளலாம்' என்ற நிலையில் குழந்தை இல்லங்களையும் பள்ளிகளையும் அமைக்கும்போது, குழந்தை-முயற்சி தானே தன்னை ஒழுங்கு செய்து கொள்கிறது. சாதாரணப் பள்ளிச்சாலைகளில் நடைபெறும் இடைவிடாத போதனையால் விசேஷ நற்பயன் ஒன்றும் விளைந்து விடுவதில்லை. உபாத்தியாயரின் முயற்சி ஆதிக்கம் செலுத்துவதற்கு மாருகக் குழந்தைகளின் முயற்சியே ஆதிக்கம் செலுத்தவேண்டும். மேலும் மேலும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்த வாழ்க்கை யநுபவம் மாண்டிஸோரிக்குக் கற்பித்த உண்மை இது.

தம் நெஞ்சு அறிந்து இன்புற்ற இந்த உண்மையை இவர் அப்படியே பிறருக்கும் வாரிவழங்கினர்,

தாம் இன்புறுவ(து) உல(கு) இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

என்ற தமிழர் பொதுமறைக்கு இசைய உருவாகி வந்தது இவர் வாழ்க்கைக் கதை.

குழந்தைக்கு உணவு கொடுப்பது போன்றது தான் அறிவை ஊட்டிக்கொள்ள வசதி அளிப்பதும். கல்வியென்பது அறிவுக்கு உணவு. வாயில் உணவைப் போட்டுக்கொண்டதும் உடம்பு ஊட்டம் பெற்று விடுவதில்லை. உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்கும்

போது நல்லுணவோ, விருந்தோ அளிப்பதாகக் கருதினுலும், அந்த உணவிலிருந்து குழந்தை ஊட்டம் பெற்று வளர்வதற்குப் பள்ளிக்கூடத்துக் காலஅட்டவணையில் நேரம்தான் எங்கே?

பாடத்திற்குப் பின் பாடம் வந்து மோதுகிறது. எல்லாம் கூடையைக் காய்கறிகளால் நிரப்புவது போலத் தான். குழந்தை வெறும் கூடை இல்லையே; அறிவில் வளர வேண்டுமே. சொல்லிக் கொடுப்பதைக் காட்டிலும் கற்றுக்கொள்ள அதிக அவ்காசம் கொடுக்க வேண்டாமா? ஆனுல் இந்தச் சாதாரண விஷயம் குறித்து முதல் முதல் சிந்தித்தவர் டாக்டர் மாண்டிஸோரியே ஆவர்.

எந்தப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரும் குழந்தையுடன் கற்க முடியுமோ, அதுவே சரியான குழந்தைப் பள்ளியாகும். ஒரே பாடத் திட்டத்திற்கு இணங்க ஐம்பது அல்லது அறுபது பிள்ளைகளுக்குக் கற்பித்து எல்லாரும் ஒரு பட்டாளம் போல் ஒரே மாதிரியாக அடி வைத்துச் செல்லுமாறு பழக்கி வைப்பதில், அறிவுவளர்ச்சி பிள்ளைகளுக்கும் கிடைப்பதில்லை. இதை மாண்டிஸோரி பலரும் அறிந்து கொள்ளுமாறு தெளிவுபடுத்தினுர்.

எத்தனையோ சுதந்திரப் போராட்டங்கள் உலகில் நடைபெற்றிருக்கின்றன, பேச்சுச் சுதந்திரத்திற்காக, வழிபாட்டுச் சுதந்திரத்திற்காக, அறிவுச் சுதந்திரத்திற்காக, பொருளாதாரச் சுதந்திரத்திற்காக, அரசியல் சுதந்திரத்திற்காக என்றெல்லாம் போராட்டங்கள். குழந்தைக்கும் சுதந்திரம் வேண்டுமென்று போராடியவர் மாண்டிஸோரியே.

காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் போல் மாண்டிஸோரியும் அன்புப் போராட்டம் நடத்தினரென்று தான் சொல்ல வேண்டும். அன்பும் அறிவும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே என்பது மாண்டிஸோரியின் கருத்து.

9. மலர்ச்சியும் கனிவும்

1,913-ம் ஆண்டு ஜனவரி மாதம் டாக்டர் மாண்டிஸோரி உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்தவர்களுக்குத் தமது கல்வி முறையை விளக்கும் தோரணையில் முதலாவது சொற்பொழிவு-வரிசையை ஆரம்பித்தார். ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பிக்கப் போகும் தருணத்தில் மாண்டிஸோரி-கல்வி முறையின் உலகப் பிரசாரமும் ஆரம்பமானது. இரண்டு முரணான நிகழ்ச்சிகளின் சேராச் சேர்த்தி தான்! சாதாரணமாக எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களில் அக்காலத்துப் பெரு நிகழ்ச்சியாகக் குறிக்கப்படுவது உலகப் பெரும்போர் தான். மாண்டிஸோரியின் கல்விப் பிரசார நிகழ்ச்சியைச் சரித்திரப் புத்தகங்களில் காண்பதும் அருமை. புது முறையில் எழுத வேண்டிய வரலாற்றுப் புத்தகங்களில், அழிவு-நிகழ்ச்சிகளைக் காட்டிலும் ஆக்க நிகழ்ச்சிகளுக்கே முக்கிய ஸ்தானம் அளிக்கும்போது, மாண்டிஸோரி தமது கல்விக் கொள்கைகளை உலகறியச் சொன்ன இந்த மங்கள நிகழ்ச்சி வற்புறுத்தப்படும் என்று நம்பலாம்.

மாண்டிஸோரி தம் தாய்மொழியாகிய இத்தாலி பாஷையில் தான் பேசினர். அமெரிக்கப் பிரதிநிதி

ஒருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மாண்டி ஸோரி சில வாக்கியங்களைச் சொல்லி நிறுத்திய பின்பே மொழிபெயர்ப்பாளர் இங்கிலீஷில் திருப்பிச் சொல்வார். இந்த ஏற்பாட்டினுல் மாணுக்கர்களுக்கு அம்மையார் சொல்வதைக் குறித்துக் கொள்ள அவ காசம் கிடைத்தது. இத்தாலி மொழியை அறியாதவர் களும் மாண்டிஸோரியின் தெளிவான, இசைமயமான, குரலின் போக்கிலிருந்தே இவரது உள்ளக் கருத்தை உணர்ந்து கொள்வாராயினர்.

தமது கல்வித் திட்டத்திற்கு ஏற்ற பல வேறு உப கரணங்களையும் இக் காலத்திலேதான் செய்து முடித் தார். குழந்தைகளுக்குப் பயன்படும் புத்தகங்களுக்கு உரிய காகிதமும் அச்சும் குறைந்த செலவில் அழகில்லாமல் தயாரிக்கப்படுவதை வெளிப்படை யாக முதல் முதல் இவர் உலகறியக் கண்டித்த காலமும் அதுதான். உபகரணங்கள் விளையாட்டுப் பொம்மை களைப் போல் இருக்க வேண்டியதில்லை என்று இவர் அப்போது கண்டு காட்டினுர்.

உபகரணங்கள் விளையாட்டைத் தூண்டுவதற்கு மாருகச் சரியான வேலை செய்யத் தூண்டுவனவாக அமைந்தன; சிதறிப் போகும் கருத்தை ஒருமிக்கச் செய் வதற்கும் உதவின. இந்த உபகரணங்கள் குழந்தை கள் தாமே அறிவில் வளர்வதற்குத் தக்க சாதனம் என் பதையும் மாண்டிஸோரி கண்டு காட்டினுர். ஆக்க வேலைக்கு உரிய பயிற்சியை இந்த உபகரணங்கள் அளித்தன என்பதையும் வற்புறுத்தினுர்.

இந்தச் சொற்பொழிவுகளைக் கேட்க நூறு பேர் பல தேசங்களிலிருந்தும் வந்திருந்தனர். அடுத்த

ஸர்வ தேசச் சொற்பொழிவு வரிசை ஆரம்பமாவதற்குள் மாண்டிஸோரியின் கல்விமுறைக் கருத்துக்கள் ஒருவாறு உலகமெங்கும் பரவி விட்டன.

நியூயார்க் நகரிலிருந்து ஒரு செல்வர் வந்து இவர் கருத்துக்களுக்கு இணங்க ஒரு கல்விச்சாலை நிர்மாணம் செய்யத் தாம் முன்வந்திருப்பதாகத் தெரிவித்தார். மாண்டிஸோரி முதல் முதல் மகிழ்ச்சியடைந்தார். கடைசியாக அந்த அமெரிக்கச் செல்வருடைய ஆதிக்கத்தில் தமது சுதந்திரத்தை இழக்க மறுத்து விட்டார்.

தமது கல்விக் கொள்கைகளைத் தெரிந்து கொள்ள வந்த மாணுக்கர்களிடம் இவர் பேசும்போதெல்லாம்,

உள்ளத்தில் உண்மையொளி
உண்டாயின், வாக்கினிலே
ஒளி உண்டாகும்

என்ற பாரதி வாக்கின் உண்மை இனிது புலனுகும்.

அந்த மாணுக்கர்கள் யார்? 'அவர்கள் யாராஞல் என்ன? நல்லது செய்யச் சித்தமாயிருப்பவர்கள், குழந்தையிடம் அன்புள்ளவர்கள், நல்ல கனியை எதிர் நோக்கி விதையைக் காப்பவர்கள்' என்பது மாண்டிஸோரியின் மனநிலை.

அம்மாணுக்கர்கள் ஒரு விநோதக் கும்பல். கல்வி கற்றுப் பண்பட்டவர்களும் உண்டு; பண்பாடு பெருத பெற்றேர்களும் இளம் பெண்களும் உண்டு; ஏழைகளும் உண்டு; செல்வரும் உண்டு; உபாத்தியாயர்களும் உண்டு. அவர்களுக்கெல்லாம், இவர் சொற்பொழிவுகளைக் கேட்கும் போதெல்லாம் 'நல்லவரா

யிருக்க வேண்டும்; நல்லதைச் செய்ய வேண்டும்; என்ற உணர்ச்சி ஏற்படுவதுண்டு. 'நல்லது செய்' நல்லவனுயிரு' என்பது தானே புத்த பகவானின் பொன்னுரையும்.

பகட்டான சூழ்நிலையில் படாடோபமான கட்டடத்தில் அமெரிக்க விளம்பர சாதனங்களுடன் உலகத்தை மயக்க உடன்படவில்லை இவருள்ளம். பிரசித்தர் அல்லாத சாதாரணக் கூட்டத்தினருக்கு நல்லுரைகள் வழங்குவதிலேயே இவருள்ளம் திருப்தியடைந்தது.

அந்த மாணுக்கர்கள் தமக்குக் கடன்பட்டவர்கள் என்றே, நன்றி செலுத்த வேண்டியவர்கள் என்றே இவர் எண்ணியதே இல்லை. சொற்பொழிவு வரிசையின் இறுதிப் பேச்சை முடிக்கும்போது தமது மாணுக்கர்களுக்கு நன்றி செலுத்துவதை இவர் ஒரு முக்கிய கடமையாக மேற்கொண்டார். உண்மையான குருவின் பண்பாடு இது.

மாண்டிஸோரி எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். வாழ்க்கையின் மலர்ச்சிக்கு மகிழ்ச்சி ஒரு நல்ல அறிகுறி. மக்ளூர் (Mcclure) என்ற அந்தச் சீமான் நியூயார்க் மாநகரில் இவருக்குக் கல்வி நிலயமும் வசதிகளும் அளிப்பதாகச் சொன்னபோதும் மகிழ்ச்சி தான்; அதை இவர் மறுத்தபோது அவருள்ளம் சற்றுத் தளர்ச்சியடைந்த போதிலும் சில மணி நேரத்திற்குமேல் அந்தச் சோர்வு நீடிக்கவில்லையாம். வழக்கமான அக மகிழ்ச்சியும் முக மலர்ச்சியும் மறுபடியும் விரைந்து ஆட்கொண்டன.

உண்மைமீது உறுதியான நம்பிக்கையுடன் வாழ்க்கையை நோக்குவோருக்கெல்லாம் அகமகிழ்ச்சி

இயற்கை நிலைதான். உண்மையே ஒருவனுக்குச் சுதந்திரம் அளிக்கும் என்று இவர் அடிக்கடி கூறுவதுண்டு. உண்மை என்ற உள்ளொளி சோர்வு என்ற அக இருளைப் போக்கிவிடும் என்பதும் உண்மைதான்.

'எவ்வளவு பொருள் கிடைத்திருக்கும் தங்கள் காரியத்திற்கு!' என்று ஒருவர் ஞாபகப்படுத்தியபோது, மாண்டிஸோரி தமது தோள் சிறிது குலுங்கப் புன்னகை புரிந்தவண்ணம் தமது சொற்பொழிவுகளைத் தொடர்ந்து நடத்தலானார்.

1914-ல் டாக்டர் மாண்டிஸோரி முதல் முதல் நியூயார்க் நகரத்திற்குச் சென்றார். கப்பல் துறை முகத்திற்கு வந்து சேர்வதற்கு முன்னே பத்திரிகை நிருபர்கள் பார்க்கப் போய்விட்டார்கள். மாண்டிஸோரியின் சாந்தி ததும்பிய முகப்பொலிவு அவர்களை வசீகரித்தது.

நகரவீதிகளில் 'டாக்டர் மாண்டிஸோரியே வருக!' என்று பெரிய கொடிகள் அழைப்பதுபோலப் பறந்து கொண்டிருந்தன. நகரமக்கள் திரண்டு வரவேற்றனர். அவர்களில் ரோமாபுரிக்குச் சென்று இவர் பிரசங்கங்களைக் கேட்டிருந்தவர்கள் முக்கியமானவர்கள்.

ரோமாபுரிக்குத் திரும்பிவந்தபின் டாக்டர் மாண்டிஸோரி தமது இரண்டாவது ஸர்வதேசீயச் சொற்பொழிவுகளைத் தொடங்கினார். 1938-ம் ஆண்டுவரை மாண்டிஸோரியின் ஸர்வ தேசீயச் சொற்பொழிவுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறலாயின. மாண்டிஸோரி-கல்விச்சாலைகள் பல தோன்றிப் பணியாற்றிவந்தன.

இதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே—அதாவது, 1936-ல் — டாக்டர் மாண்டிஸோரி பார்ஸிலோனு நகரிலிருந்து தாய் தந்தையருக்குத் தொடர்ச்சியாக ரேடியோ சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இந்தச் சொற்பொழிவுகளே பின்னுளில் 'பிள்ளைமை இரகசியம்' (The Secret of childhood) என்ற தலைப் பெயருள்ள புத்தக உருவில் நாகரிக உலகமெங்கும் பெற்றேருக்குப் பேருதவி புரிந்துள்ளன. பன்னிரண்டு வருஷங்களுக்குப்பின் — அதாவது 1948-ல்—அடுத்த ரேடியோ சொற்பொழிவுகள் இந்தியாவில் நமது சென்னை மாநகரில் நடைபெற்றன.

டாக்டர் மாண்டிஸோரி 1939-ஆகஸ்டு மாதம் இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார். இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கியதும், அடையாற்றில் திவ்ய ஞான சங்கத்தைச் சார்ந்த ஒரு பங்களாவிலே இவர் தங்க நேர்ந்துவிட்டது. இங்கே தங்கிய காலமெல்லாம் தமது கல்விமுறை குறித்துச் சொற்பொழிவுகள் செய்வதிலேயே ஈடுபட்டிருந்தார்.

மாண்டிஸோரியும் காந்தியடிகளும்

1939-ம் ஆண்டு அக்டோபர் மாதம் காந்தியடிகளின் எழுபதாவது பிறந்ததினம் கொண்டாடப்பெற்றபோது, இப்போது உதவி ஜனதிபதியாக இருக்கும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அடிகளைக்குறித்து உலக அறிஞர்களின் கருத்துக்களைச் சேகரித்து ஒரு நூலாக்கி வெளியிட்டார். இந்த நூல் மகாத்மா காந்திக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் 'காந்தியடிகளும் குழந்தையும்' என்ற தலைப்பெயருடன்

டாக்டர் மாண்டிஸோரி லண்டனிலிருந்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

இவர் காந்தியடிகளை அருகிலிருந்து தெரிந்து கொண்டு இக்கட்டுரையை எழுதவில்லை. ஆனால் மகாத்மா காந்தி ரோமாபுரிக்குச் சென்றிருந்தபோது மாண்டிஸோரி அவரை நேரில் பார்த்திருந்தார். 'அப்பொழுதே காந்தியடிகளிடத்தில் அறியமுடியாத தொரு சக்தி பிரகாசிப்பதை உணர்ந்துகொண்டேன்' என்கிறார்.

'அந்த ரோமாபுரி விஜயத்தின்போது காந்தியடிகள் ஒரு கிராமத்தில் ஒதுக்குப் புறமாயிருந்த வீட்டில் தங்கியிருந்தார். ஒருநாள் காலைவேளையில் ஓர் இளம் பெண் அவர் தங்கியிருந்த வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அடிகளுடன் தனிமையில் பேச வேண்டுமென்பது அவள் ஆவல். அவள்தான் இத்தாலி மன்னருடைய கடைசிப் பெண் மாரியா' என்று எழுதிவிட்டு, 'இத்தகைய ஆத்ம சக்தியின் வசீகரத் தன்மை குறித்து நாம் சிந்திக்கவேண்டும்' என்கிறார் மாண்டிஸோரி.

காந்தியடிகள் லண்டனில் இருந்தபோது, மாண்டிஸோரி-பள்ளிப் பிள்ளைகள் அவரை வரவேற்று உபசரித்ததும் உண்டு. 'அவர் வந்து கீழே உட்கார்ந்து மௌனமாக நூல் நூற்றுக்கொண்டிருந்தார். குழந்தைகள் எல்லாரும் அவரைச் சுற்றி மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். அங்கிருந்த முதியவர்களும் மௌனமாகவே இருந்தார்கள், அப்படி எல்லாரும் ஒன்றுகூடியிருந்ததே போதுமல்லவா? பாட்டு, பேச்சு முதலியனவெல்லாம் எதற்கு?' என்று கூறி அந்த

மௌனத்தின் வசீகர சக்தியை உய்த்துணரவைக்கிருர். குழந்தைகளுக்கு 'மௌனபாடம்' என்று ஒரு பாடமும் இவரது கல்விமுறையின் ஓர் அம்சமாகும்.

'தவிர, விடியற்காலம் நாலரைமணிக்கு, காந்தியடிகள் நடத்திய பிரார்த்தனைக்குச் சில பெரிய குடும்பத்துப் பெண்கள் சென்றிருந்ததும் என் மனத்தில் நன்ருகப் பதிந்துவிட்டது' என்று அந்தப் பிரார்த்தனையின் சக்தியையும் குறிப்பிடுகிருர். பிரார்த்தனையின் சக்தியோ, மௌனசக்தியோ, நூல் நூற்பதுபோன்ற தொழிலின் சக்தியோ, வேறு தொண்டுகளின் சக்தியோ எல்லாம் ஆத்மசக்தியை உயிர்நிலையாக உடையனவே.

இத்தகைய ஆத்ம சக்திதான் உலகத்தைக் காப்பாற்ற வல்லது என்பதும், இந்த ஆத்ம சக்தி நம்மைச் சுற்றியிருக்கிறது என்பதும் மாண்டிஸோரியின் கொள்கை. இந்த அபிப்பிராயத்தைக் கட்டுரையில் சுட்டிக் காட்டியபின், மேலும் எழுதுகிருர்: 'இதனை நாம் விசேஷமான கருவிகளின் மூலம் பார்க்கமுடியும். ஆனுல் சிலர் நினைக்கிறபடி இந்தக் கருவிகள் அவ்வளவு லேசானவையல்ல. இந்தக் கருவிகள் எவை? குழந்தைகள்!' என்கிருர் மாண்டிஸோரி.

'குழந்தைகளைச் சுற்றியிருக்கும் விசேஷ சக்தியைத் நாம் தெரிந்துகொண்டுவிட்டால் உலக சகோதரத்துவம் என்பது தாஞக ஏற்பட்டுவிடும்; உலக அமைதியும் உண்டாகும். தம்முடைய பிறந்தநாளின்போது, இந்தியாவிலும் அகில உலகத்திலுமுள்ள குழந்தைகளைக் கௌரவிக்கும்படி காந்தியடிகளை நான் கேட்டுக் கொள்கிறேன். அவருடைய சீடர்களும் குழந்தைகளி

டத்தில் நம்பிக்கை கொள்வார்களாக' என்று தமது கட்டுரையை முடிக்கிருர் டாக்டர் மாண்டிஸோரி.

காந்தியடிகளின் ஆத்ம சக்தி குழந்தைகளைக் கௌரவித்தபோதிலும் அதிக அளவில் அரசியல் துறையிலே தொழிற்பட்டது. டாக்டர் மாண்டிஸோரியின் ஆத்மசக்தியோ முழுவதும் குழந்தைக் கல்வித் துறையில் தொண்டாற்றி வந்திருக்கிறது. இருவருடைய வாழ்க்கையும் தியாக வாழ்க்கை—ஒருமுகமாய் அர்ப்பணிக்கப் பெற்ற வாழ்க்கை.

இருவருக்கும் மதபக்தி உண்டு. காந்தியடிகளைப் போல் மாண்டிஸோரி அம்மையாரையும் 'கடவுட் பித்தர்' என்றே சொல்லலாம். இருவரும் சமரச உணர்ச்சி உள்ளவர்கள்; இதயத்திலே சத்திய ஒளி கொண்டவர்கள்; சமாதானப் பிரியர்கள்; ஆத்ம சக்தியில் அபார நம்பிக்கை கொண்டே அற்புதத் தொண்டு ஆற்றியவர்கள். இருவரது புகழ்நிறைந்த பெயர்களும் உலக சரித்திரத்தில் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

மாண்டிஸோரி-வாழ்க்கை மலர்ந்து கனிந்த நிலையில் இவரது ஆத்ம சக்தி மேலும் மேலும் குழந்தையுலகத்தைக் கண்டறிந்து தமது குழந்தைக் கல்வி முறையைத் தெளிவுபடுத்தி வந்தது. தற்காலப் பயிற்சிப் பழக்கங்களும் போதனை வழிகளும் முற்றும் மாற வேண்டும் என்ற முடிவிற்கு இவர் வந்து சேர்ந்ததும், குழந்தைக் கல்வியில் குழந்தைதான் முனைந்து தொழிற்பட வேண்டுமென்றும், அப்போது தான் குழந்தைக்குள் மறைந்திருக்கும் சக்திகள் சரியாக வெளிப்படுமென்றும் தெளிவாகக் கண்டு, பிறருக்கும் அந்த உண்மையைத் தெளிவாக எடுத்துரைக்கலானர்.



மணிகளை வைத்துக் கொண்டு இரண்டு குழந்தைகள் கூட்டல்-கணக்குப் போடுகிறார்கள். இன்னொரு குழந்தை நாற்காலியைத் தூக்கிக்கொண்டு போகும் வழியில் நின்று 'எப்படி அந்தக் கணக்கைப் போடுகிறார்கள், பார்ப்போம்' என்ற எண்ணத்துடன் கவனிக்கிறான்.



அமெரிக்காவின் தேசப் படத்தில் உள்ள மலைகள் ஆறுகள் பட்டணங்கள் முதலியவற்றைக் கண்டுபிடித்து அது அதற்கு உரிய இடங்களில் பெயர்கள் எழுதப்பெற்ற அட்டைகளைப் பொருத்தமாக வைப்பதில் ஈடுபட்டிருக்கிறாள்.

சாதாரணமான உபகரணங்களைக் கொண்டு குழந்தை தானுகவே ஒழுங்காகவும் சுறுசுறுப்பாகவும் தொழிற்படத் தக்க நிலைமையை ஏற்படுத்த முடியும் என்கிருர். இத்தகைய தன்முயற்சியால் குழந்தை புதியனவும் மதிக்கத் தக்கவையுமான மனச் சாதனை களைச் சாதித்துக் கொள்ளமுடியும் என்கிருர். இத் தகைய சாதனைகளுடன் அறிவிலே வளரும் குழந்தை எவ்வளவு குதூகலமாக வளர முடியும்!

கலையாழிக் கதிர்த் திங்கள்
உதயத்தில் கலித்தோங்கும்
அலையாழி எனவளர்ந்தார்

என்று ராம லட்சுமணர்கள் வசிஷ்ட குருகுலத்திலே ஆனந்தமாய்க் கல்வி கற்றதைக் கம்பன் வருணிக் கிருன். அத்தகைய ஆனந்தத்துடன் அறிவிலே பிள்ளைகள் வளர்ந்து மலர்ச்சி பெறவேண்டும் என்பது மாண்டிஸோரியின் கருத்து. 'ஆனந்த சுதந்திரம்' என்று பாரதியார் சொல்லுகிருரே, அந்தச் சுதந் திரத்தை மாண்டிஸோரி-இல்லத்தில் காணலாம்.

ஆனந்த சுதந்திரச் சூழ்நிலையில் குழந்தையை அறிவிலே வளர விடுவது, குழந்தை தானுக இயங்கி முயன்று உகந்த தொழில் புரிந்து அறிவில் வளருமாறு உதவுவது, நல்லதை வளரவிட்டு அல்லாததற்கு இடம் இல்லாமல் செய்து விடுவது—இத்தகைய கல்வி ஆரோக்கியம் போலவே அடையத் தக்கது.

ஒருவன் மற்றவனுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்க முடியாது. ஆரோக்கியம் குறைந்தவனும் நல்ல ஆரோக்கியத்தை அடையுமாறு உதவலாம். எப்படி நம்முடைய ஆரோக்கியத்தை நாம் வழங்க முடியாதோ,



மாண்டிஸோரி பள்ளிக் குழந்தைகள் தங்கள் பள்ளிக்கு முன்னுல் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர்

அப்படியே உபாத்தியாயரும் தம் அறிவைப் பிள்ளை களுக்கு வழங்க முடியாது. அறிவை வழங்குகிறேம் என்ற உபாத்தியாயர்-மனப்பான்மை தான் குழந்தை யின் ஆனந்த சுதந்திரத்தை அபகரித்து விடுகிறது. இது மாண்டிஸோரியின் அநுபவ சித்தாந்தம்.

* * *

டாக்டர் மாண்டிஸோரியின் படம் ஒன்றை முதல் முதல் பார்த்த ஒரு பெண் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே யிருந்தாளாம். 'யார் உருவம் அது?' என்பது அவளுக்குத் தெரியாது. 'யாராயிருந் தாலும் சரி, பிறருக்கு நல்லதைச் செய்கிறவர் இவர்' என்று சொன்னாளாம். மாண்டிஸோரியின் அன்புப் பணி முகத்திலே எப்படிப் பிரதிபலித்தது என்பதை அந்த உருவப் படத்தின் வாயிலாகவே ஊகித்துக் கொண்டாள் அந்தப் பெண்.

குழந்தைக் கல்விக்கு உதவி புரிவோர் அன்புப் பணியாளர்களாகவே முன்வர வேண்டும். பணியாளர் கள் எஜமானருக்கு உதவுவது போல் உதவ வேண்டும். குழந்தைப் பணி தூய அன்புப் பணிதான்; பெரும் பணிவுடன் நடைபெற வேண்டிய அன்புப் பணி. இந்தக் கருத்து மாண்டிஸோரி இதயத்தில் ஒரு வித் தாக இருந்து, மலர்ச்சி பெற்றுக் கனிவுற்ற வாழ்க்கை யின் உச்ச நிலையில் ஒரு கற்பக விருட்சம் போல் வளர்ந்துவிட்டது என்று சொல்லலாம்.

* * *

மாண்டிஸோரி எப்படித் தம் குழந்தைக் கல்வி முறையைக் கண்டு பிடித்தார்? ஆகர்ஷண சக்தி ஓர் இயற்கைச் சட்டமாக நிலவுகிறது என்பதை நியூட்டன்

எப்படிக் கண்டு பிடித்தானே, உடம்பில் இரத்தம் ஓடும் விதத்தை ஹார்வி எப்படிக் கண்டு பிடித்தானே, கொலம்பஸ் புதிய கண்டத்தை எப்படிக் கண்டு பிடித் தானே, அப்படிப்பட்ட விஞ்ஞான மனப்பான்மை யுடன் மாண்டிஸோரியும் குழந்தை யுலகைக் கண்டு பிடித்தார் என்றே சொல்லலாம்.

பொருள் கீழ் நோக்கி விழுவதை நியூட்டனுக்கு முன்பே எல்லாரும் பார்த்ததுண்டு. தரைக்கு மேல் வசதியான உயரத்தில் மனிதன் அமர்ந்துகொள்ள விரும்பினன்; தன் சாமான்களில் சிலவற்றையும் அப் படி வைத்துக்கொள்வது சௌகரியம் என்று கருதி ஞன். ஆனல் இந்த முயற்சிகள் நம்மையும் பொருள் களையும் கீழே தள்ளிவிடும் என்பதைத் தெரிந்துகொண் டான். எனவே நாற்காலிகள் செய்தான்; மேசைகள் முதலியனவும் செய்து கொண்டான். எனினும் ஆகர் ஷண சக்தி யென்ற இயற்கைச் சட்டத்தைத் தெரிந்து கொண்டு நாற்காலி முதலியன செய்யத் தெரிந்து கொள்ளவில்லை.

பொருள்கள் கீழ் நோக்கி விழுவதைப் பார்த்தவர் கள் உற்றுப் பார்த்து, 'அவை ஏன் அப்படி விழுகின்றன?' என்பது குறித்துச் சிந்திக்கவில்லை. பார்ப்பது வேறு; உற்றுப் பார்ப்பது வேறுதானே.

நாற்காலி முதலியவை செய்யும் தொழில் அபி விருத்தி அடைந்தது. அத் தொழிலுக்குரிய கலைத் தொழிலும் அபிவிருத்தி அடைந்தது. ஆனல் அது குறித்த விஞ்ஞான அறிவு நியூட்டன் வாயிலாகத்தான் மலர்ச்சி பெற்றது. பல்லாயிரக்கணக்கான வருஷங் களாக மனிதர்கள் கீழே பொருள்கள் விழுவதைப் பார்த்

திருந்தும், சில நூற்ருண்டுகளுக்கு முன்பு நியூட்டன் உற்றுப் பார்த்த பின்பு தான், அது குறித்த விஞ்ஞான உண்மை புலனுயிற்று.

நியூட்டன் பார்த்ததுடன் திருப்தியடையவில்லை; உற்றுப் பார்த்தான். தன்னுடைய வசதியோடும் தற்காப்பு-உணர்ச்சியுடனும் திருப்தி அடையாமல் உற்று நோக்கி உண்மை காண முயன்ற நியூட்டனுக்கு ஆகர்ஷண சக்தி என்ற இயற்கைச் சட்டத்தின் உண்மை புலனுயிற்று.

இந்த உதாரணத்தைக் கொண்டு மாண்டிஸோரி குழந்தை யுலக மர்மங்களைக் கண்டு கொண்ட நிலையையும் ஒருவாறு புரிந்துகொள்ளலாம்.

ஒரு கஷ்டம் நேர்ந்ததும், அதைத் தவிர்த்துச் சௌகரியப்படுத்திக் கொள்வது எப்படி என்பதுதான் முதல் யோசனையாகத் தோன்றுகிறது. அதற்குப் பின்பு தான்—சில வேளைகளில் நீண்ட காலத்திற்குப் பின்பு தான்—சிலர் 'அது ஏன்?' என்று கேட்க முன் வருகிருர்கள்; காரண-காரிய ரீதியில் சிந்தித்துப் பார்க்கிருர்கள்.

விஞ்ஞானிகள் கண்டு பிடித்த இயற்கை மர்மங்களிலும், நமக்கு நெருங்கிய தொடர்புள்ள உடம்பைப் பற்றிய விஷயங்கள் பெரும்பாலும் பிற்பட்டவையாகவே இருக்கலாம். வான சாஸ்திர உண்மைகளில் சில நீண்ட காலத்திற்கு முன்பே அறியப்பட்டிருந்தன இரத்த ஓட்டம் குறித்து ஹார்வி கண்டு பிடித்ததோ சமீப கால நிகழ்ச்சி தான். நம்முடன் நெருங்கி உறவாடும் குழந்தையின் கதையும் ஏறக்குறைய இப்படித் தான் என்று சொல்லக் கூடுமல்லவா?

அரசியல் பொருளாதாரம் முதலான துறைகளில் மக்கள் கொண்டிருக்கும் சிரத்தையைக் குழந்தைக் கல்வித் துறையில் நாம் காண்பதில்லையே! துள்ளித் திரிகின்ற காலத்திலே துடுக்கு அடக்கிப் பள்ளிக்கு அனுப்பி வைப்பது குழந்தைகளால் ஏற்படும் தொல்லைகளைச் சமாளித்துக் கொள்ளும் வழி தானே? பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தால் இங்கும் அடக்கு முறை யாட்சிதான்!

நீண்ட காலத்திற்குப் பின்பே 'குழந்தைக் கல்வி ஏன்? எப்படி?' என்ற ஆராய்ச்சி தோன்றியது. குழந்தைக்கும் சுதந்திரம் வேண்டாமா? ஒரே வயதுள்ள எல்லாக் குழந்தைகளும் குறிப்பிட்ட நேரத்தில் ஒரே வகைப் பாடத்தைக் கற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட வேண்டுமா? இப்படியெல்லாம் வாதங்களும் பிரதிவாதங்களும் எழுந்தன.

ஆராய்ச்சி நடத்த அவகாசம் வேண்டும். அள்ளித் தெளிக்கும் அவசரக் கோலத்திலே ஆராய்ச்சி நடைபெறமுடியாது. எனினும் குழந்தைக் கல்வி விஷயமாக ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் நன்கு புலனாகிச் சில முயற்சிகளும் அங்கும் இங்கும் நடைபெறலாயின.

இத்தகைய வாய்ப்பு ஒன்றில் மாண்டிஸோரிக்கு ஒரு ஸ்தானம் காத்திருந்தது. அதில் விஞ்ஞானக் கண்ணுடன் இவர் அமர்ந்து குழந்தை யுலகத்தைக் காணமுயன்றார்; கண்டுகொண்டார்.

குழந்தையுள்ளத்துடன் ஒவ்வொரு விஞ்ஞானப் பிரசினைக்கு முன்பும் அமர்ந்து உண்மை காண்பவன் விஞ்ஞானி என்று கூறுவதுண்டு. விருப்பு வெறுப்புக்

களுக்கு இவன் உள்ளத்தில் இடம் இல்லை. உண்மை மீது ஆழ்ந்த அன்பிற்குத்தான் இடம் உண்டு. எல்லையற்ற உழைப்பிற்குரிய எல்லையற்ற சக்தியும் இவனுக்கு உண்டு. இத்தகைய விஞ்ஞானிதான் 'குழந்தையுலகின் கொலம்பஸ்' என்று சொல்லத்தக்க மாண்டிஸோரியும்.

ஆனால் இவர் விஞ்ஞானி மட்டுமல்ல. உள்ளத்தில் உண்மை ஒளி கொண்ட ஒரு மெய்ஞ்ஞானி யென்றும் இவரை மதிக்கலாம். விஞ்ஞானியின் பொறுமையுடன் பக்தனின் பணிவும் இவரிடம் காணப்பட்டது. உற்றுப் பார்த்தும், ஊடுருவிப் பார்த்தும் குழந்தையுள்ளத்தின் அதிசயங்களை இவர் கண்டுபிடித்திருக்கிறார்.

10. ஆடுக, ஆடுகவே !

குழந்தை தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறது. தாய் சிறிது தூரத்திலிருந்து கண்குளிரப் பார்த்துக்கொண்டிருக்கிருள். விளையாட்டில் ஈடுபட்டிருப்பதால் குழந்தை பசியைக்கூட உணர்ந்துகொள்ளவில்லையென்று தாய் நினைக்கிருள். பூச்சூட்டிப் பார்க்க வேண்டும் என்றும் இவளுக்கு ஆசை.

குழந்தையைக் கூப்பிடுகிருள். அது கவனிக்கவில்லை. பிறகு 'என் அப்பனே! வா; என்மகனே! வா; என் கண்ணே! வா; என் உயிரே! வா; என் அரசே! வா, என்று கொஞ்சிக் கொஞ்சி அழைக்கிருள். இடை இடையே வாய்குளிரப் பெயரைச் சொல்லியும் கூப்பிடுகிருள்.

குழந்தை எங்கெங்கேயோ தவழ்ந்து போகிறது. 'அரசே! நீ இங்கே வா; பால்குடிக்க வா; பூச்சூட்டிக் கொள்ள வா' என்றெல்லாம் சீராட்டிப் பாராட்டி அழைக்கிருள். குழந்தை இப்போது திரும்பிப் பார்க்கிறது.

தாயின் அன்புக் குரலாலும் அன்புப் பார்வையாலும் வசீகரிக்கப் பெற்றுக் குழந்தை இளநகையரும்பிய வண்ணம் கொஞ்சம் வேகமாகவே தவழ்ந்து வருகிறது.

குழந்தை - ராமனைக் கோசலை கொஞ்சி அழைப்பதாகவும், ராமன் வருவதாகவும் ஒரு கற்பனை திருப்புகழில் காணப்படுகிறது:

எந்தை! வருக; ரகுநாயக! வருக;
மைந்த! வருக; மகனே! இனிவருக;
என்கண்! வருக; எனதாருயிர்! வருக;
அபிராமா!

இங்குவருக! அரசே; வருக! அமு(து)
உண்க வருக; மலர் சூடிட வருக!;
என்று பரிவினொடுகோசலைபுகல
வருமாயன்.

தாயின் மகிழ்ச்சியை முகத்திலே குழந்தை கண்டு கொள்கிறது. அதைப்போலப் பிற உணர்ச்சிகளையும் அது கண்டுகொள்ளக்கூடும். எனவே கோபக் குறியைக்கூட முகத்தில் காட்டக்கூடாது. அதட்டுவதோ, மிரட்டுவதோ, திட்டுவதோ, கூடவே கூடாது. அன்பை எதிர்பார்க்கிறது குழந்தை. இந்த அன்பை வழங்குவது முதியவர் கடமை. இதனால் குழந்தையின் இயற்கை - வேகங்கள் சரியாக வேலைசெய்வது சாத்தியமாகும்.

தாளசையத் தோள்அசையக்
கையசையக் காப்பசைய,
தாதசையப் பூஅசையத்
தாரசைய மெய்யசைய,

தவழ்ந்துவரும் குழந்தை இயற்கை - வேகங்கள் சரியாகத் தொழிற்பட்டு இயங்கும் ஓர் உயிர்ச் சித்திரம் அல்லவா?

'குழந்தை குறும்பு செய்கிறது, சேட்டை செய்கிறது' என்று வேதனைப்பட்டு அதை அடக்கப் பார்ப்பது சரியன்று. இயற்கை-வேகத்திற்குத் திருப்தியுண்டாகுமாறு அந்தக் குறும்புகளையும் சேட்டைகளையும்

முறைப்படுத்திப் பயன்படச் செய்துகொள்வது அவசியமாகும்.

கிடக்கில் தொட்டில்
கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில்
மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில்
உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்கி லாமையால்
நான்மெலிந் தேன்நங்காய்!

என்று தோழியைப் பார்த்து யசோதை கூறுவதில் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய இயற்கை - வேகத்தைத்தான் எவ்வளவு வசீகரமாகக் கவி சித்திரித்திருக்கிறார்!

விளையாட்டுகள் குழந்தை வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை. விளையாட்டும் வேலையும் இயற்கை-வேகத்திற்குத் திருப்தி அளிக்கும்போது அவை குழந்தைக் கல்வியின் முக்கிய அம்சமாக அமைகின்றன.

ஆயர்கள் போரேறே!
ஆடுக, ஆடுகவே!

என்றும்,

ஆனே! எனக்(கு) ஒருகால்
ஆடுக, ஆடுகவே!

என்றும் யசோதை வாக்காக வரும் பெரியாழ்வார்-பாசுரங்களில் இயற்கை-வேகத்திற்குத் திருப்தி அளிக்கும் இயக்கத்தைக் காண்கிறோம். 'ஆனை ஆனை, அழகர் ஆனை' என்று இந்நாளிலும் குழந்தையோடு கொஞ்சிக்

குலாவி விளையாடுவது குழந்தைக் கல்வியின் ஒரு முக்கிய அம்சமாக மதிக்கத் தக்கது.

'ஆனே, ஆனே' என்றும் 'ஆடுக, ஆடுகவே!' என்றும் குழந்தை தன்னிச்சை கொண்டு தோற்றுவிக்கும் இயக்கங்களைக் கண்டு களிப்பது வேறு; அநாவசியமாகக் குழந்தையை ஆட்டிக் களிப்புறச் செய்ய முயல்வது வேறு. இந்த இரண்டாவது வழி தவறுனது.

குழந்தைக் கல்வியென்ருல் குழந்தையின் ஸ்தூல சூட்சும வளர்ச்சி; உடம்பிலும் உள்ளத்திலும் வளர்ச்சி. மனிதக் குழந்தை பறவைக் குஞ்சைக் காட்டிலும், குட்டிமிருகத்தைக் காட்டிலும் மெள்ள மெள்ளத்தான் இயங்குகிறது. கன்றுக்குட்டிகளும் ஆட்டுக்குட்டிகளும் பிறந்தபோதே துள்ளி ஓட முயலும். ஆனல் ஒளியையும் ஒலியையும் தொட்டு உணரும் உணர்ச்சியையும் விரைவில் உணர்ந்துகொள்ளும் குழந்தை எழுந்திருக்கும் ஆற்றலேயோ, நடக்கும் ஆற்றலேயோ, பேசும் ஆற்றலேயோ விரைவில் பெறுவதில்லே. எனவே குழந்தைக்கல்வி இந்த நிலேமைக்குத் தக்கபடி அமைய வேண்டும்.

தளர்நடை நடவானே

யசோதை மற்றக் கோபிமாரைக் கூவி அழைத்து,

பேதைக்குழவி பிடித்துச்
சுவைத்(து) உண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே;
பவளவாயீர்! வந்து காணீரே

என்று காட்டுவதாகப் பெரியாழ்வார் பாடுகிருர்.

தெய்வக் குழந்தையும் உடனே நடக்கத் தெரிந்து கொள்ளவில்லை: எழுந்து நடக்கமுயன்று தள்ளாடி விழுந்து விழுந்துதான் தளர்நடை நடக்கக் கற்றுக் கொண்டது.

'வாசுதேவன் தளர் நடை நடவானே?' என்று, யசோதைத் தாய் தடுமாறி நடக்கும் குழந்தைக் கண்ணனின் நடையைப் பார்க்க ஆசைப்படுகிருள். கண்ணனுக்கு ஒரு வயது நிறைந்த பிறகு தான் யசோதைக்கும் தளர் நடை காணும் பாக்கியம் கிடைக்கிறது. இரண்டு வயதுக்குப் பின்பு தான் கண்ணனும் சரியாக நடை பயின்று முன்புறமாக வந்து அம்மா மடியில் அமர்வதும், பின்புறமாக வந்து முதுகிலே சாய்ந்து கொள்வதுமாக விளையாடியிருக்க வேண்டும்.

ஓட ஓடக் கிண்கிணிகள்
ஒலிக்கும் ஓசைப் பாணியாலே
பாடிப் பாடி வருவாயைப்
பற்பநாபன் என்றிருந்தேன்;
ஆடி ஆடி அசைந்திட்(டு)
அதனுக்கேற்ற கூத்தை ஆடி
ஓடி ஓடிப் போய் விடாதே
உத்தமா!

என்ற பெரியாழ்வாரின் 'இசைச் சித்திரம்' இயக்கத்தை முற்றும் அடக்கி ஆளும் குழந்தையின் சித்திரம்.

பகுத்தறிந்து செயல் செய்யும் ஆற்றல் பெருமலே இயற்கை யுணர்ச்சிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டே மிருகங்களும் பறவைகளும் இயங்குகின்றன. மனிதக் குழந்தைக்கோ இயற்கை யுணர்ச்சியின் ஆதிக்கம் போய்ப் பகுத்தறிவின் ஆதிக்கம் ஏற்பட வேண்டியிருக்

கிறது. இதற்குரிய ஆற்றல் ஏற்படும்வரை, சதைப் பற்றுகள் வலுவடைந்த போதிலும் காத்திருக்க வேண்டியது தான்.

பிராணிகள் தங்கள் இனத்தின் இயல்புகளை மட்டுமே வெளியிடுகின்றன; மனிதக் குழந்தையோ ஒரு தனி ஆத்மாவின் பண்பை வெளியிட வேண்டியிருக்கிறது. மனித வர்க்கத்துக்குரிய பொதுவான பிறவி-வேகத்திற்கிணங்கவே குழந்தைகளெல்லாம் நிமிர்ந்து நடக்கவும் பேசவும் கற்றுக் கொள்கின்றன.

எனினும் ஒரு தனி ஜீவனாக ஒவ்வொரு மனிதக் குழந்தையும் வளர வேண்டியிருக்கிறது. இப்படி வளர்ந்து மெள்ள மெள்ளத் தான் சூழ்நிலையைத் தனக்கு இசைவித்துக் கொள்ள முடியும்; இசைவித்துக் கொண்டுதான் குழந்தை மனிதனாகத் தன்னைப் படைத்துக்கொள்ள முடியும்.

இதை உணர்ந்து கொண்டால் சிறு குழந்தைக்கும் மானஸ வாழ்வு அல்லது சூட்சும வாழ்வு உண்டு என்றும், இதில் குழந்தையின் சிருஷ்டி-சக்தி அடங்கிக் கிடக்கிறதென்றும் தெரிந்து கொள்ளலாம். நடக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளும் குழந்தை மேலும் மேலும் தன் சக்தியைப் பெருக்கிக் கொண்டு நாளடைவில் அறிவுப் பிரதேசங்களை மெள்ள மெள்ள வசப்படுத்திக் கொள்கிறது.

இக்குழந்தைக்கு இயற்கையும் வெளி யுலகமும் உதவி செய்கின்றன; ஆனால் உள்ளுக்குள்ளே யிருக்கும் சூட்சும சக்தி சூழ்நிலையில் தனக்கு வேண்டிய அம்சங்களை ஜீரணித்துப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்நிலையில் உள்ளேயிருந்து பிறக்கும் உணர்ச்சிகள்

சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுப் பகுத்தறியும் மனத்தை நிர்மாணம் செய்கின்றன.

குழந்தையின் உடல்-வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் கவனித்துச் சிந்தித்துப் பார்ப்போமானல், இது ஒரு சூட்சும நாடகம் போலத் தோன்றும். அன்பு மயமான ஒரு சூட்சும சக்தி குழந்தை-மனத்திலிருந்து தன்னைப் படிப்படியாக வெளியிட்டுக் கொள்கிற காட்சிகள் நாடக மேடைக் காட்சிகள் போல் அகக் கண்ணுக்குப் புலனுகும். இந்தச் சக்தி அன்பு மயமான சூழ்நிலையில்தான் முழு வேகத்துடன் வேலை செய்யும். ஆரவாரமும் அட்டகாசங்களும் இல்லாத, தக்கதொரு, சூழ்நிலையை அமைத்து உதவுவது பெற்றோர் கடன்.

வளர்நடை வாழ்க

முதல் முதல் குழந்தை ஓர் அடியெடுத்து வைத்து விட்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோம், காணாதது கண்டது போல! குடும்பத்திலே அது ஓர் ஆனந்த நிகழ்ச்சி—ஒரு வெற்றி விழா. மனிதன் இயற்கை மீது கொள்ளும் ஒரு வெற்றி அல்லவா?

முதல் வயதிலிருந்து இரண்டாம் வயதிற்குள் குழந்தை பிரவேசிக்கின்ற ஒரு வளர்ச்சி நிலை இது. இந்த இயக்கம் குழந்தைக்கு ஒரு புது வாழ்வு-இயக்கம். இனி நீண்ட பழக்கம் தான் வேண்டும்: தளர் நடை வளர் நடையாகி விடும்.

குழந்தை எவ்வளவு தைரியமாக நடக்க ஆரம்பிக்கிறது! அபாயத்தை லட்சியம் செய்யாமல் வெற்றியை நாடிப் போர்க்களத்திலே போய்க் குதித்து விடும் வீரனை நினைப்பூட்டுகிறது குதித்து நடக்க முயலும் குழந்தை. ஆம், வாழ்க்கைப் போராட்டத்தில் துணிந்து

குதித்துவிடப் போகும் 'மனிதக் குஞ்சு' அல்லவா? எனவே, 'தளர் நடை வாழ்க, தளர் நடை வளர்க!' என்று வாழ்த்துவோம்.

இத்தகைய முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவது தவறு. நடக்கக்கூடிய குழந்தையைச் சின்னஞ்சிறு வண்டிகளில் வைத்துத் தள்ளிக் கொண்டு போவது சரியன்று. ஏதோ ஒரு சாமானைக் கடைக்குத் தள்ளிக் கொண்டு போவது போல் குழந்தையைக் கொண்டு போவது அதன் ஸ்தூல வாழ்விற்கும் கேடு; சூட்சும வாழ்விற்கும் கெடுதிதான். நடையாடும் குழந்தைக்குத் தடை போடுவது துன்பம் செய்வதுதானே?

ஒன்றரை வயதுக்கும் இரண்டு வயதுக்கும் இடையே ஆரோக்கியமான குழந்தை ஒருமைல் தூரம் நடக்கமுடியும். வழியிலே சில கஷ்டங்களையும் சமாளித்துக்கொள்வான்; சில படிகளிலும் ஏறிப் போவான்; மேடான பாதையிலும் ஏறிச்செல்லக் கூடும்.

ஆனல் இந்தக் குழந்தை-நடைக்கும் முதியவர் களின் நடைக்கும் வேற்றுமை உண்டு. முதியவர் களாகிய நாம் ஒரு ஸ்தூல லட்சியத்தை அடைய நேராக நடந்துபோகிறோம். சிறு குழந்தையோ சக் தியை வளர்த்துக்கொள்ள நடந்துபோகிறது; மெது வாகத்தான் நடக்கவேண்டியிருக்கிறது. அக்கம்பக்கங் களிலுள்ள பொருள்கள் குழந்தையை அப்படியும் இப்படியும் வசீகரித்து இழுக்கின்றன.

இத்தகைய குழந்தைக்கு உதவி செய்ய வேண்டு மானல், நாம் நம்முடைய நடைமுறையைத்தான் மாற் றிக் கொள்ளவேண்டும். குழந்தையின்பம் நம்க்கு

இன்பமாக இருக்கவேண்டும். நம்முடைய சௌகரியத் திற்காகவோ, சுயநலத்திற்காகவோ, நாம் குழந்தைக் குத் துன்பம் இழைக்கலாகாது.

வசீகரமான பழக்கம்

ஒன்றரை வயதுள்ள குழந்தையைச் செங்குத்தான பாதையிலும் களைப்பில்லாமலே நடக்கப் பழக்கிவிட லாம். ஆனால், வழியில் குழந்தை புல்லைக் கண்டால் அந்தப் புல்லாந் தரையில் உட்காரும்; பூவைக் கண் டால் வியந்து வியந்து பார்த்துக்கொண்டே யிருக்கும். கழுதை மேய்வதுகூடக் குழந்தைக்கு ஓர் அதிசயமான காட்சி யின்பம்தான்!

இக் காட்சிகளைக் குழந்தை அநுபவிக்கும்போது தடையுத்தரவு போடுவது தவறு. இவற்றையெல்லாம் அநுபவித்துக்கொண்டே இஷ்டப்படி நடக்கப் பழகு வதுதான் குழந்தைக்கு நடைப் பழக்கம். இது இந்தப் பருவத்திலே கல்விப் பழக்கமும்கூட.

படிகளில் ஏறி இறங்குவது குழந்தைகளுக்கு வசீ கரமாக இருக்கும். ஒவ்வொரு படியும் சின்னஞ்சிறு ஆசனமாகத் தோன்றும். கையால் பிடித்துக் கொள்ள வும் சௌகரியமல்லவா? எனவே படிக்கட்டுகளில் ஏறு வதும் இறங்குவதும், ஒரு படியில் சிம்மாசனாதிபதி போல் உட்கார்ந்து கொள்வதும், குழந்தையின் நடைப் பழக்கத்திலே இன்றியமையாத படிகளாய்க் கருதத் தக்கன.

இத்தகைய நடைப்பழக்கத்திலிருந்து குழந்தைக் கலை விஷயமாகப் பாடம் கற்றுக்கொள்ளலாம். குழந் தையோடு நடக்கும் தாயோ, தந்தையோ தியாகபுத்தி

யுடன் தங்கள் நடைமுறையைக் குழந்தையின் நடைமுறைக்கு இசைவித்துக்கொள்ள வேண்டியிருப்பது போல், மற்ற விஷயங்களிலும் விட்டுக்கொடுக்கும் சுபாவத்தை மேற்கொள்ளவேண்டும்.

முக்கியமாக, குழந்தை-விளையாட்டுக்களில் முதியவர்களும் கலந்துகொள்ளலாம். குழந்தை-மனோபாவத்திற்குத் தங்களை இசைவித்துக் கொண்டுதான் குழந்தை-விளையாட்டுக்களில் கலந்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்வது குழந்தைக்கலையின் ஒரு முக்கிய அம்சம், ஒரு வசீகர அம்சம்.

கால், நாக்கு, கை

நடைப்பழக்கம்போல் நாவின் பழக்கமாகிய பேச்சுப் பழக்கமும் அதிமுக்கியமானது. இந்த இரண்டு பழக்கங்களும் 'குழந்தையின் இயற்கை—வளர்ச்சி சரியாக நடைபெறுகின்றதா?'—என்று சரிபார்த்துக் கொள்ள உதவும் உரைகல்லுமாகும். நடைப் பழக்கமாவது, மற்றப் பிராணிகளுடன் மனிதப் பிராணிக்குப் பொதுஉடைமையாகவுள்ள ஒரு பழக்கம். பேச்சுப் பழக்கமோ மனிதப் பிராணிக்கே உரிய ஏகபோக ராஜ்யம்.

பிராணிகளின் முன்இரண்டு கால்களும் மனிதப்பிராணிக்கோ கைகளாகிவிட்டன! கைகள் மனித உள்ளத்திற்குப் பணிசெய்து இயங்கி வந்திருப்பதே நாகரிக வளர்ச்சிக்கெல்லாம் காரணமாகும். நாகரிகப் பாதையில், மனிதன் நடந்து செல்வதற்குக் கையின் உதவி காலின் உதவியைக் காட்டிலும் அதிமுக்கியமானது.

பேச்சுத்திறமை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது கைத்திறமையும், நாகரிக வளர்ச்சிப் பாதையிலே. மிருகங்களைக் காட்டிலும் பலவீனஞக இருக்கும் மனிதனைப் பிராணி உலகத்தின் சிகரமாகத் தூக்கிவைத்தது கைதானே?

உணர்ச்சித் தூண்டுகோல்

சிறிய குழந்தை கைகளை நீட்டிப் பொருள்களைப் பிடிக்கும்போதும், உடைக்கும்போதும், கொட்டிவீணுக்கும்போதும், நாம் சுயநலத்தை முன்னிட்டுக் கோபம் கொள்ளலாகாது, தடைசெய்யலாகாது. 'தொடாதே! சும்மா இரு' என்று அதட்டலாகாது; கண்டிக்கலாகாது. பொருள்களைக் கையாடிக் கையாடித்தான்,— உடைத்தும், கொட்டியும், வெட்டியும் கட்டியும்தான்,— மனிதன் நாகரிக ஏணியில் படிப்படியாக ஏறிவந்திருக்கிருன்! குழந்தையின் கையில் அடங்கிக் கிடக்கும் இத்த கைய திறமை வெளிப்பட வேண்டாமா?

குழந்தை நடப்பதும் குதிப்பதும் ஓடுவதும் ஆடுவதும் பொருள்களை உடைப்பதும் எல்லாம் குழந்தை மனிதனுவதற்குப் படும்பாடுதான். 'கண் பார்த்ததைக் கை செய்கிறது'—என்கிருேமல்லவா? குழந்தை அப்படித்தானே செய்கிறது?—ஓர் உணர்ச்சி தூண்ட அப்படிச் செய்கிறது. குரங்குபோலச் சேட்டை செய்யவில்லை; கிளிப்பிள்ளை போலப் பேசவில்லை. மனிதப் பிள்ளை மனிதனுக முயல்வதற்கு உரிய இயக்கங்களே இவை.

இயக்கம் என்பது குழந்தைக்கு வாய்த்திருக்கும் அதிசயப் பேறுகளில் ஒன்று. பிறந்தபோது குழந்தைக்கு இயக்கம் மிகவும் சொற்பமானது. படிப்படி

யாக உடம்பில் ஜீவசக்தி அதிகரிக்கவே குழந்தை மேலும் மேலும் இயங்கத் தொடங்குகிறது. இந்த ஆற்றல் தற்செயலாக ஏற்படுவதல்ல. ஒரு குறித்த காலத்தில் குழந்தை இயங்கத் தொடங்கும்போது இதன் ஒற்றுமனம் (Absorbent Mind) ஏற்கெனவே சூழ்நிலையை ஒருவாறு ஒற்றிக் கொண்டிருக்கிறது,— ஒற்றுத்தாள் ஒற்றிக்கொள்வதுபோலே.

மூன்று வயதுக் குழந்தையைக் கவனித்துப் பார்த்தால் அது எப்போதும் ஏதாவது ஒரு பொருளுடன் விளையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம். இது கைத்திறனின் தொடக்கம். கைத்திறனுக்குப் பயிற்சி அளிக்கும் விளையாட்டும் வேலையும் குழந்தையை மனிதனாக நிர்மாணம் செய்கின்றன.

கைத்திறனால், கைத் திறனின் பயனாகிய அநுபவத்தால், குழந்தை மனிதனாகிறான். முதலாவது விளையாட்டு, பிறகு வேலை—இவ்விரண்டும் குழந்தை மனிதனாக உதவுகின்றன. மனித அறிவுக்கும், கருவியும் சாதனமும் கைகளே.

இயக்கங்களால், முக்கியமாகக் கைத்திறனால், குழந்தை தன் மனத்தையும் நினைவாற்றலையும் படைத்துக்கொள்ளுகிறான். மெள்ள மெள்ள என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் ஏற்படுகிறது. அப்படியே பகுத்தறியும் ஆற்றலும் ஏற்படுகிறது. இப்படி ஐந்து அல்லது ஆறு வயது ஆகும் பருவத்தில் பள்ளிக்கூடப் படிப்பிற்கு உரியவன் என்று கருதப்படுகிறான்.

நாகரிகம் வளர்ந்த கதையே கைத்திறனால் அறிவு வளர்ந்த கதைதான். மதக் கொள்கைகள் வளர்ந்த

கதையிலும் கைத்திறனுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. அஸிஸி-பிரான்ஸிஸ் முனிவர் என்ற கிறிஸ்த வப் பெரியாரும், அவரைச் சார்ந்த பக்தர்குழாமும் தங் கள் மேனி நோவக் கற்களைச் சுமந்து சென்று கோயில் கட்டினர்கள். அப்பர் என்ற திருநாவுக்கரசர் கோயி லில் கைநோவ மெய்நோவப் பணிவிடை செய்தாரென் பதை நாம் நன்கறிவோம்.

ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாரும் கைத் தொழிலின் அருமை பெருமைகளை வற்புறுத்தியிருக்கி ருர். 'வாருங்கள் புலவர்களே! உங்கள் உடம்பு வருந் தக் கையால் தொழில் செய்து பிழைக்கவேண்டும்; ஒரு பிரபுவையோ வள்ளலையோ புகழ்ந்து வயிற்றுக்கு உணவு தேடிக்கொள்ள வேண்டாம்' என்று அவர் உபதேசிக்கிருர். லோகோபகாரமான செயல்களை உடம்பு வருந்தச் செய்வதைத் தவமென்றும், உத்தம கைங்கரியம் என்றும் இப்பெரியார் கூறியுள்ளார்.

நமது கோயில்களிலுள்ள சிற்பங்களெல்லாம் கைத்திறன் தந்த கலைச் செல்வங்களே. கற்களிலிருந் தும் பாறைகளிலிருந்தும் எத்தனை அழகான சிலைகள்—மனிதச் சிலைகளும் தெய்வச் சிலைகளும்—கைத்திறனல் உருவாகியுள்ளன! உலகப் பிரசித்திபெற்ற மாமல்ல புரத்துச் சிற்ப விசித்திரங்களெல்லாம் கலைத்திறன் விளைத்த அற்புதங்களே. பக்தி போன்ற உணர்ச்சி களும் அறிவைப்போல் கைத்திறனல் வளர்க்கப் பெற்றுள்ளன.

மனிதன் தன் சூழ்நிலையில் செய்து கொண்டிருக் கும் மாறுதல்களெல்லாம் கை செய்த காரியமே. கைத் திறனைப் பற்றிக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

அருமையான பாடல்கள் பாடியிருக்கிருர். நாகரிக ஏணியில் மனிதன் ஏறி ஏறி உச்ச நிலேக்கு வந்திருப்பதன் இரகசியம் கைத்திறன் என்பதைக் கவிமணி உருக்கமாகப் பாடுகிருர்.

'வெயில் அடித்தாலும் மழை பெய்தாலும் குடையில்லாத காலத்திலே தலேயைக் காப்பது கை தான்' என்று தொடங்குகின்றன கவிமணியின் 'கைத் திறன்' பாடல்கள். வேர்வைக்கு விசிறியாகவும் கை உதவுகிறது, விசிறி இல்லாத காலத்திலே. எனவே, கை தான் நாளடைவில் குடையாகி விசிறியாகி வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளேத் தரும் எத்தனேயோ சாதனங்களாகி யிருக்கிறது என்பது குறிப்பு.

தொட்டில் ஆட்டும் தாய்மைக்கும், அறியாமையை ஒழிக்கும் எழுத்துக் கலேக்கும் கைத்திறனே காரணம் என்கிருர். உடம்பிற்கு உணவு தருவதும் கை; உள்ளத்திற்கு உணவு தருவதும் கை என்கிருர் கவிமணி.

> கனி உதிர்க்கக் கல்லெறியும்,
> கவண் பிடிக்கும் கையே

என்று சிறுவர் கைத்திறனேப் பாடுகிறவர், இதே கை ஓவியம் எழுதிக் கலே வளர்த்து அறிவையும் உணர்ச்சியையும் கனியச் செய்யும் அதிசயத்தையும் சுட்டிக் காட்டுகிருர்.

அறிவுக்கும் சாதாரண உணர்ச்சிகளுக்கும் மட்டுமா?—அருளுக்கும் தூண்டுகோலாகக் கை உதவுவதை,

> தளர்பவரைக் கண்டு தலே
> தாங்க எழும் கையே

என்று பாடிக் காட்டுகிருர்.

அருள் புரியத்தான கை உதவுகிறது? போர் புரியவும் பயமுறுத்தவும் உதவுகிறது என்பதைத் தான், 'இந்த நல்ல கை நல்ல பாம்பு போல வந்து பயமுறுத்துகிறதே!' என்று பொருள்பட,

பையரவைப் போலவந்து
பயமுறுத்தும் கையே!

என்று இரங்கிக் கூறுகிருர்.

அழகுணர்ச்சியைத் தூண்டுவதற்கு உதவி வந்திருக்கும் கை எத்தனை விஞ்ஞான வசதிகளால் நம்மை உலகப் பிரதட்சிணம் செய்து வைக்கிறது! குடிசை கட்டும் கை, கோயிலும் கோபுரமும் கட்டி நமது உணர்ச்சிகளை விண்ணளாவத் தூண்டி விடுகிறது. குளம் கிணறு குழித்துத் தாகம் போக்க உதவிய கை, ஆத்ம தாகத்தையும் போக்க உதவியிருக்கிறது.

நெல்லைக் குத்தி உணவு தந்த கை, உடை செய்து நகை செய்து நாகரிகம் செய்திருக்கிறது. நாகரிக ஏணியின் உச்சியில் ஒருவனைத் தூக்கி வைக்கும் கையே,

தக்கபெரி யோர்க்குமிகத்
தான் வணங்கும் கையே

என்றவாறு, பெரியோரை வணங்கிப் பேறு பெறுவதற்கும் பயன்படுகிறது.

நமது நாட்டை உய்விக்க வந்த காந்தியடிகள் காட்டிய வழியும் கைத்திறன் தானே என்று பாடுவதுடன், நாட்டை உய்விக்கப் பாரதியார் பாடிய பாடல்களைப் பாடி அநுபவிப்பதற்கும் கைத்திறன் தேவையானது என்பதையும் எவ்வளவு உருக்கமாகப் பாடிக் காட்டுகிருர் கவிமணி:

நாடியசீர் நாடடைய
ராட்டுருட்டும் கையே!
நல்லகதர் நெய்யமிகு
வல்லமைகொள் கையே!

பாடியவாய் தேனூறும்
பாரதியார் பாடல்
பண்ணமையப் பாடுதற்குப்
பாணிகொட்டும் கையே!

நிமிர்ந்து நடப்பதற்கும், குதிப்பதற்கும், கூத்தாடுவதற்கும் குழந்தை கைகளை உபயோகிப்பதைக் கவனித்துப் பாருங்கள். கால்களின் இயக்கத்தைக் காட்டிலும் கைகளின் இயக்கம் முக்கியமானது. இந்த இயக்கங்கள் உடம்பின் பராமரிப்பிற்கு மட்டுமல்ல, உள்ளத்தின் வளர்ச்சிக்கும், ஒழுக்கத்தின் வளர்ச்சிக்கும் அருள்நெறி பிடித்தொழுகும் பெருவாழ்விற்கும் இன்றியமையாதன என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

இத்தனை கருத்துக்களையும் உய்த்துணர வைக்கிறது 'திருக் குற்ருலக் குறவஞ்சி'யில் வரும் கைத்திறன் பாட்டு:

மாருமல் இரு நிலத்தில்
அறம்வளர்க்கும் கையே;
மனையறத்தால் அறம்பெருக்கித்
திறம்வளர்க்கும் கையே;

வீருக நவநிதியம்
விளையும்இந்தக் கையே;
மேன்மேலும் பாலமுதம்
அளையும்இந்தக் கையே;

ஆருத ஜனங்கள்பசி
ஆற்றும்இந்தக் கையே;
அணங்கனையார் வணங்கிநித்தம்
போற்றும் இந்தக் கையே;

பேருக நன்னகரம் காக்கும்
இந்தக் கையே;
பிறவாத நெறியார்க்கும்
ஏற்கும் இந்தக் கையே.

கல்வித் துறையில் மூளை முக்கியமென்று கருதுகிறோம். இத்தகைய முக்கிய ஸ்தானம் இயக்கத்திற்கோ, கைத் திறனுக்கோ அளிக்கப்படுவதில்லை. கல்வியாளனுக்கு மூளைத்திறன் முக்கியமென்றும், தத்துவ சாஸ்திரிக்குத் தியான சக்தி முக்கியமென்றும் நினைக்கிறோம். ஆனால் சதைப் பற்றுகளின் செயலாகிய இயக்கமில்லாமல் சிந்தனையோ, தியானமோ, நுண்ணறிவோ எவ்வாறு பயன்படக் கூடும்?

சரீர முயற்சியாகிய உடற் கல்விக்கு இயக்கம் இன்றியமையாத தென்று நீண்ட காலமாகக் கல்வித் துறையாளர்கள் கருதி வந்திருக்கிறார்கள். எத்தகைய கல்விக்கும், ஆத்ம வித்தைக்கும் கூட இயக்கம் இன்றியமையாதது. இயக்கமின்றி வளர்ச்சியே இல்லையென்பது புதுமுறைக் கல்வியின் ஓர் உயிர் நிலைக் கொள்கை.

இயக்கத்திற்குக் காரணமான சதைப் பற்றுகள் சரீரத்தின் முக்கியமான பகுதியாகும். இந்தச் சதைப் பற்றுகளுக்கு உதவுவன எலும்புக்கூடும் எலும்புகளும். இந்த இரண்டும் போக மிச்சமாக உள்ளது அதிகமில்லை; மிகவும் சொற்பமானது தான். எலும்புகளும்

சதைப் பற்றுகளும் சேர்ந்தே அமைப்பும் அழகும் தந்து இயக்கங்களுக்கும் உதவுகின்றன.

விலங்குகளில் இயக்கத்தின் பூர்ண நிலையும் இயற்கையின் வரப் பிரசாதமாகக் கிடைப்பது தான். புலியின் அழகிய பாய்ச்சலும், அணில் ஆடி ஓடுவதும் இயற்கையாக நடைபெறுகின்றன. மனிதனே சூழ்நிலையில் அநுபவங்களைச் செலுத்திச் செலுத்தி இயக்கங்களைப் பிணைத்துக் கொள்கிறன். எத்தகைய இயக்கத்தையும் இவன் சாதிக்கக்கூடும். குழந்தை தன் இயக்கங்களைப் படைத்துக் கொள்கிறது; அவற்றைப் பூர்ண நிலைக்கும் கொண்டு வருகிறது.

மனிதன் தன் இயக்கங்களை அடக்கி ஆள முடியும். விலங்குகளைக் காட்டிலும் இயக்கங்களை விஸ்தரித்துக் கொள்ளவும் முடியும். சித்த சக்தியால் மனிதன் இப்படிச் செய்ய முடியும்.

உயிருடன் இருப்பதற்கு அடையாளம் இயக்கமே தான். உயிர் ஒரு நோக்கத்துடனும் நியமங்களுடனும் இயங்குகிறது. உலகில் இயக்கம் இல்லாவிட்டால் செடி கொடிகளிலும் மரங்களிலும் பூவோ பழமோ கிடைப்பதற்கும் வழியில்லை. இயக்கம் நின்றுவிட்டாலும், இயக்கம் ஒரு நோக்கமின்றியே நடைபெற்று வந்தாலும், உலக ஒழுங்கு நிலைகுலைந்து போகும். எல்லா மனிதர்களும் ஒரு வாரம் இயக்கமின்றி இருந்துவிட்டால் சாக வேண்டியதுதான்!

வேலையும் இயக்கமும் ஒன்றே. உபயோகமான ஒரு நோக்குடன் இயங்கும்போது தான் சமுதாய வாழ்வு உறுதிப்படும். ஒவ்வொருவருடைய இயக்கத்

திற்கும் ஒரு பரந்த நோக்கமும் தேவையாகிறது. ஒவ்வொருவனும் தனக்காக மட்டும் இயங்கி வேலை செய்தால் போதாது; பிறருக்காகவும் இயங்கத் தான் வேண்டும்; வேலை செய்யத்தான் வேண்டும்.

ஆடுதல் தனி மனிதனுடைய இயக்கம் என்கிறார்கள். ஆனல் ஆடுவதைக் கண்டு களிப்பவர்களும் வேண்டுமல்லவா? எனவே, இந்த வகை இயக்கத்திற்கும் ஒரு சமுதாய நோக்கு ஏற்பட்டுவிடுகிறது.

ஆடுவதும் பாடுவதும் ஒருவன் தன் ஆத்ம தாபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக மட்டுமல்ல, பிறரை இன்புறச் செய்யவும் தான்.

'ஆடுக, ஆடுகவே' என்று குழந்தையை வேண்டிக் கொள்கிருள் தாய். இந்த ஆட்டம் குழந்தை-இன்பத்திற்காக மட்டுமல்ல, தாயின் இன்பத்திற்காகவும் தான். குழந்தையின் சரியான வளர்ச்சி சமுதாய வளர்ச்சியும்தான்.

11. பேசும் பொற்சித்திரம்

'பிள்ளைக் கனியமுதே!' என்று தாய் கூப்பிடுகிறாள். 'பேசும் பொற் சித்திரமே!' என்று கொஞ்சுகிறாள். தாய் முதலானவர்கள் பேசுவதைக் கவனித்துக் கவனித்துத் தான் குழந்தையும் பேசக் கற்றுக்கொள்ளுகிறது. எவ்வளவு கஷ்டமான பாஷை தாய் மொழியாக இருந்தாலும் அதைக் குழந்தை எளிதில் கற்றுக்கொண்டு விடுகிறது. சூழ்நிலையில் உள்ள பாஷை பலவாயினும் அவற்றை யெல்லாம் குழந்தை நன்ருகப் பேசக்கூடும்.

கற்றுக்கொள்ள வேண்டுமே என்று சிரமப்பட்டுக் குழந்தை தன் சூழ்நிலையில் வழங்கும் பாஷைகளைக் கற்றுக்கொள்வதில்லை. இந்தக் 'கல்வி' குழந்தையுள்ளத்தின் ஆழ்ந்த பகுதியிலே ஆரம்பமாகிறது. அந்த இருண்ட பிரதேசத்தில் இந்த மொழிக் கல்வி கருவாகி உருவாகி, நிலைபெற்ற உடைமையும் ஆகிவிடுகிறது.

முதியவர்கள் ஒரு பாஷையைக் கற்க வேண்டும் என்ற விருப்பத்துடன் முயன்று கற்கிருர்கள். மன உணர்ச்சிக்கு அப்பாலுள்ள ஒரு சாதனம் அல்லது சாதனங்கள் வாயிலாகவும் கல்வி கற்க முடியும் என்பது ஒரு விசித்திரமான செய்தி தான். உள் மனத்தின் ஆழத்தில் நடப்பதை முதியவர்களாகிய நாம் கண்டு கொள்ள முடியாது; வெளித் தோற்றங்களைத் தான் நாம் பார்க்க முடிகிறது. இந்தத் தோற்றங்களி

லிருந்தே உள்ளத்தின் ஆழத்தில் நிகழ்வதை ஊகித்துக்கொள்ள வேண்டும். இந்த நிகழ்ச்சி சாதாரணமாகக் குழந்தை யுலக மெங்கும் நடைபெறுவதால் இதை ஊகித்து அறிந்து கொள்வதில் சிரமம் இல்லை.

தாய்மொழி எவ்வளவு கடினமாக இருந்தபோதிலும் அதைக் கற்றுக்கொள்வதில் குழந்தைக்குச் சிரமமோ களைப்போ ஏற்படுவதில்லை. நிழற்படம் பிடிக்கும்போது ஒருவரைப்போல் பத்துப் பேரையும் படம் பிடித்துக் கொள்வதில் விசேஷ சிரமம் ஒன்றும் இல்லையே. ஆனால் சித்திரம் எழுதுவது இத்தகைய எளிய காரியமன்று. பத்துப் பேரைச் சித்திரிப்பது ஒருவனைச் சித்திரிப்பதைக் காட்டிலும் அதிக சிரமமான வேலை தான்.

நிழற்படம் எடுப்பதும் இருட்டிலே; இதை உருவாக்கி வளர்த்துக் காட்டுவதும் இருட்டிலே நடைபெறும் நிகழ்ச்சிதான். இது இருட்டிலே நிலைத்துக் கடைசியாக வெளிச்சத்தில் வெளிப்பட்டு மாற்ற முடியாத நிலையில் இருக்கிறது. இது போன்ற ஒருவகை நிகழ்ச்சி குழந்தை யுள்ளத்திலே பாஷையைக் கற்க உதவும் சூட்சும சாதனத்திலே நிகழ்வதாய்க் கருதக்கூடும்.

குழந்தை பிறந்தது முதல் சரியாகக் கவனித்து வந்தால் குழந்தை 'பேசும் பொற் சித்திர'மாவதற்கு முன் சில மைல்-கற்களான நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொள்ள முடியும். வெளித் தோற்றத்தில் விசேஷ மாறுதல் இல்லாமலே உள்ளுக்குள்ளே ஓர் அதிசயப் பெருவளர்ச்சி நிகழ்வதைக் காணலாம். இந்த வளர்ச்

சிக்குத் தக்கபடி வெளித் தோற்றங்களில் ஒரு தொடர்ச்சியைக் காண முடியாது.

குழந்தை சொற்களின் பகுதிகளை உச்சரிப்பதிலே தான் முதல் முதல் வெற்றி காண்கிறது. அம்மாவை 'ம்மா' என்று தன்னை அறியாமலே சொல்லத் தொடங்குகிறது; அர்த்தமில்லாமலே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறது. இப்படிச் சில மாதங்கள் கழிந்துவிடும், வெளித் தோற்றத்தில் வளர்ச்சி தெரியாமலே. பிறகு திடீரென்று ஒரு முழு வார்த்தையைக் குழந்தை சொல்லிவிடும்.

'அம்மா' 'அப்பா' என்று தெளிவாகச் சொல்லக் கூடும்; ஒன்று அல்லது இரண்டு சொற்களுடன் நீண்ட காலம் அப்படியே இருப்பது போலத் தோன்றும்; அபிவிருத்தி இல்லையோ என்று சொல்லவும் தோன்றும். ஸ்தூல அபிவிருத்தியில் இத்தகைய மந்த நிலை கண்டு முதியவர்கள் அதைரியம் அடையவும் கூடும். ஆனால் திடீர்-நிகழ்ச்சிகளிலிருந்து அகவாழ்வில் ஒரு பெரு வளர்ச்சி தொடர்ந்து நிகழ்வதை ஊகித்துக் கொள்ளுகிறோம்.

குழந்தை-வளர்ச்சியின் இந்த நியமத்தை உலக மக்களின் சரித்திரத்திலும் காண்கிறோம். பல நூற்றுண்டுகளாக ஜன சமுதாயம் வளர்ச்சி பெருத நிலையில் இருப்பதாகவும், திடீர்-நிகழ்ச்சிகளால் புரட்சிகரமான வளர்ச்சி ஏற்படுவதாகவும் சரித்திரம் தெரிவிக்கிறதல்லவா? சரித்திரம் வெளித் தோற்றத்தைத் தான் பதிவு செய்து காட்டுகிறது. உள்ளுக்குள்ளே தொடர்ந்த வளர்ச்சி இருப்பதைத் தான் திடீர்-நிகழ்ச்

சிகள் வெளியிடுகின்றன. இப்படித்தான் வரலாற்றுத் தத்துவம் உணர்ந்த அறிஞர்கள் ஊகம் செய்வார்கள்.

குழந்தை பாஷை கற்கும் கதையும் நாகரிகம் வளர்ந்துவரும் கதையை நினைவூட்டுகிறது. வார்த்தை வார்த்தையாக மெள்ள மெள்ளக் கற்றுவருவதுடன், திடீரென்று உரிய பருவத்தில் வார்த்தைப் பிரவாகமே வந்துவிடுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் இந்தப் பருவத்தை ஒட்டி மூன்று மாதங்களில் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும், காலம், பால், வேற்றுமை முதலான விகற்பங்களுடன் எளிதாக வசமாகி விடுகின்றன. இரண்டாம் ஆண்டின் இறுதிப் பருவத்திலே ஒவ்வொரு குழந்தையிடத்திலும் இத்தகைய நிகழ்ச்சியைக் காணலாம். இரண்டாவது வயதிற்குப் பின் இது தொடர்ந்து நடைபெறுகிறது.

சாதாரண வாக்கியங்கள், தொடர் வாக்கியங்கள், இறந்தகால நிகழ்கால எதிர்கால வினைச் சொற்கள் முதலியன திடீரென்று குழந்தை வாயிலிருந்து புறப்படக் காண்கிறோம். இப்படித் தாய்மொழி அல்லது சூழ்நிலைமொழி குழந்தைக்கு வசமாகிவிடுகிறது. இதன் பொருள் என்ன? உள்மனம் தயாரித்துவரும் மூல பொக்கிஷம்தான் புறமனத்திற்குப் புதையல் எடுத்த பொருள் போலக் கிடைத்துவிடுகிறது.

இந்தப் புதிய சக்தியைப் பெற்றுக்கொண்ட குழந்தை பேசத் தொடங்கிவிட்டால், மேலும் மேலும் பேசிக்கொண்டேதான் இருக்கும். ஒரே பேச்சுப் பிரளயம்தான். முதியவர்களுக்குப் 'போதும், போதும்' என்று ஆகிவிடும். இரண்டரை வயதில் குழந்தையின் ஜீவயாத்திரையிலே ஒரு பெரிய மைல்-கல் இது.

பிறகு, திடீர்-நிகழ்ச்சிகள் இன்றி, 'பேசும் பொற் சித்திரம்' பாஷையைப் பேசிப் பேசித் தெளிவான வளர்ச்சிநெறியில் போய்க்கொண்டே யிருப்பதைக் காணலாம். நாலரை அல்லது ஐந்து வயதுவரை, மொழிவளர்ச்சிப் பாதையின் இந்த இரண்டாவது பகுதியைக் காண்கிறோம்.

இக்காலப் பகுதியில் பல வார்த்தைகளுடன் குழந்தை வாக்கியங்களின் முழு அமைப்பையும் தெரிந்துகொள்ளுகிறது. சூழ்நிலையிலுள்ளவர்கள் நாக ரிகமும் பண்பாடும் இல்லாதவர்களாக இருந்து சில சொற்களையோ, கொச்சைப் பேச்சையோ மட்டும் பேசிக்கொண்டிருந்தால், அத்தகைய மொழிப்பஞ்சம் தான் குழந்தைக்குக் கிடைக்கும்! பண்பட்ட பேச்சும் சொற்செல்வமும் குழந்தையைச் சூழ்ந்துகொண்டிருந் தால், அத்தகைய மொழிச் செல்வத்தின் உரிமை கிடைத்துவிடுகிறது, இந்தப் 'பேசும் பொற்சித்திர'த் திற்கு.

தக்க சூழ்நிலையில் இரண்டரை வயதுக் குழந்தைக் குச் சுமார் 200 முதல் 250 வார்த்தைகள் தெரியும். ஐந்து வயதாகும் பருவத்திலோ இவனது மொழிக் களஞ்சியத்தில் ஆயிரக்கணக்கான வார்த்தைகள் வந்து குவிந்துவிடுகின்றன. உபாத்தியாயர் இல்லாமலே இவ்வளவும் நடைபெறக் காண்கிறோம். குழந்தையின் சொந்த சம்பாத்தியமும் சேமிப்பும் இவை.

இந்த நிலையில்தான் இந்தப் பேச்சாளனை 'வா; பள்ளிக்கூடத்திற்கு. உனக்கு அ, ஆ, இ, ஈ கற்பிக்கி றேன்' என்று உபாத்தியாயர் சொல்லுகிறார். பிரம்பும்

கையுமாக இந்தப் 'பேசும் பொற்சித்திர'த்திற்கு அரிச்சுவடி கற்பித்த காலம் இன்னும் பழங்காலமாய்க் கதையாய்க் கனவாய்ப் போய்விடவில்லை!

குழந்தைக்கு உரிய மொழிக்கல்வி- வளர்ச்சி இரட்டைப்பாதை என்பதை நாம் நினைவில் இருத்திக் கொள்ளவேண்டும். அதாவது, உள்மனத்தின் ஆரம்பச் செயலும், பிறகு புறமனம் படிப்படியாகத் தோன்றி வந்து உள்மனம் கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளுவதும் ஆகிய இரட்டைப்பாதை. பலன்: ஐந்துவயதுக் குழந்தை-மனிதன் தனக்குரிய பாஷையை நன்ருக விதி நியமங்களுடன் தெரிந்து பயன்படுத்திக் கொள்ளுகிருன் என்பதே. குழந்தை தனக்குத்தானே உபாத்தியாயனுக இருந்து செய்துகொண்ட காரியம் இது.

இக் குழந்தையைக் குழந்தைதானே என்று அலட்சியம் செய்ய முடியுமா? 'பேசும் பொற்சித்திரமே!' என்று கொஞ்சினுல் தான் போதுமா? இத்தகைய சிருஷ்டிவேலை செய்யத்தக்க பருவத்திலுள்ள மனிதனல்லவா இந்தக் குட்டி மனிதன்? நாகரிகத்தின்அடிப்படையை அமைத்துக் கொடுப்பவன் இந்தக் குட்டி மனிதன் தானே? எனவே, இவனுக்குத் தேவையான உதவியை நாம் அளிக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிருர் டாக்டர் மாண்டிஸோரி.

நாலுமாதக் குழந்தை முதியவர் வாயிலிருந்து புறப்படும் ஒலியை ஓர் அதிசய கீதமாக அநுபவிக்கிறது. அசையும் உதடுகளைக் குழந்தை எவ்வளவு ஜாக்கிரதையாகக் கவனிக்கிறது பாருங்கள்! இப்படிஇரண்டு மாதம் கவனித்தபின்—ஆருவது மாதத்தில்—குழந்தை

உதடுகளைக் குவித்துத் தெளிவாகத் தானும் தன் போக்கிலே ஒலிசெய்கிறது. 'பா, பா' 'மா, மா' என்று சொல்லி 'அம்மா' 'அப்பா' என்ற சொற்களையே நமது பாஷைக்குக் கண்டுபிடித்துக் கொடுத்தது குழந்தை தான் என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். 'இம் மூன்றெழுத்து மொழிகள் இரண்டையும் பாஷை கற்றுக்கொள்ளக் குழந்தை ஜபிக்கும் மூலமந்திரங்களோ!' என்று வியக்கிறோம்.

இத்தகைய குழந்தைக்கு முதியவர்களாகிய நாம் செய்யவேண்டிய உதவி குழந்தையைச் சரியான முறையில், சூழ்நிலையில், வளரவிட்டு அந்த வளர்ச்சிக்குத் தடை ஏற்படாதபடி பார்த்துக் கொள்வதுதான்.

தாய்மொழியை—அதாவது சூழ்நிலை மொழியை—முதல் முதல் இசையென்ற அளவிலே தெரிந்து கொண்ட குழந்தை, பத்து மாதமானதும், 'மொழி என்பது இசைமட்டுமல்ல, இதில் ஒரு நோக்கமும் இருக்கிறது' என்று, பேசுவோர் வாய்பார்த்தே தெரிந்து கொள்ளுகிறது.

'குழந்தாய்! நீ எங்களுக்குக் கிடைத்த செல்வம்; நீ பேசும் பொற்சித்திரம்!' என்றெல்லாம் அன்பு கனியக் கொஞ்சும்போது, 'இவ்வளவும் எனக்குத்தான்' என்பதைக் குழந்தை உணர்ந்து கொள்ளுகிறது. இந்த உணர்ச்சியிலிருந்துதான் மொழியின் நோக்கம் புலனாகிறது. இதை நன்குணர்ந்து கொண்டால், குழந்தை காண நாம் நமது முகத் தோற்றத்திலும், குழந்தை கேட்க நாம் ஒலிக்கும் ஒலிகளிலும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் என்பது தானே புலனாகும்.

தாய் உச்சிமோந்து கன்னம் தடவி, 'அம்மம்மா' 'அப்பப்பா' 'தாத்தாத்தா' பாப்பாப்பா' என்றெல்லாம் சின்னஞ்சிறு சொற்களையும், சொற்களின் பகுதிகளை யும் எளிதாகத் தெளிவாக உச்சரித்துக் குழந்தைமுகம் நோக்கிக் கொஞ்சும்போது, இந்த ஓசைகள் இசை மயமாக, இன்ப மணியோசைபோல், இளஞ்செவிகளில் விழுகின்றன. நாம் மணியோசையை வேறு ஓசைகளி லிருந்து பிரித்து அறிவதுபோல், குழந்தையும் கொஞ் சும் பாஷையை—முத்தாடும் மணிமொழிகளை—த் தெரிந்துகொள்ளுகிறது.

குழந்தையோடு கொஞ்சி முத்தாடிக் கன்றுக்கு இரங்கும் கறவைப் பசுப்போல் நெஞ்சுருகி மொழி குழ றிக் குழந்தைச் சிரிப்பைப் பெறுவது தாய்க்கு ஒரு கல் லாக் கலை! இந்தக் கலையைத் தாய் கற்றுப் பயிற்சி செய் தும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். இக் கலையை ஒருவாறு சார்ந்ததுதான் தாலாட்டும்.

தாலாட்டு (அவசியமும் அளவும்)

கொஞ்சும் மொழிகளையும், தாலாட்டுப் பாட்டையும் குழந்தைகள் பெரிதும் ரஸிக்கின்றன—கவிதையை ரஸிக்கும் ரஸிகர்போல.

ஆராரோ ஆராரோ
ஆரிரா ராரிரரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரிரா ராரிரரோ

என்று தொட்டிலில் இட்ட குழத்தையைத் தாலாட்டிச் சீராட்டும்போது குழந்தை எப்படி வசீகரிக்கப்படுகிறது!

இப்பொழுது மகிழ்ச்சி இளநகையாக அரும்பாமல் முகத்திலே ஒருவகை அமைதியாக மலர்கின்றது.

பாட்டியோ, தாயோ, அத்தையோ, அக்காளோ தாலாட்டிச் சொன்ன சொன்ன வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் குழந்தைக்கு மிகவும் இனிய எளிய ராகத்தில் பாடித் தொட்டிலை ஆட்டுவார்கள். இப்படிப் பாடி ஆட்டிக் கொண்டிருக்கும்போதே, திருப்தியும் மகிழ்ச்சியும் இன்ப உணர்வும் குழந்தையை ஸ்தூல லோகத்திலிருந்து சொப்பன லோகத்திற்குக் கொண்டுபோய் விடுகின்றன.

இந்த நிலையில் குழந்தையின் முகத்திலே தெய்விக அமைதி தவழ்கின்றது. இந்த உறக்க நிலையிலே இந்த அமைதி புன்சிரிப்பாகவும் வெளிப்படுவதுண்டு.

அழும் குழந்தையைத் தொட்டிலில் உறங்கவிட்டுத் தாலாட்டுப் பாடும்போது, அந்த லாஹிரியிலே மயங்கி அக்குழந்தை அமைதியுற்று உறங்கிவிடுகிறது.

தாலாட்டுப் பாடும் தாய் பாட்டின் பொருள் நயத்திலே அதிகமாய்க் கவனம் செலுத்துவதில்லை.

ஆறிரண்டும் காவேரி,
அதன் நடுவே சீரங்கம்;
சீரங்க மாடித்
திருப்பாற் கடலாடி,
தைப்பூச மாடித்
தவஞ்செய்து வந்தானோ?

என்று அதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லி ஒரே பண்ணில் பாடிக்கொண்டே தொட்டில் ஆட்டுவார்கள்.

தாலாட்டும்போதே தாய்க்கு உணர்ச்சி மேலிடுவதுவும் உண்டு. அப்போது,

ஆளப் பிறந்தானோ?
அரசாள வந்தானோ?
அஞ்சு குடிக்கரசோ?
பஞ்சவர்கள் பாற்குடமோ?

பாட்டனுர் ஆண்ட
பழுதில்லா ராச்சியத்தைத்
தாயாதி ஆளாதே
தானுள வந்தானோ?

தோப்பனுர் ஆண்ட
தோப்புத் துரவுகளை
ஆளப் பிறந்தானோ?
அரசாள வந்தானோ?

என்றெல்லாம் தாலாட்டுப் பாடத் தொடங்குகிருள்.

தாலாட்டு-லாஹிரியில் குழந்தை மயங்குவது போல் குழந்தை-லாஹிரியில் தாய் மயங்கித்தான் தன் குழந்தையை அரசாக்கி முடிசூட்டுகிருள். பாட்டனுர் ஆண்ட பழுதில்லாத ராஜ்யத்திற்குப் பரப்பு, சில வயல்களும் தோப்புத் துரவுகளுமே! 'தோப்பனுர்' காலத்தில் 'ராச்சிய' எல்லை இன்னும் குறுகிப்போகிறது. வயல்களும்போய், தோப்புத் துரவுகளே மிச்சம்! எனினும், இந்தப் 'பழுதில்லா ராச்சியத்'திற்கும், தாயாரின் இருதய மகாராஜ்யத்திற்கும் தனி அரசல்லவா குழந்தை?

தாலாட்டுப் பாடல்கள் இலக்கணத்தோடு பொருந்தி அமையவேண்டும் என்பதில்லை. 'தகப்பனுர்' 'தோப்பனுர்' ஆகிருர்! இது இலக்கணப் பிழை

தான்; எனினும், 'தோப்புத் துரவுகள்' பெறுவதற்குத் 'தோப்பனுர்' பொருத்தம்தானே!

இப்படிப்பட்ட வாக்கில் 'மோனே' மொகனே' ஆகிவிடும்: 'எகனே, மொகனே' தவருமல் பாடுவார்கள், இலக்கணம் தவறிவிட்டாலும்!

ஆளப் பிறந்தானுக்(கு)
ஆரார் துணையிருப்பார்?

பக்கத் துணையிருப்பார்
பார்வதியும் ஈச்வரரும்!

சாரத் துணையிருப்பார்
சந்திரரும் சூரியரும்

நடுவே துணையிருப்பார்
நாரதரும் சீதரரும்

என்று பாடித் தெய்வங்களைத் துணையாக்குவாள்.

தாய் குழந்தையைக் கண்ணனுகவும் முருகனுகவும் பாவித்துப் பாடி ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ள தெய்வ அம்சத்தைத் தன்னை அறியாமலே குறிப்பிடுவதும் உண்டு.

நீலமயில் வாகனனே?
நீலவண்ண மோகனனே?

என்று சந்தேகிப்பது போல் பாடுவாள்.

ஆறுமுகத் தானே?
ஆறிரண்டு தோளானே?

என்றும்,

கண்களிக்க வந்த
கண்ணபிரான் நீதானோ?

என்றும் பாடிப் பரவசமாவாள்.

இப்படியெல்லாம் பாடும்போது, இந்த ஓசைகள் மணியோசைபோல் குழந்தைக் காதுகளில் விழுந்து பரவசப்படுத்துகின்றன. குழந்தை புறவுலகத்தை விட்டுக் கனவு-லோகத்திற்கு யாத்திரை செய்கிறது.

குழந்தை உறங்காமல் அழுதுகொண்டே யிருந்தால்,

ஆளப் பிறந்தான்
அழுகுரலைத் தான்கேட்டு
அழைத்து விளையாட
அன்னம் வந்து நிற்கிறது!

மாடப் புறாவெல்லாம்
கூவப் படாதென்று
குரல்காட்டி நில்லாமல்
நிழல்காட்டி நிற்கிறது!

என்று மேலும் பாடித் தாயோ, பாட்டியோ, அக்காளோ குழந்தையை உறங்க வைப்பதுண்டு.

குழந்தை மேலும் மேலும் அழுதுகொண்டிருந்தால், மேலும் மேலும் தாலாட்டுப் பாட்டு வந்த வண்ணமாயிருக்கும், சொற்பமான ஸ்வர பேதங்களுடன். தாய் தன்னுடையசாமர்த்தியங்களையும் வெளியிட்டு,

அடிச்சாரைச் சொல்லியழு;
ஆக்கினைகள் பண்ணிவைப்போம்

என்று தாலாட்டுவாள்.

இப்படியெல்லாம் பாடிக்கொண்டிருக்கும்போதே, 'தாயாருக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா?' என்று தெரிந்துகொள்ளாமலே குழந்தை உறங்கி அமைதி யாகச் சொப்பன லோகத்திலே பிரவேசித்துவிடும். குழந்தை வளர்ச்சிக்கு இவ் அமைதி மிகவும் அவசிய மானது.

பார்க்க முயல்வதில் குழந்தைகளுக்கு இயற்கை-விரோதமான சிரமம் ஏற்படுமாறு சுழலும் பொருள் களைத் தொட்டிலில் கட்டுவது சரியன்று. ஒழுங் கீனமான காட்சிகளும் குழந்தைகளின் அமைதிநிலை யைக் குலைத்து அழுகை மூட்டக் கூடும்.

குழந்தைக்குப் புரியாத வார்த்தைகளும் தாயின் அன்பை வெளியிடுவதால் தாலாட்டுப் பாடும்போது அந்தக் குரலுக்கு ஒரு வசீகர இனிமை தருகின்றன.

கொட்டிவைத்த முத்தே!
குவித்தநவ ரத்தினமே!
கட்டிப் பசும் பொன்னே!
கண்மணியே! கண்வளராய்

என்பது போன்ற தாலாட்டுப் பாடல்கள் குழந்தைக்கு மிகவும் அவசியமான தாயன்பை ஒருவாறு அபி விருத்தி செய்கின்றன.

தாலாட்டுப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே உறங்கப் பழகும் குழந்தைகள் மேலும் மேலும் அத் தகைய பாடல்களைக் கேட்க ஆசைப்படும். அத்தகைய தாயன்பும், கொஞ்சும் குரலும் குழந்தையின் சூட்சும வளர்ச்சிக்கு அவசியமானவை.

அப்பா என் ஆருயிரே!
ஆருயிர்க்கும் ஆருயிரே!
ஒப்பாரும் மிக்காரும்
இல்லா ஒளிவிளக்கே!

கண்ணுக்(கு) இனியானே!
கட்டழகில் மிக்கானே!
பண்ணுக் கினியானே!
பாகொழுகும் சர்க்கரையே!

தேனின் மதுரமே!
செங்கரும்பின் திம்பாலே!
மானேர் விழியார்
மனமுருக்கும் குஞ்சரமே!

நந்தாத கோமளமே!
நாடரிய சொற்பொருளே!
சிந்தாமணி வடிவே!
தித்திக்கும் தெள்ளமுதே!

(நம்மாழ்வார் தாலாட்டு)

என்றெல்லாம் பாடித் தாலாட்டுகிறவர்கள். தம் உள்ளத்திலுள்ள அன்பைக் குழந்தைக்கு ஒரு ரட்சையாகச் செய்துவிடுகிறார்கள் எனலாம்.

ஒளியும் நிறங்களும் ஒலிகளும் குழந்தையின் கவனத்தைப் பெரிதும் வசீகரிக்கின்றன. இவற்றால் உண்டாகும் மகிழ்ச்சியைக் குழந்தை வெளிப்படையாகக் காட்டுகிறது. தாலாட்டுப் பாடலின் ஒலிகளோ குழந்தையை வசீகரித்து அமைதி நிலையில் கொண்டு விடுகின்றன. எனினும், குழந்தை முதியவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறது என்று அடிக்கடி தாலாட்டித் தூங்கப் பண்ணுவது நலமன்று. அமைதியும் உறக்கமும் தேவைக்கு அதிகமாகக் குழந்தைமீது திணிக்கப் பட வேண்டாம்.

சுருங்கச் சொன்னல், குழந்தை வளர்ச்சிக்கு இயற்கை அமைத்திருக்கும் வழியிலே முதியவர்களாகிய நாம் இடையூறு விளைவிக்கலாகாது. நமது பேராசைகளுக்கும் வாழ்க்கை யின்பங்களுக்கும் குழந்தையை இடையூருகக் கருதித் தாதிவசமோ, உபாத்தியாயர் வசமோ ஒப்புவித்து 'அப்பாடா!' என்று இருப்பதும் தவறு.

கருப்பை என்ற சிறையிலிருந்து வெளிப்பட்டு வந்த குழந்தையைச் செல்வர்கள் ஒரு செவிலித் தாயிடம் சிறை வைப்பது குழந்தையின் அறிவு-வளர்ச்சியை அடக்கி ஒடுக்குவதேயாகும். வளர்ப்புத் தாய் அல்லது 'ஆயாள்' குழந்தையை நெடும்பொழுது தூங்க வைத்து விடுவாள். இது இயற்கைக்கு விரோதமான காரியம்.

அன்பின் பெயராலேயே நடந்தாலும் பிசகு பிசகு தான்! குழந்தையைத் தாலாட்டித் தூங்கப் பண்ணுவதுதான் நாம் அதற்குச் செய்யவேண்டிய கடமை என்று கருதுவது குழந்தைக் கலேயின் அடிப்படையையும் அறிந்துகொள்ளாதவர் நிலே.

வேண்டாத சமயமெல்லாம் தூங்கச் செய்வது குழந்தையை அனுவசியமாக ஒருவகை 'ஹிப்னுடிஸ' நித்திரைக்கு உட்படுத்தி வலிமை வாய்ந்த சித்தத்தால் பலவீனமான சித்தத்தை அடக்கியாளுவதாகும். இது எப்படிக் குழந்தைக்கு நலம் தரும்? உறக்க மருந்து கொடுத்துக் குழந்தையை உறங்கச் செய்வதற்கும், இந்தத் தாலாட்டு முறைக்கும் அதிக வேற்றுமையில்லே.

ஆனால், மேலே சொன்ன தாலாட்டுப் பாட்டுகள் அழகாய் இருக்கின்றன அல்லவா? ஆம், இத் தாலாட்டுப் பாட்டுகளில் கவிதை இருக்கிறது. பெரியாழ்வார் காலந்தொட்டுக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை காலம் வரையிலும் அழகான தாலாட்டுப் பாடல்கள் இயற்றப் பெற்றுள்ளன. இப்பாடல்களுக்குத் தமிழிலக்கியத்தில் ஒரு ஸ்தானம் உண்டு. ஆனால் லாஹிரி மருந்தாக எப்போதும் தாலாட்டை உபயோகித்துக் குழந்தைகளைக் கெடுத்துவிடலாகாது.

பேச்சு விரைவில் வருவதில்லை

தாலாட்டு விஷயம் இப்படி இருக்க, குழந்தைக்கு மழலைப் பேச்சு எளிதில் வந்து விடுவதில்லை என்பதையும் தாய் கவனிக்க வேண்டும். கருப்பையில் பரிபூர்ண ஓய்வு பெற்றிருந்த குழந்தை சப்த மயமான பிரபஞ்சத்திற்கு வருகிறது. ஆழ்ந்த பேரிருளில் ஓய்ந்து பெரு மௌனத்தில் அமைதி நிலையிலே இருந்த ஜீவன் பிறந்து துடித்து அழுகிறது. இந்தத் தொண்டையானது இதற்குமுன் இயங்கியதே இல்லை. இந்தக் குரல் இதற்கு முன் கேட்கப்படவில்லை. இந்தச் சின்னஞ் சிறு காதுகளில் இதற்குமுன் ஒரு சப்தமும் விழுந்ததில்லை.

ஓர் அதிசய வெது வெதுப்பான நீருக்குள் எப்போதும் மூழ்கிக் கிடந்தவன் திடீரென்று குளிர்ந்த நீரில் எறியப்படுவது போல் இருக்கிறது புதிதாகப் பிறந்த குழந்தையின் நிலையும்.

குழந்தையின் மூச்சுப் பைகள் இதற்குமுன் ஒரு போதும் சுவாசித்து அறியாதவை. ஆதி முதல் மூடிக்

கிடந்த இப் பைகளைக் காற்று உடனே விரியச் செய்கிறது. அப்போது 'குவா, குவா' என்று புறப்படுகிறது அழுகை. அக் குழந்தைக்கு இப்போது வேண்டியது ஓய்வு, ஓய்வு, ஓய்வு தான்!

'கூவா, கூவா என்று கத்திய மனிதன் ரூவா, ரூவா என்று கத்துகிறானே!' எனப் பரிகசித்தார் ஒருவர். 'கூவா'வுக்கும் 'ரூவா'ய்க்கும் (ரூபாய்) இடையே, குழந்தை பாஷையில் பெற்றுக்கொள்ளும் பயிற்சியைச் சிந்தித்துப் பாருங்கள்!

கன்றுக்குட்டி பிறந்ததுமே தன் பாஷையை அறிந்து கத்துகிறது. மனிதக் குழந்தைக்கோ அழுகை தவிர வேறு பாஷை தெரியாது. குட்டி நாய் குலைக்கிறது. குட்டிப் பூனை 'மியா' பாஷையில் தன் தேவைகளைத் தெரிவிக்கிறது. இந்த வாயில்லாப் பிராணிகளுக்குள்ள ஆற்றலும் பச்சிளங் குழந்தைப் பருவத்தில் மனிதனிடம் காணப்படுவதில்லை.

ஒரு வயது ஆகும்போதுதான் குழந்தை ஒரு குறித்த கருத்தை வெளியிடும் வார்த்தைகளை முதல் முதல் பேசத் தொடங்குகிறான். பேச்சு நிரம்பாத மழலை—மென்மொழி தான்; ஆனால் இது குழந்தையின் கருத்து அல்லது விருப்பத்தை வெளியிடுகிறது. எனவே, இதற்கு உரிய வளர்ச்சி, வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், உள்ளே நிகழ்ந்து தான் இருக்கவேண்டும் என்பது உறுதி.

தன் சூழ்நிலையிலுள்ள பாஷையை வசப்படுத்திக் கொள்ள ஒரு பெரும் போராட்டம் நிகழ்கிறது. ஏற்கெனவே உள்ள கருவி அல்லது சாதனத்துடன்

உணர்ச்சி நடத்தும் போராட்டம் இது. இதுதான் மனிதனுடைய முதல் 'உலக மகாயுத்தம்!'

குழந்தை யறிவில் பல கருத்துக்கள் உதயமாகின்றன. அவற்றை முதியவர்கள் அறிந்துகொள்வார்கள் என்பதும் குழந்தைக்குத் தெரியும். ஆனால் அந்தக் கருத்துக்களை வெளியிடும் பாஷை-வசதி குழந்தை வசத்தில் இல்லை. வாழ்க்கையின் ஆரம்ப ஆசாபங்கம் இது.

இந்நிலையில் பாஷை கற்றுக்கொள்ளக் குழந்தை எந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போகிறது? உள்மனம் என்ற பாடசாலைக்குத்தான். அங்கே கற்றுக்கொள்ளும்படி ஆசை தூண்டுகிறது. இந்த விருப்ப உணர்ச்சிதான் பாஷையை விரைந்து கற்றுக்கொள்ளும் ஆற்றலைக் குழந்தைக்கு அளிக்கிறது. இப்பருவத்தில் குழந்தை பாஷை-விஷயத்தில் செலுத்தும் கவனத்தைத்தான் என்னென்பது?

இந்த நிலையில் முதியவர்களாகிய நாம் என்ன உதவி செய்கிறோம்? குழந்தையின் மழலையைத்தான் திருப்பிச் சொல்லுகிறோம். ஆனால், உள்ளேயிருக்கும் உபாத்தியாயர் எவ்வளவு கெட்டிக்காரர்! 'முதியவர்கள் உன்னோடு கொஞ்சுவதை மட்டும் நீ கவனித்தால் போதாது; அவர்கள் தங்களுக்கிடையே பேசிக்கொள்வதையும் கவனித்துக் கேள்' என்கிறார் அந்த உபாத்தியாயர்!

இந்த உபாத்தியாயர் அதட்டுவதில்லை; பயமுறுத்துவதில்லை. குழந்தையுடன் விருப்பத்தோடு விருப்பமாய்க் கலந்து பேசுகிறார்; உணர்ச்சியோடு உணர்ச்சி

யாய்க் கலந்து உறவாடுகிருர். எனவே, குழந்தை உபாத்தியாயரின் ஆணைக்கு இணங்கி மொழியை நன்ருகக் கற்றுக்கொள்கிருன். நாம் கொடுக்கவில்லை; ஆனல் அவன் எடுத்துக்கொள்கிருன்!

இந்த நிலையில் அறிவுள்ள முதியவர்கள் குழந்தைக்கு அறிவுடன் உதவி செய்யக்கூடும். ஒரு வயதிற்கு மேற்பட்ட குழந்தை பாஷை விஷயமாகப் படும் பாட்டை அறிந்துகொண்டு, பாஷையைச் சரியாகக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைக் குழந்தைக்கு அளிக்கும் இல்லம் அல்லது பள்ளிக்கூடத்திற்குக் குழந்தையை நாம் அனுப்பிவைக்கலாம்.

பல்கலைக் கழகம் எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்திருக்கும் நாம் ஒரு வயதிற்குமேல் இரண்டு வயதிற்குள் குழந்தைப் பாஷை விஷயத்தில் உதவ இல்லம் தேவை என்பதை இன்னும் நன்ருக உணர்ந்து கொள்ளவில்லையே என்கிருர் மாண்டிஸோரி. இத்தகைய இல்லங்களில் உள்ள புதிய உபாத்தியாயர்களுக்குப் பாஷையின் வளர்ச்சி-நியதிகள் தெரிந்திருக்க வேண்டும். தாய்மாருக்கும் இந்த அறிவு அவசியமானதுதான். உபாத்தியாயர்களோ விஞ்ஞான முறையில் இதை அறிந்திருக்க வேண்டும்.

ஒரு வயது அல்லது இரண்டு வயதுக் குழந்தை தன் தேவையைச் சரியான வார்த்தையால் சொல்லி விளங்க வைக்கத் தெரியாததால் கோபங் கொள்ளுகிருன். காரணத்தைப் புரிந்துகொள்ளாமல் முதியவரும் கோபங் கொள்ளுகிருர்கள். குழந்தையைக் கோபக்காரன் என்றும், சண்டைக்காரன் என்றும், முரண்டுக்கா

ரன் என்றும் அன்புள்ளவர்களே சொல்லத் தொடங்குகிருர்கள்.

குலசேகராழ்வார் காட்டும் கவிதைக் காட்சி ஒன்றில்,

'உந்தை யாவன்?' என்று
உரைப்ப, நின் செங்கேழ்
விரலி னும்கடைக்
கண்ணினும் காட்ட
நந்தன் பெற்றனன்

என்று, குழந்தைக் கண்ணன் பாஷையில் பதில் சொல்லத் தெரியாத நிலையில் விரலாலும் கண்ணாலும் ஜாடையாகக் காட்டுவதைப் பார்க்கிரோம்.

தன் கருத்தை முதியவர் புரிந்துகொள்ளவில்லையே என்று குழந்தைக்குக் கோபம் வருவதையும்,

விரலைச் செஞ்சிறு
வாயிடைச் சேர்த்து
வெகுளியாய் நின்(று)
உரைக்கும் அவ்வுரையும்

என்ற குலசேகரர் வாக்கிலே காண்கிரோம்.

ஒன்றரை வயதில் குழந்தை ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயர் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளுகிறது. எனவே, ஸ்தூலப் பொருள்களைக் குறித்த பெயர்ச் சொற்களைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிறது.

ஆனல் பெயர்ச் சொற்களைக்கொண்டே விரும்பியதை வெளியிட முடியாததால், ஒரு முழுக் கருத்தையும் வெளியிடுவதற்கு ஒரு சொல் தேவையாகிறது. உதாரணமாக, 'அம்மம்' என்ற ஒரே வார்த்தையில் 'அம்மா,

எனக்குப் பசிக்கிறது; எனக்கு உணவு வேணும்' என்று பொருள்படப் பேசிவிடுகிறது குழந்தை. 'ஆ' என்ற ஓரெழுத்தொ மொழியிலும் தன் உணவுத் தேவையைக் குழந்தை வாய் திறந்து குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

ஒன்றரை வயதுக் குழந்தைக்கு ஒரு முழுச் சம்பாஷணையின் பொருளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உண்டு. உதாரணமாக, கோவிலுக்கோ ஆற்றங் கரைக்கோ போவது குறித்து முதியவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தச் சம்பாஷணை கொஞ்சநேரம் நடைபெற்று முடிந்ததும், குழந்தை 'நானும், நானும்' என்று அழத் தொடங்குவதைக் காணலாம். தன்னை விட்டு விட்டுப் போய்விடுவார்களோ என்ற எண்ணம்தான் இந்த அழுகைக்குக் காரணம்.

இத்தகைய சம்பாஷணை-விவரங்களைக் கவனிக்கும் ஆற்றலும் குழந்தைக்கு உண்டு. அக்கா அண்ணனை அடிக்கிறாள், இருவரும் சண்டை போட்டுக்கொள்ளவே அண்ணன் அழுகிறான் என்ற விவரங்களைக் குழந்தை 'அம்மா! அக்கா, அண்ணா, அடி' என்று அரைகுறையாக அபிநயித்துச் சொல்லுகிறான்.

அப்பா அம்மாவுடன் கடைவீதியில் போகையில் பொம்மைக் கடையைப் பார்க்கும்போது, குழந்தை 'அந்தப் பொம்மை எனக்கு வேணும்' என்பதற்கு, 'அம்மா! பாப்பா தா' என்று சொல்லிவிடுவதைக் கேட்கலாம். தெளிவாக நீளமாகச் சொல்லத் தெரியாததால், 'அம்மா சண்டை பிடிப்பாள்' என்பதை 'அம்மா சண்டிப்பாள்' என்று சுருக்கி விடுவதையும் கேட்கலாம்.

இத்தகைய பருவத்திலே, பாஷையைத் தெளிவாகச் சரியாகக் குழந்தைகள் கற்றுக்கொள்ளும் வசதிகளோடு கூடிய பள்ளிக்கூடங்களாகிய இல்லங்களில் பழகுவது நலம் என்பர் மாண்டிஸோரி.

இத்தகைய வாய்ப்பை அளிப்பதற்காக நாம் நண்பர்களைப் பார்க்கப் போகும் போது குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போகலாம். பேச்சாளர்கள் அழுத்தந் திருத்தமாக வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்கும் கூட்டங்களுக்கும் குழந்தைகளை அழைத்துச் செல்லலாம் என்கிறார் மாண்டிஸோரி.

இப்படியெல்லாம் முதியவர்கள் உதவியும் வசதிகளும் அளிக்க முடியும்; சூழ்நிலை அமைத்துக் கொடுக்க முடியும். ஆனால் குழந்தைக்குள்ளேயிருக்கும் ஓர் அதிசய சக்திதான் கடினமான பாஷையையும் வசமாக்கிக் கொண்டு தன் உள்ளத்தைப் பண்படுத்திக் கொள்ளுகிறது. இதைத் 'தெய்வ சக்தி' என்று கருதுவதிலும் தவறில்லை.

தன் உள்ளத்தில் உறையும் இறைவனை நோக்கி ஆழ்வார்களில் ஒருவர் தாய்மொழி விஷயமாகக் கூறுவது எவ்வளவு உண்மையானது!

நற்றமிழை வித்தி, என்
உள்ளத்தை நீ விளைத்தாய்,
கற்றமொழி யாகிக் கலந்து!

என்ற மெய்ஞ்ஞானியின் அருள்வாக்கிலே, தாய்மொழியை விதைத்து உள்ளத்தை விளைவித்துக் கொள்ளும் குழந்தையின் தெய்வ சக்தியும் குறிக்கப்படுவது போலத் தோன்றுகிறதல்லவா?

12. உணர்ச்சிப் பருவங்கள்

'சிறு பிள்ளை தானே' என்று அலட்சியமாகச் சொல்லுகிறோம். ஆனால் சிறுபிள்ளையின் பெருமையை மாண்டிஸோரி அம்மை மூலமாகத் தெரிந்துகொண்ட பின், குழந்தைப் பிரசினையும் இன்றைய உலகப் பெரும் பிரசினைகளில் ஒன்றாகிவிட்டது, குழந்தைக்காகப் பேசும் குரல் மாண்டிஸோரி என்பது இன்று தெளிவாகிவிட்டது.

உணர்ச்சிப் பருவங்களைத் தெரிந்து பயன்படுத்திக் கொண்டால் குழந்தையின் அறிவு வளர்ச்சியில் 'அற்புதமே நிகழ்ந்துவிட்டது' என்ற நிலையில் அபிவிருத்தி காணமுடியும். இதைக் கண்டு காட்டியவர் மாண்டிஸோரி.

வயது முதிர்ந்தவர்களிடம் இத்தகைய சிருஷ்டி-சக்தி காணப்படுவதில்லை. குழந்தையின் உணர்ச்சிப் பருவங்களில் உணர்ச்சி-வேகங்களுக்கும் சிருஷ்டி-சக்திக்கும் முதியவர்களால் தடை ஏற்படுகிறது. தன் உள்ளுணர்ச்சிகளுக்கு இணங்கி இயங்கமுடியாத நிலைமை குழந்தைக்கு ஏற்படும்போது, அந்த இயற்கை-வளர்ச்சிக்குரிய வாய்ப்பு அடியோடு நசித்துப் போகவும் கூடும். இதை முதியவர்கள் நன்குணர்த்துகொள்ள வேண்டும்.

புத்தம் புதிய சூழ்நிலையைக் குழந்தை சமாளித்துக் கொள்வதில் அலுப்புமில்லை, சலிப்புமில்லை. ஆனந்த

மாகவே சமாளித்துக்கொண்டு முன்னேறுவதைக் காண்கிறோம். உணர்ச்சிப் பருவங்களில்தான், ஒரு பாஷையையே கற்றுக்கொள்வது போன்ற வெற்றிகளைப் பெற்றுச் சூழ்நிலையை வசமாக்கிக் கொள்வதும் எளிதில் சாத்தியமாகிறது.

இப்பருவங்களில் குழந்தைக்கு இயக்கமெல்லாம் இன்பம்; வாழ்வதே இன்பம். ஒவ்வொரு முயற்சியும் ஆற்றலை வளரவிட்டுக் கொண்டே போகிறது.

சூட்சும சக்திகளின் வேகம் சுடர்விட்டு எரிகிறது. ஒரு சுடர் மங்கியதும் வேறொன்று சுடரக் காண்கிறோம். வெற்றியிலிருந்து வெற்றிக்குப் போகிறது குழந்தை. அப்படிச் செலுத்திக்கொண்டு போகிறது பிறவிவேகம். இத்தகைய வெற்றியின்பம்—வாழ்க்கையின்பம்—பிள்ளைப்பிராயத்திற்கே உரியது.

உணர்ச்சிப் பருவங்கள் முடிந்துபோனபின், அறிவும் சித்தபூர்வமான முயற்சியுமே வெற்றி தரவேண்டும். அறிவுத்திறன், ஆராய்ச்சித்திறன் இல்லாமல் முதியவர்கள் வெற்றிபெற முடியாது. எனவே, குழந்தை-மனோதத்துவத்திற்கும் முதியவர்-மனோதத்துவத்திற்கும் இடையே உள்ள பெரிய, அடிப்படையான, அதிமுக்கியமான வேற்றுமையை நாம் மறக்கக்கூடாது.

குழந்தைக்குள்ளே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த ஜீவ ஊற்று இருக்கிறதென்று பாவித்துக்கொள்ளலாம். இது சூழ்நிலையை இசைவித்துக் கொள்ளும் ரீதியில் தொழிற்படும்போது இடையூறு குறுக்கிட்டால் அதிர்ச்சியும் துன்பமும் ஏற்படுவதுடன்,

அந்த அச்சத்தில் குழந்தை நிரந்தர முடமாகி விடுவதும் உண்டு.

இயற்கைவேகத்திற்கு இடையூறு ஏற்படும்போது குழந்தை தன்னைப் பலிகொடுப்பதற்கு முன், இயன்றவரை எதிர்த்துப் பார்க்கிறது. இந்த முயற்சியை 'முரண்டு' என்றும், 'துடுக்கு' என்றும் கருதி, அடக்குமுறை ஆட்சியை முதியவர் மேற்கொள்வதுண்டு. உணர்ச்சிப் பருவங்களைக் குறித்தும், அவற்றின் இயற்கை-வேகம் குறித்தும் தெரிந்துகொள்வோர் குழந்தையின் எதார்த்த நிலை கண்டு முட்டுக்கட்டை போடாமல் துணைபுரியக் கூடும்.

ஒரு குறிப்பிட்ட உணர்ச்சிப் பருவத்தில் நிகழும் அகப் போராட்டத்தின் வெளித் தோற்றமாக ஏற்படும் முரண்டும் துடுக்கும் அடக்குமுறையால் பாதிக்கப்படாவிட்டால், அந்தப் பருவம் மறையும்போது அவை தாமே மறைந்துபோகின்றன, அத்துடுக்கும் முரண்டும் திருப்தி பெருத தேவைகளின் விளைவாக ஏற்படுகின்றன என்பதை உணர்ந்துகொண்டு, அவற்றை அபாய நிலைக்கு முற்றிப் போகும்படி விட்டுவிடாமல் உதவ வேண்டியது முதியவர் கடமையாகும். இந்தக் கடமையைச் சரியாகச் செய்தால் குழந்தைக்கும் முதியவர்க்கும் இடையே உறவும் சரியாகிவிடும்; பூசல் ஒழிந்து சமாதானம் ஏற்படும்.

உணர்ச்சிப் பருவம் குறித்த வேறு சில முக்கிய உண்மைகள்

உணர்ச்சிப் பருவம் ஒவ்வொன்றிலும் குழந்தையின் உள்ளுணர்ச்சி சூழ்நிலையில் வேண்டிய அம்சங்

களை மட்டும் வசமாக்கிக் கொள்கிறது. இந்த அம்சங்கள் மீது மட்டும் உள்ளே யிருந்து ஒளிவீசுவது போலத் தோன்றுகிறது. பிற அம்சங்கள் இருளில் மறைந்து கிடக்கின்றன. இப்படி உள்ளுணர்ச்சி ஒளி காட்டி வழி காட்ட, குழந்தை கண்டுகொள்வதே அதற்கு உரிய உலகமாகும்.

சில அம்சங்களைத்தான் கொள்ளவேண்டுமென்றும், சில நிலைகளில்தான் இருக்க வேண்டுமென்றும் ஆசை தூண்ட, குழந்தை அப்படிச் செய்வதுடன் அந்த அம்சங்களையும் பயன்படுத்திக் கொண்டு வளர்ச்சியடைகிறான்.

இத்தகைய வளர்ச்சிக்குரிய உணர்ச்சிப் பருவங்களில்தான், குழந்தையின் அகவாழ்வு வளமடைகிறது. சூழ்நிலையில் தன் ஸ்தானத்தைப் பெறுகிறான்; இயக்கத்திற்குரிய கருவிகளில் தீவிர உணர்ச்சியும் பெறுகிறான் குழந்தை.

உள்ளுணர்ச்சியில் அலையலையாக, ஒன்றன்பின் ஒன்றாக, வரும் தீவிர உணர்ச்சிகள் சூழ்நிலையில் மோதுகின்றன. அதனால் முதல் முதல் ஏற்படுவது குழப்பம்தான்—அதாவது, எல்லாம் குழம்பித் தோன்றும் நிலை. பிறகு தெளிவு காணப்படுகிறது. கடைசியாக, குழந்தையின் சுறுசுறுப்பே சிருஷ்டி-சக்தியாகி விடுகிறது. குழந்தை பேசக் கற்றுக்கொள்வதைச் சோதித்துப் பார்த்தால் இந்த உண்மை இனிது புலனாகும்.

முதல் முதல் சூழ்நிலையில் கேட்கும் சப்தம் குழந்தைக்கு ஒரே குழப்ப ஒலிதான். திடீரென்று இந்தக் குழப்பத்திலிருந்து தனிப்பட்ட ஒலிகள் கேட்கும்.

இவ்வொலிகள் குழந்தைச் செவிகளைக் கவர்கின்றன, ஏதோ ஒரு தேவகானம் போல.

புரியாத ஒரு பாஷை போல இவ்வொலிகள் ஒருமித்துத் தோன்றும். சிந்திக்கத் தெரியாத நிலையிலும் குழந்தையின் காது, தன் உலகத்திலே ஒருவகை இசையோடு வந்துசேரும் இந்த ஒலிக் கூட்டத்தைக் கூர்ந்து கேட்கும்; இன்புற்றுக் கேட்கும். நாளடைவில் குழந்தையின் நாவும் ஒலிகளைத் தோற்றுவிக்கும்.

'பீறிக் கொண்டு வருகிறது பேச்சு; விரைவில் வார்த்தைகள் வந்துவிடும்: என்ன துருதுருப்பு!' என்று உணர்ச்சிப் பருவத்தின் இயற்கைப் பெருவேகம் கண்டு பெண்கள் பேசிக் கொள்வதுண்டு.

துடிக்கு(து)என் உதடும் நாவும்;
'சொல்லுசொல்' எனவே நாவில்
இடிக்குது குறளி அம்மே!
இனிக்குறி சொல்லக் கேளே

என்று குறிகாரியைக் கவிஞர் வருணிக்கிறாரே, அந்த நிலையில் கவிதாசந்நதம் பெறும் கவிஞனும் இருக்கிறான். ஏறக்குறைய அந்த நிலையை நினைவூட்டுகிறது குழந்தையின் உணர்ச்சிப் பெரும் பருவத்தின் இயற்கை வேகநிலையும்.

தவிர்க்க முடியாத, விளக்க முடியாத, ஒரு சக்திக் குறளி இப்படியெல்லாம் ஆவேசித்துக் குழந்தையிடம் இத்தகைய முயற்சிகளைத் தோற்றுவிக்கிறதோ என்று கருதும்படி இவ்வளவு அதிசயமும் நடைபெறுகிறது.

ஆம்; குழந்தை இப்போது உணர்ச்சிப் பெரும் பருவம் ஒன்றை அநுபவித்த வண்ணம் அதைக்

கடந்துகொண்டிருக்கிறான். இந்தச் சிருஷ்டி-அற்புதம் மௌனமாக, இரகசியமாக நடந்துவருகிறது.

இத்தகைய உணர்ச்சிப் பருவத்தின் புறச்சான்று ஒன்றே ஒன்றுதான்—பொன்னகையைக் காட்டிலும் அழகான குழந்தைப் புன்னகைதான். நாம் அவனை நோக்கிப் பேசும்போது அவன் இன்பமடைகிறான். தாலாட்டுப் பாடும்போது அந்த இசையில் சொக்கிப் போய் இன்ப அமைதியில் மூழ்கிக் கிடக்கிறான். திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கும் வார்த்தைகள், கண்ணன் குழலிசைபோல, உணர்ச்சியுலகத்திலிருந்து அமைதியான கனவு-லோகத்திற்குச் செலுத்துகின்றன. அப்போதுதான் குழந்தைக்கு எவ்வளவு இன்பம்! இவையெல்லாம் சிருஷ்டி சக்தியோடு கூடிய உணர்ச்சிக்குத் திட்டமான சான்றுகளாகும்.

தன் உணர்ச்சிக்கு முரண்பாடுகளைச் சூழ்நிலையில் காணும்போது குழந்தைக்கு ஏற்படும் முரண்டு-வகைகளும் துன்ப நிலைகளும் கூட உணர்ச்சிப் பருவத்திற்குச் சான்றுகளேயாகும். இத்தகைய துன்ப நிலைகளால் சில குழந்தைகள் நோயுற்று வருந்துவதும் உண்டு. குழந்தைக்கு உரிய ஆரோக்கிய நூலில் இத்தகைய விஷயங்களையும் புறக்கணிக்க முடியாது.

ஒழுங்கு

உணர்ச்சிப் பருவங்கள் பல. அவற்றுள் அதி முக்கியமும் அதிக அதிசயமும் வாய்ந்த ஒரு பருவத்திலேதான் குழந்தைக்கு ஒழுங்கின் உணர்ச்சி விசேஷமாக ஏற்படுகிறது. ஒழுங்கைப் பற்றிய சாதாரண உணர்ச்சி முதல் வயதிலேயே ஏற்பட்டுவிடுகிறது.

அந்த உணர்ச்சிப் பருவம் இரண்டாவது வயதிலும் நீடிக்கக் காண்கிறோம். குழந்தையின் இந்த ஒழுங்கு-உணர்ச்சிக்கு முரண்பாடு நிகழும்போது, அது குழந்தையை அழச்செய்து முரண்டையும் தூண்டிவிடுகிறது.

மாண்டிஸோரியின் 'குழந்தை இல்லம்' என்ற பள்ளிக்கூடத்திலே குழந்தைகளின் நடவடிக்கைகளைச் சிறப்பாகக் கவனித்து வருகிறார்களல்லவா? இங்கே குழந்தையிடமிருந்து உபாத்தியாயர் தெரிந்துகொள்ளக் கூடிய ஒரு முக்கிய விஷயம் இரண்டு வயதுக் குழந்தையிடம் காணப்படும் ஒழுங்குணர்ச்சியாகும்.

ஏதாவது ஒரு பொருள் சரியான இடத்தில் இல்லையென்றால், அது இந்தக் குழந்தையின் கண்ணுக்குத் தெரிந்து விடுகிறது. அந்த ஒழுங்குக் குறை அல்லது ஒழுங்கீனத்தின் விவரங்கள் முதியவர் கண்ணில் படுவதில்லை; இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் கண்ணிலும் படுவதில்லை. இரண்டு வயதுக்கும் கீழ்ப்பட்ட வயதில் ஒழுங்குணர்ச்சி மேலும் தெளிவாயிருக்கிறது.

ஒரு சோப்புத் துண்டு சோப்புப் பெட்டியிலிருப்பதற்கு மாறாக மேசையில் காணப்பட்டால், அதைக் கவனித்து ஒழுங்கு செய்யும் ஆற்றலை இரண்டு வயதுக் குழந்தையிடம் காண்கிறோம். ஒரு பெட்டியோ, மேசையோ வழக்கமான இடத்தில் காணப்படவில்லையென்றால், இரண்டு வயதுக் குழந்தை கவனித்து விடுகிறது.

குழந்தை காணும் ஒழுங்கீனம் குழந்தைக்கு ஒரு தூண்டுகோலாகிறது; குழந்தையைச் சுறுசுறுப்பாக்கு

கிறது. குழந்தையின் ஒழுங்குணர்ச்சி திருப்தி செய்யப் படும்போது, குழந்தையின் மூலத் தேவையொன்று திருப்தி செய்யப்படுவதாகவே சொல்ல வேண்டும். இந்தத் திருப்தியில் குழந்தைக்கு ஒரு முக்கிய இன்ப மும் கிடைத்துவிடுகிறது.

மாண்டிஸோரி-குழந்தை இல்லம் என்ற பள்ளிக் கூடத்திலே மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தை களும் ஒருவகை அப்பியாசம் முடிந்தவுடன் அதற்கு உபயோகித்த உபகரணங்களை அவற்றுக்குரிய இடத் தில் கொண்டுபோய் முன்போல் வைத்துவிடுவதைக் காணலாம். நாலு வயதுக் குழந்தைகள்கூட இப்படிச் செய்வதைக் கண்டுகொள்ளலாம்.

'இப்படிச் செய்யுங்கள்' என்று ஒருவரும் கட்டுப் படுத்துவதில்லை; தூண்டுவதும் இல்லை, இயற்கையா கச் சுதந்திரமாகத் தங்கள் இஷ்டத்திற்கு இணங்கவே மிக்க மகிழ்ச்சியுடன் செய்யும் காரியங்களில் இதுவும் ஒன்ருகும்.

சரியான இடத்தில் ஒரு உபகரணம் இருப்பதென் ருல், எது எங்கே இருக்கிறது என்பதை ஞாபகப்படுத் திக்கொண்டு அங்கிருந்து அதை எடுத்துக்கொள்வது எளிதாகும். இப்படிச் செய்யத் தெரிந்துகொண்ட மனம் சூழ்நிலையை வசப்படுத்திக் கொள்கிறது என்று அர்த்தம்.

கண்ணை மூடிக்கொண்டே அந்த அந்த இடத்தி லிருந்து அந்த அந்தப் பொருளை எடுக்கும் ஆற்றல் சாதாரண ஆற்றலாகுமா? நமது தேசம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த காலத்திலே மிக்க திறமை

வாய்ந்த அரசப் பிரதிநிதியாக இருந்த கர்ஸன் பிரபு இத்தகைய தனிப்பெருந் திறனுடன் ஆட்சி செலுத்தி வந்தாராம்.

கர்ஸன் பிரபுவின் ஆதிக்கக் கொள்கையை வெறுத்த இந்திய தேசபக்தர் ஒருவரே அவரது இத் திறனைப் பாராட்டி, 'அந்த அரசப் பிரதிநிதி கண்ணை மூடிக்கொண்டு எந்த முக்கியமான நிர்வாகக் குறிப்புக் களோ, அரசியல் குறிப்புக்களோ அடங்கிய தஸ்தா வேஜையும் எடுத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருந் தார்' என்று கூறினர். 'இத்தகைய ஒழுங்குணர்ச்சி யைத் தேவர்கள் அந்தக் கர்ஸன் பிரபுவுக்கு அளித்தி ருந்த வரப்பிரசாதங்களில் ஒன்ருகும்' என்று வியந்து பேசியதும் உண்டு.

ஆனல் தெய்வசக்தி ஒவ்வொரு குழந்தைக்கும் குறிப்பிட்ட உணர்ச்சிப்பருவத்தில் இத்தகைய ஆற்றலை உதவிவருகின்றன என்பது ஓர் அதிசயமான செய்தி யல்லவா? இந்தச் செய்தியை முதல் முதல் வெளி யிட்டவர் டாக்டர் மாண்டிஸோரி அம்மையாரேயாவர். வாழ்க்கையில் அமைதி வேண்டுமென்ருல், உள்ளம் சூழ்நிலையை அப்படி வசப்படுத்திக் கொள்ள வேண்டி யது அவசியமாகும்.

குழந்தையின் விளையாட்டிலிருந்தும் முதியவர் களாகிய நாம் பாடம் கற்றுக்கொள்ளலாம். குழந்தை களுக்காக மட்டுமல்ல, நமக்காகவும்தான்,

'ஓடிவிளையாடு!' என்றும், 'கூடி விளையாடு' என் றும் பாரதியார் பாப்பாவுக்குப் புத்திசொல்லிப் பாடல் பாடி வைத்திருக்கிருரல்லவா? அந்த விளையாட்டுகள்

குழந்தைக்குப் பிராணுதார இன்பம்தருகின்றன என்று சொல்லலாம். குழந்தைகள் விளையாடும் இத்தகைய விளையாடல்களில் சில நமது பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாமல் இருக்கலாம்; ஆனால் அவை உரிய இடத்தில் பொருள்களைக் காண்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருப்பதையும் காணலாம்.

உதாரணமாகக் கண்கட்டி விளையாடும் கண்ணும் பூச்சி என்ற பிள்ளை விளையாட்டைத்தான் பாருங்கள். இரண்டாவது வயதுக்கும் மூன்ருவது வயதுக்குமிடையே உள்ள பிராயத்துக் குழந்தைகள் கண்ணும் பூச்சி விளையாடும்போது அவர்களிடம் காணப்படும் குதூகலத்தை என்னென்பது?

இந்த விளையாட்டிலேதான் என்ன ஈடுபாடு! கதவோரத்தில் ஒரு குழந்தை ஒளிந்துக்கொள்கிருன். மற்றவர்கள் பார்த்துக்கொண்டே வெளியே போய்த் திரும்பிவருகிருர்கள். கதவைத் திறந்துகொண்டு மறைந்திருக்கும் குழந்தையைக் கண்டுபிடித்ததும் அந்தப் பிள்ளைகள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்கிருர்கள்! திரும்பத் திரும்ப இந்த விளையாட்டை விளையாடி இன்பமடைகிருர்கள்.

ஒருசமயம் மாண்டிஸோரி அம்மையாரையும் இத்தகைய குழந்தைகள் இந்த விளையாட்டில் கலந்துகொள்ளும்படி அழைத்தார்கள். கதவுக்குப் பின்புறம் ஒளிந்திருந்த ஒருவனைக் கண்டுகொண்ட மகிழ்ச்சிவெறியில் கைகொட்டிக் கூச்சலிட்டுக்கொண்டிருந்த சிறு குழந்தைகள் இந்த அம்மையாரை நோக்கி, 'அம்மா! நீங்களும் எங்களுடன் விளையாட வாருங்கள். நீங்கள் ஒளிந்து

கொள்ளுங்கள் அம்மா!' என்று வேண்டிக் கொண்டார் கள். அம்மையார் இசைந்ததும், அவர்கள் வெளியே போய்விட்டார்கள்.

அம்மையார் அவர்களைப்போல் கதவுக்குப் பின்புற மாக ஒளிந்துகொள்ளவில்லை. ஒரு அலமாரியின் மறைவில் ஒரு மூலையிலேபோய் ஒளிந்துகொண்டார். குழந்தைகள் திரும்பிவந்தார்கள். அவர்கள் எல்லாரும் கதவுக்குப் பின்புறம் போய்ப் பார்த்தார்கள். அங்கே அம்மையாரைக் காணவில்லை.

கொஞ்சநேரம் கழிந்ததும் மாண்டிஸோரி தமது மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு வந்தார். அந்த இடத்திற்கு வந்து குழந்தைகள் இவரைத் தேடவே யில்லை. இவர் அங்கே யிருந்து வந்ததைக் கண்ட குழந்தைகள் திருப்தியின்றி, மகிழ்ச்சியின்றி, 'அம்மா! எங்களுடன் விளையாட இஷ்டம் இல்லையா? ஏனம்மா நீங்கள் ஒளிந்துகொள்ளவில்லை?' என்றே கேட்டுவிட் டார்கள்.

இதிலிருந்து, குறிப்பிட்ட பிராயத்தில் குழந் தைகளுக்குக் சரியான இடங்களில் பொருள்களைக் காண்பதே இன்பமாகிறது என்ற குழந்தை-மனேதத் துவ உண்மையை உறுதிப்படுத்திக் கொண்டார் மாண்டிஸோரி.

இந்த நிலையிலுள்ள குழந்தைகளுக்கு ஒளிந்திருப் பதென்ருல், வெளியேயிருந்துபார்க்கும்போது தெரியா விட்டாலும் ஒரு பொருளோ, ஆளோ உரிய இடத்தில் இருப்பதுதான். 'வெளியே யிருந்து பார்த்தால் எனக் குத் தெரியாது; எனினும் இருக்கும் இடம் தெரிந்தது

தான். கண்ணை மூடிக்கொண்டே கண்டுகொள்ள முடியும்; அந்த இடத்தை அவ்வளவு நிச்சயமாகஅறிவேன்" என்பதுதான் இந்தப் பிள்ளைப்பிராய நிலை.

ஒழுங்குணர்ச்சியை இயற்கை எப்படிக் குழந்தையுள்ளத்தில் விதைக்கிறது பாருங்கள்! ஒழுங்குணர்ச்சி உள்ளுணர்ச்சியாக அமையாவிட்டால், வெளிப்பொருள்களைப் பற்றிய அறிவை எவ்வளவு ஆசையுடன் தேடிக் குவித்துக்கொண்டாலும் பயனில்லாமல் போய்விடும். விஷயங்களின் தொடர்பு குறித்த அறிவு இன்றி விஷயங்களின் அறிவு மாத்திரம் ஏற்பட்டால், தெளிவில்லாத ஒரே குழப்பத்தில் மனிதன் உழன்றுகொண்டிருக்க வேண்டியதுதான்!

விஷய அறிவை ஒழுங்கான அறிவாக்கிக் கொள்ளும் ஆற்றலிலும் குழந்தை மனிதனுக்குத் தந்தைதான்! இந்த ஆற்றல் இல்லாவிட்டால் வாழ்க்கையில் வழி காணத்தான் முடியுமா? திக்குத் தெரியாத காடாகிவிடுமே வாழ்க்கை என்பது!

ஒழுங்கு குறித்த உணர்ச்சிப் பருவத்திலே இயற்கையென்ற உபாத்தியாயர் எவ்வளவு முக்கியமான பாடத்தை அளிக்கிறார் பாருங்கள்! பாஷையின் ஒலிகளைக் கற்றுக்கொள்ளும் ஆற்றலைக் கொடுத்திருப்பது போல் இந்த ஒழுங்கை உணரும் ஆற்றலையும் இந்த உபாத்தியாயர் கொடுத்து உதவுகிறார்,

மனித அறிவு ஏதோ ஒரு செப்படி வித்தைபோல், கண்கட்டு வித்தையில் மாங்கன்று முளைப்பதுபோல், முளைத்து விடுவதில்லை. குழந்தையின் உணர்ச்சிப் பருவங்களில் அஸ்திவாரவேலை நடக்கிறது; இந்த

உறுதியான அடிப்படைமீது நிற்கும் அதிசய மாளிகை தான் அறிவு என்பது.

அக ஒழுங்கு

குழந்தையின் ஒழுங்குணர்ச்சி இருவகைப்படும். இந்த இருவகையும் ஒத்துவாழக் காண்கிறோம். வெளிச் சூழ்நிலையின் பல பகுதிகளுக்கும் இடையே உள்ள உறவுகளைப் பற்றியது ஒருவகை ஒழுங்குணர்ச்சி. மற்றது, உள்ளுக்குள்ளிருந்து குழந்தையுடம்பின் பகுதிகள் இயங்கும் நிலையை உணரச் செய்வதாகும். இதை அக ஒழுங்கு எனலாம்.

இந்த அக ஒழுங்கைக் குறித்து மனோதத்துவ ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து வருகிறார்கள். இவர்கள் 'சதை-உணர்வு' என்ற ஓர் உணர்ச்சி இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த உணர்வின் பயனாக உறுப்புக்களின் நிலையை அறிந்து கொள்ளமுடிகிறது. இதே உணர்வு 'சதை-நினைவு என்ற ஒரு தனிப்பட்ட நினைவையும் பதிவு செய்து கொள்கிறது.

ஒருவன் ஒரு பொருளை எடுத்துக் கொள்வதற்காகக் கையை அசைக்கிறான். அந்த அசைப்பை, அந்த இயக்கத்தை அறிந்து நினைவில் வைத்துக் கொள்கிறான். அதைத் திருப்பிச் செய்துகொள்ள முடியும் என்பதைத் தெரிந்துகொள்கிறான். இதன் பயனாக, வலது கையையோ இடது கையையோ அசைக்க வேண்டுமென்று இவன் தீர்மானித்து அப்படியே செய்ய முடியும். ஒரு பக்கமாய்த் திரும்புவதும் மறுபக்மாய்த் திரும்புவதும் இம்படியே நிகழக் காண்கிறோம்.

பகுத்தறிவு அல்லது சித்த சக்தியால் தூண்டப் பெறும் செயல்-திறன் குறித்த அநுபவங்களைத் திரும்பத் திரும்ப அடைவதால் இவையெல்லாம் சாத்தியமாகும் என்பது மனோதத்துவம் கண்ட உண்மை.

ஆனால் குழந்தையின் நிலை வேறு. இயக்கங்களில் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே—எனவே மேலே சொன்ன ரீதியாக அநுபவ சோதனை செய்து பார்ப்பதற்கு முன்பே—குழந்தை தன் உடம்பின் நிலைகளைக் குறித்துக் கூர்மையான உணர்ச்சி பெறும் பருவம் ஒன்றை அடைகிறது. இயற்கைதான் இத்தகைய சிறப்பான உணர்ச்சியைக் குழந்தையிடம் தயாரித்துக் கொடுக்கிறது.

உடம்பை எந்திரமாகக் கருதி ஜட தத்துவத்தை ஆராயும் முறையிலே தான் பழைய மனோதத்துவ விஞ்ஞானக் கொள்கை உருவாயிற்று. ஆனால் குழந்தையிடம் நாம் காணும் உணர்ச்சிப் பருவங்களோ ஜடதத்துவத்திற்கு அதீதமான சூட்சும விஷயங்களுடன் தொடர்பு பூண்டிருக்கின்றன.

இயற்கையன்னையின் வரப்பிரசாதங்களில் ஒன்றாகவே இந்தத் தொடர்பு கருதத் தக்கது. அறிந்து அநுபவிக்கும் நிலைகளெல்லாம் ஏற்கெனவே உள்ளதை வளர்த்துக் கொள்ளும் நிலைகளேயாகும்.

உணர்ச்சிப்பருவம் உண்டு என்பதற்கும், அது அந்த நிலையில் காணப்படுகிறது என்பதற்கும் கிடைக்கும் சான்றுகளில் எதிர்மறைச் சான்றுகளையும் சுட்டிக் காட்டலாம். சூழ்நிலையில் ஏதாவது ஒரு நிகழ்ச்சி குழந்தையின் சிருஷ்டி-சக்திகள் மலர்வதற்கு இடை

யூறு விளைவித்தால், குழந்தை கஷ்டப்படுவதையும், தன் கண்டனத்தைக் கடுமையாக வெளியிட்டுக் கொள் வதையும் காண்கிறேமல்லவா?

அழுகை, முரண்டு முதலான கோளாறுகளுடன் குழந்தைக்கு நோயும் ஏற்படுவதைக் காணலாம். இடை யூருக உள்ள சூழ்நிலை-அம்சம் நீங்கிஞல்தான் இந்த நோய் தணிவதற்கு வழி ஏற்படும். இடையூறு நீக்கப் பட்டதும் உடனே கோளாறுகளும் மறைந்துவிடுகின் றன; முற்றும் மறைந்து விடுகின்றன.

குளிப்பாட்டும் முறைகளிலும் குழந்தை தனக்குப் பழக்கமான முறையையே விரும்புகிறது. அத்தையோ பாட்டியோ வழக்கமாய்க் குளிப்பாட்டி வருவதற்கு மாருக வேறு யாராவது வேருெரு முறையில் குளிப் பாட்டும்போது, குழந்தை அழுது கூச்சலிடுவதையும் முரண்டு பண்ணுவதையும் காணலாம்.

தொட்டிலில் இட்டுத் தூங்கச் செய்யும் குழந்தை யைத் திடீரென்று கட்டிலில் விட்டுத் தூங்கப்பண்ண முயன்ருல், குழந்தை தூக்கம் பிடிக்காத நிலையில் தொந் தரவு கொடுப்பதையும் சாதாரணமாய்க் காண்கிறேம்.

ஆறுமாதக் குழந்தை வெளியிட்ட ஒரு சம்பவத் தைப் பார்க்கலாம். ஒரு பழைய வீட்டிலிருந்து புதிய வீட்டிற்குப் போவதற்காக, சாமான்களை யெல்லாம் குழந்தை வழக்கமாக உறங்கும் அறையைக் காலி செய்து போட்டுவிட்டுக் குழந்தையின் தொட்டிலை வேருெரு அறையில் தொங்கவிட்டிருந்தார்கள். இந் தச் சூழ்நிலை-மாற்றம் குழந்தையின் ஒழுங்குணர்ச்சி யைப் பெரிதும் பாதித்துவிட்டது. ஆகவே குழந்தை

அழுதுகொண்டே யிருந்தது. புதிய வீட்டுச் சூழ்நிலை யும் முதல் முதல் குழந்தைக்குத் திருப்தியோ மகிழ்ச் சியோ அளிக்கவில்லை. பழைய வீட்டுமுறையில் சூழ் நிலை ஒழுங்கு பெற்றதும் குழந்தைக்கு முரண்டும் அழு கையும் மறைந்து மறுபடியும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த நிலையில்தான் குழந்தையின் அக ஒழுங்குணர்ச்சி திருப்தி பெற்றிருக்க வேண்டும்.

குழந்தையின் ஒழுங்குணர்ச்சி வேறு; முதியவரின் ஒழுங்குணர்ச்சி வேறு: இந்த உணர்ச்சி நம்மால் உண ரப்படுவதுபோல் குழந்தையால் உணரப்படுவதில்லை. நம்மீது எத்தனையோ உணர்ச்சி-அலைகள் வந்து மோதுகின்றன. இத்தகைய அநுபவ பொக்கிஷம் குழந்தைக்குக் கிடைப்பதில்லை. நாம் கொள்ளை கொள் ளையாக உணர்ச்சி-அநுபவங்கள் பெறுவதால், அலட்சியமாக இருந்துவிடுகிறோம். ஆனால் உணர்ச்சி என்ற சக்தி நமக்குக் குழந்தையிடமிருந்து கிடைத்தது தான் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

வாழ்க்கையின் ஊற்றுக் கண்ணால் போஷிக்கப் பெறுவது குழந்தை. இயற்கையில் சிருஷ்டி-சக்தி யைக் காண்கிறோம். இயற்கையன்னை மின்னலைப் பயன்படுத்திக் கொள்வதுபோலக் குழந்தையின் உணர்ச்சிப் பருவங்களிலுள்ள ஆற்றலையும் பயன்படுத் திக் கொள்கிறாள்.

உணர்ச்சிப் பருவமும் அறிவு வளர்ச்சியும்

இருளை வெட்டிக்கொண்டு வரும் மின்னலின்வேக ஒளியில் ஒரு பொருளைக் காண்பதுபோல், கவிஞனும் தன் சித்த ஆகாசத்திலே ஒரு பேருண்மையைக் காண்

கிருன். மகாகவியின் உள்ளமாகிய வானில் மின் வெட்டு மேலும் நீடிப்பதுபோலத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஓர் அதிசயத்தைக் குழந்தையுலகிலும் காண்கிருேம்.

ஐந்தாவது வயதுவரை குழந்தை நீண்டதோர் உணர்ச்சிப் பருவத்தைக் கடந்து வருகிருன். இந்தப் பருவத்திலே புறவுலகத்திலிருந்து பொருள்களின் தோற்றங்களைக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலை அபரி மிதமாகப் பெற்றிருக்கிருன். உற்றுப் பார்த்துச் சுறு சுறுப்பாய்த் தன் ஐம்புலவாயிலாகப் புறப் பொருள் களின் தோற்றங்களைக் கிரகித்த வண்ணமாயிருக்கி ருன்.

கண்ணுடி எந்தப் பொருளின் பிரதிபிம்பத்தையும் கிரகிப்பதுபோல் அல்ல; துருதுருவென்று பொருளின் தோற்றத்தை உள்ளுணர்ச்சியின் தூண்டுதலால் குழந்தை கிரகித்துக் கொள்கிருன். தேவையான தோற்றங்களை மட்டும் விரும்பிக்கூர்ந்து நோக்கிப் பெற் றுக் கொள்கிருன் என்றே சொல்லவேண்டும்.

அநுபவமில்லாத நிலையில் தன்னந் தனியனுக இத்தகைய வாழ்க்கைப் பாதையில் குழந்தை செல்வது ஓர் அதிசயமான இயற்கை நிகழ்ச்சியாகும். இதற்கு உதாரணமாக மாண்டிஸோரி பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிருர்.

குழந்தையொன்று ஒரு சமயம் தலையணை மேல் வைத்திருந்த பூக்களுடனும் குழந்தையுருவங் களுடனும் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது பூக்களை மோந்து பார்ப்பதையும், குழந்தை

யுருவங்களை முத்தமிடுவதுமாக இருப்பதைக் கண்ணுற்ற செவிலித்தாய் ஓடிவந்து, 'இதை முத்தமிடு; அதை மோந்துபார்' என்று சொல்லிப் பல பொருள்களையும் கொண்டுவந்து முன்வைத்தாள். அதனால் குழந்தைக்கு ஏற்பட்டது குழப்பம்தான்.

தன் இஷ்டப்படியே தோற்றங்களைத் தேர்ந்தெடுத்து நிதான உழைப்புடனும் மகிழ்ச்சியுடனும் தனக்குரிய வளர்ச்சி - நெறியில் சென்றுகொண்டிருந்த பிள்ளைப் பிராயநிலை முதிர்ந்த பிராயமுள்ள செவிலித்தாய்க்கு விளங்கவில்லை. அகஒழுங்கை அநுசரித்து நடைபெற்ற அதிசய முயற்சியை, ஒரு அழகான கோலத்தை மாடு மிதித்து அழிப்பதுபோல், அழித்து விட்டது முதியவள் முயற்சி.

குழந்தையின் முதலாவது வயதில் நடைபெற்ற உணர்ச்சிப் பருவ நிகழ்ச்சி இது. இரண்டாவதுவயதின் தொடக்கத்திலேயே ஒரு மாறுதலைக் காணலாம் ஆடம்பரப் பொருளோ, வர்ணஜாலமோ இப்போது குழந்தையைக் கவர்வதில்லை. நாம் கவனிக்காமல் விட்டுவிடும் நுட்பமான பொருள்கள் குழந்தையைக் கவர்கின்றன.

உதாரணமாக, இப்பருவக் குழந்தை ஒரு தோட்டத்திலே அழகான பூக்களைக் கண்டு மகிழ்வதற்குப் பதில் நிலத்தில் வேகமாய் ஊர்ந்துகொண்டிருக்கும் எறும்பு போன்ற சின்னஞ்சிறு பிராணியைக் கண்டு அதிசயமாய்ச் சிரித்துக்கொண்டிருப்பதைக் காணலாம். 'இப்படியும் ஒரு சிறு பிராணி இருக்க முடியுமா? இது அசைகிறது, ஓடுகிறது!' என்ற வியப்பே இத்தகைய குழந்தையொன்று உரக்கச் சிரித்ததற்குக் காரணமா

கும் என்பதை நேரில் கண்டு தெரிந்து கொண்டதாக மாண்டிஸோரி கூறியுள்ளார்,

இரண்டாவது வயதில் இயற்கையன்னை குழந்தையின் அறிவைப் படிப்படியாக வளர்ச்சி-நெறியில் செலுத்திவந்து, பலவகைப் பொருள்களையும் குழந்தைக்கு அறிமுகப்படுத்த விரும்புவதுபோலத் தோன்றுகிறது.

இந்த உணர்ச்சிப் பருவங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஐம்புலன் வழியாகக் குழந்தை பயிற்சிபெற உதவும்படி மாண்டிஸோரி பலவகை உபகரணங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். துள்ளித்திரியும் குழந்தை-மனத்தை ஒருமுகப்படுத்த உதவுமாறு இந்த உபகரணங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

ஒருவகை ரோஜா நிறத்திலுள்ள சதுரமான கோபுரக் கட்டைகளை அடுக்கி அடுக்கிக் கோபுரம் கட்டுவதிலும், கட்டைகளைத் தள்ளித் தள்ளித் திரும்பத் திரும்ப அந்தக் கோபுர அமைப்பில் ஈடுபடுவதிலும் குழந்தைக்குள்ள மகிழ்ச்சியைத்தான் பாருங்கள். விளையாட்டாக மகிழ்ச்சியுடன் ஒழுங்குணர்வு பெற்று அறிவில் வளர்வதற்கு ஏற்ற சாதனங்களல்லவா இந்த உபகரணங்கள்?

பல வர்ணங்களைக் காட்டும் கட்டைகளில் ஒரே மாதிரி நீலவர்ணக் கட்டைகளைக் குவியலிலிருந்து கண்டெடுத்து அழகாக வைப்பதிலும், இம்மாதிரிக் கட்டைகளைப் பெயர் தெரிந்து ஒன்றன் கீழ் ஒன்றாய் இரட்டையாக அடுக்கிப் பார்ப்பதிலும், மறுபடியும் எல்லாவற்றையும் ஒரே குவியலாக்கி அடுக்குவதிலும் குழந்தைக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகிறது.

தொட்டுப் பார்த்து 'மிருதுவானதா? சொர சொரப்பானதா?' என்று தெரிந்து அந்த உணர்ச்சியை அநுபவிப்பதற்கும் குழந்தை ஆசைப்படுகிறது. இந்த உபகரணங்கள் ஐந்து வயதுவரை நிலவுகின்ற உணர்ச்சிப் பருவத்திற்கு உபயோகமானவை.



வெகு கவனத்துடன் பொத்தான்கள் போட்டுக் கழற்றக் கற்றுக் கொள்கிருள்



தன்னை வசீகரித்த ரோஜா நிறம் வாய்ந்த கன சதுரக் கட்டைகளைக் கொண்டு நிதானமாய் ஒருமையுள்ளத்துடன் ஒழுங்காகக் கோபுரம் அமைப்பதில் ஈடுபட்டிருக்கிறாள்



உருளைப் பெட்டிகளை வைத்துக் கொண்டு அது அதற்கு உரிய உருளைகளை எடுத்துப் பள்ளங்களில் பொருத்தப் பார்ப்பதில் கண் ணுங்கருத்து மாயிருக்கும் சிறுவன்



குன்றோ வசீகரித்த பொருள்களை வைத்துக் கொண்டு வெகு சிரத்தையுடன் 'பாஸிஞ்' போடுவதில் ஈடுபட்டிருக்கிறான்

இதே பருவத்தில் ஸ்பரிச உணர்ச்சியும், தசைப் பற்றுணர்ச்சியும் சேர்ந்து கண்டு பிடிப்பதற்கு உரிய உபாயமாக ஒரு பைக்குள் பந்து பம்பரம் முதலான சாமான்களைப் போட்டுக் குழந்தையிடம் கொடுக்கலாம். 'நான் கண்ணை மூடிக்கொண்டே பைக்குள் என்ன என்ன சாமான்கள் இருக்கின்றன என்று சொல்லி விடுவேனே!' என்று குழந்தை தன் கையை அந்தப் பைக்குள் நுழைத்துக் கொள்வான். உருண்டையான பந்து, தட்டையான கட்டை, நீளமான பேனா முதலிய சாமான்களைக் கண்டுபிடித்துக் குதூகலமாக 'இதோ பந்து பார், இதோ பம்பரம் பார்!' என்றெல்லாம் எடுத்துக் காட்டுவான்.


கவனிக்கும் ஆற்றலையும் பொறுமையையும் சோதித்து வளரவிடுவதற்கும் உபகரணங்கள் உபயோகமாகின்றன. இதற்காக மௌனப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

கவலையின்றி உறங்கிக் கொண்டிருக்கும் சின்னஞ் சிறு குழந்தையை ஒரு சமயம் டாக்டர் மாண்டிஸோரி சுட்டிக்காட்டி, 'குழந்தைகளே! பாருங்கள். இந்தக் குட்டிப் பாப்பா சத்தம் செய்யவே இல்லை; எவ்வளவு அமைதியாக இருக்கிறது; உங்களால் இப்படி இருக்க முடியாதே' என்று சொன்னார். உடனே அந்தக் குழந்தைகள் கால் கைகளை அசைக்காமல், ஒருவகைச் சத்தமும் செய்யாமல், அப்படியே அமர்ந்திருந்தார்கள்.

அதிசயமான மோனநிலை அது. அதுவரை கவனத்தை உறுத்தாத கடிகாரத்தின் 'டிக் டிக்' சத்தம் அந்த மோனத்திடையே தெளிவாகக் காதில் விழுந்தது. எங்கேயோ ஒரு குருவி கத்தின சத்தமும் செவி



உப்புக் காகிதத்தில் வெட்டி ஒட்டப்பட்டிருக்கும் எழுத்துக்கள் மீது தன் விரலால் எழுதிப் பார்த்து அதன் வரிவடிவத்தைக் கிரகித்துக் கொள்வதில் ஈடுபட்டிருக்கிறாள் சிறுமி. சிறுவனோ மரத்தாலாகிய பலவித நிறையுள்ள கட்டைகளைக் கண்ணைக் கட்டிக்கொண்டே கையாண்டு பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறான்



மரத்தாலான பல வர்ணக் கட்டைகளை அவைகளின் நிற வேற்றுமை
களுக்குத் தக்கவாறு பிரித்து வரிசையாக, அடுக்குவதில்
ஈடுபட்டிருக்கும் சிறுமிகள்

யில் விழுந்தது. யாரோ தூரத்தில் கூப்பிடும் சத்தமும் கேட்டது.

'மோனத்தில் சென்று ஒடுங்குவது' 'மோனக் குரல் கேட்பது' 'சும்மா இருந்து சுகம் பெறுவது' என்றெல்லாம் குறிப்பிடுகிறார்களே, அத்தகைய பரம ஞான நிலையின் ஒரு முற்குறியாக மௌனப் பயிற்சியைக் குழந்தைகளுக்கு உணர்ச்சிப் பருவத்திலேயே அளிக்க முடியும் என்பதும் மாண்டிஸோரி கண்ட பேருண்மைகளில் ஒன்று.

இப்படியெல்லாம் மாண்டிஸோரி கண்டு காட்டும் பிள்ளைப்பிராய மர்மங்களைப் பெற்றோரும் ஆசிரியரும்— பொதுவாக முதியவர்கள்—ஒருவாறு உணர்ந்து கொள்ள முயலும்போதுதான் குழந்தைவளர்ச்சிக்குச் சரியான சூழ்நிலை அமைத்து உதவுவது சாத்திய மாகும்,

13. ஆறு வயதில் அதிசய வளர்ச்சி

வாழ்வை ஆதாரமாகவும் மையமாகவும் கொண்டிருப்பது மாண்டிஸோரியின் கல்விமுறை. இந்தக் கல்வி, பிறக்கு முன்பே தொடங்கி ஆறு வயதில் அதிசய வளர்ச்சி காட்டுகிறது. இந்த முறையில் பள்ளிக்கூடம் புகுவதற்கு முன்பே கல்வியின் அடிப்படை வாழ்வின் ஆழத்தில் உறுதியாக அமைந்துவிடுகிறது.

சமுதாயப் பேரியக்கம்

இம்முறையிலே கல்வி என்பது அறிவு வளர்ச்சி மட்டும் அல்ல, வாழ்க்கையின் வளர்ச்சியேதான். இக் கல்வி ஒரு பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொள்வதல்ல; மனித வாழ்க்கையைப்பற்றிய அறிவையே அடிப்படையாகக் கொள்வதாகும். வாழ்க்கையின் நியதிகள் இவை, இவற்றைப் புறக்கணிக்க முடியாது, இவற்றுக்கு இசைய வாழவேண்டும் என்று அறிவிக்கும் கல்வி இது. குழந்தை வளர்ச்சியைப் பற்றிய நியதிகளைச் சமுதாயம் தெரிந்து குழந்தைக் கல்வியை அமைப்பதுதானே முறை?—என்பர் மாண்டிஸோரி.

இந்தக் குழந்தைக் கல்விக்குப் பெற்றோர் மட்டும் பொறுப்பாளிகள் அல்லர்; சமுதாயத்திற்கும் பொறுப்பு உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது. குடும்பத்தில் வசதிக்குறைவு இருந்தால் சமுதாயமே தன்னைப் பெரிய குடும்பமாகக் கருதி ஏழைக் குழந்தைகளுக்கும் இன்றியமையாத கல்விவசதி செய்து கொடுக்கவேண்டும். ஒருநாடோ, ஒரு சமுதாயமோ

குழந்தையைப் புறக்கணித்துப் பள்ளிப் படிப்பையும் கலாசாலைப் படிப்பையும் பல்கலைக்கழக படிப்பையும் கவனித்துக்கொண்டே போவது சரியன்று. பெரும் பொருள் செலவாகுமே என்று காரணம் காட்டிக் கடமையைத் தட்டிக் கழிப்பதும் தவறேயாகும்.

சமுதாய மனச்சாட்சியைத் துயிலெழுப்புவது இந்த முறைக் கல்வி அபிவிருத்தி அடைவதற்கு அவசியமாகும். இக்கல்வியைச் சமுதாயப் பேரியக்கங்களில் ஒன்ருக மதிக்கவேண்டும். கார்ல் மார்க்ஸ் என்ற சிந்தனையாளர் அரசர்களும் செல்வர்களுமே ஆட்டி வைத்துக்கொண்டிருந்த சமுதாயத்திலே தொழிலாளியின் முக்கிய ஸ்தானத்தை உணர்த்தியுள்ளார். மாண்டிஸோரியோ முதியவரே முக்கியமானவர் என்று கருதிவந்த சமுதாயத்தில் குழந்தையின் முக்கிய ஸ்தானத்தைச் சுட்டிக் காட்டுகிருர்.

ஓர் அன்புப் புரட்சி

தொழிலாளி செல்வத்தை உற்பத்தி செய்கிருன், குழந்தை மனிதனையே உற்பத்தி செய்கிற தொழிலாளி என்பது இவர் கொள்கை. தொழிலாளியின் உரிமைகள் வற்புறுத்தப்படுவதுபோல் குழந்தையின் உரிமைகளும் இந்த அம்மையாரால் வற்புறுத்தப்படுகின்றன.

ஒருநாட்டுக்கு விடுதலை அல்லது சுதந்திரம் இன்றியமையாதது என்பது அரசியல் உலகில் இன்று சர்வசாதாரணமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. தொழிலாளிகளின் விடுதலைக்காக வாதாடும் கட்சிகளும் இன்று அரசியல் உலகில் பிரசித்தமாகிவிட்டன. இத்தகைய உலகிலே குழந்தைக்கும் விடுதலை வேண்டும், சுதந்தி

ரம் வேண்டும் என்று வாதாடுகிறார் மாண்டிஸோரி அம்மையார்.

கார்ல்மார்க்ஸ் என்பவரின் சமுதாய திருஷ்டியைப் புரட்சிகரமானது என்று கருதுகிறார்கள். மாண்டிஸோரி அம்மையாரின் கல்விமுறையையும் புரட்சிகரமானது என்று கருதுவோருண்டு. அம்மையாரே இதை 'இறுதிப் புரட்சி' என்று கூறுவர். எனினும், இது காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் புரட்சிபோல் அஹிம்ஸை வழியில் நிகழும் புரட்சியாகும்.

அன்புவழிக் கல்வி, அருள்வழிக் கல்வி, குழந்தையின் வளர்ச்சிப் பாதையில் இடையூறுகளைக் களைந்துவிடும் கல்வி, குழந்தையைச் சூழ்ந்திருக்கும் அனர்த்தங்களையும் அபாயங்களையும் விலக்கிவிடும் கல்வி—இது மாண்டிஸோரியின் குழந்தைக் கல்வி. இந்தக் கல்வியில் பெற்றோருக்கும் உபாத்தியாயருக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஒருங்கே பங்கு உண்டு என்பது இவர் அபிப்பிராயம்.

வளர்ச்சியின் மூன்று பருவங்கள்

வளர்ச்சிக்கு உரிய பருவங்களில் முதல் ஆறு வயதுவரை அளிக்கப்படும் கல்வியே அதிமுக்கியமானது என்று கருதும் மாண்டிஸோரி அம்மையார், இக்காலத்திற்குள் புரட்சிகரமான நற்பயனை அடைவது சாத்தியம் என்கிறார். மூன்று வயதுவரையுள்ள காலத்தில் முதியவர் நேரடியாகக் குழந்தை விஷயத்தில் ஒன்றும் செய்வதற்கில்லை யென்கிறார். மூன்றுமுதல் ஆறுவயதுவரை உள்ள காலப் பகுதியில்தான் முதியவர்கள் விசேஷ உதவிபுரியக் கூடுமென்றும் தெரிவிக்கிறார்.

இப்பகுதியில் பெரிய பெரிய மாறுதல்களைக் குழந்தையிடம் காணலாம். புதிதாய்ப் பிறந்த குழந்தையை ஆறு வயதுக் குழந்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த மாறுதல்களைப் பளிச்சென்று எவரும் கண்டு கொள்ள முடியும். இத்தகைய விசேஷ மாறுதல்களை ஆறுவயதுமுதல் பன்னிரண்டு வயது வரையுள்ள காலப் பகுதியில் நாம் காண்பதில்லை. உடல் வளத்தையும் உடல் உரத்தையும் ஒருவகை மன அமைதியையும் இந்தக் காலப்பகுதியில் (6 வயது முதல் 12 வயதுவரை) நாம் காண்கிறோம் என்பது வெளிப்படை. எனினும், முதல் ஆறுவயதுக் காலம்போல் இக்காலப் பகுதி அடிப்படை மாறுதல்களைச் செய்து கொள்வதற்கு உரிய பருவம் அல்ல என்றுதான் சொல்ல வேண்டும்.

பன்னிரண்டு முதல் பதினெட்டு வயதுவரையுள்ள காலத்தை மூன்றாவது பருவம் என்று குறிப்பிடலாம். இதில் ஏற்படும் மாறுதல்கள் முதலாவது பருவத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. இதைக் குழந்தை-வளர்ச்சியின் இறுதிப் பகுதி எனலாம்.

இந்த இறுதிப் பகுதியையும் இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். 12 முதல் 15 வயதுவரை ஒரு பிரிவு; 15 முதல் 18 வரை இரண்டாம் பிரிவு. இந்தப் பகுதியில் குழந்தை வளர்ச்சியின் முதிர்ச்சி நிலையைக் காண்கிறோம். பதினெட்டு வயதுக்குப் பின் வயது முதிர்கின்றதே ஒழிய, வேறு விசேஷ மாறுதலை காண்பதில்லை. இனி, முதற்பகுதியில் நிகழும் அதிசய மாறுதல்களைக் கவனிப்போம்.

முதலாவது பருவம் அதி முக்கியமானது

ஐந்து அல்லது ஆறுவயதுப் பையனைச் சாதாரணமாகப் பாலர் வகுப்பிற்கு உரியவனென்று கருதிக் கல்வி கற்பிக்கப்படுவதைக் காண்கிறோம். இப்பையன் ஏற்கெனவே நடக்கக் கற்றுக்கொண்டிருக்கிறான்; பேசக் கற்றுக்கொண்டிருக்கிறான். இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்துக்கு எப்படி வரமுடியும்? உபாத்தியாயர் சொல்வதை எப்படிப் புரிந்துகொண்டு பதில் சொல்ல முடியும்? இந்த நிலைக்கு இவன் எப்படித் தன்னைத் தயாரித்துக்கொண்டான்?

பிறந்தபோது குழந்தைக்கு நடக்கத் தெரியுமா?—பேசத் தெரியுமா?—நடை கற்பித்தவர் யார்? பேசக் கற்றுக்கொடுத்தவர் யார்? ஞாபகம் எப்படி வந்தது? அறிவு எப்படி வளர்ந்தது? சித்தம் எப்படித் தழைத்தது? உபாத்தியாயர் சொல்வதைப் புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் எவ்வாறு விளைந்தது? கவனிக்கக் கூடிய சக்தியும் பொறுமையும் எப்படி ஏற்பட்டன?

இதனால் வாழ்க்கையின் அதி முக்கியமான பகுதியே முதல் ஆறுவயதுப் பருவம்தான் என்று தெரிகிறதல்லவா? இதை ஒரு 'சிருஷ்டி பருவம்' என்றே சொல்லலாம். பூஜ்யத்திலிருந்து வளரும் வளர்ச்சி - விநோதத்தை இந்தப் பருவத்திலேதான் காண்கிறோம்.

ஊமைப் பிள்ளை பேசினான் என்றால் அதை ஓர் அற்புதம் என்கிறோம். அப்படியானால் ஊமையாகப் பிறந்த குழந்தை பேசக் கற்றுக்கொள்வதும் ஓர் அற்புதம் தானே? அழுகை தவிர ஒரு பாஷையும் தெரியாத குழந்தை ஒரு பாஷையைப் பேசக் கற்றுக்கொள்வது

அதிசயமல்லவா? இதை வளர்ச்சி என்று சொல்வது சரியன்று. பூஜ்யத்திலிருந்து வளர்வதெப்படி ? எனவே, இது 'சிருஷ்டி பருவம்' தான்.

முதியவர் மனம் இப்படி ஒன்றும் செய்துவிட முடியாதே! எனவே முதல் ஆறுவயதுவரையுள்ள குழந்தை-மனம் முதியவர் மனத்தினின்றும் மாறுபட்டது என்று சொல்லவேண்டும். சிருஷ்டியென்ருல், அற்ப சொற்ப சிருஷ்டியா குழந்தை செய்வது? பாஷையை மட்டுமா சிருஷ்டித்துக் கொள்கிறது குழந்தை? — பேசுவதற்கு உரிய கருவிகளேயும் படைத்துக் கொள்கிறதல்லவா?

ஸ்தூல இயக்கம் ஒவ்வொன்றையும், அறிவின் ஒவ்வொரு அம்சத்தையும் படைத்துக் கொள்கிறது குழந்தை. மனித உள்ளத்தையும் மனித சொரூபத்தையும் படைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையது குழந்தை. இது அதிசய அற்றல்,—செயற்கருஞ் செயல்.

பகுத்தறியும் மனமாகிய நமது புறமனத்தின் காரியமாக ஏற்படுவதல்ல இத்தகைய சிருஷ்டி. நாம் பகுத்தறிவையும் சித்த சக்தியையும் உபயோகித்துக் கொண்டு கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்கிருேம்.

> கற்க கசடற; கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக

என்று திருவள்ளுவர் குறிப்பிடும் லட்சியம் நாம் நமது பகுத்தறிவையும் சித்த சக்தியையும் உபயோகித்து நிறைவேற்றிக் கொள்வதற்கு உரியதாகும். குழந்தைக்கோ பகுத்தறிவுமில்லே, சித்த சக்தியுமில்லேயே. இவற்றை இனிமேல்தானே சிருஷ்டித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது?

குழந்தையுள்ளம் ஒரு ஜீவகாந்தம்

குழந்தையுள்ளத்திற்கும் நமது உள்ளத்திற்கும் உள்ள மாறுபாட்டை உணர்ந்துகொண்டால், நம் உள்ளத்தைப் பகுத்தறியும் புறமனம் என்றும், குழந்தை யுள்ளத்தைப் பகுத்தறியாத, கிரகிக்கும் சக்தியுள்ள, உள்மனம் என்றும் சொல்ல வேண்டிவரும்.

பகுத்தறியாத குழந்தைமனம் தாழ்ந்த மனம் அல்ல என்பதையும் நன்குணர்ந்து கொள்ளவேண்டும். பகுத்தறியாத மனத்திலும் அறிவு இருக்க முடியும் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. குழந்தை பகுத்தறியாத உள்ளத்தைக் கொண்டுதானே கிரகிக்க வேண்டியவற்றைக் கிரகித்து, நாம் செய்வதற்கு அரிய செயல்களையும் செய்து முடிக்கிறது?

குழந்தையுள்ளத்தை இரும்பைக் கவர்ந்து இழுக்கும் காந்தத்திற்கு ஒப்பிடலாம். காந்தம் எல்லாப் பொருள்களையும் இழுத்துக்கொள்வதில்லை. குழந்தை யுள்ளமும் தன் அறிவை நிர்மாணம் செய்துகொள்வதற்கு அவசியமானவற்றையே கிரகித்துக் கொள்ளுகிறது.

இதை விவரிக்க, மாண்டிஸோரி தமது அடையாற்றுச் சொற்பொழிவு ஒன்றிலே, செல்வக் குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையைப் பற்றிப் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. அழகான தோட்டத்தின் மத்தியிலுள்ள இல்லத்தில் அக்குடும்பத்தினர் வசித்து வந்தனர். தோட்டத்திலே அழகான செடிகொடிகளும் பன்னிற மலர்களும் பறவைகளும் வண்ணத்திப் பூச்சிகளும் ஏராளமாகக் காணப்பட்டன. எனினும் அந்த ஐந்து மாதக் குழந்தை பூக்கள் முதலியவற்றைக் காட்டிலும்

சாம்பல் நிறமுள்ள ஒரு சுவரில் பதித்திருந்த வெள்ளைப் பளிங்குக் கற்பலகையால் பெரிதும் வசீகரிக்கப் பெற்றதாம். காரணம் என்ன?

பறவைகள் பறந்துபோய்விட்டன; செடிகொடிகள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன; பூக்கள் வாடிப் போயின. பளிங்குக் கற்பலகையோ ஒரே இடத்தில் நிலையாக இருந்ததால், குழந்தையுள்ளத்திற்குக் களைப்பை உண்டாக்காமல் அமைதி ஊட்டியது. இந்த உள்ளமாகிய காந்தம் தனக்கு வேண்டியதைக் கவர்ந்து கொண்டது.

கண் முதலான புலன்களால்தான் சூழ்நிலையுடன் உறவு கிடைக்க முடியும். பார்வையால் கிடைக்கும் பயன் மிகவும் முக்கியமானது. எது எது எங்கே எங்கேயிருக்க வேண்டுமோ, அங்கே அங்கே அது அது இருக்கப் பார்ப்பதில் குழந்தைக்கு மன நிம்மதி ஏற்படுகிறது. மேலும் ஓர் உதாரணம் காட்டுகிறார் மாண்டிஸோரி.

குழந்தை பிறந்து சில மாதங்களே ஆகின்றன. உயர்ந்த இடத்தில் சற்றுச் சாய்வான படுக்கையில் படுத்துக்கொண்டே சூழ்நிலையைக் குழந்தை அநுபவிக்கும்படி அந்தப் படுக்கையை அமைத்திருக்கிறார்கள், பொருள்களை முறையாக அழகுபெற அங்கங்கே வைத்திருக்கிறார்கள். அவற்றுள் ஒன்று ஒரு மேசை; அதில் மஞ்சள்-துணி விரித்துப் பூந்தொட்டி வைத்திருக்கிறது.

இந்த அமைப்பு முறையில் எதிர்பாராத மாறுதல் ஒரு சமயம் ஏற்படுகிறது. குழந்தையைப் பார்க்கவந்த ஒருவர் மேலே குறிப்பிட்ட மேசைமீது தம் குடையை

வைத்துவிடுகிறுர். இது குழந்தையின் மன நிம்மதியைக் குலேத்துவிடுகிறது. அந்தக் குடையை உற்றுப் பார்த்தபின் இந்தக் குழந்தை அழத் தொடங்குகிறது.

இந்த அழுகைக்குப் பொருள் காண முயன்று, 'பாப்பாவுக்குக் குடை வேணுமாம்' என்று சொல்லிக் கொண்டே அந்தக் குடையைப் பாப்பாவிடம் கொண்டு வருகிறுர்கள். பாப்பாவோ அதைத் தள்ளி விடுகிறது. செவிலித்தாய் குழந்தையை அந்த மேசைக்குக் கொண்டு போய்க் குடையைக் காட்டுகிறுள். குழந்தையின் அழுகை அதிகரிக்கிறது. குழந்தை-மனுேதத்துவம் தெரியாதவர்கள் 'என்ன முரண்டு!' என்று தான் சொல்லக்கூடும்.

ஆனுல் குழந்தையின் தாய் கொஞ்சம் குழந்தை-மனுேதத்துவம் தெரிந்தவள். அந்தக் குடையை மேசையிலிருந்து எடுத்து அறைக்கு வெளியே கொண்டு போகிறுள். குழந்தையின் அழுகை உடனே நின்று விடுகிறது. குழந்தையின் உள்ளம் நிம்மதி அடைகிறது.

'அந்த மேசை மேல் அந்தக் குடை இருப்பது முறை தவறிய இருப்பு!' என்ற உணர்ச்சிதானே குழந்தைக்கு ஏற்பட்டிருந்தது. 'எது எப்படியாவது இருந்து தொலேயட்டும்' என்ற அலட்சிய புத்தி குழந்தைக்கு இல்லே.

குழந்தையின் பார்வைக்கு இலக்காகும் பொருள்களே ஏதாவது ஒருவகை ஒழுங்கு முறையில் அமைத்து வைப்பதே குழந்தைக்கு நிம்மதி தருவதாகும். குழந்தை யிருக்கும் அறையிலே இவ்விஷயமாகக் கவனம் செலுத்தப்படுவது நலமாகும்.

ஒழுங்கு தவறிக் குழந்தை எதிர்பார்க்க முடியாத இடங்களில் வைக்கும் பொருள் குழந்தையின் பார்வையை உறுத்துவது போல் நம்மைப் பாதிப்பதில்லை. குழந்தை பார்க்கும் பொருள்களெல்லாம் அதன் உள்ளத்தை ஊடுருவிப் பாய்வது போலக் காண்கின்றன என்பதை நாம் மறக்கலாகாது. குழந்தை யென்ற ஜீவ மாணிக்கத்தின் உள்ளம் ஒருவகை ஜீவ காந்தம் என்பது தெளிவு.

உள்ளமே வாழ்க்கை

ஒரு வயதுக் குழந்தை தன்னைச் சூழ்ந்து கிடக்கும் பொருள்களை யெல்லாம் பார்த்து அவற்றை இனங் கண்டு கொள்ளும் ஆற்றலும் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

குழந்தைக்கு அதீத உணர்ச்சி உண்டு. சுற்றுப் பொருள்கள் ஆழ்ந்த ஆர்வத்தைக் குழந்தை யுள்ளத்தில் விழிக்கச் செய்கின்றன. இந்த ஆர்வத்தால் அதிகமான உத்ஸாகம் ஏற்படுகிறது. இத்தகைய உணர்ச்சிகளை யெல்லாம் குழந்தை தன் உள்ளத்தால் அடைகிறது என்று சொல்வதைக் காட்டிலும், தன் வாழ்க்கையால் பெற்றுக்கொள்கிறது என்று கருதுவது பெரிதும் பொருந்துவதாகும்.

ஓர் உத்தம பக்தன் உரையாடும்போது நாக்கு மட்டுமா பேசுகிறது?—வாழ்க்கை முழுதும் பேசுகிறது என்று சொல்வதுண்டு. அப்படியே சுற்றுப் பொருள்களின் உணர்ச்சிகளையும் தன் வாழ்க்கையைக் கொண்டே பக்தன் உணர்ந்துகொள்ளக் கூடும். இந்த அம்சத்தில் குழந்தையும் பக்தனை நினைவூட்டுகிறது.

பக்தனும் குழந்தையுள்ளத்துடன் தானே பார மார்த்திக உண்மைகளைக் கண்டு கொள்கிறான். ஆம்; பக்தனும் ஞானக் குழந்தைதான்.

தோயும் உள்ளம்

கிறிஸ்துநாதர், திருஞானசம்பந்தர், நம்மாழ்வார் போன்ற தெய்வ பக்தர்களை 'அதிசயப் பிறவி' என்று கருதுவோருண்டு. உண்மையில், ஒவ்வொரு குழந்தையும் அதிசயப் பிறவிதான். ஒரு பாஷையைக் குழந்தை கற்றுக் கொள்வதே அதிசயம்தானே?

நினைத்துப் பார்க்கும் சக்தி என்பது குழந்தையிடம் காணப்படுவதில்லை; எனினும் வாக்கியங்களின் அமைப்பு முறை முதலியவற்றை எப்படியோ ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறான்.

நம்மைப்போல் அறிந்து கொள்ளும் ஆற்றலும் குழந்தைக்கு இல்லை, எனினும் குழந்தை யுள்ளத்திலும் ஒருவகை அறிவு இருக்கத்தான் செய்கிறது.

குழந்தையின் இந்த அதிசய உள்ளத்தைக் 'கிரகிக்கும் உள்ளம்' அல்லது தோயும் உள்ளம் அல்லது ஒற்றும் உள்ளம் (Absorbent Mind) என்கிறார் மாண்டிஸோரி.

நாம் நமது அறிவைக் கொண்டு கற்றுக்கொள்கிறோம்: குழந்தையோ சூட்சும வாழ்வைக் கொண்டு கிரகித்துக் கொள்கிறது. இந்த விதமாகத்தான் தன் தாய்மொழியைக் குழந்தை கற்றுக் கொள்கிறது.

நாம் கற்றுக் கொள்ளும்போது உள்ளத்தைப் பாத்திரமாகவோ கூடையாகவோ செய்துகொண்டு

விஷய அறிவால் நிரப்பிக் கொள்கிறோம். ஞாபக சக்தியால் உள்ளத்தில் விஷய உணர்ச்சிகளைச் சேகரித்துக் கொள்வது என்பது இதுதான். ஆனால் பாத்திரம் வேறு, பண்டம் வேறு என்பதுபோல் நாம் வேறு, விஷய உணர்ச்சிகள் வேறு என்பது உண்மை. குழந்தை விஷயமோ இப்படியல்ல.

குழந்தை ஒரு மாறுதலை அடைகிறது. விஷய உணர்ச்சிகள் குழந்தையுள்ளத்தை ஊடுருவிச் செல்வதுடன் அந்த உள்ளத்தை உருவாக்கவும் உதவுகின்றன. இத்தகைய குழந்தை யுள்ளத்தைக் 'கிரகிக்கும் உள்ளம்' என்றுகூறுவது பொருத்தம்தானே?

சூழ்நிலையில் உள்ளது முழுமையும் குழந்தை யுள்ளத்தின் பகுதியாகிறது. பழக்க வழக்கங்கள், சமய அநுஷ்டானங்கள் முதலான சூழ்நிலை அம்சங்களும் குழந்தை யுள்ளத்தின் பகுதியாகின்றன.

பிறந்த குழந்தை படுக்கையில் கிடக்கிறது. பிறகு நடக்கிறது; சுற்றி வருகிறது; செயல் செய்கிறது. எல்லாம் குதூகல அநுபவம்தான். இந்தக் குதூகல வாழ்விலே இயக்கங்களைக் கற்றுக் கொள்கிறது. இதே நிலையில் பாஷையும் பழக்கமும் குழந்தை யுள்ளத்திற்குள் இடம் பெறுகின்றன. பழக்கம் என்றால், நுண் கலைப் பழக்கமும் தான்.

இந்த நிலை மட்டும் நீடிக்கக் கூடுமானால், குதூகலமாக வாழ்வதிலேயே ஒரு பாஷையைக் கற்றுக் கொள்ள முடியுமானால், வழக்கறிஞனாவதிலோ, வைத்தியனாவதிலோ, எந்திர நிபுணனாவதிலோ விசேஷ சிரமம் ஏற்படக் காரணம் இராதல்லவா? கடின

உழைப்பு இல்லாமல் விரும்பியவற்றைக் கற்றுக் கொண்டு அருங்கலை விநோதராகி விடலாமே!

அதிசய மாறுதல்கள்

புற மனத்தின் உதவியில்லாமலே குழந்தை கற்க வேண்டியதைக் கற்றுப் படிப்படியாக அதை உள் மனத்திலிருந்து புறமனத்திற்கு மாற்றி விடுகிறது. இந்தப் பாதை இன்பப் பாதை; அன்புப் பாதை.

புற மனம் நமக்கு ஒரு பெரிய உடைமையாகத் தோன்றுகிறது. இதுதானே முதியவருள்ளம்; மனித உள்ளம்? இதைப் பெற்றுக்கொண்ட பின் கடின உழைப்பும் களைப்பும் கலந்த பாதையில் சென்றுதான் புதிய புதிய பயிற்சிகளை நாம் அடைய வேண்டும்.

இயக்கம்தான் எவ்வளவு அதிசயமாகக் குழந்தையால் கற்றுக்கொள்ளப் படுகிறது! பிறந்ததும் குழந்தையின் இயக்கம் மிகவும் சொற்பமானதுதான். பிறகு படிப்படியாக உடம்பில் உயிர்ச் சக்தி ஆவேசிக்கிறது. இதன் பயனாக இயக்கம் அதிகரித்தவண்ணமா யிருக்கிறது.

நான்காம் மாதத்தில் குழந்தை தலையைத் தூக்கிக் கொள்ள முயல்கிறது; ஒரு புறமாய்த் திரும்பிக் கவிழ்ந்து கொள்வதும் சாத்தியமே. இந்த நிலையில் கைகளும் ஒத்துழைக்கின்றன. முதல் மாதத்திலேயே மூளை வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் இயக்கத்தின் வாயிலாக இந்த வளர்ச்சி வெளிப்படுவது மெதுவாகத் தான் நடைபெற வேண்டியிருக்கிறது.

ஆறும் மாதத்திலேயே குழந்தை உட்கார்ந்து கொள்ளும் ஆற்றல் பெறுகின்றது. எட்டாம் மாதத்

தில், தானே சர்வ சாதாரணமாக உட்கார்ந்து கொள்ளும். இந்த நிலையில் மூளை வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. விரைவில் தரையில் நீந்துவதும், கைகளையும் கால்களையும் ஊன்றிக்கொண்டு தவழ்வதும் சாத்தியமாகின்றன! நாம் பிடித்துக் கொள்ளக் குழந்தை நடக்கவும் கற்றுக் கொள்ளுகிறது. தொடர்ச்சியாகக் கைத்திறன் அபிவிருத்தி அடைவதையும் கண்டு கொள்ளலாம்.

முதல் முதல் கால் விரல்களின் உதவியால் நிற்கவும் நடக்கவும் கற்றுக்கொண்ட குழந்தை குதிக் காலைப் பதிய வைத்து நடக்கவும் பழகி விடுகிறான். இந்த நிலையில் உதவி பெறாது தானே செயல் புரிய வேண்டும் என்ற எண்ணம் உறுதிப்படுகிறது.

ஒன்றரை வயதில் முழு முயற்சியுடன் செயல் புரியக் குழந்தை ஆசைப்படுவதையும் காண்கிறோம். பளுவுள்ள சாமான்களைத் தூக்கிக்கொண்டு நடப்பதிலும் விருப்பம் ஏற்படுகிறது. மாடிப் படிகளில் கைப் பிடிகளைப் பிடித்துக்கொண்டு ஏறுவதிலும் ஆசை உண்டாகிறது. இந்த நிலையில் கைத்திறன் விசேஷ அபிவிருத்தி அடைகிறது.

இரண்டாவது வயதில் ஓட்டத்திலும், உறுதியாகப் பொருள்களைப் பற்றிக்கொண்டு தொங்குவதிலும் விருப்பம் உண்டாகிறது. பிறரைப் பார்த்துச் சுதந்திரமாகத் தொழில் புரியத் தொடங்குகிறது. பாத்திரங்களைச் சுத்தம் செய்யவும் விரும்புகிறது.

இரண்டரை வயதிற்குள் நீண்ட தூரம் நடக்கும் ஆற்றல் பெறுகிறது. 'அம்மா! நானே என் காரியத்தைச் செய்து கொள்ளச் சுதந்திரம் கொடு. அநாவசிய

மாக என் காரியங்களில் குறுக்கிடாதே. அப்படிச் செய்தால் என் வளர்ச்சி குன்றும்!' என்பது இப்போது குழந்தையின் நிலை. குழந்தையின் இந்தப் பேசாத பேச்சை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு வயது முதல் குழந்தையை உலாவித் திரிய அழைத்துக்கொண்டு போவதும், 'மோட்டார்க் காரில்' அழைத்துச் செல்வதும் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் உதவும். ஐம்புலன் வழியாகக் கல்வி கற்பதற்கு இந்தப் பழக்கம் பயன்படும் என்பது திண்ணம்.

குழந்தை இயங்கத் தொடங்கும்போது கிரகிக்கும் உள்ளம் ஏற்கெனவே சூழ்நிலையைக் கிரகித்துக் கொண்டிருக்கிறது. மூன்று வயதுக் குழந்தையைக் கவனித்தால், அவன் எப்போதும் ஏதாவது ஒன்றுடன் விளையாடிக்கொண்டே யிருப்பதைக் காணலாம். இதன் பொருள் என்ன? உள்மனம் ஏற்கெனவே கிரகித்துக் கொண்டிருப்பதைக் கையால் தொழிற்படுத்திப் புறமன உணர்ச்சியாக்குகிருன் குழந்தை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படித் தொழிற்படுத்துவதால்தான் குழந்தை புறமன உணர்ச்சி பெற்று மனிதனுகத் தன்னைப் படைத்துக் கொள்ளப் போகிருன்.

குழந்தையை இப்படித் தூண்டிவிடும் சக்தி அதிசயமானது, பேரதிசயம் வாய்ந்தது. முதல் முதல் விளையாட்டினுலும், பிறகு செயலினுலும் அநுபவம் பெற்றுக் கைகளை உபயோகித்துக்கொண்டு குழந்தை மனிதனுக வளர்கிருன்.

மனித அறிவின் கருவியே கைதான்; கைத்திறனல் குழந்தை புறமனத்தை

நிர்மாணம் செய்துகொள்கிருன். கொஞ்சங் கொஞ்சமாக ஞாபக சக்தி ஏற்படுகிறது; விஷயத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் பகுத்தறியும் ஆற்றலும் ஏற்படுகின்றன. இவ்விதமாக ஆருவது வயதை எட்டிப் பிடிக்கிருன் குழந்தை.

'நாம் சொல்வதைப் புரிந்துகொள்ளும் வயது வந்திருக்கிறது; நாம் சொல்வதைக் கேட்கும் பொறுமையும் இருக்கிறது; எனவே கல்வி கற்கும் பருவம் வந்துவிட்டது' என்று நாம் தீர்மானிக்கிரேம். இதற்கு முந்திய நிலேயிலோ நாம் அணுக முடியாத ஒரு மனப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தான் குழந்தை. இது நமது மனப்பிரதேசமல்ல. இந்த நிலேயிலேதான் அதிசய வளர்ச்சி ஏற்படக் காண்கிரேம்.

இந்த ஆரம்பப் பருவத்திலே நாம் ஒன்றும் கற்பிக்க முடியாது. குழந்தையின் கிரகிக்கும் உள்ளம் வளர்ந்துகொண்டிருக்கிறதே, அந்த வளர்ச்சிக்குத் துணே புரிவதுதான் சாத்தியமாகும்.

நம்முடைய உதவியால் கிரகிக்கும் உள்ளத்தின் செயலே நீடித்திருக்கச் செய்ய முடியுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. இது முடியுமானல் களேப்பின்றி மனிதன் அறிவைக் கிரகித்துக் கொள்ளக் கூடுமே! 'இவ்வளவு அறிவையும் எப்படி அடைந்துவிட்டோம்!' என்று கூடத்தெரிந்து கொள்ளாமலே அறிவால் நம்மை நிரப்பிக் கொள்ளக் கூடுமே! 'மந்திரத்தால் விளேந்ததா? அற்புதமா? தெய்வச் செயலா?' என்று அதிசயிக்கும்படி அறிவு பொங்கிப் பெருகக் கூடுமே!

முதியவர் செய்யக்கூடிய உதவி

பாலை உறிஞ்சிப் பருகுவதுபோல் அறிவையும் உறிஞ்சிப் பருகும் இயற்கை-ஆர்வமும் ஆற்றலும் குழந்தைக்கு உண்டு என்பதை மாண்டிஸோரி அம்மையார் தெளிவுபடுத்தியதும், கல்வியுலகில் ஒரு புரட்சி ஏற்பட்டுவிட்டது என்பதை அறிஞர்கள் உணர்ந்து கொண்டார்கள். வாழ்க்கையின் ஆரம்பப் பருவமான முதல் ஆறு வயதுப் பகுதியே அதிமுக்கியமானது, சிருஷ்டி சக்தி வாய்ந்தது என்பதைத் தெரிந்து கொண்டதும், குழந்தையின் சிருஷ்டிவேலையில் இயன்ற உதவி செய்ய வேண்டும் என்பதாக முதியவர் கடமையும் உணரப்பட்டு வருகிறது. அறிவோடு நாம் உதவி செய்வதற்கு இந்தப் பருவம்போல் வேறு எந்தப் பருவத்திலும் இவ்வளவு தேவை ஏற்படுவதில்லை.

குழந்தை சிருஷ்டிவேலை செய்து வரும் அந்த இன்ப அன்புப் பாதையிலே இடையூறுகள் குறுக்கிட்டால் குழந்தை தன் சிருஷ்டிவேலையைப் பூர்ணமாகச் செய்துகொள்ள இயலாது. எனவே, குழந்தையின் சிருஷ்டிசக்தியை முடமாக்கும் இடையூறுகளைப் போக்குவது நமது முதற் பெருங் கடமையாகும்.

அடுத்தபடியாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, நாம் ஒரு சிறிய பலவீனமான பிராணிக்கு உதவி செய்வதற்கு மாருகப் பெரிய சிருஷ்டி சக்திகளோடு கூடிய ஒரு ‘குழந்தைப் பிரம்மா’வுடன் ஒத்துழைக்கிருேம் என்பதாகும். இதே சமயம், இந்த மேன்மையான சக்திகள் மென்மையாகவும் இருப்பதால் இடையூறுகள்

இவற்றை முடக்கிவிடக்கூடும் என்பதையும் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தச் சிருஷ்டி சக்திகள் உள்மனத்தைச் சார்ந்தவை யென்பதையும், சூழ்நிலையில் ஏற்படும் அநுபவத்தாலும், நடைபெறும் செயலாலும் இந்த உள்மனம் புறமனம் ஆகிறது என்பதையும் நாம் நன்ருக அறிந்துகொள்ள வேண்டும். நமது உள்ளம் வேறு, குழந்தையுள்ளம் வேறு என்பதையும், நாம் குழந்தையுள்ளத்தை அணுகி அடைந்து விஷய அறிவைப் போதிக்க இயலாது என்பதையும் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் குழந்தைவழியில் நாம் நேரடியாகத் தலையிடக் கூடாது, தலையிடவும் முடியாது என்பதும் நமது உள்ளத்தில் நிலைபெற வேண்டும். அப்போதுதான் கல்வியைப் பற்றிய நம் முழுக் கருத்தும் மாறிக் குழந்தைவாழ்விற்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை நமக்கு ஏற்படுவதாகும்.

கல்வியென்ருல் 'உருவுக்கு மிஞ்சின குரு இல்லை' என்ற ரீதியில் கருத்துக்களையும் விஷயங்களையும் குருட்டுப் பாடமாக உள்ளத்தில் திணிப்பதல்ல. சூட்சும வளர்ச்சிக்கு உதவுவதுதான் உண்மைக் கல்வி.

குழந்தை எந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டாலும், 'என்ன அழகு!' என்ற உணர்ச்சி மேலோங்கியிருக்க வேண்டும். ஒரு சமயம் மூன்று வயது நிரம்பாத ஒரு சிறுமிக்கு டாக்டர் மாண்டிஸோரி மூன்று நிறங்களைச் சுட்டிக் காட்டிப் பெயர்களையும் சொல்லிக் கொடுத்தார். வயதுக்கு ஏற்ற பேச்சுத்திறன் பெற்றிராத சிறுமி அவள். மேசைமேல் மஞ்சள், நீலம், சிவப்பு

ஆகிய மூன்று பட்டு நூல்கள் சுற்றிய கட்டைகளை வைத்து, அந்த நிறவேற்றுமைகளைக் காட்டி ஒவ்வொரு நிறத்தின் பெயரையும் சிறுமிக்குச் சொல்லிக் கொடுத்தார் மாண்டிஸோரி. சிறுமி தெரிந்துகொண்டதும் குதூகலமாய்க் குதிக்கத் தொடங்கினாள்.

டாக்டர் மாண்டிஸோரி சிறுமியின் சிறு நாற்காலிக்கு அருகில் தாமும் அமர்ந்த வண்ணம் சிரித்துக் கொண்டே, 'உனக்கு இந்த நிறங்கள் தெரியுமா? குழந்தாய்!' என்று கேட்டார். சிறுமி கூத்தாடிய வண்ணம் 'ஆமாம், ஆமாம்' என்றாள்.

இப்படிப் பதில் சொன்ன பிறகும் சிறுமி அம்மையாருக்கு அருகே நடனமாடுவதுபோல் குதித்துக் கொண்டிருந்தாள். இன்னும் அம்மா அந்தக் கேள்வியைக் கேட்டால் மறுபடியும் "ஆமாம்" சொல்லலாமே' என்பது அந்த ஆடலின் உட்பொருள்.

அது தெரியாதா மாண்டிஸோரிக்கு? 'இந்த நிறங்கள் உனக்குத் தெரியுமல்லவா?' என்று மறுபடியும் கேட்டார். 'ஆமாம், ஆமாம்' என்றாள் சிறுமி ஆடிக் கொண்டே, பாடுவது போன்ற குரலில். அறிவு-வளர்ச்சியில் குழந்தைக்குள்ள ஆனந்தம் இது.

மூன்று வயது முதல் ஆறுவயதுவரை குழந்தையுள்ளத்தைக் கூர்ந்து கவனித்து வளரவிடுவதற்கு விசேஷமான சமயோசித நுண்ணறிவு வேண்டும். குழந்தை-மனோதத்துவம் தெரியாத முதியவர்கள் இத்தகைய நுண்ணறிவுத் திறனுடன் குழந்தைப்பணி செய்ய இயலாத நிலையில் இருப்பவர்களே.

இந்த உண்மையைக் கவித்வசக்தியுடன் விளக்கு கிறது கவி ரவீந்திரரின் வாக்கு : குழந்தை ஓடிவருகி ருள் 'அம்மா. அம்மா!' என்று கூப்பிட்டுக்கொண்டே. 'பாரம்மா பார். நான் கண்டெடுத்துக் கொண்டு வந்திருப்பதைப் பார்' என்று கூவிக்கொண்டே வருகிருள்.

சிறுமியின் கண்களில் இளநகை மிளிர்கின்றது, குதூகலமாய்க் கைகொட்டிவரும்போது சிவந்த சிறு வளையல்கள் கொஞ்சிக் கூத்தாடுகின்றன. தாயின் கழுத்தை இளந்தளிர்க் கைகளால் கட்டிக்கொண்டு சிறுமி கூச்சலிடுகிருள், 'பாரம்மா, பார்; நான் கண்டெடுத்துக் கொண்டு வந்தேன் பார்' என்பதாக.

ஒரு பறவையின் இறகுதான் அது: நீலமும் பொன்னும் கலந்து கொஞ்சும் இறகு. குழந்தையின் காதில் எத்தனை கதைகளைச் சொல்லிவந்தது! நீல வானம்—நீலமேகம்பற்றிய கதைகள், பறவைக்கூடு—பறவைக்குழந்தைகளின் மழலைக் கதைகள், அருணோதய இன்ப ஒளிக் கதைகள்!

குழந்தை இறகால் தன் கன்னத்தின் மீதும் கண் மீதும் மெல்லத் தடவிப் பார்த்து, இதயப் பேராவலுடன் 'பாரம்மா, பார், இதோ நான் கண்டுபிடித்துக் கொண்டு வந்திருப்பதை!' என்கிருள்.

தாய் பார்க்கிருள்; ஒரு சிரிப்புச் சிரிக்கிருள். 'என் செல்வமே, நல்ல செல்வம் கொண்டு வந்திருக்கிருய் நீ!' என்று சொல்லிக்கொண்டே இறகை வாங்கித் தூரத்தில் எறிந்துவிட்டு அவசரமாய் வீட்டுவேலை பார்க்கப் போய்விடுகிருள்.

குழந்தை தரையில் அப்படியே சோர்ந்து அமர்கிருள், இறகு ஒடிந்த பறவைபோல. கண்களில் இளநகை மறைந்துபோகிறது: கொஞ்ச நேரத்தில் எழுந்துபோய் இறகை எடுத்துக்கொள்ளுகிருள். அது முதல் இந்தச் செல்வம் தாயின் காட்சிக்கும் புலனுகாதபடி ஒளிந்துகிடக்கிறது!

---

14. குழந்தையும் புதிய உலகமும்

உயிர்க்குலத்திலே வேறு எந்தப் பிராணியும் மனிதப் பிராணிபோல் ஆறே ஆண்டுகளில் அறிவு-வளர்ச்சி பெறுவதில்லையென்பது வாழ்க்கைப் பேரதிசயங்களில் ஒன்ருகும், மனித சொரூபத்தின் எல்லா அம்சங்களையும் நிர்ணயித்து நிலைபெறச் செய்யும் மனித வாழ்க்கைப் பகுதியே இந்த ஆறு வயதுப் பகுதிதான்.

மாண்டிஸோரியும் புதுமுறைக் கல்வியும்

எனவே, குழந்தைக் கல்வி என்பது பிறப்பு முதல் தொடங்குகிறது என்றும், சாதாரணமான போதனை முறைகள் அல்லது கல்விமுறைகள் என்ற ஒடுக்கமான கூட்டுக்குள் அடங்கக்கூடியதில்லையென்றும் மாண்டிஸோரி கருதினர். அறிவையோ, லட்சியங்களையோ உபாத்தியாயர் தம் மூளையிலிருந்து குழந்தை மூளைக்குள் திணிக்கப் பார்ப்பதே கல்வி என்ற பழைய கொள்கையை இவர் ஆதாரபூர்வமாக மறுத்தார். கல்விச்சாலையில் புகுவதற்கு முன்பே, வாழ்க்கையில் பிரவேசிப்பதற்கு உரிய கல்விக்கு இன்றியமையாத சூழ்நிலை அமைக்கப்பெற வேண்டும் என்பது மாண்டிஸோரி கல்விமுறையின் ஒரு பிரசித்தமான பெருங் கொள்கையாகும்.

மனிதன் மனிதனுக வளர்ந்தோங்கும் நெறியை ஆரம்பத்திலிருந்தே துலக்கிக் காட்டுவதற்குக் குழந்தை சுபாவத்தைக் குறித்து விஞ்ஞான அடிப்படையில்

சோதனை செய்து பார்த்ததுடன், இந்தச் சுபாவம் தக்க முறையில் வெளிப்படுவதற்கு உதவி செய்யவும் முயன்று வெற்றிபெற்றவர் மாண்டிஸோரி. தமது சோதனைகளின் பயனாக, மனிதனுக்குத் தந்தையாய்க் குழந்தை அமைகின்ற ஆறுவயதுப் பகுதியைப் பாழாக விடுவது மனிதவர்க்கத்தின் எதிர்காலத்தையே பாழாக்குவதாகும் எனக் கண்டுகொண்டார்,

புதிய உலகை நிர்மாணம் செய்வதற்கு எத்தனையோ ஆலோசனைகள் சொல்லப்படுகின்றன. அரசியல் வாதிகளும் பொருளாதார நிபுணர்களும் விஞ்ஞானிகளும் மதவாதியரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். கல்வித்துறை நிபுணர்களும் தங்கள் கருத்துக்களைத் தாராளமாகப் பரிமாறி வருகிறார்கள். வாழும் முறையை உணர்த்தும் கல்வி எது என்பது குறித்தும் வாதங்கள் நடைபெறுகின்றன. 'போரைத் தடுப்பது எப்படி? சமாதானத்தை நிலை நாட்டுவது எப்படி?' என்பது குறித்தும் வாதங்களும் எதிர்வாதங்களும் நடைபெறுகின்றன.

கல்விப் பயிற்சி என்றால் மனப் பயிற்சிதான் என்றே பலரும் நம்புகிறார்கள். அறிவைப் புகட்டுவதே கல்வி யென்றால், அறிவுள்ளவர்கள் பல கற்றும் பல கேட்டும் திருந்திய வாழ்வு முறையை மேற்கொள்ளாமலிருப்பதற்குக் காரணம் என்ன? கொல்லாமையே நல்லறமென்று நம்புவோரும் போர் முயற்சிகளை ஏன் தூண்டுகிறார்கள்?—கொலைக் கருவிகளை ஏன் பெருக்கிய வண்ணமா யிருக்கிறார்கள்?

இந்த நிலையில், 'அறிவு போதாது; மனித சொரூபத்தைக் குறித்தும், அதை நிலைபெறச் செய்வதற்காகக்

குழந்தை - சுபாவத்தைக் குறித்தும் சிந்திக்க வேண்டும்' என்று எழுகின்ற குரல்தான் மாண்டிஸோரி. ஸ்தூலமாகப் பார்த்தால் 'குழந்தைக்கு என்ன சக்தி இருக்கிறது?' என்றே தோன்றும். ஸ்தூல சக்தியை நோக்கும்போது குழந்தை பலவீனமான பிராணிதான். ஆனுல் விஞ்ஞானம் தெரிந்துகொள்ளாத ஒரு சக்தி குழந்தையிடம் காணப்படுகிறது என்பதை மாண்டிஸோரி கண்டுகொண்டார். இந்தச் சக்தியைப் பயன்படுத்திக்கொண்டு மானுடப் பண்பை, மனித சொரூபத்தை, மனிதனது எதிர்கால மகோன்னத நிலேயை உருவாக்குவதே கல்வியின் அதிமுக்கிய அம்சம் என்கிருர் மாண்டிஸோரி.

குழந்தைக்குள்ளே உபாத்தியாயர்!

மேதாவியைக் கருவிலே திருவுடையவன் என்று கூறுவதுண்டு. பிறந்ததுமே, - ஏன், பிறப்பிற்கு முன் குழந்தைக் கல்வி தொடங்கவேண்டியதுதான் என்று— மாண்டிஸோரி கூறுகிருர் என்ருல் 'கருவிலேயே கல்வி புகட்டுவதுபோலத்தானே இதுவும்!' என்று சிலர் வாதிக்கக்கூடும். முதலாவது அல்லது இரண்டாவது வயதிலேதான் எந்தப் பாடத்தை எப்படித்தான் சொல்லிக்கொடுக்க முடியும்?

குழந்தையின் பிறவி - வேகத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தவர்கள் குழந்தையின் சுபாவத்தையும் சக்தியையும் ஒருவாறு தெரிந்துகொண்டார்கள். கீழே ஆழத்தில் வைரச்சுரங்கம் ஒன்று இருக்கிறதென்று தெரிந்துகொள்ளாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கோடிக்கணக்கான மக்கள் அந்த நிலத்தின் மீது திரிந்து கொண்டிருந்ததுபோல், குழந்தையுலகம்

என்ற சூட்சும உலகில் புதைந்து கிடக்கும் செல்வங்களைத் தெரிந்துகொள்ளாமலே குழந்தைகளோடு கொஞ்சிக் குலாவி வந்திருக்கிறது மனிதவர்க்கம், நீண்டகாலமாக. முதியவர்களின் அடக்குமுறையாட்சி குழந்தையின் இயற்கைவேகத்தையும் கெடுத்து வந்திருக்கிறது. இந்த உண்மையைக் குழந்தைகளிடமிருந்தே தெரிந்துகொண்டார் மாண்டிஸோரி.

குழந்தை - மனோதத்துவத்தைக் குழந்தையிடமிருந்துதான் பேராசிரியர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை இவர் நன்குணர்ந்தார். அறிவை உறிஞ்சிக்கொண்டு பயன்படுத்திக் கொள்ளும் உள்ளம் படைத்தது குழந்தை என்பதைத் தெரிந்துகொண்டார்.

இரண்டே வயதுக் குழந்தை தன் பெற்றோர்களின் பாஷையைப் பேசுகிறதல்லவா? ஒரு பாஷையைக் கற்பதென்றால் அதற்கு எவ்வளவு அறிவுத் திறமை வேண்டியிருக்கிறது? இந்தப் பெருந்திறன் குழந்தைக்கு எவ்வாறு கிடைத்திருக்கிறது? பொருள்களின் பெயர்களோடு வினைச் சொற்கள் முதலியவற்றையும் குழந்தை கற்றுக்கொள்வது எப்படி?

சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர் யார்? இந்த உபாத்தியாயர் குழந்தைக்குள்ளே தான் இருக்கிறார். இந்த உபாத்தியாயரே குழந்தையின் சூட்சும சக்தி.

இந்த உபாத்தியாயர் பாஷையை மட்டுமா கற்றுக் கொடுக்கிறார்? சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களையும் மனிதர்களையும் தெரிந்து கொள்ளவும் கற்பிக்கிறார். வாழ்க்கையின் முதல் இரண்டு ஆண்டுகளிலேயே இந்தப் பயிற்சி கிடைத்துவிடுகிறது.

சுற்றுப்புறத்தில் உள்ளதை மட்டுமா இந்த நிலையில் குழந்தை தெரிந்துகொள்கிறன்? தேசாபிமானம், மதாபிமானம், சங்கீதம் முதலான நுண்கலை-உணர்ச்சிகள் முதலியனவும் இந்த வாழ்க்கைப் பகுதியில் குழந்தை யுள்ளத்தில் படிந்துவிடும். ஏன், முழு அறிவுக்கும் அடிப்படையே அமைந்துவிடுகிறது இந்தப் பருவத்திலே.

மூன்று வயதில் மனித சொரூபத்தின் அடிப்படையே அமைந்துவிடுகிறது எனலாம். முதியவர்களுக்கு அறுபது வருஷ உழைப்புப் பயனும் சரி, குழந்தைக்கு மூன்று வயதில் கிடைத்துவிடும் சூட்சும வளர்ச்சியும் சரி என்று முதியவரின் ஆற்றலையும் குழந்தையின் ஆற்றலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் மனோதத்துவ நூலார் கூறுகின்றனர். எனவே 'மூன்று வயதுக் கிழவன்' என்றுகூடக் குழந்தையைக் குறிப்பிடலாம்.

இரண்டரை அல்லது மூன்று வயதிலேயே குழந்தைக் கல்விச்சாலைகள் குழந்தைகளுக்கு இந்த வளர்ச்சித் துறையில் விசேஷ உதவியும் செய்யத் தொடங்கலாம். மூன்று வயதுக்கு மேலும் சூழ்நிலையிலிருந்து அறிவை உறிஞ்சிக் கொள்ளும் ஆற்றல் குழந்தையிடம் காணப்படுகிறது. இந்த ஆற்றலுக்கு ஏற்ற உதவி புரியும் குழந்தைப் பள்ளிகளைக் குழந்தை-இல்லம் என்றே குறிப்பிடலாம்.


இந்த இல்லங்களிலும் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர் குழந்தையுள்ளத்திற்குள் இருப்பவரே! சுற்றுப் புறமெங்கும் பரந்து கிடக்கிறது கற்றுக்கொள்ளத்தக்க விஷயம். இதைக் குழந்தையுள்ளம் தானாகவே கவர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது

தான் இத்தகைய இல்லங்களின் தனிப்பெரு நோக்கமாகும்.

இந்தக் கல்வி முறையை ஓதாது உணரும் உயர்ந்தமுறை எனலாம். இம்முறையில் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளும் குழந்தையை நோக்கி, 'உனக்கு எழுதக் கற்றுக்கொடுத்தவர் யார்? படிக்கக் கற்றுக் கொடுக்தவர் யார்?' என்று கேட்டால், அந்தக் குழந்தை ஆச்சரியத்துடன், 'ஒருவரும் எனக்குக் கற்பிக்கவில்லையே!' என்றுதான் பதில் சொல்லக் கூடும்.

இப்படி அறிவைக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் சில குழந்தைகளுக்கு மட்டும் உள்ள விசேஷ ஆற்றல் அல்ல; எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுவாக உரிய தொரு சக்திதான். ஓதுவார் இன்றி, ஒருவகைக் களைப்பும் இன்றி, வாசிக்கவும் எழுதவும் தெரிந்து கொள்வதுடன், 'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்று சொல்லுகிறோமே அந்த வாக்கியத்தில் முதல் ஸ்தானம் வகிக்கும் எண் அல்லது கணிதத்தை யும் தெரிந்துகொள்ள முடியும். எண்ணும் எழுத்தும் மட்டுமா?—பூமி சாஸ்திரம், தாவரநூல், சரித்திரம், க்ஷேத்திரகணிதம், பிராணிநூல் முதலியவற்றையும் கற்றுக்கொள்ள முடியும்.

கல்வி என்பது உபாத்தியாயர் கொடுக்கக் குழந்தை வாங்கிக் கொள்ளும் சரக்கு அல்ல என்பதை வற்புறுத்தும் மாண்டிஸோரி உண்மைக் கல்வி முறை குழந்தையின் இயற்கை-வேகத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒருவகை இயற்கை முறைதான் என்கிருர். சூழ்நிலையிலிருந்து கிடைக்கும் அநுபவமே கல்விப்



'இப்போது கொஞ்சம் கணக்குப் போடுவேன்' என்று, ஒன்று, பத்து நூறு, ஆயிரமாகப் பிரித்துக் காட்டப்பெற்றிருக்கும் 'மணிச்சட்ட'த்தை வைத்துக்கொண்டு கூட்டல் கற்பதில் ஈடுபட்டிருக்கிறுன்.

பயிற்சியென்றும், ஏற்ற சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதே உபாத்தியாயரின் கடமையென்றும் தமது நீண்ட கால அநுபவத்தின் பயனுகக் கூறியுள்ளார்.

இவர் காணும் புதிய உலகம்

கருவில் உருவாகும்போதே கல்வியைத் தொடங்கலாம் என்பதும், வாழ்க்கையின் ஆரம்ப ஆண்டுகளில்



இயற்கைப் பாடத்தில் மரத்தின் பாகங்கள் தனித் தனியே வரையப்பட்ட படங்களை அடுக்கி வைத்து, அது அதற்கு உரிய பெயர்களை அமைத்துக் கொண்டிருக்கிறான்



பலவகை வர்ணமுள்ள கனசதுரம், நீண்ட கனசதுரம் முதலான கட்டைகளை வைத்துக் கொண்டு க்ஷேத்ரகணிதம் (Binomial) போடுவதில் ஈடுபட்டிருக்கிறாள்

அதிஜாக்கிரதையாக இயற்கைக் கல்விக்குரிய சூழ் நிலையை அமைத்துக் கொடுத்தால் குழந்தை அற்புத மாகத் தன்னை வெளியிட்டுக் கொள்வான் என்பதும் இவர் சித்தாந்தம். இந்தக் கல்வி முறையால் ஒரு புதிய உலகத்தையே நிர்மாணம் செய்ய முடியும் என்பது இவர் நம்பிக்கை.

சரியானபடி உபயோகித்துக்கொண்டால் சிறு குழந்தையிடம் உலக மகா சக்தி ஒன்றைக் கண்டு பயன்படுத்திக் கொண்டவர்களாவோம். பள்ளிக்கூட வயது என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறார்களே, அந்த ஐந்து வயதிற்கு முற்பட்ட காலத்திலேயே இத்தகைய மகாசக்தியை உலக நலத்தின் பொருட்டு நாம் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்றால், அது எவ்வளவு அதிசயமான காரியம்! எனவே, சிறு குழந்தையின் வாழ்க்கையைப் பாதுகாப்பது ஒரு புதிய சமுதாயப் பிரசினையாகும். குழந்தை குடும்பத்திற்கு மட்டும் சொந்தமல்ல, நாட்டுக்கே சொந்தமாக மதிக்கப் பட வேண்டும்.

குழந்தை அன்பிலே பிறந்து, அன்பிலே இயங்கி, அன்பிலே வளர்கின்றது. பெற்றோரின் அன்பு அகழி யாகச் சூழ்ந்து சிறு குழந்தையின் வாழ்க்கைக்குப் பாதுகாப்பாகிறது. இந்த அன்பு இயற்கையன்பு; பகுத்தறிவைக் கடந்த உணர்ச்சி. தியாகத்தின் வேர் இது.

குழந்தைக்காகப் பெற்றோர் பெருமகிழ்ச்சியுடன் தங்கள் சௌகரியங்களைத் தியாகம் செய்வது இயல்பு.

சற்(று)உன் முகம் சிவந்தால்—மனது
சஞ்சலம் ஆகுதடீ:

நெற்றி சுருங்கக் கண்டால்—எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ!

என்றும்,

உன் கண்ணில் நீர் வழிந்தால்—என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடீ:
என் கண்ணிற் பாவையன்ருே?—கண்ணம்மா!
என்னுயிர் நின்னதன்ருே?

என்றும் பாரதியார் பாடியிருப்பது பெற்ருேரின் தியாக மனப்பான்மையை மிகவும் அழகாக எடுத்துக் காட்டுகிறதல்லவா?

குழந்தை யென்ருல் எல்லாருக்கும் அன்பு சுரக்கிறது. குழந்தையைத் தொடும்போது அன்பைத் தொட்டுப் பார்ப்பதுபோல் இருக்கிறது!

உச்சிதனை முகந்தால்—கருவம்
ஓங்கி வளருதடீ!

என்றும்,

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளம்தான்
கள்வெறி கொள்ளுதடீ:
உன்னைத் தழுவிடிலோ,—கண்ணம்மா!
உன்மத்தம் ஆகுதடீ!

என்றும் பாரதியார் பாடியிருப்பது தாய் தந்தையர் மனநிலை மட்டும் அன்று, மனித மனப்பான்மையேதான்.

இத்தகைய குழந்தை இல்லாமல் மனித வாழ்வு இல்லை. இந்தக் குழந்தை யன்பிலேதான் எவ்வளவு சக்தியும் வேகமும் இருக்க வேண்டும்! வாழ்க்கையின் அடிப்படைச் சக்தியல்லவா இது? தாய்ப் புலியிடத்திலும் காணப்படுகிறது இக்குழந்தை யன்பு.

இதனுல் மூர்க்கர்களும் வசீகரிக்கப்படுகிருர்கள்.

சொல்லும் மழலையிலே—கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச் சிரிப்பாலே—எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய்!

என்ற பாரதி வாக்கிலே மூர்க்கரிடத்திலும் அவர்களை அறியாமலே காணப்படும் குழந்தையன்பு எவ்வளவு நன்ருக வெளியிடப் பெறுகின்றது!

இப்படியெல்லாம் துன்பங்களைப் போக்கி அற்புதம் விளைவிக்கத் தக்க குழந்தை யன்பைக் குறித்து நாம் விசேஷமாகக் கூர்ந்து சிந்தித்துப் பார்ப்பதில்லை. கடுந்தவம் புரியும் முனிவர்களைப்போல் விஞ்ஞானிகள் பெரும் பொறுமையுடன் எத்தனையோ விஷயங்களைப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிருர்கள். ஆனல் இந்தக் குழந்தை யன்பிலுள்ள சக்தியைக் கொண்டு மக்களை ஒரு குலமாக்கி ஒரு புதிய உலகை நிர்மாணம் செய்யும் தனிப் பெருஞ் சாதனையில் இன்றுவரை ஒருவரும் ஈடுபடவில்லை. இதனல் உலகத்திலேயே அன்பு-வறுமை ஏற்பட்டுப் போட்டியும் பூசலும் போராட்டமும் மேலிடுகின்றன என்பது மாண்டி ஸோரியின் மனவேதனை.

உலக மகா சக்திகளில் மிகவும் பெரியது அன்பு தான். அன்பே சக்தி; அன்பே சிருஷ்டி. ‘அன்பே சிவம்’ என்பது திருமூலர் திருவாக்கு. அன்பிற்குத் தான் பொறுமையாகவும் பொருமையில்லாமலும் வாழத் தெரியும் என்பது கிறிஸ்து நாதரின் சீடரான பால் முனிவர் (St. Paul) வாக்கு.

அன்பிற்குச் செருக்கும் இல்லை; பேராசையும் கிடையாது; கோபமும் கிடையாது என்பர். அன்பு

தீமையைச் சிந்திப்பதுமில்லை யென்றும், பாவச் செயல்களில் இன்புறுவதில்லை யென்றும், உண்மை யான விஷயங்களிலேயே குதூகல மடைகிறது என்றும், எப்போதும் நன்னம்பிக்கை கொள்ளுகிற தென்றும் பால்முனிவரே தொடர்ந்து கூறியுள்ளார்.

இந்தப் பெரியாரின் வாக்கு அன்பு மயமான குழந்தையுள்ளத்திற்கும் உள்ளபடியே பொருந்துவ தாகும் என்பர் டாக்டர் மாண்டிஸோரி. குழந்தை யுள்ளம் எதையும் கிரகித்துக் கொள்கிறது; எதையும் 'இங்கே வராதே' என்று தள்ளுவதில்லை. குழந்தை தன் வாழ்க்கையைப் பிறருடன் இசைவித்துக் கொள்கிறான். இதற்குத்தான் எவ்வளவு பொறுமை வேண்டும்!

எத்தகைய நிலப் பகுதியிலும், சீதோஷ்ண நிலை யிலும் சௌகரிய அசௌகரியங்களைச் சமாளித்துக் கொள்ளும் மனித ஆற்றலைக் குழந்தையின் சுபாவத்தி லேயே ஒரு வித்தாகக் காண்கிறோம். ஏன், மனித நாகரிகத்தின் விதையையே குழந்தை யுள்ளத்தில் காண்கிறோம்.

சுருங்கச் சொன்னால், விதியின் நியமங்களையும் சங்கடங்களையும் அன்பால் சமாளித்துக்கொள்வ தற்கும் வழிகாட்டுகிறது குழந்தையுள்ளம்.

மனிதன் செயற்கருஞ் செயல்களைச் செய்து வருகிறான். எனினும் அன்பு இல்லாவிட்டால் இந்தச் செயல்களெல்லாம் பயனற்றவை. குழந்தை நம்மீது கொள்ளும் அன்பையும், நாம் குழந்தைமீது கொள்ளும் அன்பையும் மூலதனமாகக் கொண்டு அபிவிருத்தி செய்துகொள்ளும்போதுதான், நமது பெருஞ் செயல்க

ளெல்லாம் உள்ளபடியே செயற்கருஞ் செயல்களாகக் கூடும். இவ்விஷயத்தில் 'முதியவருலகம் வேறு, குழந்தையுலகம் வேறு' என்று வாழ்க்கையைக் குறுக்குச் சுவர்களால் பிரித்துக் கொள்வது அபாயமானது. முதியவர்கள் பணிவுடன் குழந்தையிடமிருந்தும் கற்றுக் கொள்ளத் தயங்கலாகாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்டிஸோரி ஒரு கதை சொல்வதுண்டு. இளைஞன் ஒருவன் விவாகம் செய்துகொள்ள விரும்பித் தான் தேர்ந்தெடுத்த ஒரு கன்னிகையின் அருமை பெருமைகளை அடுக்கத் தொடங்கினன். அவன் சொல்லிவந்த ஒவ்வொன்றுக்கும் உரிய மதிப்பை அருகேயிருந்த அநுபவசாலி ஒருவன் எண்ணல் குறிக்கலானன்.

முதல் முதல் இளைஞன் தன் காதலியின் உடல் வனப்பைக் குறிப்பிட்டு, 'அவள் நல்ல அழகி' என்ருன். அப்போது ஒரு பூஜ்யம் போட்டான் அருகேயிருந்த அநுபவசாலி.

'அவள் செல்வம் உள்ளவள்' என்ருன் இளைஞன். அநுபவசாலி வேருெரு பூஜ்யத்தையும் சேர்த்துக் கொண்டான். 'அவளுக்குக் கல்விச் செல்வமும் உண்டு' என்ருன் இளைஞன். அதற்கும் ஒரு பூஜ்யக் குறிதான் மதிப்பாகக் கிடைத்தது.

'அவள் உடல் வலிமை உள்ளவள்; நீந்துவாள், பந்தடிப்பாள்' என்ருன் இளைஞன். அநுபவசாலி மறுபடியும் ஒரு பூஜ்யம் சேர்த்துக்கொண்டான். இன்னும் காதலியின் பல சாமர்த்தியங்களைக் காதலன் அடுக்கிக் கொண்டேபோனன், பூஜ்யங்களின் தொகை பெருகிய வண்ணமாயிருந்தது. ஆனல் மதிக்கத் தக்க தொகையா அது?

கடைசியாக இளைஞன் 'அவள் நற்குணமுள்ளவள்' என்றான். 'ஓஹோ! அப்படியா?' என்று சொல்லிக்கொண்டே அந்த ஒன்றைத் தான் மதித்ததற்கு அடையாளமாக '1' என்ற எண்ணைப் பூஜ்யங்களுக்கெல்லாம் முன்னே எழுதிக் காட்டினான்.

இந்த ஒன்றே பூஜ்யங்களுக்கெல்லாம் முன் இராத மதிப்பைக் கொடுத்துவிட்டது! காதலியின் மொத்த மதிப்பு இப்போது எவ்வளவு உயர்ந்துவிட்டது!

இந்தக் கதையைச் சொல்லும் மாண்டிஸோரி 'நாகரிகம் என்னும் நங்கையின் மதிப்பும் இப்படியே தான்' என்கிறார். இது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

'விஞ்ஞானம் வளர்ந்து வளர்ந்து எவ்வளவு தூரத்தை எப்படிச் சமீபமாக்கிவிட்டது பாருங்கள்!' என்று குதூகலப்படுகிறான் நாகரிக மனிதன். இதற்கு மட்டும் பூஜ்யம் என்ற மதிப்பையே கொடுப்பார் மாண்டிஸோரி.

'இது அணுயுகம். அணுவைக்கொண்டு அழிவு செய்வதுபோல் எவ்வளவோ ஆக்கமும் பெறலாம்' என்கிறது நாகரிகம். இதற்கும் தனிமதிப்பு ஒரு பூஜ்யம் தான் என்கிறது மாண்டிஸோரியின் மேதை.

'இனி ஒருவரும் பட்டினி கிடந்து சாகவேண்டியதில்லை; அப்படிப் பொருளாதார நிலையை மேம்படச் செய்யலாம்' என்கிறான் பொருளாதார சாஸ்திரி. 'பூஜ்யம்தான் இதற்கும் தனி மதிப்பு' என்பர் இந்த அம்மையார்.

'விஞ்ஞானத்திற்கும் மதநம்பிக்கைக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் பூசலையும் தீர்த்துப் பகுத்தறிவையும்

பக்தியையும் இணைத்துவிடலாம்' என்றுகூடக் கனவு காண்கிறது நாகரிகம். 'இதற்குக்கூடத் தனிமதிப்பு ஒரு பூஜ்யம்தான்' என்கிறார் குழந்தையுலகத்தைக் கண்டுபிடித்த அம்மையார்.

கடைசியாகக் குழந்தையுள்ளம் கண்டு அந்த அன்பைப் பலதுறைகளிலும் பயன்படுத்திக்கொள்வோம் என்று நாகரிகம் ஒப்புக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் இந்த ஒன்றே அத்தனை பூஜ்யங்களுக்கும் பெரு மதிப்பைத் தந்துவிடும் என்பர் மாண்டிஸோரி,

குழந்தையுலகில் நாம் காணும் அன்பு ஓர் இயற்கைப் பெருஞ்சக்தி. இத்தகைய சக்தியை மனித சொரூபத்தின் இன்றியமையாத பகுதியாக இயற்கை அமைத்திருக்கும் நோக்கம்தான் என்ன என்பதை நாம் சிந்திக்கவேண்டும்; ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

குழந்தையுலகில் நாம் காணும் அன்பு இயற்கையெங்கும் பரந்தும் கரந்தும் காணப்படுகிற மகாசக்தியின் பகுதிதான். குழந்தை நம்மை வசீகரிக்கிறதே, இந்தக் கவர்ச்சியை மண்ணிலும் காண்கிறோம்; விண்ணிலும் காண்கிறோம். இதன் ஸ்தூலப் பகுதியை 'ஆகர்ஷண சக்தி' என்பர் விஞ்ஞானியர்.

மேலே வீசிய கல் கீழே விழுவதற்குக் காரணமும் இந்தச் சக்திதான். கிரகங்கள் தத்தமக்கு உரிய வழியில் சென்றுகொண்டிருப்பதற்கும் காரணம் இந்தக் கவர்ச்சிதான். அணுக்கள் இணைந்து ஒரு முழுநிலை எய்துவதற்கும் இந்தக் கவர்ச்சிதான் காரணம். இந்தக் கவர்ச்சி இல்லாவிட்டால் உலகம் ஒழுங்கு பெற்ற

உலகமாயிருக்க முடியாது. ஒரே குழப்பமாகி ஒன்றுமே வாழ்வுபெற்றிருக்க முடியாது.

இத்தகைய கவர்ச்சி மக்களிடையே அன்பாக இயங்குகிறது எனலாம். எனவே, இந்த அன்பு 'பற்று' 'அநுதாபம், என்ற எல்லைகளுக்குள் அடங்கி விடாமல் வாழ்க்கையின் ஸாராம்சமாக அமைந்திருக் கிறதுஎன்பது மாண்டிஸோரி-சித்தாந்தம்,

இயற்கை இந்த அன்பை ஒரு மூல பொக்கிஷமாக மதிக்கிறது என்றும், இதைச் செட்டாக அளவுடன் வழங்கி வருகிறதென்றும் மாண்டிஸோரி கூறுகிறார். சிருஷ்டி தொடர்ந்து நடைபெறுவதற்காக இயற்கை அந்தப் பொக்கிஷத்திலிருந்து அன்பைக் கொஞ்சங் கொஞ்சமாக வழங்கி வருகிறதாம். கொஞ்ச காலத்திற் குக் கடனாகக் கொடுத்து உதவுகிறது என்கிறார்.

குழந்தை தோன்றியதும் பெற்றோருக்கு விசேஷ மான அன்பு ஏற்பட்டால்தானே அதற்கு இன்றியமை யாத பாதுகாப்பை அளித்து இனத்தைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும்? எனவே, இயற்கை தன் மூல பொக் கிஷத்திலிருந்து வேண்டியதை மிகவும் ஜாக்கிரதை யுடன் போதுமான அளவிற்குக் கொடுத்து உதவு கிறது.

மிருகங்களைக் காட்டிலும் மனிதரிடம் இந்த உணர்ச்சி நீடித்திருப்பதையும் காண்கிறோம். மனித னுக்கும் இது அளவோடுதான் கிடைக்கிறது. எனி னும், இதர சக்திகளைக் காட்டிலும் பெரியதொரு சக்தி யானதால் இந்த அன்புணர்ச்சி சமுதாய அமைப்பிற் கும் பயன்படுவதாகும்

நாமும் இதை ஒரு பெரும் பொக்கிஷமாக மதித்து ஜாக்கிரதையாகச் சிறந்த நற்பயன் பெறுவதற்கு உபயோகித்துக் கொள்ளவேண்டும், உலகத்தை இணைத்து வைப்பதற்கு இயற்கை உபயோகித்துக் கொள்ளும் இந்தச் சக்தியை நாமும் மக்கட்குலத்தை ஒன்றுக்கி உலகத்தைப் புதுமை செய்து கொள்வதற்காக உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

குழந்தை பிறக்கும்போதெல்லாம் இந்த அன்புச் சக்தி மனிதனுக்குப் புதுமையாக வழங்கப்படுகிறது. இந்தச் சக்தியின் ஊற்றுக் கண் குழந்தை என்பதைத் தெரிந்துகொண்டு குழந்தையுள்ளத்தைக் கற்கவேண்டும்; குழந்தையுலகைக் காணவேண்டும். இது குழந்தைக் கல்வியில் ஒரு புது வழி என்கிருர் மாண்டிஸோரி.

இந்தப் புதுமைப் பெருவழி டாக்டர் மாண்டிஸோரி காணும் குழந்தை மாண்பினை நாமும் கண்டு பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரு செம்மைப் பெருநெறியாகும் என்பதை வாசகர்கள் இதற்குள் உய்த்துணர்ந்து கொண்டிருப்பார்கள் என்பது என் நம்பிக்கை.



தோட்ட வேலை செய்வதிலுள்ள ஆர்வம்—மனிதக் கொழுந்தான குழந்தைகள் பூக்களையும் கொழுந்துகளையும் பார்த்து ரஸிக்கிறார்கள்

சிறப்புப் பெயர்கள் முதலியவை

பக்கம்

அகஒழுங்கு 213
அதீத உணர்ச்சி 235
அந்தகாரத்திலே கைவிளக்கு 138
அமெரிக்க நகரில் மாண்டிஸோரி 146
அருண்டேல் 17, 28
அவளும் பொய் சொல்லாள் 69
அறிவு வளர்ச்சியும் ஆனந்தமும் 243, 244
அறுபத்தேழு வயதுச் சிறுமி 28, 32
அன்னிபெஸன்ட் 26, 27
அஸிஸி 137
அஸிஸி முனிவர் 138
ஆடல்பாடல்களில் சமுதாய நோக்கு 178
ஆண்டாள் 108
ஆயிரம் வயதுப் பெருங் கிழவன் 32
ஆனை ஆனை அழகர் ஆனை 162
இயற்கையன்னையின் அற்புதக் கூத்து 37, 38, 39
இரண்டாவது உலகப் போர் 25, 34, 147
உபாத்தியாயன் (உட்பொருள்) 109
உள்மனம், புறமனம் 232, 238, 240
உள்ளொளியின் உதயம் 109
ஊடுருப் பார்வை செய்யும் உண்மை 113

பக்கம்

எபிபெனி 49, 51
ஏணி ஏற்றம் 94
ஒற்றுமனம். தோயும் உள்ளம், ஒற்றும் உள்ளம், கிரகிக்கும் உள்ளம் 171, 236, 241
ஒலி ஓர் அதிசய கீதம் 184
ஔவை 14
கண்ணன் 94, 95, 105, 107
கண்ணும்பூச்சி விளையாட்டு 210, 211
கம்பன் வருணனை 153
கருவிலே திருவுடையவர் 114
கர்ஸன் பிரபு 209
கலாக்ஷேத்திரம் 28
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 194
கவிமணியின் பாட்டு 173—175
கவி ரவீந்திரர் 40, 70, 245, 246
கற்பக வாழ்க்கை 155
கனவு லோக யாத்திரை 190, 191, 206
கனிக்காக விதையைக் காப்பவர்கள் 144
காந்தியடிகள் 141, 174, 228
காந்தியடிகளும் குழந்தையும் (மாண்டிஸோரி கட்டுரை) 147, 148
காந்தியும் மாண்டிஸோரியும் 147—150
கார்ல் மார்க்ஸ் 228
கிறிஸ்து 105, 107, 236, 258
குட்டித் தேவதூதன் பக்கம் 21
குருசாமி 108

பக்கம்

குலசேகராழ்வார் 198
குழந்தை-அவதாரம் 106
குழந்தையிடம் உலக மகாசக்தி 256, 258, 259, 262, 263
குழந்தையும் ஒருமையுள்ளமும் 220—223
குழந்தையும் ஒழுங்கீனமும் 191, 207, 208, 211, 212, 215, 216, 213—235
குழந்தை கண்டு பிடித்த சொற்கள் (மூன்றெழுத்து மொழிகள்) 195
குழந்தையும் கதைப் புத்தகமும் 82
குழந்தைகளுக்கும் சுதந்திரம் 65, 76, 77, 80, 91, 97, 98, 138, 139, 140, 153, 154, 155, 217, 218
குழந்தைக் குருநாதன் 32, 106 108, 109, 249, 250—252
குழந்தையும் சுழலும் பொருள்களும் 191
குழந்தையும் தாய் மொழியும் 180
குழந்தையுலகின் தொடர்பு 129
குழந்தையும் பக்தனும் 235, 236
குழந்தை-பக்தி 110
குழந்தைகளின் பிரம்மா 24, 242
குழந்தையும் புதிய பாஷையும் 78
குழந்தையும் புரியாத வார்த்தைகளும் 191
குழந்தையும் மொழிக் களஞ்சியமும் 183
குழந்தை-லாஹிரி 188—190

பக்கம்

குழந்தை வளர்ச்சியும் உலக சரித்திரமும் 181, 182
குறிகாரி, கவிஞன், குழந்தை 205
குற்றாலக் குறவஞ்சி 175, 176
கொலம்பஸும் புதிய கண்டமும் 156
சக்திக் குறளி 205
சதை-உணர்வும் சதை-நினைவும் 213
சத்தியாக்கிரகம் 141, 223
சமுதாய மனச்சாட்சி 227
சிரிப்பு ஒரு பரிசு 186
சிவபெருமான் 108
சிறுமி மாண்டிஸோரியின் உள்ளத்தில் புரட்சி 117, 118
சுதந்திரயுகம் 48
சூட்சும குரு 109
சேராச் சேர்த்தி 142
சோர்வு போக்கும் உள்ளொளி 146
டாடியானு 14
டாண்டே 79
டால்ஸ்டாய் 14, 83, 127
தகப்பன்சாமி 108
தங்கத் திறவுகோல் 110
தமிழை விதைத்து உள்ளத்தை விளைத்தல் 200
தாய் அழகி 114
தாயைப் போலப் பிள்ளை 115
தாலாட்டு-லாஹிரி 188
திருஞான சம்பந்தர் 7, 236
திரும்பத் திரும்பச் செய்து பார்த்தல் 200
திவ்யஞான சங்கம் 25
திறந்தகை திறந்த உள்ளம் 35
தீராத விளையாட்டுப் பிள்ளை 94
துறவியும் பாப்பாவும் 70, 71
தெய்வக் குழந்தை 40

பக்கம்

நடைப்பழக்கம் கைப் பழக்கமும் கூட 168
நம்மாழ்வார் 172, 236
நம்மாழ்வார் தாலாட்டு 161, 191, 192
நாகரிக ஏணி 170
நாகரிகமும் கைத்திறனும் 171—176. 240
நியூட்டன் 155, 157
நெப்போலியன் 100, 101
படிப்பும் விளையாட்டும் 82, 83.86, 169
பாரதியார் 105, 115, 144, 153, 174, 175, 209, 256—258
பாரிஸ்மாநகர் 100, 130, 132
பார்ஸிலோனு 136, 147
பால பிருந்தாவனம் 102
பால் முனிவர் 258, 259
பாஸெலி 128
பிரான்ஸிஸ் முனிவர், 137, 138
பிள்ளைமை இரகசியம் (புத்தகம்) 147
பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடியும் கதை 103, 104
புத்தர் பொன்னுரை 146
பூஜ்யங்களுக்கு மதிப்பு 260—262
பெரியாழ்வார் 7, 39, 40, 162—164
பெஸன்ட் திவ்யஞான சங்கப் பாடசாலை 17
பெஸ்டலோஸி 100—103
ப்ளேட்டோ 11
ப்ரோபெல் 101—103
மக்ளூர் என்ற சீமான் 145
மருத்துவனும் மருத்துவப் பணியாளும் 128
மனிதனுடைய முதல் உலக மகாயுத்தம் 196

பக்கம்

மாண்டிஸோரியும் அங்க வஸ்திரமும் 31
மாண்டிஸோரியும் அமெரிக்கச் செல்வமும் 144
மாண்டிஸோரி இந்தியாவுக்கு வந்தது 147
மாண்டிஸோரியின் கடின உழைப்பு 124
மாண்டிஸோரி குணதிசயத்திற்கு ஒரு திறவு கோல் 124, 125
மாண்டிஸோரிக்குப் பிடித்த மான ஓய்வு 136, 137
மாண்டிஸோரியின் முதல் சொற்பொழிவு 123
மாண்டிஸோரியின் முதல் புத்தகம் 26
மாரியோ மாண்டிஸோரி 29, 32
மாறிப் பிறத்தல் 111
மிலான் நகரில் குழந்தை இல்லம் 134
முகத்திலே அன்புப்பணி 155
முதலாவது உலக மகா யுத்தம் 142
முத்தாடும் மணிமொழிகள் 186
முருகன் 108
மெய்ஞ்ஞானி மாண்டிஸோரி 159
மைக்கேல் ஏன்ஜலோ 77
மொழியில் இசையும் நோக்கமும் 185
மொழிக்கல்வியில் இரட்டைப் பாதை 184
மௌனப் பயிற்சி 224, 225
யசோதையும் கோபிமாரும் 163, 164
யசோதையும் தோழியும் 162
ராமனும் கோசலையும் 160, 161

பக்கம்

ருக்மிணி அருண்டேல் 17, 26, 28, 31
ரேடியோ சொற்பொழிகள் 147
ரோமாபுரியில் காந்தியடிகள் 148
ரோமாபுரியில் குழந்தை இல்லம் 134
லண்டனில் காந்தியடிகள் 148, 149
லியோனர்டோ டா-வின்ஸி 79
வசிஷ்ட குருகுலம் 153
வாழ்க்கை என்ற நாணயம் 119

பக்கம்

விஞ்ஞானியின் குழந்தை யுள்ளம் 158
விதைக்குத் தகுந்த விளைவு 119
வில்லியம் ப்ளேக் 110
விஷம சதுர்ப்புஜம் 43
வைத்தியக் கல்லூரியில் மாண்டிஸோரி 120—124
ஸர்வ தேசீயச் சொற்பொழிவுகள் 144, 146
ஸாக்ரடீஸ் 20
ஜீவகாருண்ய ப்ரஷை 138
ஹார்வி 156
ஹிப்னடிஸ நித்திரை 193